# எனது வாழ்க்கைப் பாதையின் கடந்த காலச் சுவடுகள்

***பாஞ்சஜன்யம் ஆசிரியர்:* ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்**

## முன்னுரை:

உலகில் சுயசரிதம் எழுதுவோர் அரிய பெரிய சாதனை களைப் படைத்தவர்களாய் இருக்க வேண்டும் அல்லது செயற் கரிய செயல்களைச் செய்து முடித்தவராய் இருக்க வேண்டும் என்பது ஒரு நியதியாகக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான இந்த இரண்டு வகையினரையும் சார்ந்தவனல்லன் நான். ஆனால் ஒரு கோணத்தில் நாம் கூர்ந்து கவனிக்கக் கூடுமானால் உலகில் பிறந்த ஒவ்வொருவரும் சாதனையாளர்களே ஆவர். ஒவ்வொருவருடைய வாழ்க்கைப் போராட்டமும் ஒரு புதினமே.

எழுத்தாளர்கள் எங்கேயோ, யாரிடமோ, எப்பொழுதோ தாங்கள் பார்த்த ஒரு நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு, உள்ளத்தை உருக்கும் வகையில் அந்த நிகழ்ச்சியைச் சிறுகதை யாகப் படைக்கின்றனர். சரித்திர நாவலாசிரியர்கள், வரலாற்று நிகழ்வு ஒன்றினை மையமாகக் கொண்டு நீண்டதொரு நாவலை வாசகர்களுக்கு விருந்தாக அளிக்கின்றனர். தனி மனிதன் ஒருவனுடைய வாழ்க்கையிலும் நாவலுக்கான அனைத்துக் கூறுகளும் உள்ளன. ஒருவனுடைய வாழ்க்கையில் அவன் பல நிகழ்ச்சிகளைக் காண்கின்றான், பல நிகழ்வுகளுக்கு அவனே கதாநாயகனாகவும் விளங்குகின்றான். பிறப்பு தொடங்கி இறப்பு வரை ஆயிரக்கணக்கான மனிதர்கள் அவன் வாழ்வில் குறுக்கிடுகின்றனர். எந்த நிலையிலும் அவன் தனக்காக வாழ்வது

இயலாது. குடும்ப நலனையும், சமுதாயச் சிந்தனையையும் சரி அளவில் கொண்டவனே வாழ்வாங்கு வாழ்ந்தவனாகக் கொள்ளப் படுவான்.

தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதய்யர் ‘**என் சரித்திரம்**’ என்ற தமது வாழ்க்கை வரலாற்று நூலில் அரிய பெரிய செய்தி களைத் தொகுத்துத் தந்துள்ளார். காஞ்சிபுரம் மஹாவித்வான் அண்ணங் கராசார்யர் ஸ்வாமி தமது வாழ்நாளில் செயற்கரிய செயல்களைச் செய்து முடித்தவர். அவர் எழுதிய ‘**தானே எழுதிய தன் சரிதை**’ என்ற நூல் 20-ஆம் நூற்றாண்டில் அவர் எதிர்கொண்ட போராட் டங்கள், சந்தித்த பெரியவர்கள் பற்றிய செய்திகள் பலவற்றை நமக்குத் தருகின்றது. புத்தூர் கு.கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் (ஸ்ரீஸுதர்சனர்) அவர்கள் தம்முடைய சுயசரிதையை ‘**ஸுதர் சன விஜயம்**’ என்ற நூலில் விவரித்துள்ளார்.

ஆனந்தரங்கம் பிள்ளை என்பார் கி.பி.1736-60இல் எழுதிய நாட்குறிப்புகள் இன்று வரலாற்றுப் பெட்டகங்களாகப் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. சிலருக்குக் கடந்த கால நினைவுகள் இன்பம் பயப்பனவாகவும், பலருக்குத் துன்பம் பயப்பனவாகவும் அமைந்துள்ளதை அவர்களுடன் அளவளாவும்போது நாம் காண்கின்றோம். உலகத்திலுள்ள ஒவ்வொருவரும் தனது கடந்த கால நினைவுகளை எழுதி வைக்கக் கூடுமானால் நாட்டின் உண்மையான வரலாற்றினை அப்போதுதான் நாம் படைக்கமுடியும். தன்னுடைய வாழ்நாள் குறிப்புகளை எழுதுவதற்கு ஒருவர் சாதனையாளராக இருக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. ஆனாலும் சுயசரிதைகள் அதிக அளவில் படைக்கப்படுவதில்லை. இதற்குக் காரணம் நம்மில் ஒவ்வொருவரிடமும் குடிகொண்டுள்ள தாழ்வுமனப் பான்மைதான்.

‘**சற்று முன் பிறந்திருந்தால் ராஜா வீட்டில் பிறந்**



**திருக்கலாம்**’ என்ற நாட்டுப்புற வழக்குச் சொல் நம்மில் ஒவ்வொருவருக்கும் பொருந்தும். செல்வந்தர்களைக் கண்டு ‘**நாம் அவ்வாறு இல்லையே**’ என்று வருத்தப்படுவது, அனை வருடைய வாழ்க்கையிலும் அவ்வப்போது தோன்றும் எண்ண அலைகளாகும்.

“செல்வந்தர் குடும்பத்தில் பிறந்தவர் கஷ்டங்கள் அறியாது வளர்ந்தவர்” (Born with a silver spoon in one’s mouth) என்ற பழமொழி எனக்குப் பொருந்தாது. பிறந்தது என்னவோ கீழைப் பனையூர் என்னும் குக்கிராமத்தில். வளர்ந்தது களப் பாள் என்னும் கிராமத்தில். மேல்நிலைப் பள்ளிப்படிப்பு ராஜாமடம் என்னும் கடற்கரையோரக் கிராமத்தில். பட்டப் படிப்பு திருச்சி மாநகரில். வேலை பார்த்ததோ வேற்று மாநிலங்களில். ஓய்வுக்குப் பிறகு திருவரங்கன் திருவடிகளில் வாசம் - என்ற இந்தப் பிறப்பு, வளர்ப்பு, ஓய்வு என்ற கட்டங்களுக்குள்ளே எத்தனை எத்தனை நிகழ்ச்சிகள்! அவற்றையெல்லாம் எழுதுவதால் என்ன பயன் என்று என்னையே நான் பலமுறை கேட்டுக் கொண்டதுண்டு.

இந்த உலகமானது எதிர்காலச் சந்ததியினருக்குச் சொந்த மானது. நமது வாழ்க்கைப் பயணம் முடிந்த பிறகு அவர் களுக்குச் செல்வமாக விட்டுச் செல்வது வீடு, மனை, பணம் காசு ஆகியவற்றோடு நம்மைப் பற்றிய நினைவு களையும்தான். ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்விலும் அவன் பார்க்கும் வேலை ஆதிக்கம் செலுத்தி வருகிறது. குறித்த நேரத்தில் வேலைக்குச் செல்ல வேண்டும், தனக்கிட்ட பணிகளைச் சரிவரச் செய்ய வேண்டும், வாழ்க்கையில் முன்னேற வேண்டும், எக்காலத்திலும் நேர்மையாக வாழவேண்டும், பிறர் சொத்திற்கு ஆசைப்படக் கூடாது, தன்னால் இயன்ற வரை ஆன்மீகச் சிந்தனைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும், அறிவுமேம்பாட்டிற்கு முயன்று கொண்டேயிருக்க வேண்டும், தன் மனைவி மக்களோடு பொழுதை இன்பமாகக் கழிக்க வேண்டும், சந்ததியினருக்கு

நற்கல்வி அளித்திட வேண்டும், எல்லாவற் றிற்கும் மேலாக அவர்கள் ஒழுங்குமுறை பிறழாமல் வாழ்ந்திடக் கற்றுக் கொடுத்திடவேண்டும் என்றெ ல்லாம் ஒருவன் பிறர்க்கு உபதேசம் மட்டும் செய்திடாமல், தானும் அவ்வாறு வாழ்ந்து காட்டினால், அவனே உண்மையில் ''வாழ்ந்தவனாக'' ஆவான்.

ஒருவனுடைய வாழ்க்கை வரலாறு மற்றையோருக்கு வழிகாட்டியாய் இருக்கக்கூடும் என்பதாலும் அதை எழுது வதால், எழுதியவன் தன்னுடைய சந்ததியினருக்கு தன்னுடைய உணர்வுகளைக் காலத்தைக் கடந்து நினைவூட்டுகின்றான் என்பதாலும் என்னுடைய வாழ்க்கைப் பயணத்தின் கடந்தகால ஏடுகளிலிருந்து சில பகுதிகளை எடுத்துரைக்க முயல்கின்றேன்.

## 1) முள்ளியாறும், அகத்தியர் பெருமானும்.

'சோறுடைத்து சோழநாடு' என்பது நாட்டுப்புற வழக்குச் சொல். தஞ்சை மாவட்டத்தில் எங்கு நோக்கினும் காவிரியின் சிற்றாறுகள் பாய்ந்து கொண்டிருக்கும். ஒரு ஆண்டின் மூன்று மாதங்கள் தவிர மற்றைய நாட்களில் அந்தச் சிற்றாறுகளிலும், வாய்க்கால்களிலும் நீர்ச்சுழியிட்டுச் சென்று கொண்டிருக்கும். அதைச் சார்ந்த வயல் வெளிகளில் மூன்று போகம் நெல்லும், கரும்பும், வாழையும் பயிரிட்டு வருவர். ஆங்காங்கே புஞ்சைத் திடல்கள், காய்கறித்தோட்டங்கள், எங்கு நோக்கினும் பசுமையே காணப்படும்.

தஞ்சை மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டி தாலுக்கா வைச் சார்ந்தது கீழைப்பனையூர் என்றதொரு எழில்மிக்கதோர் கிராமம். காவிரியின் கிளை நதியான முள்ளியாற்றின் கரையில் அமைந்துள்ள கிராமம் இது. முள்ளியாற்றின் இருமருங்கிலும் மூங்கிற்காடுகளும், மாமரத்தோட்டங்களும், தேக்கு மரங்களும் நெடுதுயர்ந்து வளர்ந்திருக்கும். முள்ளியாற்றில் நீராடும் போதெல்லாம் அளவற்ற மகிழ்ச்சி பொங்கியிருக்கும். அகஸ்தியர் ஒருநாள் அந்த ஊருக்கு வருகை தந்ததாகவும், மாலை வேளை ஸந்த்யாவந்தனத்திற்கு நீர் கிடைக்காததால் ஒரு மூங்கில் முள்ளைக் கொண்டு பூமியைக் கீறியதாகவும், அதனால் அந்த இடத்தில் முள்ளியாறு தோன்றியதாகவும், ஆற்றில் குளிக்கும் போது பெரியவர்கள் கூறுவதுண்டு. அதை அப்படியே நாங்கள் நம்பி அந்த நீரைப் புனிதநீராகக் கருதி உட்கொள்வோம். அந்தக் காலத்தில் ஓடுகின்ற ஆற்றில் எந்த மாசுப்பொருளும் கலவாது. ஒரு துணியில் வடிகட்டி ஆற்றுநீரை எடுத்துச் சென்று கோயிலாழ்வார் திருமஞ்சனம் செய்விப்பது வழக்கம். ஆற்றுநீரில் கோயிலாழ்வார் திருவாராதனத்திற்கு உபயோகப்படுத்தப்படும் செப்பு வட்டில்களையும், பாத்திரங்களையும், பளபளவென்று புளி,சாணி போட்டுத் தேய்த்து, அதில் காவிரிநீரை எடுத்துச் செல்வது ஒரு தனி அனுபவம்.

## 2) கீழைப்பனையூர் ஊர்வளம்.

அக்ரஹாரத்தின் மேற்குப்பகுதியில் கஸ்தூரி ரங்கநாதன் கோயில் கொண்டுள்ளார். கிராமத்தின் ஈசான்யப் பகுதியில் சிவன் கோயில், வேளாளர் குடியிருப்பில் மாரியம்மன் கோயில், கிராமத்தின் எல்லையில் ஐயனார் கோயில் என்று கிராம அமைப்பின் அனைத்துக் கூறுகளையும் தன்னகத்தே கொண்டது அந்த ஊர். மன்னார்குடியிலிருந்து திருத்துறைப்பூண்டிக்குச் செல்லும் சாலையில் கோட்டூர் பேருந்து இறக்கத்தில் இறங்கி வயல்களையும், வாய்க்கால்களையும் தாண்டிச் சென்றால் முள்ளியாறு குறுக்கிடும். முள்ளியாற்றில் காலில் படிந்திருந்த சேற்றினை கழுவிக் கொண்டும், தைத்திருந்த மூங்கில் முட்களை எடுத்துவிட்டுப் பனைமரங்களாலான பாலத்தைக் கடந்து சென்றால் கண்ணில் தென்படுவது ஈசான்ய மூலையிலுள்ள சிவன்

*கோயில். அதைத் தாண்டிச் சென்றால் அக்ர ஹாரம். சுமார் இருபது அந்தணர் குடும்பத்தினர் அந்த அக்ர ஹாரத்தில் வசித்து வந்தனர். ஓரிரு ஸ்மார்த்த ப்ராஹ்மணர் களைத் தவிர மற்றைய குடும்பங்களைச் சார்ந்தவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள்.*

*நூறு ஆண்டுகளுக்கு மேலாகப் பெருமாள் தெற்கு நோக்கிப் பாலாலயத்தில் எழுந்தருளியிருந்தார். பலர் முயன்றும் கோயில் புதுப்பிக்கப்படாமல் இருந்தது. பின்னாளில், அதாவது 1983-ஆம் ஆண்டு ஊர் மக்களுடைய ஒத்துழைப்பையும், எங்கள் குடும்பத்தார் அளித்த நிதியுதவியையும் கொண்டும், கோயில் புனருத்தாரண பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பிறகு கஸ்தூரிரங்கநாதப்பெருமாள் கிழக்கு நோக்கிக் கோயில் கொண்டார்.*

## 3) என்னுடைய மூதாதையர்கள்.

*என்னுடைய ப்ரபிதாமஹருடைய **(கொள்ளுத்தாத்தா)** திருநாமம் திருவேங்கடாசார்யர். ப்ரபிதாமஹியினுடைய திருநாமம் **(கொள்ளுப்பாட்டி)** அலர்மேல்மங்கை. யஜுஸ் ஸாகை, ஆபஸ்தம்ப ஸூத்ரம், நிதிநிந்த்ய கோத்ரம் **(கரந்தைச் செப்பேடுகளின்படி, திரிபுவன மாதேவி சதுர்வேதி மங்கலத்தில் குடி அமர்த்தியவர்களாக 'நிதுஹின' மற்றும் 'நிதுந்தின' கோத்திரத் தார்கள் குறிப்பிடப்படுகிறார்கள். இது மருவி 'நிதிநிந்த்ய' கோத்திரமாக தற்போது உச்சரிக்கப்படுகிறது. இந்தக் கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் மிகமிகக் குறைந்த எண்ணிக்கை யிலேயே தற்போது காணப்படுகிறார்கள்.)**. அவருக்கு இரண்டு குமாரர்கள். மூத்தவர் சாமி ஐயங்கார், இளையவர் ராகவ ஐயங்கார். என்னுடைய பிதாமஹர் **(தந்தைவழிப் பாட்டனார்)** திருநாமம் ராகவஐயங்கார். பிதாமஹி **(தந்தைவழிப் பாட்டி)** திருநாமம் செங்கமலவல்லி. என்னுடைய தகப்பனாரான அனந்தாசார்யரோடு கூடப் பிறந்தவர்கள் ஒரு தம்பியும், ஒரு*



தங்கையும் ஆவர். பாலூரார் எனப்படும் ஸ்ரீவைஷ்ணவ குடும்பத்தைச் சார்ந்தவர்களே பனையூர் கிராமத்தில் வசித்து வந்தனர். என்னுடைய மாதா மஹர் ***(தாய்வழிப் பாட்டனார்)*** கோமடம் ஸ்ரீ.உ.வே.ராமாநுஜ திருவேங்கடாசார்யர் ஸ்வாமி பனையூரில் உள்ள அனைத்து ஸ்ரீவைஷ்ணவக் குடும்பங் களுக்கும் ஆசார்யராக விளங்கி வந்தார். அவருடைய ஆசார்யன் மதுரை கோமடம் ஸ்ரீ.உ.வே. நம்பிள்ளை ஸ்வாமி. அடியே னுடைய தகப்பனாருடைய ஆசார்யனும் இவரே ஆவார்.

## 4) ராஜேந்திர சோழ விண்ணகரம்.

''***ராஜேந்திரசோழ விண்ணகரம்***'' என்ற புகழ்பெற்ற திருக்கோயில் ப்ரஹ்மதேசம் மன்னார்கோயிலில் அமைந் துள்ளது. திருநெல்வேலி மாவட்டம், அம்பா சமுத்திரத் திலிருந்து கிழக்கே மூன்று கிலோமீட்டர் தொலைவில் உள்ள இந்த திவ்யஸ்தலத்தில் ஸ்ரீராஜகோபாலன் கோயில் கொண்டு ள்ளார். ஸ்ரீகுலசேகராழ்வார் தம்முடைய வாழ்நாளின் இறுதி நாட்களை இந்த ஊரில்தான் கழித்து வந்ததாகக் கூறப்படுகிறது. ***(அஷ்டாங்க விமான அமைப்புப் பெற்ற இந்தத் திருக்கோயில் தற்போது மிகவும் பாழ்பட்ட நிலையில் உள்ளது. குலசேகர ஆழ்வார் ஸந்நிதி விமானம் எந்த நேரத்திலும் இடிந்து விழக்கூடிய நிலையில் உள்ளது. கல்வெட்டுகள் பல அமைந்துள்ள இந்தக் கோயில் மாபெரும் சரித்திரப் பின்னணி கொண்டது. பெரியநம்பி திருவம்சத்து ஆசார்ய புருஷர் ஸ்ரீ.உ.வே.பெரியநம்பி ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமியும் அவருடைய திருக்குமாரரும் ஊரைவிட்டு அகலாமல் ராஜகோபாலனையும், ஆழ்வாரையும் மங்களாசாஸனம் செய்து வருகின்றனர். குலசேகர ஆழ்வாரோடு தொடர்புடைய திருக்கோயில் என்ற பெருமை கொண்டதோடு மட்டுமல்லாமல் பெரியவாச்சான் பிள்ளையின் சிஷ்யரான அழகியமணவாள ஜீயரின் அவதார ஸ்தலமாகவும் இந்த ஊர் விளங்குகின்றது. கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு***

**23-8-2010 அன்று மஹாஸம்ப்ரோக்ஷணம் நடைபெற்றது.)**

ராஜேந்திர சோழ சதுர்வேதி மங்கலம் கி.பி.1047-இல் அமைக்கப்பட்டது. சோழ, பாண்டிய மன்னர்கள் காலத்தில் சதுர்வேதி மங்கலங்கள் அமைக்கப்படும்போது பல திவ்ய ஸ்தலங்களிலிருந்து வேதம் வல்ல அந்தணர்களைக் குடியமர்த்து வது வழக்கம். பெரும்பாலும் வடபெண்ணை, கிருஷ்ணா, கோதாவரி ஆகிய புனித நதிகள் பாயுமிடங்களிலிருந்து பல அந்தணர் குடும்பங்கள் தமிழ்நாட்டில் அமைக்கப்பெற்ற பல்வேறு சதுர்வேதி மங்கலங்களில் குடியேற்றம் பெற்றனர். கரந்தைச் செப்பேடுகள் வழி திரிபுவனமாதேவி சதுர்வேதி மங்கலத்தில் 1084 ஸ்ரீவைஷ்ணவர்கள் குடியமர்த்தப்பட்டதை அறிகின்றோம். அவ்வாறே ராஜேந்திரசோழ சதுர்வேதி மங்கலத் திற்குப் பல ஊர்களிலிருந்தும் வந்தவர்களில் பாலூர் குடும்பத் தாரும் அடங்குவர். ஸ்ரீமணவாளமாமுனிகள் அவதாரம் செய்தருளிய குடி என்ற பெருமை இந்தக் குடிக்கு உரித்தாகும்.

ஸ்ரீராஜமன்னார் திருக்கோயிலின் தெற்கு மாடவீதியில் பாலூர் குடும்பத்தினர் வாழ்ந்து வந்தனர். ஆண்டுகள் பல செல்லச் செல்ல சந்ததியினருடைய பெருக்கத்தினால் மற்றைய ஊர்களை நாடிச் செல்வது வழக்கமாயிருந்த காலமது. சோழ நாட்டு திவ்யதேசங்களில் ஒன்றான திருக்கண்ணங்குடி என்ற திவ்யதேசத்திற்குப் பாலூர் வம்சத்து ஆசார்ய புருஷர்கள் ப்ரஹ்ம தேசம் மன்னார்கோயிலிலிருந்து எழுந்தருளி முதல் தீர்த்த மரியாதையைப் பெற்று வந்தனர். தஞ்சை மாவட்டத்தில் இருந்த ஸ்ரீவைஷ்ணவ குடும்பங்களுக்கு இவர்கள் ஆசார்யர்களாய் ஆங்காங்கே எழுந்தருளியிருந்து, மக்களை நற்கதிக்கு இட்டுச் சென்றனர். ப்ரஹ்மதேசம் மன்னார்கோயிலிலிருந்து சுமார் 200 வருடங்களுக்கு முன் இடம்பெயர்ந்த பாலூர் வம்சத்தவர்கள் ஆழ்வார்திருநகரி, திருநெல்வேலி, ஸ்ரீவில்லிபுத்தூர், திருக்



கோட்டியூர், திருக்கண்ணங்குடி, திருக்கண்ணபுரம் போன்ற திவ்யதேசங்களில் எழுந்தருளியிருந்து ஆசார்ய பீடத்தை அலங் கரித்து வந்தனர். செல்லூரார் எனப்படும் ஸ்ரீவைஷ்ணவ குடியைச் சார்ந்தவர்கள் இவர்களுக்கு சிஷ்யர்களாக அமைந்திருந்தனர்.

இத்தகைய பெருமைகள் பல படைத்த பாலூர் வம்சத்தவரான ஸ்ரீ.உ.வே.ராமாநுஜ திருவேங்கடாசார்ய ஸ்வாமி அடியேனுக்கு ஆசார்யனாக அமைந்தார். சிறுவயதில் அவரு டைய கால்களை பிடித்துவிடுவதற்கும், கால்களில் ஏறி மிதிப் பதற்கும் அடியேனைப் பணித்திடுவார். **(ஆறு அல்லது எட்டு வயது குழந்தைகள் காலில் ஏறி மிதிப்பது வலியைப் போக்கிடும். அடியேனுடைய ஆசார்யனுக்கு காலில் நோவு ஏற்படும்போதெல்லாம் காலை மிதிக்கச் சொல்லிடுவார். அவ்வாறு செய்யலாமா, செய்யக்கூடாதா என்ற நினைவற்ற பருவம் அது. ஆசார்யன் அவ்வாறு மிதித்தலை அவருக்குச் செய்யும் கைங்கர்யமாக கொண்டதால், அவருடைய அருட்பார்வை அடியேன் மேல் விழுந்துள்ளது என்பதே உண்மை.)**

## 4) கப்பலில் அரைப்பாக்கு போட்ட திருமங்கை யாழ்வார்

அடியேனுடைய மாதாமஹரும், ஆசார்யருமான கோமடம் ஸ்ரீ.உ.வே.ராமானுஜ திருவேங்கடாசார்யர் ஸ்வாமிக்கு கைங்கர்யங்கள் செய்திடும்போது அவராகவே மனமுவந்து ஆழ்வார்கள், ஆசார்யர்கள் வைபவங்களைச் சுவைபடக் கூறிடுவார். திருமங்கையாழ்வார் வைபவத்தினை அன்றைய நாட்களில் அவர் எடுத்துரைத்தது அடியேன் மனத்தில் பசு மரத்தாணி போல் பதிந்துள்ளது. “திருமங்கை யாழ்வார் ஒருநாள் கப்பல் நிறையப் பாக்குக் கொட்டைகள் நிறைக்கப்பட்ட ஒரு கப்பலில் பிரயாணம் மேற்கொண்ட தாகவும், அப்போது அவரிடமிருந்த ஒரு கொட்டைப் பாக்கினை இரண்டு பாகமாகச் செய்து, அதில் ஒரு பாகத்

தினை அந்தக் கப்பலில் சேர்த்த பிறகு, அந்தக் கப்பலின் மாலுமியிடம் 'கப்பலில் பாதிப் பாக்கு திருமங்கையாழ்வாருக்குச் சொந்தம்' என்று ஓலையிலே எழுதி அதற்குரிய முத்திரையையும், கையெழுத்தையும் அவனிடம் வாங்கிக் கொண்டதாகவும், அந்தக் கப்பல் கரை சேர்ந்த பிறகு துறைமுக அதிகாரிகளிடம் திருமங்கையாழ்வார் தம்மிடமிருந்த ஓலையைக் காட்டி கப்பலிலிருந்த பாதிப்பாக்கைப் பெற்றுச் சென்று பணமாக்கிக் கோயில் திருப்பணிகள் செய்ததாகவும்" அவர் திருமங்கையாழ்வார் வைபவத்தினை சுவைபட எடுத்து உரைப்பார். ***(வாதூல ஸ்ரீனிவாஸாசார்யர் என்பவருடைய சிஷ்யரான அனந்தாசார்யர் என்பவரால் இயற்றப்பெற்ற 'ப்ரபந்நாம்ருதம்' என்ற வடமொழி நூலில் இந்தக் குறிப்புகள் காணப் படுகின்றன.)***

இத்தகைய ஆழ்வார்கள், ஆசார்யர்கள் வைபவங்களை நாங்கள் வெகு உன்னிப்பாகக் கேட்டு மகிழ்வோம். *(நம்முடைய இல்லங்களில் குழந்தைகளுக்கு, குருபரம்பரை நூல்களிலிருந்து சில நிகழ்ச்சிகளை எளிய முறையில் எடுத்துரைத்து அவர் களுக்கு நம்முடைய ஆழ்வார்கள், ஆசார்யர்கள் பற்றிய வைபவங் களை எளிதாகப் பயிற்றுவிக்கலாம்).*

என்னுடைய தகப்பனாருடைய ஐந்தாவது வயதில் அவருடைய திருத்தகப்பனார் ஆசார்யன் திருவடியை அடைந் தார். மூன்று வயது நிரம்பிய தம்பி, கைக்குழந்தையான தங்கை இவர்களோடு அந்தக் கிராமத்தில் அவருடைய மாதுலரான சின்ன கிருஷ்ண ஐயங்காருடைய அரவணைப்பில் வளர்ந்து வந்தார். என்னுடைய பாட்டனார் ஸ்ரீராகவ ஐயங்கார் விட்டுச் சென்ற இருபது மா நிலமும், புஞ்சை தோட்டங்களும் ஏதோ ஓரளவிற்கு வாழ்க்கை நடத்துவதற்கு போதுமானதாய் இருந்தன.

சின்ன கிருஷ்ண ஐயங்கார் பௌரோஹித்யத் தொழிலை மேற்கொண்டு வந்தவர். கீழைப்பனையூர் கிராமத்தில் மட்டு



மல்லாமல், பக்கத்துக் கிராமங்களுக்கும் சென்று வைதிக காரியங்களை மேற்கொள்வதற்கு உதவி வந்தவர் சின்ன கிருஷ்ண ஐயங்கார். ஒவ்வொரு குடும்பத்தோடும் நெருங்கிய தொடர்பு கொண்டு, அவர்கள் வீட்டில் வரக்கூடிய சுப காரியங்களையும், மற்றைய அசுப காரியங்களையும் தானே முன்வந்து நடத்திக் கொடுப்பார். பிரதி ப்ரயோஜனத்தை எதிர் பாராது அவர்கள் கொடுத்த தக்ஷிணையை மனமுவந்து ஏற்றுக் கொள்வார் இவர். அன்றைய காலங்களில் திருவத்ய யனம் ***(பெற்றோர்களுடைய ஆண்டு திதி)*** செய்துவைத்தால் வாத்யார் ஸம்பாவனை நான்கு அணாக்கள் மட்டுமே. திருவத்யயனத்திற்கு உறவினர்கள் அல்லாதார் நிமந்தரண ஸ்வாமியாக வரிக்கப்படமாட்டார்கள். *(பிதுர்க்களாகவும், விஸ்வேதேவராகவும், ச்ராத்த ஸம்ரக்ஷண விஷ்ணுவின் பிரதிநிதியாகவும் வரிக்கப்படுபவர்கள் நிமந்தரண ஸ்வாமிகள் என்று அழைக்கப்படுவர்).*

## 5) எனது தந்தையாருடைய இளமைக்காலம்

என்னுடைய தகப்பனார் அதிகம் படித்தவரல்லர். கிராமத்தில் திண்ணைப் பள்ளியில் மணல் மீது எழுதி மூன்றாம் வகுப்புவரை மட்டுமே படித்தவர். தன்னுடைய மாதுலரான சின்ன கிருஷ்ண ஐயங்காரிடம் ஸ்தோத்ர பாடங்கள், வேத உபநிஷத் பாடங்கள், திருவாராதன க்ரமங்கள், ஶ்ராத்த மந்திரங்கள் ஆகியவற்றை முறையாகக் கற்றுக் கொண்டவர். பிற்காலத்தில் என்னுடைய தகப்பனார் ஶ்ராத்தம் செய்ய வசதியில்லாத பலருக்கு தானே வாத்யாராக இருந்து அதிக தக்ஷிணை ஏதும் வாங்காமல் ஒரு ரூபாய் மட்டுமே பெற்றுக்கொண்டு ஶ்ராத்தம் செய்ய உதவியுள்ளார். என்னுடைய தகப்பனாருடைய கையெழுத்து மிகத் தெளிவாக இருக்கும். இந்தத் தெளிவான கையெழுத்தே அவருடைய வாழ்க்கைக்கு மூலதனமாய் அமைந்திருந்தது. தன்னுடைய வாழ்நாள் முழுதும் 'கணக்கெழுதியே' காலத்தைக் கடத்தியவர்.

தான் அதிகம் படிக்காவிட்டாலும் தன்னுடைய தம்பியான ரங்கசாமியை S.S.L.C. வரை படிக்க வைத்தார். ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் அவரைச் சேர்ப்பித்து ஒரு நிலையான தொழிலாக இடைநிலைப்பள்ளி ஆசிரியராக அவரை ஆக்கினார்.

என்னுடைய தகப்பனார் 1910-ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் சதய நக்ஷத்திரத்தில் பிறந்தவர். தன்னுடைய 5-வது வயதிலேயே தகப்பனாரைப் பறிகொடுத்தவர் என்பதை முன்னமேயே குறிப்பிட்டிருந்தேன். பொதுவாக அந்தக் காலங்களில் தென்கலை ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு தொழில் என்று தனியாக ஏதும் கிடையாது. நிலத்திலிருந்து வரும் வருமானத்தையும், கோயில் கைங்கர்யங்கள் மற்றும் பௌரோஹித்ய கைங்கர்யங்கள் போன்றவைகளிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே வாழ்க்கைப் படகை ஓட்டிச் செல்ல வேண்டும். சிறு வயதிலிருந்தே தீவிர நாட்டுப் பற்று கொண்டவர் என் தகப்பனார். அவருடைய பதினைந் தாவது வயதிலிருந்து, அதாவது கி.பி.1926-ஆம் ஆண்டி லிருந்து நாட்டில் நடைபெற்ற சுதந்திரப் போராட் டங்களில் கலந்து கொண்டவர்.

## 6) பெண் பார்க்கும் படலம்.

என்னுடைய கொள்ளுப்பாட்டியான அலர்மேல் மங்கை என்று அழைக்கப்பட்டு வந்த கனகவல்லிப் பாட்டி தன்னுடைய பெயரனுக்காக பெண் பார்க்கும் படலத்தில் ஈடுபட்டிருந்தாள். பாலூரார் குடும்பங்களில் மற்றைய தென்கலையார் குடும்பங்களிலிருந்து பெண்களைக் கொள் வதோ அல்லது கொடுப்பதோ நடைமுறையில் இல்லாத காலமது. இந்தக் கட்டுப்பாடு அனைத்து சமுதாய உட்பிரிவு களிலும் சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்புவரை நிலவி யிருந்தது.



***(சமுதாயக் கட்டுப்பாடு ஏன், எதற்கு என்பதைப் பற்றிய சிந்தனை அனைவர்க்கும் வேண்டும். மனித இனத்தை ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள உதவுவது கண்ணியமும், அந்த சமூகத்தைச் சார்ந்த பழக்க வழங்கங்களுமே ஆகும். அவரவர் மனம் போனபடி நடக்கக் கூடுமானால் சமுதாயம் கட்டுக்குலைந்து பெரும் பின் விளைவுகளைச் சந்திக்க நேரிடும். மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை சமுதாயக் கட்டுப்பாட்டுக்குள் தான் வாழ வேண்டும். இத்தகைய சமுதாயக் கட்டுப்பாடுகளின் இறுக்கம் தளர்த்தப்படும் போது சமுதாயத்தில் பல குழப்பங்கள் விளைகின்றன. ஒருவனுக்கு ஒருத்தி என்ற கட்டுப்பாட்டை மனித சமுதாயம் ஏதோ ஒரு காரணம் காட்டி மீறியதால் இன்று எய்ட்ஸ் என்னும் ஆட்கொல்லி நோய் உலகெங்கும் பரவியுள்ளது. இதுபோன்றே தான் ஆடை அணியும் பழக்கம், உணவு உட்கொள்ளும் பழக்கம் போன்றவைகள் ஒரு வரையறைக்குள் இருக்கும்வரை சமுதாயத்திற்கு எந்த ஆபத்தும் இல்லை.***

***தனி மனிதன் தறிகெட்டுப் போகாமல் இருப்பதற்குச் சமுதாயம் சில கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. தனி மனிதனுடைய ஆசாபாசங்கள் எல்லையற்றவை. அவற்றிற்கு ஓர் வேலி அமைப்பதே சமுதாயக் கட்டுப்பாடுகளின் முக்கிய நோக்கமாகும். கட்டுப்பாடற்ற சமுதாயம் காலப்போக்கில் சீர்கேட்டினை நோக்கிச் செல்லும். இந்த சமுதாயத்தினுடைய வளர்ச்சிக்கும், வாழ்ச்சிக்கும் சமூகக் கட்டுப்பாடுகள் என்ற வேலி எக்காலத்திலும் தேவைப்படுகிறது. நம் முன்னோர்கள் அனைவருடைய நலனைக் கருதி பல பழக்க வழக்கங்களை ஏற்படுத்தி வைத்தனர். அதில் ஒன்று நன்கு பழக்கமுள்ள இடத்தில் பெண் கொடுப்பது அல்லது வாங்குவது. 'பாத்திரமறிந்து பிச்சையிடு, கோத்திரம் அறிந்து பெண்ணைக் கொடு' என்ற பழமொழியை நாம் அனைவரும் அறிவோம். முதுமொழி எனப்படும் இத்தகைய சொற்றொடர்கள் அனுபவத்தின் வெளிப்பாடாகும்.***

***இன்றைய அவசர உலகில்*** Matrimony.com ***அல்லது செய்தித் தாள்களில் வெளிவரும் விளம்பரங்களைக் கண்டு திருமணம் முடிப்பது காலத்தின் கட்டாயமாக இருக்கலாம். ஆனால் அதன் விளைவுகள் என்ன?***

**இத்தகைய திருமணங்களால் எவ்வளவு சதவிகிதம் மணமுறிவு** (Divorce) **ஏற்பட்டுள்ளது என்பதையும் நாம் அறிவோம்).**

என்னுடைய மாதாமஹரான கோமடம் ராமானுஜ திருவேங்கடாசார்யார் ஸ்வாமிக்கு நான்கு குமாரர்களும், நான்கு பெண்களும் பிறந்திருந்தனர். என்னுடைய தாயாரான ஸ்ரீரங்கநாயகி அந்தக் குடும்பத்தில் இரண்டாவது பெண். ஆசார்ய புருஷரான ஸ்ரீ.உ.வே.ராமானுஜ திருவேங்கடா சார்யருடைய திருமாளிகையில் ஸமாஶ்ரயணம் செய்து கொண்டவர்கள் மட்டுமே உட்புகுந்து கைங்கர்யங்களைச் செய்திட இயலும். குழந்தைகளும், ஸமாஶ்ரயணம் ஆகாத வர்களும் தளிகை நடைபெறும் இடத்திற்குச் செல்ல இயலாது. ஒவ்வொரு நாளும் திருவாராதனம் ஸமர்ப்பிக்கப் பட்ட பிறகு தீர்த்த விநியோகம் நடைபெறும். அப்போது ஸ்ரீபாத தீர்த்தமும் ஸாதிக்கப்படும். அதன் பிறகு சுமார் காலை 10 மணியளவில் ததீயாராதனம் எனப்படும் மதிய உணவு பரிமாறப்படும். சிஷ்யர்கள் தங்கள் குடும்பத்தின ரோடு வந்து ஆசார்யனிடம் ஸமாஶ்ரயணம் செய்து கொண்ட பிறகு ஆசார்ய பிரஸாதமாக ததீயாராதனத்தில் பங்கு கொள்வர். தினந்தோறும் திருக்கண்ணமுது **(திருக்கன்னலமுது),** பணியாரங்கள் ஆகியவை இலையில் ஸாதிக்கப்படும். அது ஒரு பொற்காலம்.

## 7) தரமான காஃபிக்கொட்டை எங்கே கிடைக்கும்?

அந்தக் காலத்தில் காஃபி போன்ற பானங்கள் இல்லங்களில் அளிக்கப்படவில்லை. கி.பி.1945-ஆம் ஆண்டு வாக்கில்தான் காபிக்கொட்டை வியாபாரம் எங்கள் கிராமத்தில் வேரூன்ற ஆரம்பித்தது. திருத்துறைப்பூண்டியில் இருந்து காப்பிக்கொட்டை அய்யர் **(அவருடைய பெயர் யாருக்கும் தெரியாது)** அக்ரஹாரத்திற்கு வருகை தருவார். ஒரு பையில் PBerryயும், இன்னொரு பையில் Plantation A எனப்படும் தட்டைக் கொட்டையையும் கொண்டு வருவார். அக்ர ஹாரத்தில் ஒரு வீட்டின் திண்ணையில் முகாமிட்டிருப்பார். அவர் கையில் ஒரு சிறு தராசு இருக்கும்.



அக்ரஹாரத்தில் உள்ளவர்கள் அரை கிலோ அல்லது கால் கிலோ காப்பிக்கொட்டையினை அவரிடமிருந்து வாங்கி, பொன் அவரை விதையை அத்துடன் கலந்து, வறுத்து, அரைத்து, பொடி செய்து பில்டரில் சேர்த்து வடியும் Decoction கொண்டு காஃபி அருந்துவர். (Chicory*யைப் போன்றது இந்தப் பொன் அவரை விதைகள்*) காப்பிக்கொட்டை அய்யருக்கு பணம் பட்டுவாடா தவணை அடிப்படையில் நடைபெறும். அன்றைய நாட்களில் காஃபி என்பது வசதியுள்ளோர் மட்டுமே அருந்தும் பானமாக அமைந்திருந்தது.

சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன்னர் பெண்கள் பருவமடைவதற்கு முன்பாகவே திருமணம் செய்விக்கப் படுவர். பெண்ணிற்குப் பணம் கொடுத்து, அதாவது ஸ்ரீதனமாக பொற்காசுகளைக் கொடுத்துக் கல்யாணம் செய்து கொள்வது என்பது அன்றைய வழக்கம். ஒருவர் வீட்டில் திருமணத்திற்கு பெண் கேட்க வேண்டுமானால், பிள்ளை வீட்டார் ஊர்ப் பெரியவர்களைத் தம்முடன் அழைத்துக் கொண்டு பழம், பாக்கு, பூ, வெற்றிலை இவற்றோடு ஒரு பையில் பொற்காசுகளைக் கட்டி யெடுத்துக் கொண்டு பெண் வீட்டிற்குச் செல்லவேண்டும். அங்கே பொற்காசுகளை முன்னே வைத்து பெண் கேட்கவேண்டும்.

**(நாட்டில் எந்தப் பொருளும் அதன் வரத்து, அந்தப் பொருளுக் கானத் தேவை ஆகியவற்றைப் பொருத்தே அதனுடைய மதிப்பு அமையும். நாம் அன்றாடம் வாங்கும் காய்கறிகளிலிருந்து, தங்கம் வரை இந்தப் பொருளாதாரக் கொள்கை எக்காலத்திற்கும் பொருந்தும். மழை பொழிந்தாலும், வரட்சி ஏற்பட்டாலும் அதன் பாதிப்பு காய்கறிகளின்**

***விலையேற்றத்தில் நாம் காண்கின்றோம். அவ்வாறே சர்வதேச சந்தையில் தங்கத்தின் தேவை அதிகமாக, அதன் விளைவாக விலையேறுதலையும் நாம் காண்கின்றோம். சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன்பு பெண்கள் குறைந்த எண்ணிக்கையிலும், ஆண்கள் அதிக எண்ணிக்கையிலும் இருந்து வந்தனர். மேலும் சமுதாயக் கட்டுப்பாடுகள் பெருமளவில் கடைபிடிக்கப் பட்டு வந்தன. இதன் விளைவாகப் பெண்களுக்கு ஸ்ரீதனமாக பணம் கொடுத்து கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த நிலை, மாற்றம் பெற்று சுமார் முப்பது ஆண்டுகள் முன்பு தொடங்கி வரதக்ஷிணை என்ற பெயரில் பெண்ணைத் திருமணம் செய்து கொள்வோர் பணம் கேட்க ஆரம்பித்தனர். இந்தக் கொடுமை சமுதாயத்தில் உள்ள அனைத்து பிரிவினர் களிடம் பரவலாக ஊடுருவியது. இந்தக் கொடுமை கல்யாணத்திற்குப் பின்பும் தொடர்ந்தது. மண்ணெண்ணெய் அடுப்புகள் வெடிக்கத் தொடங்கின. சில குடும்பங்களில் மாமனார்களும், மாமி யார்களும், மைத்துனன்மார்களும், கணவன்மார்களும் கொடுங் கோலர் களாக மாறினர். சென்ற பத்தாண்டு காலமாக பெண்கள் சம அளவில் அல்லது அதிக அளவில் இருந்த போதிலும் தகுந்த வரன்களை பிள்ளை வீட்டார் தேர்ந்தெடுக்க இயலவில்லை. இதனால் உரிய பருவத்தில் இரு பாலரும் கல்யாணம் செய்து கொள்ள முடிவதில்லை. காலம் கடந்த கல்யாணங்கள் பல பின்விளைவுகளைத் தோற்றுவித்துள்ளது. கூட்டுக்குடும்ப முறை அடியோடு சிதறிய நிலையில் இன்றைய தம்பதிகள் "குழந்தை வளர்ப்பினை" முறையாக மேற்கொள்ள இயலவில்லை.)***

இந்த நடைமுறையைக் கைக்கொண்டு தன்னுடைய பெயரனான அனந்தாசாரிக்கு ஸ்ரீரங்கநாயகியை மணம் முடித்துத்தர வேண்டும் என்று அலர்மேல்மங்கை பாட்டி ஸ்ரீ.உ.வே.ராமானுஜ திருவேங்கடாசார்யரிடம் ப்ரார்த்தித்துக் (கேட்டுக்) கொண்டாள். அதே நாளன்று ஸ்ரீரங்கநாயகியை மேலும் இருவர் பெண் கேட்டு வந்ததாகவும், ஆனால் ஸ்ரீ.உ.வே.ராமானுஜ திருவேங்கடாசார்யர் ஸ்வாமி அவர்களு டைய வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கவில்லை என்றும் என்னுடைய தாயார் பிற்காலத்தில் என்னிடம் கூறினாள்.



## *8) ஐந்து நாள் கல்யாணமும், விருந்து படைத்தலும்.*

அந்த நாட்களில் கல்யாணம் என்பது ஐந்து நாட்கள் நடைபெறும் நிகழ்ச்சியாகும். செய்தித்தாள்கள், வானொலிப் பெட்டிகள் போன்ற பொழுது போக்குச் சாதனங்கள் அமைந்திராத காலத்தில் ஒருவருக்கொருவர் தமக்குத் தெரிந்த செய்திகளைப் பரிமாற்றம் கொள்வதே போக்குவீடாக அமைந்திருந்தது. கிராமங்களுக்குப் புதிதாக யாரேனும் வருகை தந்தால் அனைவர்க்கும் அந்தச் செய்தி பரவும். கிராமத்தில் நடைபெறும் நற்காரியங்கள் அல்லது இறப்பு போன்றவை அனைவர்க்கும் அறிவிக்கப்படும். அக்ர ஹாரத்தில் கல்யாணம் நிச்சயிக்கப்பட்டால் அன்றிலிருந்து அந்தத் தெருவே களைகட்டிவிடும். பெண்கள் ஒன்றாகக் கூடி அப்பளம் இடுதலுக்கு முற்படுவர். கடை களில் விற்கப்படும் உணவுப் பொருள்களையோ, இனிப்பு வகைகளையோ, அப்பளம், வடாம் போன்றவை களையோ யாரும் வாங்கி உபயோகிக்க மாட்டார்கள்.

யார் வீட்டில் கல்யாணம் நிச்சயிக்கப்பட்டிருந்தாலும் ஆயிரக்கணக்கில் உளுந்து அப்பளம் இடப்படும். மின்சார வசதி கிராமங்களுக்குச் சென்றடையாத காலத்தில் அனைத்து மாவுப் பொருள்களும் கல் இயந்திரத்தில் அரைக்கப்பட்டு சுத்தம் செய்யப்படும். கிராம விளை நிலங்களில் சம்பா பயிருடன், ஊடு பயிராக உளுந்து, பயறு போன்றவைகள் பயிரிடப்படும். சம்பா அறுவடை ஆனபிறகு இந்தப் பயிர்கள் வளர்ந்து, முதிர்ந்து சித்திரை, வைகாசி மாதங்களில் அறுவடை செய்யப்படும். ஒவ்வொரு வீட்டிற்கும் ஆண்டிற்குத் தேவையான உளுந்து, பயறு வகைகள் வேண்டிய அளவு சேமித்து வைக்கப்படும்.

## 9) அக்காலத்தைய திருமண வைபவமும், கடை பிடிக்கப்பட்ட ஆசாரமும்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் தேவையான நெல் 'பத்தாயம்' எனப்படும் கிடங்குகளில் சேமித்து வைக்கப் படும். இவை பெரிய அளவில் மரப் பலகைகளால் உருவாக் கப்பட்டிருக்கும். சுமார் 100 நெல் மூட்டைகளை ***(ஒரு கலம் நெல் என்பது 12 மரக்கால் அளவையைக் குறிக்கும். 'இரண்டு கலம்' ஒரு மூட்டை நெல்லைக் குறிக்கும்)*** இந்தப் பத்தாயங் களில் சேமித்து வைக்கலாம். சிலருடைய இல்லங்களில் மண்ணாலான சேமிப்புக் கிடங்குகளும் அமைந்திருக்கும். கிராமங்களில் அந்தக் காலத்தில் பத்தாய அமைப்பு இல்லாத இல்லங்களைக் காண இயலாது. சுமார் 60 வருடங்களுக்கு முன்பு கிராமப் பொருளாதாரம் என்பது பண்டமாற்று அடிப் படையில்தான் சுழன்று வந்தது. பணப்புழக்கம் அதிக மில்லாத காலத்தில் சிறு கிராமங்களில் விளையும் பொருள் களை பண்டமாற்றாகக் கொண்டு அவரவர்களுக்குத் தேவை யான உணவுப் பொருட்களைப் பெற்றுச் செல்வர்.

காய்கறிகளை யாரும் விலை கொடுத்து வாங்க மாட் டார்கள். ***(காய் என்ற சொல் கந்த மூலங்களைக் குறிக்கும். அதாவது செடி கொடிகளில் விளையும் தாவரப் பொருள்கள். கறி என்ற சொல் மிளகைக் குறிக்கும். நாம் அன்றாடம் உணவில் உபயோகப்படுத்தும் மிளகாய் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியான ஒரு தாவர வகை. காரத்திற்கு மிளகினையே நமது உணவுப் பண்டங்களில் உபயோகப்படுத்தி வந்தோம். இன்றும் திருவரங்கம் பெரியகோயிலில் மிளகாயை உபயோகிப்பது கிடையாது. மிளகைக் கொண்டே உணவுப் பதார்த்தங்கள் தயாரிக்கப்பட்டுவருகின்றன. சிராத்த தினத்தளிகைகளில் இன்றும் நாம் மிளகாயை உபயோகப்படுத்துவது இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. மிளகோடு சேர்ந்த தாவரப் பொருட் கள் என்னும் பொருள்படும்படி காய்கறி என்னும் சொல் வழக்கத்தில்***



***உள்ளது. இந்தச் சொல்லை மறந்தும் கூட காய்கரி என்று எழுதக்கூடாது. கரி என்றால் சாக்ஷி அல்லது யானையைக் குறிக்கும்.)*** அவரவர்களுக்கு என்று அமைந்துள்ள புஞ்சைத் தோட்டங் களிலோ அல்லது பரந்து விரிந்த பகுதியான வீட்டின் பின்புறத் திலோ காய்கள் பயிரிடப்படும். கிராமங்களில் ஒவ்வொருவர் வீட்டிலும் வெள்ளைப் பூசணியும், பரங்கிப் பழங்களும் நிறைந்த அளவில் சேமித்து வைத்திருப்பார்கள். திருக் கல்யாணம் நடைபெறும் இல்லங்களில் அவரவர்கள் மனமுவந்து தங்கள் வீட்டிலிருந்து வெள்ளைப் பூசணிக் காய்கள், பரங்கிப்பழங்கள், தளிகைக்கு ஏற்ற 'மொந்தன்' வாழைத்தார்கள், பழுக்க வைத்துப் பயன் படுத்து வதற்கான பூவன் வகை வாழைத்தார்கள், உணவு பரிமாறுவதற்கான பெருத்த வாழைஇலைகள் ஆகிய வற்றைக் கொண்டு வந்து கொடுப்பார்கள். ஊர் மக்கள் மனதில் சூதும் வாதும் குடி கொண்டிராத ஒரு பொற் காலத்தை என் கண்களால் கண்டு களித்துள்ளேன். என்னைவிட வயதில் மூத்தவர்களும் இவ்வாறு சமுதாயம் அமைந்திருந்ததை நன்கு அறிவார்கள்.

அந்தக் காலங்களில் திருமணங்கள் பெரும்பாலும் அவரவர்கள் வீட்டிலேயே நடைபெற்றன. கல்யாண மண்டபம் என்ற ஒரு அமைப்பு இல்லாத காலமது. குறிப் பாகக் கிராமங்களில், அதுவும் அக்ரஹாரங்களில் வசதி படைத்தோர்கள் தங்கள் இல்லங்களில் திருமண வைபவம் நடைபெறுவதற்கு உதவிடும் பொருட்டு இடத்தை ஒழித்துக் கொடுப்பார்கள். அவர்களுடைய அன்றாட செயல்பாடு களுக்குச் சில இடையூறுகள் நேரிடினும் அவற்றைப் பொருட் படுத்தாது சமுதாய நோக்கில் செயல்பட்டு வந்தனர். மாப்பிள்ளை வீட்டார் தங்குவதற்கென தனியானதொரு இடவசதி செய்து தருவதற்கு அக்ரஹாரத்தில் உள்ள ஒருவர் தற்காலிகமாக தனது வீட்டைக் காலிசெய்து விட்டு பக்கத்து

வீட்டில் அல்லது உறவினர் வீட்டில் தங்கிக் கொள்வார்கள். கல்யாணம் நடைபெறும் ஐந்து நாட்களில் மட்டுமல்லாமல், அதற்கு முன்பாக இரண்டு நாட்கள் தொடங்கி அனைவர்க்கும் அனைத்துவேளை உணவுத் தேவைகளும் கல்யாணம் நடைபெறும் வீட்டில் உள்ளவர்களால் கவனத்தில் கொள்ளப்படும்.

தீவிர ஆசாரத்தினைக் கடைபிடித்து வந்தவர்கள், அதாவது ஆசார்யபுருஷர்கள் உணவருந்திய பிறகே மற்றையோர் உணவு உட்கொள்வர். பெரியவர்களுக்கு உரிய மரியாதையினை அனைவரும் செலுத்தி வருவர். இத்தகைய உணவுப் பரிமாற்றங்களின் போது தீவிர ஆசார அனுஷ்டானத்தைக் கொண்டவர்கள், அதாவது அடியேனு டைய ஆசார்யன் போல்வார் ஸ்மார்த்த ப்ராஹ்மணர்கள் வீட்டில் நடைபெறும் கல்யாணத் தளிகையை உட்கொள்ள மாட்டார்கள். ஆனால் மற்றையோர்கள் அந்த அக்ரஹாரத்தில் ஸ்மார்த்தர்கள், ஸ்ரீவைஷ்ணவர்கள் என்ற பேதமின்றி கல்யாண விருந்தில் கலந்து கொள்வர்.

பிராஹ்மணர் அல்லாதார்களுக்குத் தனியாக சமையல் செய்யப்பட்டு விருந்து படைக்கப்படும். ஸ்ரீவைஷ்ணவர்களுடைய இல்லங்களில் தளிகையில் ஈடுபட்டிருப் போர் அனைவரும் பஞ்சகச்சம் உடுத்தியவர்களாகவும், சிகை உள்ளவர்களாகவும், ஸமாஸ்ரயணம் பெற்றவர்களாகவுமே இருந்து வந்தனர். சுகாதார முறைகளை கைக்கொள்வதில் சிறிதும் வழுவாமல் உள்ளன்போடு தயாரிக்கப்பட்ட இந்தத் தளிகை பிரசாதங்கள் கல்யாண வீட்டில் எழுந்தருளியிருக்கும் பெருமாளுக்கு அமுது கண்டருளப் பண்ணப்பட்ட பிறகே இலையில் ஸாதிக்கப்படும்.

***(தற்காலத்தில் கல்யாண தினத்தன்று மட்டுமல்லாமல் அதற்கு முன்னும் பின்னும் முழு உபவாசத்தை கைக்கொள்பவர் நமது இல்லங்களில் எழுந்தருளியிருக்கும் அர்ச்சாவதார எம்பெருமான்களும் சாளக்ராமங்களுமே. நமக்கு அனைத்து நலன்களையும் அவ்வப்போது நல்கிக் கொண்டு சேஷசேஷி பாவத்தை மாறாடிக் கொண்டு, அவனை தாஸனாகவும், நம்மை ஸ்வாமியாகவும் பாவித்துக் கொண்டு, நாமிட்ட வழக் காய் நமது இல்லங்களில் எழுந்தருளியிருக்கும் அர்ச்சாவதார எம்பெரு மான்களையும் சாளக்ராமங்களையும் பட்டினியிடலாமா? உள்ளூரில் கல்யாணம் நடைபெற்றால் கல்யாண தினத்தன்று காலையில் பழம், பால் அல்லது சுத்த அன்னத்தை தளிகை கண்டருளப்பண்ணுவதோ அல்லது வெளியூரில் கல்யாணம் நடைபெற்றால் ஆப்தர் ஒருவரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்து செல்வதோ அல்லது தற்காலிகமாக கோயி லாழ்வாரை அவரது இல்லத்திற்கு எழுந்தருளவிப்பதோ நமது செயல்பாடிற்கு உட்பட்டதொரு கைங்கர்யமே. சுமார் 60 ஆண்டுகளுக்கு முன்பு மக்கள் வாழ்ந்த வாழ்க்கைக்கும், இன்றைய வாழ்க்கைக்கும் இந்தச் செயல்பாட்டில் எத்தகைய மாறுதல் ஏற்பட்டுள்ளது. இதற்கு ஆயிரம் நொண்டி சமாதானங்கள் அளிக்க முன்வரும் நாம், நம்மை நாளும் ரக்ஷித்து வரும் கோயில் ஆழ்வாருக்கு உரிய உபசாரங்களை செய்து வருகிறோமா என்பதைச் சிந்தனையில் கொள்ள வேண்டும்).***



கல்யாண வீடுகளில் தரையில்தான் இலை சேர்க்கப் பட்டு உணவு பரிமாறப்படும். சாணமிட்டு மெழுகிய பிறகு தான் அடுத்த இலை அங்கு சேர்க்கப்படும். பந்தியில் பரிமாறுபவர்கள் ஸ்ரீவைஷ்ணவ பரிபாஷைகளைச் சொல்லியே பதார்த்தங்களை ஸாதிப்பர். ‘உப்பை’ ‘சர்க்கரை’ என்று சொல்வது ஒரு மரபு. இனிமை பயக்கும் சொற்களையே எப்போதும் ஒருவர் சொல்ல வேண்டும் என்பதற்கு இது ஒரு உதாரணம்.

ப்ரஸாதம் ஸாதித்திட வேண்டும் என்றுதான் கேட் பார்களே ஒழிய ‘சோறு போடு’ என்றோ, ‘சாதம் சாதம்’ என்று குரல் கொடுப்பதோ கிடையாது. குழம்பை நெழு கறியமுது என்றும், ரஸத்தை சாற்றமுது என்றும், பாயஸத்தை திருக்கண்ணமுது ***(திருக்கன்னலமுது)*** என்று கூறுவதும் பந்தி

மரியாதைகளாகும். கடையில் வாங்கிய அப்பளத்தை யாரும் உபயோகப்படுத்த மாட்டார்கள். கல்யாணத்திற்கென்று இடப்பட்ட பெரிய வகை அப்பளங்களையே பொரித்து இலையில் ஸாதிப்பர்.

தென்கலையார் வழக்கப்படி அனைத்துக் காய்கறி களும், பருப்பு வகைகளும், பழவகைகளும் இலையில் ஸாதிக்கப்பட்ட பிறகே ப்ரஸாதம் ஸாதிக்கப்படும். இவ்வாறு பதார்த்தங்கள் ஸாதிக்கப்படும்போது ஸ்ரீமண வாளமாமுனிகளின் சிஷ்யரான எறும்பியப்பா அருளிச் செய்த 'பூர்வ தினசர்யா', 'உத்தரதினசர்யா' என்ற ஸ்தோத்ர பாடமும், பராங்குசாஷ்டகமும் ஸேவிக்கப்படும். முதற் கட்டுப் பந்தியில் ஆசார அனுஷ்டானங்களைக் கடைபிடித்து வரும் ஸ்ரீவைஷ்ணவர்கள் எழுந்தருளியிருப்பார்கள். அவர்கள் உரத்த குரலில் பூர்வதினசர்யை, மற்றும் உத்தரதினசர்யை ஆகியவற்றை ஸேவித்து வந்தது அடியேனுடைய செவிகளில் இன்றும் ரீங்காரமிட்டு வருகிறது.

வைதிக முறைப்படியான கல்யாணம் ஐந்து நாட்கள் நடைபெறும். அந்த முறைப்படி என்னுடைய தகப்பனாரு டைய விவாஹம் கீழைப்பனையூர் கிராமத்தில் நடை பெற்றது. கல்யாணம் பெண் வீட்டில் நடைபெறுவது பொது வானதொரு வழக்கமாகக் அந்தக் காலத்தில் கொள்ளப் பட்டிருந்தது. என்னுடைய தகப்பனாருக்கு அவருடைய 15வது வயதில் திருமணம் செய்விக்கப் பெற்றது. எனது தாயாருக்கு அப்போது வயது 10. என்னுடைய தந்தையாரும் தாயாரும் ஒரே தெருவில் வசித்து வந்தவர்கள் ஆதலின் மாப்பிள்ளை எப்படி யிருப்பார், என்ன குண நலன்களைக் கொண்டவர் போன்ற கேள்விகளுக்கு பதில் தேட அவசியமில்லாமல் போயிற்று. என்னுடைய தாயார் பிறந்த வீட்டிற்கும், எங்கள்



மூதாதையர் வீட்டிற்கும் நான்கே வீடுகள் இடைப் பட்டிருந்தன.

## 10) பூர்வீக இல்லம்.

எங்களுடைய பூர்வீகமான இல்லம் கீழைப்பனையூர் அக்ரஹாரத்தில் கிழக்குப் பகுதியில் தெற்கு நோக்கி அமைந் திருந்தது. ஓட்டு வீடு. சாணி போட்டு மெழுகப்பட்ட தாழ் வாரங்கள், முற்றம், நீண்ட நீளம், அகலம் கொண்ட தளிகை அறை, பாத்திரங்களையும், உணவுப் பொருள்களையும் சேமித்து வைக்கப் பயன்பட்ட இடைகழி அறை ***(இதை கிராம மக்கள் 'ரேழி உள்' என்று கூறுவார்கள்)***. உள்தாவாரத்தை ஒட்டிய ஒரு அறை. இது பெரும்பாலும் படுக்கை அறையாக உபயோகத்தில் இருந்து வரும்.

இடைகழியில் உள்ள உத்திரங்களின் மேல் பரப்பி அடுக்கப்பட்ட பலகைகளில் நூற்றுக்கணக்கான மட்டைத் தேங்காய்கள் சேகரித்து வைக்கப்பட்டிருக்கும். வீட்டின் புழக்கடையில் ஒரு கிணறு. பலா, நாரத்தை ***(கடார நாரத்தை, கொழிஞ்சிவகை)***, வாழை, எலுமிச்சை மரங்கள் செழிப்போடு வளர்ந்திருக்கும். அடுப்புகளிலிருந்து அகற்றப்படும் சாம்பல், இந்த மரங்களுக்கு உரமாக இடப்படும். இரண்டு பசு மாடுகள், அவை தரும் பாலே வீட்டு உபயோகத்திற்குப் பயன் படுத்தப்படும்.

தொழுவத்திற்கு பக்கத்தில் ஒரு சிறிய வைக்கோல் போர் அமைந்திருக்கும். தொழுவத்தில் கிடைக் கும் சாணி மற்றும் பசு மூத்திரம், பசுக்கள் தின்று கழித்த வைக்கோல், இலை மற்றும் தழைகள் ஆகியவை தொழு உரமாக மாற்றம் பெறுவதற்கு அகன்றதும், ஆழமானதுமான மண் குழியில் இடப்பட்டு, பின்பு மரங்களுக்கும் செடிகளுக்கும் அடி உரமாக இடப்படும். கீரை, பாகற்காய், அவரை, கத்தரி, வெண்டை,

பச்சை மிளகாய், புடலங்காய் போன்றவை அந்தந்தக் காலங்களில் காய்த்துக் குலுங்கும்.



முள்ளியாற்றின் கரையோரம் கீழைப்பனையூர் அக்ர ஹாரம் அமைந்திருந்ததால், அந்தந்த வீட்டின் புழக்கடைக் கிணறுகளில் நீர் எப்போதும் வற்றாது காணப்படும். இந்த நீர் மிகுந்த சுவையுடையதாய் இன்றும் இருப்பதை அண்மை யில் அந்த ஊருக்கு சென்று வந்த நான் உணர்ந்தேன்.

***(இன்று சுவையற்ற நீரைப் பணம் கொடுத்து வாங்கி உபயோகப்படுத்தி வருகிறோம். எங்கு சென்றாலும் மாசு அடைந்த நீரே காணப்படுகிறது. ஆயினும் இன்றும் அதாவது கி.பி.2006-ஆம் ஆண்டிலும் கீழைப்பனையூர் கிராமத்தில் மாசற்ற சுவையான நீர் காணப்படுகிறது).***



தொழு உரங்கள் தயாரிக்கப்படும் பகுதியிலிருந்து வேர் ஊன்றி வரும் பூசணி, பரங்கி போன்றவைகள் சுற்றுப்புற வேலிகளில் படர்ந்து எங்கும் பசுமையாகவே காட்சியளிக் கும். வறண்ட கோடையிலும் கூட ஒவ்வொருவர் வீட்டுத் தோட்டங்களும் பசுமையாகவே காட்சியளிக்கும். ஆண்டு முழுதும் அந்தந்தப் பருவங்களில் விளையும் காய்களை பல ஆண்டுகள் அறுவடை செய்து வந்தோம்.

## 11) கிராம வைத்தியரும், அவர் ஆற்றிய தொண்டும்

சுதந்திரத்திற்கு முன்பு நமது கிராமங்களில் போதிய மருத்துவ வசதி கிடையாது. மருத்துவர்களும் அதிக எண் ணிக்கையில் பயின்று வரவில்லை. RMP எனப்படும் டிப்ளமா படிப்புப் பயின்ற Registered Medical Practitioners என்போர் ஜில்லா போர்டின் ஆதரவில் இயங்கி வந்த மருத்துவ நிலையங்களைப் பராமரித்து வந்தனர். இவ்வா றான ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையங்களும் மிக மிகக் குறைந்த அளவில் அமைந்திருந்தன. மகப்பேறு நிலையங்கள் கிராமங் களில் இயங்கி வரவில்லை. பிள்ளைப்பேறு என்பது அவரவர் களுடைய வீட்டிலேயே நடைபெறும். கிராமத்து நாவிதர் குடும்பப் பெண்களே மகப்பேறு மருத்துவச்சிகளாக செயல் பட்டு வந்தனர். சத்தானதும் ஆரோக்கியமானதுமான உணவு வகைகளும், நாட்டு மருந்துகளும் பிரசவித்த தாய்மார்களுக்கு கொடுக்கப் பட்டு வந்தன. இந்த மருத்துவச்சிகளே தொப்புள் கொடியை அறுத்து வைக்கோல் கூடுகளில் அவற்றை அடைத்து ஆலமரங்களில் தொங்கவிட்டுச் செல்வர்.

தீவிர மருத்துவ உதவி பெற வேண்டுமானால் 15 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள திருத்துறைப் பூண்டிக்கோ அல்லது மன்னார்குடிக்குக்கோ தான் செல்ல

வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமையப் பெறாத ஊர்களில் 'கிராம மருத்துவர்கள்' தான் அந்த கிராமத்திலும் சுற்று வட்டாரத்திலும் வாழும் மக்களுக்கு தேவையான மருத்துவ உதவிகளைச் செய்து வந்தனர். இவர்கள் பெரும்பாலும் இந்த மருத்துவ உதவியை ஒரு குடும்பத் தொழிலாக மேற்கொண்டு வந்தனர். அவர்கள் வாழையடி வாழையாக இந்த மருத்துவக் கல்வியை மூதாதையர்களிட மிருந்து கற்றுக் கொண்ட பிறகு சுவடியில் உள்ளபடி மருந்துகளைத் தயாரிப்பதையும், மருத்துவ உதவிகளைச் செய்வதையும் வழக்கமாகக் கொண்டு இருந்தனர்.

கீழைப்பனையூர் கிராமத்தில் '**வைத்திரத்தினம்**' என்பார் கிராம வைத்தியராக செயல்பட்டு வந்தார். மஞ்சட் காமாலை, டைபாய்டு, மலேரியா போன்ற வியாதிகளால் பீடிக்கப்பட்டவர்களுக்கு இவர் தயாரித்துத் தரும் மருந்து ஒன்றேகதி. ஏனெனில் பதினைந்து கிலோமீட்டர் தூரத்தில் உள்ள மன்னார்குடிக்குச் சென்று ஆங்கிலமுறை வைத்தி யத்தை இவர்களால் கைக்கொள்ள இயலாது. இவர் ஒவ்வொரு குடும்பத்தினரையும் ஒரு குறிப்பிட்ட நாள் பரிசோதித்திடுவார். பெரும் பாலும் நாடித்துடிப்பு கொண்டே 'இன்ன நோயினால் இவர் அவதிப்படுகிறார்' என்று துல்லிய மாகக் கூறும் அளவிற்கு இவருடைய மருத்துவ அறிவு விஞ்சி யிருந்தது.

பெண்களுக்கான நாடித் துடிப்பினை அளவிடும் போது அவர்களின் கையில் ஒரு பட்டுத்துணியைச் சுற்றித்தான் பார்ப்பார் இந்த வைத்தியர். அன்னிய ஆடவர்களுடைய கை ஸ்பரிசம் பெண்கள் மேல் படக்கூடாது என்பதற்காக இந்த வழிமுறை கையாளப்பட்டது. ***(இன்றைக்கு 'நன்றி தெரிவித்தல்', 'அறிமுகப்படுத்திக் கொள்ளுதல்' என்ற பெயரில் அனைத்து ஆண்களும், பெண்களும் கை குலுக்கிக் கொள்வதை ஒரு நாகரிகமாகக் கொண்டுள்ளனர். ஆனால் கையெடுத்துக் கும்பிடுவதே நமது நாட்டு வழக்கமாய் ஒரு காலத்தில் இருந்து வந்தது.)***



## 12) மாதாமஹருடைய குடும்பச்சூழல்.

அடியேனுடைய ஆசார்யனும், மாதாமஹருமான கோமடம் ஸ்ரீ.உ.வே.ராமாநுஜ திருவேங்காசார்யருக்கு நான்கு ஆண் பிள்ளைகளும், நான்கு பெண் பிள்ளைகளும் இருந்தனர். மூத்தவருடைய திருநாமம் ஸ்ரீ.உ.வே.ஸம்பத் ஸ்ரீநிவாஸா சார்யர் ஸ்வாமி என்பதாகும். இந்த ஸ்வாமி காஞ்சிபுரம் ஸ்ரீ.உ.வே.அண்ணங்கராசார்யர் ஸ்வாமி திருவடிகளில் நான்கு ஆண்டுகள் அர்த்த விசேஷங்களைக் கேட்டறிந்தவர். ஸ்ரீ.உ.வே. அண்ணகராசார்யர் ஸ்வாமி திருக்கரத்தால் எழுதப் பட்ட பல கடிதங்களை சிறுவயதில் அடியேன் படித்திருக் கிறேன். ***(மாதாமஹருடைய திருமாளிகை பரண்களில் எங்கு கை வைத்தாலும் அண்ணங்கராசார்யர் ஸ்வாமியினுடைய புத்தகங்களே கைகளில் தட்டுப்படும். அனைத்து பதிப்புகளையும் அண்ணங் கராசார்யர் ஸ்வாமி வித்வான்கள் பலருக்கு அனுப்பி வைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். குடும்ப பாரத்தைப் பற்றி காஞ்சி ஸ்வாமி என்றும் கவலை கொண்டதில்லை. அவருக்கு யாரேனும் ஸம்பாவனை ஸமர்ப்பித்தால் அந்தப் பணத்தைக் கொண்டு உடனே ஏதாவது ஒரு புத்தகத்தை புதிதாக அச்சிடுவதையோ அல்லது மறுபதிப்பு செய்வ தையோ வழக்கமாகக் கொண்டிருந்தார்.)***

ஸ்ரீ.உ.வே.ராமாநுஜாசார்யருடைய இரண்டாவது குமாரர் ராகவாசார்யர். அவருடைய மாதுலரான நாகப்பட் டினம் தாத்தாசார்யார் ஸ்வாமியுடன் தங்கியிருந்து கிராம கர்ணம் வேலைக்குத் தேவையான பயிற்சி பெற்று வந்தார். நாகப்பட்டினம் தாத்தாசார்யார் ஸ்வாமி ஆசார்ய அபிமானம்

மிக்கவர். நாகப்பட்டினம் முன்சிப் கோர்டில் எழுத்தாளராக பணியாற்றி வந்தவர். ஆசார, அனுஷ்டானங்களை தவறாது கடைபிடிப்ப வர். என்னுடைய மாதாமஹரிடம் அதிக அன்பு கொண்டவர். சிறுவயதில் சாப்பிடும்போது கீழே சாதத்தை கவனக்குறை வால் சிந்திடும் போது என்னுடைய தாயார், 'நாகப்பட்டினம் தாத்தாசார்யார் பிடிபிடியாக சம்பாதிப்பவர். அவர் சாப்பிடும்போது இலையைச் சுற்றி எந்த உணவுப் பொருளும் சிந்தாது சாப்பிடுவார். குழந்தைகளாகிய நீங்கள் அவரைப் பார்த்து பல விஷயங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்' என்று அறிவுறுத்துவாள்.

**(வாழ்க்கை நெறிமுறைகளை பிறருடைய அனுஷ்டானம் கொண்டு கற்றுக்கொள்ள வேண்டும். எவ்வளவு செல்வம் படைத்தவ ராயினும் உணவு உட்கொள்ளும்போது பதார்த்தங்களை இலையில் மீதி வைப்பதோ அல்லது இலையைச் சுற்றி கவனக்குறைவால் தெறிப்பதோ கூடாது என்ற உயர்ந்த பண்பினை எனக்குக் கற்றுக் கொடுத்தவர் இவர். அவருக்கு புத்ரபாக்யம் கிட்டவில்லை. பிற்காலத்தில் என்னுடைய மாதுலரான ஸம்பத் குமாராசார்யரின் இரண்டாவது புத்ரரான வகுளபூஷணத்தை ஸ்வீகார மாகக் கொண்டார் இவர்.)**

மூன்றாவது, நான்காவது குமாரர்களான நம்பிள்ளை, கண்ணன் ஆகிய இருவரையும் கீழைப் பனையூருக்கு அண்மையில் அமைந்திருந்த கோட்டூர் பாடசாலையில் சேர்ப் பித்து வேதத்தை அதிகரிக்கும்படிச் செய்தார். **(இந்தப் பாட சாலையானது கோட்டூர் முதலியார்கள் தர்மத்தில் நடந்து வந்தது. தஞ்சாவூர் மாவட்டத்தில் பெரும் நிலச்சுவான்தார்களாய் விளங்கி வந்தவர்கள் சைவ முதலியார்கள். திருஆரூரான் சர்க்கரை ஆலையை நிறுவிய V.S.தியாகராஜமுதலியார் போன்றவர்கள் இந்த முதலியார் பிரிவினைச் சார்ந்தவர்கள். இவர்களில் ஸ்ரீவைஷ்ணவத்தைத் தழுவிய முதலியார்களும், சைவத்தைத் தழுவிய முதலியார்களும் இருந்து வந்தனர். ஆயினும் அவர்களுக்கிடையே திருமண உறவு உண்டு.**



**பொதுவான தர்மத்தை வளர்ப்பதில் அதிக ஈடுபாடு கொண் டிருந்தவர்கள் இவர்கள். அத்தகைய தர்மங்களில் ஒன்றுதான் கோட்டூர் பாடசாலை. விளக்குடி வாத்யார் என்று பிரசித்தி பெற்றிருந்த கனபாடி ராமஸ்வாமி அய்யங்கார் பாடசாலை வாத்யாராக பணியாற்றி வந்தார். கோட்டூர் திருவேங்கட முதலியார் என்பவருடைய தர்மமாக இந்தப் பாடசாலை விளங்கி வந்தது. சுமார் பத்து மாணவர்கள் ஒன்பது வருஷ அத்யயனத்தில் ஈடுபட்டிருந்தனர்.**

**கோட்டூரில் அழகானதொரு பெருமாள் ஸந்நிதி உண்டு. அந்தக் கோயிலில் அனைத்து விழாக்களும் மிகச் சிறப்பாக ஒருகாலத்தில் கொண்டாடப்பட்டு வந்தன. பெரிய வரதாசார்யர் ஸ்வாமி என்பார் பல தனிகர்களை அணுகி இந்த உத்ஸவங்கள் நடைபெறு வதற்கான நிதி ஆதாரத்தைப் பெற்று வந்தார்.)**

என்னுடைய தாயாரின் மூத்த சகோதரி பெயர் செல்லம்மாள். நாலாயிர திவ்யப்பிரபந்த அதிகாரிகளாய் அந்தக் கிராமத்திலும், சுற்று வட்டாரத்திலும் திகழ்ந்து வந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் பெரிய கிருஷ்ண ஐயங்கார், பள்ளி விருத்தி சீமா ஐயங்கார், தேசிக ஐயங்கார் ஆகியோர். இவர்கள் அனைவரும் என்னுடைய மாதாமஹருடைய திருமாளிகையில் உரத்த குரலில் வெகு அழகாக நாலாயிர திவ்யப்பிரபந்தத் தினை ஸேவித்து வருவார்கள். இந்த ஆத்ம ஸம்பந்தத்தின் அடிப்படையில் தேசிக ஐயங்காருடைய குமாரரான ராம ஸ்வாமி ஐயங்காருக்கு செல்லம்மாளைத் திருமணம் செய்வித்தார்.

ஆனால் செல்லம்மாளுடைய வாழ்க்கை அவ்வளவு சிறப்பாக அமையவில்லை. ராமஸ்வாமி ஐயங்கார் சில நாட்கள் தான் ஊரில் தங்கியிருப்பார். பல நாட்கள் அவர் எங்கு சென்றார், என்ன செய்கிறார் என்பதே தெரியாமல் இருந்தது.

என்னுடைய தாயாரான இரண்டாவது குமாரத்தியை, உள்ளூரிலேயே திருமணம் செய்து கொடுத்தார் என்பதை முன்னமே தெரிவித்திருந்தேன்.

## 13) என் தந்தையாரின் கட்சித்தொண்டும், அதன் விளைவாக இடர்பட்ட இல்லற வாழ்க்கையும்.

சிறுவயது முதல் கொண்டே காங்கிரஸ் கட்சி கொள்கைகளில் தீவிரப் பற்றுக் கொண்டவர் என்னுடைய தகப்பனார். அந்தக் காலக்கட்டத்தில் நாடெங்கும் விடுதலைப் போராட்டம் காந்தியின் வரவால் துளிர் விட்டிருந்தது. நாட்டில் பலர் இன, மொழி வேறுபாடின்றி இதில் ஈடுபட்டிருந்தனர். திருமணம் முடிந்த பிறகு என்னுடைய தகப்பனார் எங்கெங் கெல்லாம் பொதுக் கூட்டங்கள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் சென்று விடுவார். காந்தி அறிவித்த போராட் டங்களிலும் கலந்து கொண்டார். உள்ளூரில் காங்கிரஸ் கொடி யேற்றி கிராமவாசிகளை சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொள்ளுமாறு ஆவேசத்துடன் பேசி வந்தார்.

இத்தகைய செயல்களை அன்றைய கால கட்டத்தில் வைதிக குடும்பத்தினர் பொதுவாக ஆதரிப்பதில்லை. மேலும் ஆசார்ய புருஷராய் விளங்கிய ஸ்ரீ.உ.வே.ராமானுஜ திருவேங்க டாசார்ய ஸ்வாமி என்னுடைய தகப்பனாருடைய போக்கிற்கு அதிருப்தி தெரிவித்ததோடு மட்டுமல்லாமல் என்னுடைய தாயாரை தன்னுடைய இல்லத்திலேயே தங்கியிருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். நிலை யானதொரு உத்யோகத்தில் இருந்தாலொழிய தன்னுடைய பெண்ணான என்னுடைய தாயாரை புக்ககத்திற்கு அனுப்ப இயலாது என்று திட்ட வட்டமாகக் கூறிவிட்டார்.



இந்தக் கட்டாயத்தால் உந்தப்பட்ட என்னுடைய தகப் பனார் விழுப்புரத்திற்கு அருகாமையில் உள்ள விக்கிர வாண்டியில் அமைந்திருந்த நெல் ஆலையொன்றில் கணக்க ராகச் சேர்ந்தார். ***(காவிரி நதி பாயும் தஞ்சை மாவட்டம் தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் என்ற புகழினைப் பெற்றது. தென்னார்காடு மாவட்டத்தின் கடில நதி, தென்பெண்ணையாறு, மலட்டாறு, பொன்னியாறு ஆகிய நதிகள் பாய்வதால் வளப்பமுற்று விளங்குகிறது. அந்தப் பகுதிகளில் பயிர் செய்யப்பட்ட நெல் அனைத்தும் விக்கிர வாண்டியில் கொண்டு வரப்பட்டு, அங்கு நிறுவப்பட்டிருந்த பல நெல் அரவை ஆலைகளில் பக்குவப் படுத்தப்பட்டு அரிசியாக்கப்படும். அத்தகைய ஆலைகளில் ஒன்றில்தான் என்னுடைய தகப்பனார் வேலைக்கு அமர்ந்தார்.)***

விக்கிரவாண்டியில் நெல் அரைவை ஆலையில் கணக் கராக வேலைபார்த்து வந்த காலத்தில் தனது வரு மானத்தைப் பெருக்கிக் கொள்வதற்காக விழுப்புரம் சந்திப்பில் அதிகாலை நேரத்தில் செய்தித்தாள் விற்பனையில் என்னுடைய தந்தையாரும், ஸ்ரீநிவாஸன் என்ற மற்றொரு உறவினரும் ஈடுபட்டிருந்தனர்.

## 14) விழுப்புரம் ரயில்நிலையத்தில் நாளிதழ் விற்பனை

சென்னையிலிருந்து நாளிதழ்கள் அச்சடிக்கப்பட்டு விழுப்புரத்திற்கு இரவு 12 மணிக்கு புகைவண்டியில் வந்து சேரும். சென்னையிலிருந்து தெற்கு நோக்கிச்செல்லும் அனைத்துப் புகைவண்டிகளும் விழுப்புரம் வழியாகத்தான் செல்லவேண்டும். விழுப்புரத்தில் திருச்சி செல்வதற்கான குறுக்குப்பாதையில் சில வண்டிகளும், நேர்வழி எனப்படும் கடலூர், சிதம்பரம், மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சை மார்க்கமாக திருச்சி செல்லும் வண்டிகளும் வந்து சேரும்.

அவ்வாறே சென்னைக்குச் செல்லும் வண்டிகளும் இரவு 12 மணிக்குப் பிறகே விழுப்புரத்தைக் கடந்து செல்லும். சென்னை எழும்பூரிலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் புகைவண்டிகள் அனைத்தும் அந்த நாட்களில் 'Metre Gauge' பாதையில்தான் செல்லவேண்டும்.

நாளிதழ்க் கட்டுகளை மொத்தவியாபாரியிடமிருந்து பெற்றுக்கொண்டு விழுப்புரம் சந்திப்பில் புகைவண்டிகள் வந்தவுடன் நாளிதழ்களின் பெயரைக் கூவி விற்பனை செய்யும் தொழிலில் எனது தந்தையாரும், ஸ்ரீநிவாஸனும் ஈடுபட்டிருந் தனர். விக்ரவாண்டியத்தில் வாழ்ந்துவந்த காலத்தில் எனது தாயார் எங்கள் குடும்பத்து முதல் ஆண் வாரிசான பார்த்தசாரதியை வயிற்றிலே சுமந்திருந்தாள். அவ்வாறு கருவுற்றிருந்த காலத்தில் விழுப் புரம் செல்வதற்காக மாட்டுவண்டியில் பயணம்செய்த போது வண்டியின் அச்சுமுறிந்து வாய்க்காலில் உருண்டு விழுந்ததாகவும் தெய்வா தீனமாக தனக்கும் வயிற்றிலே சுமந்து கொண்டிருந்த சிசுவிற்கும் எந்த ஆபத்தும் ஏற்படவில்லை என்று எனது தாயார் பிற்காலத்தில் என்னிடம் கூறியுள்ளார்.

## 15) கம்மங்குடி ஊர்வளம்.

இதனிடையில் எனது சிறிய தகப்பனாரான திரு.ரங்கசாமி அய்யங்கார் கு.கு.ஃ.இ. படிப்பை முடித்துவிட்டு ஆசிரியர் பயிற்சி பள்ளியில் சேர்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். எனது தகப்பனாரின் ஒரே தங்கையும் எனக்கு அத்தையுமான செல்லம் மாள் உள்ளூரிலேயே திருமலாசார்யர் என்பவர்க்குத் திருமணம் செய்துகொடுக்கப்பட்டார். இவருடைய தமையனாரான பெரிய கிருஷ்ண அய்யங்கார் நாலாயிர அத்யாபகராக விளங்கிவந்தார் என்பதை முன்னமே குறிப்பிட்டுள்ளேன். திருமலாசார்யர் சிறிது காலத்திற்குப் பிறகு கீழைப்பனையூரிலிருந்து 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கம்மங்குடி என்ற கிராமத்திற்குக் குடிபெயர்ந்தார்.



அனைத்து வளப்பங்களையும் தன்னகத்தே கொண்டது இந்தக் கிராமம். இந்தக் கிராமத்தில் விளையும் கடார நாரத்தை (Seville Orange) மற்றும்நாரத்தை (Citrus aurantium) சிறப்புமிக்க வகை களில் ஒன்றாக இன்றும் விளங்கிவருகிறது. அவை மெல்லிய தோலை உடையதாகவும், சாறு அதிகம் கொண்டதாகவும், இனிப்புடன் கலந்தப் புளிப்புச் சுவை கூடியதாகவும் இருக்கும். இந்த கிராமத்தில் இயற்கை உரமிட்டு விளையும் காய்கறிகள், வாழை இலை ஆகியவை எந்தக் காலத்திலும் விற்பனைக்குக் கிடைக்கும்.

முள்ளியாற்றின் கரையோரத்தில் அமைந்துள்ள இந்தக் கிராமத்தைச் சுற்றிப் பல புஞ்சைத் தோட்டங்கள் அமைந் திருந்தன. அந்தத் தோட்டங்களில் கோடைகாலத்தில் பூத்துக் குலுங்கும் மாமரங்கள் அவைகளிலிருந்து இறக்கப்படும் காம்போடு கூடிய மாவடு **(கொத்தோடுகூடிய இந்த மாவடுக் களைக் கிளைகளிலிருந்து அலகு கொண்டு அறுத்திடும்போது அவை பூமியில் வீழ்ந்திடாவண்ணம், அதிக நீளமும் அகலமும் கொண்ட சாக்குப் படுதாக்களை மரக்கிளைகளில் கட்டிவிடுவர். அந்தப் படுதாக்களில் அறுக்கப்படும் மாவடுகள் கொத்தோடு சேகரிக்கப் படும். காம்போடு கூடிய வடுக்களே ஊறுகாய்க்கு உகந்தவை. எங்கள் இல்லத்தில் இவ்வாறு சேகரிக்கப்பட்ட மாவடுக்கள், பெரியபீங்கான் ஜாடிகளில் இடப்பட்டு வடுமாங்காய் ஊறுகாய் தயாரிக்கப்படும். இவ்வாறு வடுமாங்காய் ஊறுகாய் தயாரிப் பதற்கு வீட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஆமணக்கு எண்ணெய், அதிக அளவில் உப்பு, கடுகுப் பொடி மற்றும் மஞ்சள் பொடி ஆகியவை மாவடுக்களில் சேர்க்கப்படும். இந்த மாவடுக்களின் மேல் நீர் துளிகள் ஒட்டிக் கொள்ளாவண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும். அவ்வாறு நீர்த்துளிகள் இருந்தால் மாவடுக்கள் அழுகிவிடும். குளிக் காமல் யாரும் இந்த ஊறுகாய் ஜாடியைத் திறக்கக்கூடாது. ஒரு நாளைக்கு ஒருமுறைதான், நீண்ட அகப்பை கொண்டுதான் மாவடுவை ஜாடியிலிருந்து எடுப்பர். இவற்றிலிருந்து இன்னொரு சின்னஜாடியில் சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும். ஒரு**

***ஆண்டிற்கான உபயோகத்திற்காக தயாரிக்கப்பட்ட இத்தகைய ஊறுகாய் அடுத்த பருவம் வரை உபயோகத்தில் இருக்கும்.)*** பழுத்துக்குலுங்கும் மாமரங்கள், பலாமரங்கள், நெல்லி மரங்கள் போன்றவை இந்தத் தோட்டங்களில் அதிக அளவில் காணப்படும். எங்கு நோக்கினும் பசுமையே நிறைந்திருக்கும். இந்த ஊரில் நான் கோடை விடுமுறையில் பல நாட்கள் தங்கியிருந்து இயற்கையின் எழிலை அனுபவித்துள்ளேன்.

## 16) பாம்பே சீமாச்சாரி

விழுப்புரத்தில் என்னுடைய தந்தையாரோடு நாளிதழ் விற்பனையில் ஈடுபட்டிருந்த சீமாச்சாரி என்ற ஸ்ரீநிவாஸன் பிழைப்பைத் தேடி பாம்பே சென்றுவிட்டார். என்னுடைய தந்தை யாரும் தாம் பார்த்துக்கொண்டிருந்த கணக்கர் வேலையைத் துறந்து, நில அளவையில் diploma படிப்பு படிப்பதற்காக தஞ்சாவூரில் சில மாதங்கள் தங்கியிருந்தார். அந்தக் காலத்தில் Surveyor பயிற்சி பெற்றவர்களே கிராமக் கணக்கர்களாகப் பணியில் அமர்த்தப் படுவர். தான் ஒரு கிராமக் கணக்கப்பிள்ளையாக பணியாற்றிட வேண்டி Surveyor பயிற்சி வகுப்பில் எனது தந்தையார் சேர்ந்தார். கி.பி.1933ஆம் ஆண்டு எங்கள் குடும்பத்து மூத்த குமாரனான பார்த்தசாரதி பிறந்தான்.

## 17) வாழ்க்கைச் சக்கரத்தின் சுழற்சி.

Surveyor பயிற்சி முடித்தபிறகு தஞ்சைமாவட்டம் திருத் துறைபூண்டியில் புகழ்பெற்றுவிளங்கிய ‘கருணாநிதி அரிசி’ ஆலையில் கணக்கராகச் சேர்ந்தார் என்னுடைய தந்தையார். அந்த அரிசி ஆலையின் மூத்த கணக்கரான திரு.சார்ங்கபாணி அய்யங்கார் இல்லத்தில் தங்கியிருந்து தனது பணிகளைச் செய்துவந்தார். எனது தாயார், பிதாமஹி ***(தந்தைவழிப் பாட்டி)***, கைக்குழந்தையான பார்த்தசாரதி ஆகியோர் கீழைப் பனையூரில் எங்களுடைய பூர்வீக இல்லத்தில் வசித்துவந்தனர். எனது தந்தையாரின் மாமா சின்ன கிருஷ்ண அய்யங்கார் நிலங்களைச் சாகுபடி செய்து வந்தார். இவ்வாறு வாழ்க்கைச் சக்கரம் சில ஆண்டுகள் உருண்டு சென்றது.



திருத்துறைப்பூண்டியிலிருந்து மேற்கே 8 கி.மீ. தொலை வில் அமைந்துள்ள களப்பாள் என்னும் கிராமத்தில் நிலச் சுவான் தாராயிருந்த திரு.குமரப்பமுதலியார் என்பவர் திருத் துறைப்பூண்டி ‘கருணாநிதி அரிசி ஆலைக்கு’ வந்திருந்தபோது என் தந்தையாரைச் சந்திக்க நேரிட்டது. கையெழுத்து மிகத்தெளிவாக அமைந்திருந்த கணக்குப் பதிவேடுகளைக் காண நேரிட்ட திரு.குமரப்ப முதலியார் தம்முடைய பண்ணையில் கணக்கப்பிள்ளையாக வேலையில் அமர்த்துவதற்கு வேண்டி என்னுடைய தந்தையாரின் இசைவினைக் கேட்டார். அவரும் அதற்கு ஒப்புக்கொண்டு 5 கலம் நெல் 20 ரூபாய் சம்பளத்திற்குக் களப்பாள் கிராமத்தில் திரு.குமரப்ப முதலியாருடைய பண்ணையில் 1937ஆம் ஆண்டு கணக்கராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

திரு.குமரப்ப முதலியாரோடு கூடப்பிறந்தவர்கள் 4 பேர். ஒவ்வொருவருக்கும் சுற்றுப்புறத்தில் உள்ள பல கிராமங் களில் 100 வேலி நஞ்சை, பல ஏக்கர்கள் புஞ்சை நிலமுண்டு. திரு.குமரப்ப முதலியாருடைய அண்ணன் திரு.குப்பையா முதலியார் நிர்வகித்து வந்த பண்ணைக்குப் பெரியபண்ணை என்று பெயர். அதனால், திரு.குமரப்ப முதலியாரின் இந்தப் பண்ணையை சின்னப் பண்ணை என்று அழைப்பர்.

## 18) சிவன் கோயில் ப்ரஸாதமும், நிர்மால்ய தோஷமும்

திரு. குமரப்பமுதலியார் அந்தகாலத்தைய பி.ஏ. படிப்பு படித்தவர். இவருடைய தம்பிகளில் ஒருவர் தொப்பையா முதலியார் என்பவர். இந்த முதலியார்கள் அனைவரும் சைவர் கள். உள்ளூரில்

இருந்த விசுவநாதர் உடன்உறை ப்ரஹந்நாயகி சிவன் கோயில் இந்தக் குடும்பங்களின் பொதுச்சொத்து. தொப்பையா முதலியார் சைவ சாஸ்த்ரங்களும், ஆகமமும் நன்கு அறிந்தவர். இவர் சிவன் கோயிலுக்கு வருகை தரும் நாட்களில் கோயில் அர்ச்சகரான கிருபாநிதீச குருக்களின் கைகள் நடுங்கும். ஏனெனில் அவர் செய்யும் செயல்களையும் உச்சரிக்கும் மந்திரங்களையும் மிக உன்னிப்பாகக் கவனித்துப் பிழை ஏதேனும் இருப்பின் உடனே சுட்டிக்காட்டுவார். இந்த சைவ முதலியார்களும் மற்றும் ஊர்ப்பொதுமக்களும் கோயிலில் சிவனுக்குப் படைக்கப்படும் எந்த உணவுப் பதார்த்தங்களையும் உட்கொள்ள மாட்டார்கள். சிவனுக்குப் படைக்கப்பட்டவை நிர்மால்ய தோஷம் கொண்டது என்பதால் அவர்கள் அவற்றை ப்ரஸாதமாகக் கொள்ளமாட்டார்கள்.

***(தற்போது சிவன் கோயில்களில் இயங்கிவரும் - மூன்று நட்சத்திர அந்தஸ்து கொண்ட உணவகங்களுக்குச் சமமான - ப்ரஸாத ஸ்டாலிலிருந்து கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் பல்வகை உணவுப்பதார்த்தங்களை வாங்கி உண்கிறார்கள். சுமார் 60 ஆண்டு களுக்கு முன்பு சிவன் கோயில் பிரஸாதத்தை யாரும் உட்கொள்ள மாட்டார்கள். தற்காலத்தில் பொது மக்களைப் பொறுத்தவரை இந்த ப்ரஸாத ஸ்டால்கள் ஒருவகை துரித உணவகங்களாகக்*** (Fast food Centres) ***கொள்ளப்படுகின்றன.)***

## 19) கணக்கப்பிள்ளைக்கானக் குடியிருப்பு

பண்ணை கணக்கப்பிள்ளைக்கு வாடகை இல்லாத தனிவீடு உண்டு. அது தவிர அடுப்பில் எரிப்பதற்கான விறகு கட்டைகள் வீட்டு வாசலில் மாட்டு வண்டியில் கொண்டுவந்துத் தரப்படும். வீட்டின் எதிரில் அமைந்திருந்த குளத்தின் கரையோரத்தில் உள்ள நான்கு தென்னை மரங்கள் கணக்கப்பிள்ளை வீட்டு உபயோகத்திற்காகத் தேங்காய் பறித்துக் கொள்வதற்கு விடப்பட்டிருந்தன. இது தவிர, அன்றாட உபயோகத்திற்கான தயிர் பண்ணையில் வழங்கப்படும்.



***(இந்தத் தயிரை வாங்குவதற்கு முதலியார் வீட்டில் நீண்ட நேரம் கால் கடுக்க நிற்க வேண்டும். அண்ணி என்று அழைக்கப் படும் முதலியாரின் மனைவி அங்குமிங்கும் போய்வருவாளே தவிர, நாங்கள் நிற்பது அவர்கள் கண்ணிற்குத் தெரியாது. அவ்வப்போது கனைத்து நாங்கள் தயிர் வாங்கவந்ததைத் தெரிவித்துக் கொள்ள வேண்டும். பிற்காலத்தில் இந்தத் தயிர் வாங்கச் செல்வதில் எனக்கும் என் தமையனாருக்கும் அவ்வப்போது பூசல் ஏற்பட்ட தால், நான் ஒரு நாள், அவன் ஒரு நாள் என முறை வைத்துத் தயிர் வாங்கிவந்தோம்.)***

## 20) அமாவாசையும், முதலியார் வீட்டு வரிசையும்

அமாவாசை தினத்தன்று இரண்டு வாழைக் காய், 4 வாழை இலை ***(இந்த இலை பச்சையாக இருக்காது காய்ந்து பழுப்புநிறம் கொண்டதாய் இருக்கும்.)***, 1 படி அரிசி கணக்கபிள்ளையின் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படும். தீபாவளிக்கு முதல்நாள் ஒரு சேர் எண்ணெய் ***(அந்தக் காலத்து அளவை)***, காய்ந்த சிகைக் காய், வெற்றிலை பாக்கு, வாழைப் பழம், 1 வீசை வெல்லம் ஆகியவை அனுப்பி வைக்கப்படும். பொங்கலுக்கு இஞ்சி, மஞ்சள் கொத்து, 2 கரும்பு, 1 டஜன் வாழைப்பழம், வாழை இலை, அரிசி, பருப்பு, வெல்லம் ஆகியவை பண்ணையிலிருந்து கணக்கப்பிள்ளையின் இல்லத்திற்கு அனுப்பிவைக்கப்படும்.

பண்ணை வீட்டில் யாரேனும் இறந்துவிட்டால் ‘கோ’ தானத்தைக் கணக்கப்பிள்ளைப் பெற்றுக்கொள்வார். பண்ணை யில் உள்ள கறவை மாடுகளில் மிகவும் வயதானதும், கால்படி பால் மட்டுமே கொடுக்கக்கூடியதுமான பசுவே எங்கள் வீட்டின் பின்புறத்தில் உள்ள மாட்டுகொட்டகைக்கு கன்று குட்டியோடு வந்து சேரும். ஒவ்வொரு ஆண்டும் நீத்தார் நினைவு நாள் கொண்டாடும் போது, ஒரு மூங்கிற் கூடையில் திதியன்று சமைக்கக் கூடிய காய்கறிகள், பலாமுசு, பலாப்பழம் அல்லது மாம்பழம், வாழைப் பழம், 8 படி அரிசி ஆகியவை கணக்கப்பிள்ளையின் வீட்டிற்கு

அனுப்பிவைக்கப்படும். பன்னை வீட்டில் குழந்தை பிறந் தால் புண்யாஹவாசனத் தன்று ஒரு கலம் விதை நெல் தானமாகக் கணக்கப்பிள்ளைக்குக் கொடுக்கப்படும்.

## 21) இயற்கை உரமிட்டுப் பயரிடப்பட்ட காய்கறிகள்

வீட்டு உபயோகத்திற்கான காய்கறிகள் எங்கள் வீட்டின் பின்புறத்தில் அமைந்துள்ள தோட்டத்திலேயே பயிரிடப்பட்டு வந்தது. வீட்டின் முற்றத்தில் அவரைப் பந்தல் போடப்பட்டு ஆண்டின் 3 மாதத்திற்கு அவரைக்காய் காய்த்துக் குலுங்கும் இந்த அவரைக்காயைக் கொண்டு வற்றல் தயாரிக்கப்படும். அவ்வாறே தோட்டத்தில் விளைந்த கொத்தவரங்காய், பாகற்காய், மூக்குத்திக்காய், கத்தரிக்காய் போன்றவை அன்றாட உபயோகத் திற்குப்போக எஞ்சியவை வற்றல் தயாரிக்கப்பட்டு மழை காலத்தில் உபயோகப்படுத்தப்படும்.





ஆண்டு முழுவதும் கீரை பயிர் செய்யப்படும். கீரைத் தண்டு நார் அற்றதாகவும், சுவை மிகுந்ததாகவும் இருக்கும். முதிர்ந்த வெள்ளைப் பூசணிக்காய், பரங்கிக்காய் ஆகியவை பறிக்கப்பட்டு அவை பரணியில் சேமித்து வைக்கப்படும். பல ஆண்டுகள் வீட்டு உபயோகத்திற்கான காய்கறிகளைக் காசு கொடுத்து வாங்கியதே இல்லை. அவ்வப்போது பக்கத்துக் கிராமங்களுக்குப் பணி நிமித்தமாகச் சென்றுவரும் என் தந்தையார் வாழைக்காய், வாழைப்பூ, வாழைத்தண்டு, பரங்கிப்பிஞ்சு ஆகியவற்றைச் சுமக்கமுடியாமல் சுமந்துவருவார். வீட்டின் பின்புறத்தில் நான்கு பசுமாடுகள் எல்லாக் காலத்திலும் பாலைச்சுரந்துகொண்டிருக்கும். அந்த மாடுகளுக்கான புல் கிராமத்தின் வாய்க்கால் ஓரங்களிலும், வயல் ஓரங்களில் அபரிமிதமாகக் கிடைக்கும். இதுதவிர, அவைகளுக்குப் பருத்திக்கொட்டை, புண்ணாக்கு இவைகளை அரைத்து நெஞ்சுமுட்ட புகட்டப்படும். அன்றாடம் காலைப் பொழுதில் வீட்டிற்கு எதிரே அமைந்திருந்த குளத்தில் அவைகள் குளிப்பாட்டப்பட்டு, நெற்றியில் குங்குமமிட்டுப் பொலிவுடன் காட்சியளிக்கும். பித்தளைச் சொம்பில் பால் கறந்தவுடன் என்னுடைய தாயார் எனக்கு நுரையுடன் கூடிய பசும்பாலை குடிப்பதற்காக வாயில் சேர்த்திடுவாள். இந்தப் பசும்பாலுக்கு மருத்துவ குணம் உண்டு. வாய்ப்புண்ணிற்கு இந்தப் பசும்பால் ஒரு சிறந்த மருந்து.

## 22) தீபம் ஏற்றுவதற்கு இலுப்ப எண்ணையே சிறந்தது

என்னுடைய தந்தையார் ஒவ்வொருநாளும் காலையில் 9 மணிக்கு வேலைக்குச் சென்றால் பகல் ஒன்றரை மணிக்குத்தான் மதிய உணவு சாப்பிட வருவார். அதன் பிறகு மாலை 4 மணிக்கு வேலைக்குச் சென்றால் வீட்டிற்குத் திரும்ப இரவு 10 மணி ஆகும். எங்களுடைய பொழுதுபோக்கிற்கு எந்தப்

போக்கிட மும் கிடையாது. ஒவ்வொரு வியாழக்கிழமையும் வரும் கல்கி வார இதழ், இரண்டு நாள் இடைவெளியில் கிடைக்கும் சுதேசமித்திரன் நாளிதழ், கல்கி தீபாவளி மலர் ***(இந்தமலர் தீபாவளி கழிந்த ஒரு மாதத்திற்குப் பிறகுதான் கிடைக்கும்.)***, இவைதான் செய்தித் தொடர்புச் சாதனங்கள். 'சினிமா' பார்க்க வேண்டுமானால் 8 கி.மீ. தொலைவில் இருந்த கோட்டூர் அல்லது திருத்துறைப்பூண்டிக்குச் செல்ல வேண்டும்.

மின்சாரம், வானொலி ஆகிய இன்றைய அத்யாவசிய தேவைகள் அன்று கிடையாது. விளக்கு எரிப்பதற்கு மண் ணெண்ணெய் பயன்படுத்தப்பட்டது. ஒவ்வொரு வீட்டிலும் தெய்வத் திருவுருவப் படங்களுக்கு முன்பு இலுப்ப எண் ணெய் விளக்குகள் எரிந்துகொண்டிருக்கும். இந்த விளக்கி லிருந்து வெளிப்படும் புகை கண் சம்பந்தப்பட்ட பல நோய் களைப் போக்கும் மருத்துவ குணம் உடையது. திருக்கோயில் களிலும் இலுப்ப எண்ணெயையே தீபம் ஏற்றுவதற்குப் பயன்படுத்தி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ***(இலுப்பை விதைகளுக்கு Oleagenous mahua seeds என்று பெயர். இலுப்பை எண்ணெய் உறைந்த நிலையில் நெய் போல் இருக்கும். அதனால் இதற்கு இலுப்பை நெய் என்ற பெயரும் உண்டு. இலுப்பை எண்ணெய் சோப்பு தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்த மரத்தின் பூக்களைச் சேர்த்துப் பார்க்கும்போது சர்க்கரை போல் தோற்றம் அளிக்கும். 'ஆலையில்லா ஊருக்கு இலுப்பப்பூ சக்கரை' என்ற பழமொழி இதனை வலியுறுத்துகிறது. இந்த இலுப்பை எண் ணெய்கொண்டு எரிக்கப்படும் விளக்கிலிருந்து வரும் புகை ஒரு மடக்கில் சேகரிக்கப்பட்டு அத்துடன் சுத்தமான ஆமணக்கு எண்ணெ யைச் சேர்த்து கண்மை தயாரிக்கப்படும். இந்த இலுப்பை மரங்கள் தோப்புக்களாகவே கிராமங்களில் தென்படும். நெய்தல் நிலத்தில் அதிகமாகக் காணப்படும் மரவகைகளில் இதுவும் ஒன்று.)***



## 23) எஸ்.எஸ்.எல்.சி. படிப்பும், ராமானுஜம் எதிர் கொண்ட இன்னல்களும்.

கிராமத்தில் அமைந்திருந்த 'பாரத மாதா' கூட்டுறவுப் பண்டகசாலையில் வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கிக் கொள்ளவேண்டும். புத்தாடை வாங்கவேண்டுமானால் திருத் துறைப்பூண்டி அல்லது மன்னார்குடிக்குச் செல்லவேண்டும். அந்த ஊர்களுக்குச் செல்வதற்கு களப்பாளிலிருந்து பேருந்து வசதி கிடையாது. சுமார் 8 கி.மீ. சென்றால்தான் பேருந்து செல்லும் பாதையையே பார்க்க இயலும். ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு முறைதான் பேருந்துகள் அந்த வழித் தடத்தில் செல்லும்.

ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றுதான் அனைவருக்கும் அடிப்படை மருத்துவ வசதியை அளித்து வந்தது. உள்ளூரில் ஒரு நடுநிலைப்பள்ளி; அதில் 8ஆம் வகுப்புவரைதான் படிக்க முடியும். இந்தப் பள்ளியில் படிப்பதற்குச் சுற்றுப்புரத்தில் 6 கி.மீ. தொலைவிலிருந்து மாணவர்கள் நடந்து வந்து படித் தனர். உயர்நிலைக் கல்வி பயிலவேண்டுமானால் (அதாவது 9 முதல் 11ஆம் வகுப்புவரை), 8 கி.மீ தொலைவிலிருந்த திருத் துறைப்பூண்டி ஜில்லாபோர்டு உயர்நிலைப்பள்ளிக்குத்தான் செல்லவேண்டும்.

திருத்துறைப்பூண்டிக்குக் கால் நடையாகவே சென்று எங்கள் ஊரிலிருந்த ராமானுஜம் என்ற மாணவன் உயர் நிலைப் பள்ளிக் கல்வி பயின்றான். ஒவ்வொரு நாளும் பள்ளி செல் வதற்கு 8 கி.மீட்டரும், திரும்பி வருவதற்கு 8 கி.மீட்டரும் கால் நடையாகவே சென்றுவந்து அவன் உயர்கல்வி கற்ற நிகழ்ச்சியை இன்றும் நான் நினைத்து வியக்கின்றேன்! என்னுடைய தாயார் ராமானுஜத்தினுடைய முயற்சியைப் பெரிதும் பாராட்டுவார். அவனைப் போல் வாழ்க்கையில்

படிப்பை நாம் தேடி அலைய வேண்டும் என்ற அறிவுரையை அவ்வப்போது எங்களுக்குப் புகட்டி வருவார்.

இந்த ராமாநுஜம், முதலியார் தெருவிற்குப் பக்கத்துத் தெருவில் குடியிருந்த ஸ்ரீ.உ.வே.சம்பத் ஐயங்கார் என்பவருடைய புதல்வன். இவரும் ஒரு பண்ணையில் கணக்கெழுதி வந்தார். மிகவும் ஏழ்மையான குடும்பம்; பொறுமைசாலி. இவரைப் போன்றே இவருடைய குமாரனான ராமாநுஜமும் வாய் அதிர்ந்து பேசமாட்டான்.

காலையில் 7.30 மணிக்கு கையில் கிடைக்கும் உணவைப் பித்தளை டிபன் பாக்ஸில் எடுத்துக்கொண்டு காலணி அணிந்து கொள்ளாது **(அந்த காலத்தில் வசதிபடைத்தோரே சைக்கிள், காலணி போன்ற பொருட்களை வாங்கிப் பயன்படுத்தமுடியும்.)** ஒவ்வொரு நாளும் உயர்நிலைப் பள்ளிக்குச் சென்று வருவான். பிற்காலத்தில் இவன் கல்லூரிப் படிப்பை முடித்துக்கொண்டு நல்லதொரு வேலையில் சேர்ந்தான் என்று நாங்கள் அறிந்து கொண்டோம்.

## 24) களப்பாள் ஊர்வளம்.

இந்தக் களப்பாள் கிராமத்தைச் சுற்றிலும் எங்கு நோக்கினும் வயல்வெளிகளே காணப்படும். அதன் வரப்புகளில் காய்த்துக் குலுங்கும் கருவேலமரங்கள்; ஆங்காங்கே தென்படும் வேப்பமரங்கள் மற்றும் பூவரசமரங்கள்; வாய்க்கால்களின் ஓரங்களில் சின்ன சின்ன ஆலமரங்கள்; குளங்களின் கரைகளில் நெடிதுயர்ந்து வளர்ந்திருக்கும் அரசமரங்கள்; அவற்றுடன் பின்னிப் பிணைந்திருக்கும் வேப்பமரங்கள்; மாலை வேளையில் அதன் கிளைகளில் அமர்ந்திருக்கும் பறவைகளின் ஆரவாரம்-இவை போன்ற காட்சிகளை ஆண்டு முழுவதும் காணலாம்.



கோரையாற்றின் ஒரு பிரிவான சாளுவன் ஆறு அந்த ஊரின் வளப்பத்தைப் பெருக்கிக் கொண்டிருந்தது. காவிரி நதி கல்லணையிலிருந்து, காவிரி, வெண்ணாறு ஆகிய இரு பிரிவுகளாகப் பிரிந்து செல்கின்றது. இவ்வாறே கல்லணைக் கால்வாய், நீர்வளம் குறைந்த ஒரத்தநாடு பட்டுக்கோட்டைப் பகுதிகளில் பாய்ந்து தரிசுநிலங்களைப் பொன் விளையும் பூமியாக மாற்றிக் கொண்டிருக்கிறது. காவிரி நதியின் கிளை நதிகளாக மண்ணியாறு, அரசலாறு, திருமலை ராஜன் ஆறு, முடிகொண்டான், குடமுருட்டி, வீரசோழனாறு போன்றகிளை நதிகள் காவிரியிலிருந்து பிரிந்துத் தஞ்சை மாவட்டத்தின் வடக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் பாய்ந்து கடலில் சங்கமம் ஆகிறது. வெண்ணாற்றிலிருந்து பிரியும் கிளை நதி கோரையாறு; கோரையாற்றிலிருந்து மேலும் பல கிளை நதிகள் பிரிகின்றன. அவற்றில் முக்கியமானவை பாமணி ஆறு, முள்ளியாறு, அடப்பாறு போன்றவை.

## 25) காவிரியாற்றைப் பற்றிய கல்கியின் வர்ணனை

கோரையாறு மேலும் தெற்கே செல்லச்செல்ல சாளுவன் ஆறு, அரிச்சந்திரா நதி போன்ற கிளை நதிகள் பிரிந்து தஞ்சை மாவட்டத்தின் தெற்கு, தென்கிழக்கு பகுதிகளைச் செழிக்க செய்துகொண்டிருக்கிறது.

***[‘குடகு நாட்டில் பிறந்து வளர்ந்த பொன்னி நதி கன்னிப் பருவம் கடந்ததும் தன் மணாளனாகிய சமுத்திர ராஜனிடம் சென்றடைய விரும்பினாள். காடும் மேடும் கடந்து பாறைகளையும் பள்ளங்களையும் தாண்டிக்கொண்டு விரைந்து சென்றாள்.***

***சமுத்திர ராஜனை நெருங்கநெருங்க நாயகனைக் காணப் போகிறோம் என்ற குதூகலத்தினால் அவள் உள்ளம் விம்மி உடல் பூரித்தது. இன்னும் சற்றுத் தூரம் சென்றாள். காதலனை அணைத்துக்***

***கொள்ளக் கரங்கள் இரண்டு உண்டாயின. இரு கரங்களை விரித்த வாறு தாவிப்பாய்ந்து சென்றாள். ஆனால் உள்ளத்தில் பொங்கிய ஆர்வ மிகுதிக்கு இரு கரங்கள் போதுமென்று தோன்றவில்லை; அவளுடைய ஆசைக் கரங்கள் பத்து, இருபது, நூறு என்று வளர்ந்தன. அவ்வளவு கரங்களையும் ஆவலுடன் நீட்டிக்கொண்டு சமுத்திர ராஜனை அணுகினாள். இவ்விதம் ஆசைக் கணவனை அடைவதற்குச் சென்ற மணப்பெண்ணுக்குச் சோழ நாட்டுச் செவிலித்தாய்மார் செய்த அலங்காரங்களை உடுத்தினார்கள்? எப்படியெல்லாம் வண்ண மலர்களைச் சூட்டினார்கள்? எவ்வித மெல்லாம் பரிமள கந்தங் களைத் தூவினார்கள்? ஆஹா! இரு கரையிலும் வளர்ந்திருந்த புன்னை மரங்களும் கடம்ப மரங்களும் முத்து மலர்களையும் ரத்தினப் பூக்களையும் வாரிச் சொரிந்த அருமையை எவ்விதம் வர்ணிப்பது? தேவர்கள் பொழியும் பூமாரியும் இதற்கு இணையாகுமா?***

***பொன்னி நதியே! உன்னைப் பார்த்துக் களிப்படையாத கன்னிப் பெண் யார்தான் இருக்கமுடியும்! உன் மணக்கோல ஆடை அலங்காரங்களைக் கண்டு உள்ளம் பொங்காத மங்கை யார் இருக்கமுடியும்?***

***பொன்னி தன் மணாளனைத் தழுவிக்கொள்ள ஆசை யுடன் நீட்டும் பொற்கரங்களில் ஒன்றுக்கு அரசலாறு என்று பெயர்! காவேரிக்குத் தென் புறத்தில் மிக நெருக்கத்தில் அரசலாறு என்னும் அழகியநதி அமைந்திருக்கிறது. அப்படி ஒரு நதி இருப்பது சற்றுத் தூரத்தில் இருந்து வருகிறவர்களுக்குச் சொல்லித்தான் தெரியவேண்டும். இருபுறமும் அடர்த்தியாக வளர்ந்திருக்கும் இனிய பசு மரங்கள் அப்படி அந்நதியை மறைத்துவிடுகின்றன. பிறந்தது முதல் அந்தப்புரத்தை விட்டு வெளியேறி அறியாத அரசகுலக் கன்னி யென்றே அரசலாற்றைச் சொல்லலாம். அந்தக் கன்னி நதியின் அழகுக்கு இந்த உலகில் உவமையே கிடையாது’*** என்று எழுத்தாளர் கல்கி அவர்கள் ‘பொன்னியின் செல்வன்’ முதலாம் பாகத்தில் காவிரி



கிளைநதிகளின் அழகை, தமக்கே உரித்தான நடை யில் விவரித்துள்ளார். )

சாளுவன் ஆற்றில் எப்போதும் நீர் கரையைத் தொட்டுக் கொண்டு ஓடும். அந்த ஆற்றின் இரு மருங்கிலும் அடர்த்தியான மூங்கிற் கொல்லைகள், இலந்தை, ஈச்சை இவற்றோடு அரச மரங்களும், ஆலமரங்களும் வளர்ந்து செழித்தோங்கியிருக்கும்.

இவற்றிலிருந்து பிரியும் கால்வாய்கள் ***(வாய்க்கால்)*** கிராமத் தின் பல பகுதிகளுக்குச் சென்று சிறு வாய்க்கால்கள் வழியாக ***(கன்னிவாய்க்கால்)*** வயல்களுக்குப் பாய்ந்து கொண்டிருக்கும். இந்த வாய்க்கால் வழி நீர் குளங்களுக்கும், குட்டைகளுக்கும் சென்றடையும்.

பொதுவாகத் தஞ்சை மாவட்டத்தின் அனைத்து கிராமங்களிலும் ஊரின் மத்தியில் அக்ரஹாரம் அமைந்திருக் கும். அக்ரஹாரத்தின் மேற்குப் பகுதியில் கிழக்கு நோக்கிப் பெருமாள் கோயிலும், அக்ரஹாரத்தின் வடகிழக்குப் பகுதி யில் ***(ஈசான்யத்தில்)*** சிவன் கோயிலும் அமைந்திருக்கும். இதையே ‘கண்ணனுக்கு முன்பும், கடவுளுக்குப் பின்பும் வசிக்க வேண்டும்’ என்று கூறுவர். இங்கு கடவுள் என்று குறிப் பிடப்படுபவர் ஈசானனான சிவனாவார்.

## 26) கூற்றுவ நாயனாரும், களப்பாள் கிராமமும்

களப்பாளைத் தமது தலைநகராகக் கொண்டு அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரான கூற்றுவ நாயனார் என்ற சிற்றரசர் ஆட்சிபுரிந்து வந்தார். ‘ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்’ (திருத்தொண்டர் தொகை) என்று சுந்தரரும், ‘கோதை நெடுவேற் களப்பாளனாகிய கூற்றுவனே’ (திருத்தொண்டர் திருவந்தாதி) என்று நம்பியாண்டார் நம்பியும்

இவரைப் புகழ்ந்துள்ளனர். பெரியபுராணக் கூற்றுப்படி பல நாடுகளை வென்ற இவருக்குச் சிதம்பரம் தீக்ஷிதர்கள் முடிசூட்ட மறுத்தனர். கனவில் வந்த சிவன் தமது பாதமலர்களைச் சூட்டி அடியாரின் மனக்குறையைப் போக்கினார். இந்த ஊர் ஏழு உட் பிரிவுகளை உடையது. அவை நடுவக் (நடுவில்) களப்பாள், கோயில் களப்பாள், பட்ட மடையான் களப்பாள், நாராயண புரம் களப்பாள், நடுவழிக் களப்பாள், அகரம் களப்பாள், தூரிக் களப்பாள் ***(தற்போது தூரிக் களப்பாள், ஸந்நிதிக் களப்பாள் என்று அழைக்கப்பட்டு வருகிறது.)***

களப்பாளில் தற்போது இடிந்த நிலையில் காணப்படும் கைலாசநாதர் திருக்கோயில் மற்றும் ஆனைகாத்த பெருமாள் திருக்கோயில் கல்வெட்டுகளில், இந்த ஊரானது அகரம் 'ஸ்ரீமுடி வழங்கு சோழ சதுர்வேதிமங்கலம்' குறிப்பிடப்பட்டுள்ளது.

## 27) குளத்துக்காவல்காரனின் அதட்டல் ஒலி

இந்தக் கோயில்களுக்கு முன் பகுதியிலோ அல்லது வடமேற்குப் பகுதியிலோ ஆழமான நீண்ட நீளமும், அகலமும் கொண்ட குளங்கள் அமைந்திருக்கும். இவற்றில் உள்ள நீர் எல்லாக் காலங்களிலும் பாதுகாக்கப்பட்டு வரும். குறிப்பாகக் கோடை காலங்களில் 'காவல்காரன்' ஊர் பொதுச் செலவில் நியமிக்கப் படுவான்.

கோடைகாலத்தில் எஞ்சியுள்ள நீரை, மாசுபடுத்தாமல் அனைவரும் உபயோகித்துக் கொள்ளும் வண்ணம் இந்தக் காவல்காரன் குளங்களில் மாடு குளிப்பாட்டுவதையோ; மலம், ஜலம் கழித்தப் பின் கைகால்களை கழுவுவதையோ, சலவை சோப்பு களைக் கொண்டு துணி துவைத்தலையோ, பாத்திரங்கள் சுத்தி செய்யப்படுவதையோ அனுமதிக்கமாட்டான். குளிக்கும் போது சோப்புப்போட்டு குளிக்கக்கூடாது. அவ்வாறு குளிக்க விரும்பு



பவர்கள் ஒரு பாத்திரத்தில் நீரை முகந்துகொண்டு கரையில்தான் குளிக்கவேண்டும். இத்தகைய கட்டுப்பாடுகள் நீர் நிலைகளை மாசு படாமல் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட முயற்சிகளாகும். ஏனெனில் அக்காலத்தில், இந்தக் குளத்து நீரைக் குடிநீராகவும் பயன்படுத்தி வந்தனர் கிராமத்து மக்கள்.

ஒரு ஆண்டின் ஆடி மாதம் தொடங்கி மாசி மாதம் முடிய அனைத்து ஆறுகளிலும் நீர் போக்குவரத்து எப்போதும் இருந்து கொண்டே இருக்கும். பருவ மழை தவறாது பொழிந்து கொண் டிருந்த காலமது. இந்த நிலைமை மாற்றம் அடைந்தது கி.பி.1965ஆம் ஆண்டிற்குப் பிறகுதான். அதற்கு முன்பு தங்கு தடையின்றி வேண்டிய அளவு நீர் காவிரியில் பாய்ந்து கொண்டிருந்தது.

***(தற்போது கர்நாடக அரசு அதன் கட்டுப்பாட்டில் உள்ள அணைகளில் நீரைச் சேமித்து வைத்துக்கொண்டு இயற்கை அன்னை யின் கருணையால் பொழியும் உபரி நீரையே திறந்து விடுகிறது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் விவசாயத்திற்கு வேண்டிய நீர் உரியகாலத்தில் திறந்து விடப்படுவதில்லை. காலமல்லாத காலத்தில் நீர் திறந்து விடப்படுவதாலும், வடகிழக்குப் பருவக்காற்றின் தாக்கு தலாலும், பயிரிடப்பட்ட நெற்பெயிர்கள் நீரில் மூழ்கிப் பலனற்று போகின்றன. இவ்வாறு வறட்சி நிலவும்போதும், வெள்ளம் அதிக அளவில் பாய்ந்து நெற்பயிர்கள் வீணாகும் போதும் நிவாரணம் என்ற பெயரில் சிறு தொகை இழப்பு நிதியாக வழங்கப்படுகிறது. சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் வயல்களில் 3 போக சாகுபடி முறையாக நடந்தது. ஆனால் இப்போது 1 போக சாகுபடி செய்வதே கேள்விக்குறியாய் அமைந்துள்ளது.)***

## 28) குறுவை மற்றும் சம்பா சாகுபடி

களப்பாள் கிராமத்தில் அனைத்து சிறுநிலச் சுவான்தார் களும், பண்ணையார்களும் 3 போக சாகுபடி செய்வர். அதா வது ஆனி அல்லது ஆடி மாதத்தில் குறுவை நாற்று விடப்படும்.

இதற்கென்று ஒரு முகூர்த்தநாளில் ‘விதை முகூர்த்தம்’ நடத்தப்படும். அன்று ஊர் பொதுமக்கள் ஒன்று கூடிக் குறிப்பிட்ட பொது இடத்தில், புரோகிதர்கள் வேத மந்திரங்கள் முழங்கச் சிறுபகுதி நிலத்தை உழுது அதில் விதை நெல்லைத் தெளிப்பர். அங்கே கூடியிருக்கும் அந்தணர்களுக்கு ஒரு மரக்கால் நெல்லும், ஒரு ரூபாய் பணமும் தானமாக அளிக்கப்படும். அன்றையதினம் குறுவை நாற்று விடுவோர் அவரவர் வயலின் ஒரு பகுதியில் விதைநெல்லைத் தெளிப்பர்.

சிறு விவசாயிகள் இவ்வாறு பயிரிடப்படும் நாற்றினை விலைக்கு வாங்கித் தங்கள் வயல்களில் நடுவர். ஆற்றில் நீர் வந்தவுடன் வயல்கள் உழப்பட்டு, அதில் குறுவை சாகுபடி தொடங்கப் படும். இது ஒரு குறுகியகாலப் பயிர். அதனால் இதற்கு குறுவை சாகுபடி என்ற பெயர் வழங்கப்பெறுகிறது. இந்தக் குறுவைப் பயிர் முதிர்ந்து புரட்டாசி மாத இறுதியில் அல்லது ஐப்பசி மாத ஆரம்பத்தில் அறுவடைக்குத் தயார் நிலையில் இருக்கும்.

கிராமத்தில் உள்ள மக்கள் குறுவை நெல்லை வியாபாரி களிடம் விற்றுவிடுவார்கள். இந்த நெல்லைத் தங்கள் உணவுத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதில்லை. அவர்கள் தங்கள் உணவுத் தேவைகளுக்குப் பொன்னி அல்லது ஐ.ஆர்.எட்டு என்று அழைக்கப் பட்டு வந்த கலப்பினச்சேர்க்கை (ஒட்டு) நெற் பயிர்களைப் பயிரிடுவர்; இவை சம்பா வகையின் பாற்படும்.

இதனிடையில் சம்பா நெல்லுக்கான விதை விதைக்கப்பட்டு அதன் நாற்றுக்கள் வயல்களில் நடப்படும். இந்தப் பயிர் மார்கழி இறுதி அல்லது தை மாதத்தின் முதற் பகுதியில் அறுவடைக்குத் தயாராக இருக்கும். பொங்கல் திருநாளுக்கு முன்பு புதுநெல் சாப்பிடும் திருநாள் கொண்டாடப்படும். அன்றைய தினம் முற்றிய கதிர்கள் சில அறுவடை செய்யப்பட்டு அதிலுள்ள நெல்லைக் காயவைத்து, உரலில் குத்தி, அரிசியாக்கி அந்த அரிசியுடன் பழைய அரிசி சேர்க்கப்பட்டு சர்க்கரைப் பொங்கல் இறைவனுக்குப் படைக்கப்படும். ஒரு நல்லநாளில் விதையிடுவதும், அதே போல் ஒரு நல்ல நாளில் அவ்வாறு விதைக்கப்பட்ட பயிர்களிலிருந்து கிடைக்கும் அரிசியை சமைத்து இனிப்புப் பொருளாக இறைவனுக்குப் படைப்பதும் கிராம மக்களால் தொன்று தொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வரும் பழக்க வழக்கங்களில் ஒன்றாகும்.



குறுவைப் பயிர் அறுவடை செய்யப்பட்டபிறகு குறுவை சாகுபடியிலிருந்த 75 சதவீதம் வயல்கள் மீண்டும் உழப்பட்டு அதில் தாளடி சம்பா நடப்படும். குறுவைப் பயிரின் பயிர்க் காலம் மே 15 தொடங்கி செப்டம்பர் 15 வரை ஆகும். (120 - 135 நாட்கள்) சம்பா சகுபடி ஜூலை 15 தொடங்கி டிசம்பர் 14 வரை நடைபெறும். (155 - 165 நாட்கள்). தாளடி சம்பா செப்டம்பர் 15 தொடங்கி ஜனவரி 31 வரை (120 - 135) நாட்கள். தாளடி சம்பா நெல் அத்துணை தரமுள்ளதாக இருக்காது.

சம்பா அறுவடை முடிந்தபிறகு அந்த வயல்களில் உளுந்து அல்லது பயறு தெளிக்கப்படும். இவை ஊடு பயிராக வளர்ந்து நல்ல பலனைத் தரும். விவசாயிகளைப் பொறுத்தவரை எந்தவிதக் கடின உழைப்பும் இல்லாது பெறப்படும் தானிய வகைகள் இவை. வீட்டு உபயோகத்திற்குச் சேமித்து வைக்கப்பட்ட பகுதியினைத் தவிர மற்றவை வியாபாரிகளிடம் விற்கப்படும்.

## 29)வல்லத்துக் கப்பிக்கல்லும், கிராமப்புற சாலைகளும்

சின்னப் பண்ணையார் என்று அழைக்கப்பட்டு வந்த திரு.குமரப்ப முதலியார் வசிக்கும் அரண்மனை போன்ற வீட்டிற்குக் கிழக்குப் பகுதியில் நாங்கள் வசிப்பதற்கு **(1937ஆம்ஆண்டு)** ஒரு ஓட்டு வீடு ஏற்பாடு செய்து தரப்பட்டது. இந்த வீட்டின் பின்புறம் தெளிந்த நீரோடும் வாய்க்கால்; அந்த வாய்க்காலுக்கு அடுத்து ஒரு

வயல்; அந்த வயலை ஒட்டித் திருத்துறைப்பூண்டிக்குச் செல்லும் செம்மண் சாலை. ***(அந்தக் காலத்தில் கிராமப் புறங்களில் தார் சாலைகள் கிடையாது. மேல் நாட்டிலிருந்து மண்ணெண் ணெய் மற்றும் ‘க்ரூடாயில்’ என்று அழைக்கப்பட்டு வந்த*** Light Diesel ***சிறிதளவு*** High Speed Diesel ***மற்றும்*** Motor Spirit ***என்று அழைக்கப்படும் பெட்ரோல் இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. இந்திய நாட்டில் எண்ணெய் சுத்திகரிப்பு சாலைகள் அந்தக் கால கட்டத்தில் ஏற்படுத்தப்படவில்லை. பர்மாஷெல், கால்டக்ஸ் போன்ற மேற்கத்திய எண்ணெய் கம்பெனிகள், பெட்ரோலிய பொருட்கள் இறக்குமதியில் ஈடுபட்டிருந்தன. அவை அவ்வப் போது விலைகளை தங்கள் விருப்பப்படி நிர்ணயித்துக்கொண்டன. பெட்ரோலியப் பொருட்களுக்கான செயற்கைத் தட்டுபாடுகளை உண்டுபண்ணின. தார் என்று அழைக்கப்பட்டுவந்த*** Bitumen ***இறக்குமதி செய்யப்படவில்லை. மேலும் உலகளாவிய சுத்திகரிப்புச் சாலைகளில்*** Bitumen ***உற்பத்தி பெருக்கப்படவில்லை. தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் ஒரு கிராமத்திற்கும் மற்றொரு கிராமத்திற்கும் இணைப்புச் சாலை தஞ்சை வல்லம் பகுதியில் மிகுதியாகக் கிடைக்கும் ‘கப்பி’ என்று அழைக்கப்படும் செம்மண் கட்டிகள் கொண்டு அமைக்கப்படும். இந்தச் செம்மண் சாலை மண்ணோடு கலந்து சமமான நிலையில் வண்டிகளை ஓட்டிச் செல்வதற்குப் பயன்பட்டுவந்தன.***

***பேருந்துகள் ஓட்டப்படும் சாலைகள் சன் னமான கருங்கல் ஜல்லி மற்றும் செம்மண் கொண்டு அமைக்கப் பட்டு, அதன் மீது கனத்த வகை உருளைகளால்*** (Heavy Rollers) ***சமன் செய்து சாலைகள் அமைக்கப்பட்டன. இந்த கனரக உருளை மூன்று டன் எடையுள்ள ஒரே கருங்கல்லால் வடி வமைக்க ப்பட்டிருக்கும். இதை இழுப்பதற்கு மனித சக்தி பயன்படுத்தப்பட்டது.)*** இந்தச் செம்மண் சாலைக்குத் தெற்குப் புறம் திருக்குலத்தோர் (ஹரிஜன்) வாழும் சேரிகள் அமைந்திருந்தன. இந்தச் சேரி அமைப்பு அனைத்து கிராமங் களிலும் உண்டு. அவை முறையே பள்ளச்சேரி, பறைச் சேரி என்று அழைக்கப்பட்டு வந்தன.

## 30) நான் பிறந்தேன்!

எங்கள் குடும்பம் களப்பாளில் கி.பி.1937இல் குடியேறிய



போது குடும்பத்தின் இரண்டாவது வாரிசான சந்தான கிருஷ்ணனுக்கு ஒரு வயதாகியிருந்தது. ஆனால் இரண்டு வயது நிரம்பிய அளவில் வயிற்றில் ஏற்பட்ட ஈரல்குலைக்கட்டி காரணமாக அவன் இறந்தான். எங்கள் குடும்பத்தின் இரண்டாவது பிள்ளையான சந்தானகிருஷ்ணன் இரண்டு ஆண்டுகள் வளர்ந்து இறந்த துயர சம்பவம் நிகழ்ந்த ஒரு ஆண்டுக்குப் பிறகு 1939ஆம் ஆண்டுமார்ச் 10ஆம் நாள் மாசி விசாக நக்ஷத்திரத்தில், கீழைப்பனையூரில் என்னுடைய மாதாவின் பிதாவும், அடியேனு டைய ஆசார்யனுமான ஸ்ரீ.உ.வே. ராமாநுஜ திருவேங்கடாசார்யர் ஸ்வாமி திருமாளிகையில் நான் பிறந்தேன்.

## 31) எங்கள் குடும்பத்தில் இரு குழந்தைகளைப் பலி கொண்ட ஈரல்குலைக்கட்டி நோய்

எங்கள் குடும்பத்தில் வயிற்றில் ஏற்பட்ட ஈரல் குலைக் கட்டி காரணமாக சந்தானகிருஷ்ணன் மற்றும் பிரேமா ஆகிய இரு குழந்தைகள் சிறுவயதிலேயே இறந்துபோயினர். வயிற்றில் கட்டி ஏற்பட்டு முற்றிய நிலையில் ஒப்பாரில்லதோர் அப்பனான திருவிண்ணகரப்பனுடைய கருணையாலே உயிர் பிழைத்து இன்றைக்கு நல்ல நிலையில் வாழ்ந்து வருகின்றான், ஸ்ரீநிவாஸன் என்ற பெயர் கொண்ட என் தம்பி. அந்தக் காலகட்டத்தில் வயிற்றுக்கட்டி சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்துவதற்கு இரு பெரும் மருத்துவர்கள் இருந்தார்கள்.

ஒருவர் கும்பகோணம் தேரடித் தெரு வைத்தியரான பிள்ளா பாப்பையா பாத்ருடு, மற்றொருவர் கரூர் வைத்தியரான ஜிம்மி வெங்கட்ரமணய்யா. இவருக்கு ‘Liver Cure' Doctor என்ற சிறப்புப் பெயரும் உண்டு. அலோபதி மருத்துவம் வளர்ச்சி அடையாத 1940-50 காலகட்டத்தில் வயிற்றுக் கட்டி சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்துவதில் இவ்விருவரும் தேர்ந்த வைத்தியர்களாக விளங்கிவந்தனர். அடிப்படை

மருத்துவ வசதியும் தடுப்பு ஊசிகளும், பிள்ளைப்பேறு காலத்தில் மேற்கொள்ளவேண்டிய பாதுகாப்பு மருத்துவ வசதி களும் பெருகி உள்ள இக்காலத்தில் வயிற்றுக் கட்டி நோயைப் பற்றிய கவலை இல்லை.

## 32) பெரியம்மை, டிப்தீரியா போன்ற நோய்களுக்கு தடுப்பூசி கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆனால் 1940-50 காலகட்டத்தில் பல குழந்தைகள் பெரியம்மைக்கும், வயிறு சம்பந்தமான நோய்களுக்கும், டைபாய்டு, மலேரியா போன்ற காய்ச்சல்களுக்கும் பலியாகி உள்ளனர். பெரியம்மை நோய் தாக்கப்பட்டு என்னுடைய தமையனாரான பார்த்தசாரதிக்கு ஒரு கண் பார்வை குன்றியதும், டைபாய்டு ஜுரத்தால் தாக்கப்பட்டு எனது தங்கையான ராஜலக்ஷ்மி நரம்பு தளர்ச்சி நோய்க்கு ஆளானதும், சரியான வயதில் தடுப்பு ஊசிகள் போடாததால் எனது மற்றொரு தங்கையான பூமாலக்ஷ்மி டிப்தீரியா நோய்க்கு ஆளானதும் எங்கள் குடும்பம் எதிர்கொண்ட இன்னல்களாகும். என்னை இத்தைய நோய்கள் தாக்கவில்லை என்பது பெருமைகொள்ள கூடிய விஷயமாகும். மேலும், பாலும், வெண்ணெயும், நெய்யும், ஊட்டச் சத்துள்ள காய்கறிகளும் உண்டு வளர்ந்த என்னைத் தாக்க அவை அச்சம்கொண்டன போலும்!

## 33) ஸந்நிதிக்களப்பாளில் உள்ள வீட்டிற்குக் குடி பெயர்ந்தோம்

என்னுடைய தகப்பனாருக்கு நான் செல்லப்பிள்ளை. திருக்கோயில்கள் மற்றும் ராதா கல்யாண உத்ஸவங்களுக்குச் செல்லும் போதெல்லாம், என்னைத் தன் தோளிலே சுமந்து செல்வார். சிறு வயதிலிருந்தே நாம சங்கீர்த்தனம் செவிகளில்



படும்படி என்னை வளர்த்து வந்தார். களப்பாளிற்கு வந்து மூன்று ஆண்டுகள் கழித்துப் பண்ணைக் கணக்கப்பிள்ளைக்கென கட்டப்பட்ட தனி வீட்டிற்கு நாங்கள் குடிபுகுந்தோம். இந்த இடத்திற்கு ஸந்நிதி களப்பாள் என்று பெயர்.

## 34) சிவன் கோயிலின் எழிலார்ந்த தோற்றம்

ஸந்நிதி களப்பாளில் கிழக்குநோக்கி மேடானதொரு பகுதியில் சிவன் கோயில் அமைந்துள்ளது.



களப்பாளின் புராதனமான சிவன் கோயில் கைலாச நாதர் கோயிலாகும். இந்தக் கோயில் ஊரின் வடகிழக்குப் பகுதியில் தற்போது இடிந்த நிலையில் காணப்படுகிறது. இந்த சிவன் கோயிலிலிருந்த விக்ரஹங்கள், ஸந்நிதி களப்பாள் சிவன் கோயிலில் எழுந் தருளப்பண்ணப்பட்டுள்ளன. இந்தச் சிவன்

கோயிலைச் சுற்றி நந்தவனம்; அந்த நந்தவனத்தின் கீழ்ப் பகுதியில் அடர்ந்த தாழங் காடுகள்; இந்தத் தாழங்காடுகளை அடுத்து 200அடி அகலத்தில் கோயிலைச் சுற்றிலும் அகழி போன்ற குளம் ஆகியன அமைந்துள்ளன. இந்தக் குளத்தில் நீர் உள்ள காலத்தில் வெள்ளை, இளஞ் சிவப்பு (Pink) மற்றும் நீல வண்ணங்களில் அல்லி மலர் இரவு நேரங்களில் அலர்ந் திருக்கும். நீலவண்ண அல்லி மலருக்கு நீலோத்பல மலர் என்று பெயர்.

## 35) தெற்கு நோக்கி அமர்ந்த திருக்கோலத்தில் தக்ஷிணாமூர்த்தி

சிவன்கோயில் மூலவர் விஸ்வநாதர், அம்பாள் பெயர் ப்ரஹந்நாயகி. தெற்குநோக்கி ஆலமர் கடவுளரான தக்ஷிணா மூர்த்தி, அவரிடம் உபதேசம் பெறும் நான்கு ரிஷிகள் முறையே அகஸ்தியர், புலஸ்தியர், தக்ஷர், கஶ்யபர் ***(பொய்கையாழ்வார் தமது முதல் திருவந்தாதியில் 'நெறிவாசல் தானேயாய் நின்றானை யைந்து, பொறிவாசல் போர்க்கதவஞ் சாத்தி-அறிவானாம் ஆலமரநீழ லறம் நால்வர்க் கன்றுரைத்த ஆலமமர் கண்டத்தரன்' என்று கொண்டாடியுள்ளார்.)***

வடக்கு நோக்கி விஷ்ணுதுர்க்கை, அவருக்கு எதிரில் தெற்கு நோக்கி சண்டிகேஶ்வரர், அம்பாள் விமானத்தை ஒட்டிய மூலையில் ஸ்தல விருக்ஷமான பன்னீர் மரம் தழைத்தோங்கியிருக்கும்; இதன் பூக்கள் வெள்ளை நிறத்தில் அமைந்திருக்கும், இதன் இலை புனிதமாகக் கருதப்பட்டு வருகிறது; வடகிழக்கு மூலையில் 100 அடி ஆழத்தில் நீர் தென்படும் கிணறு. *(ஸந்நிதி களப்பாளில் சுத்தமான குடிநீர் இந்த கிணற்றில் மட்டும்தான் கிடைக்கும். மற்றைய கிணற்று நீர் உவர்ப்புச் சுவையுடன் கூடியதாய் இருக்கும். அவற்றைக் குடிநீராகப் பயன்படுத்த முடியாது. சிவன் கோயில் திறந்திருக்கும் காலங்களில் மட்டுந்தான் இந்த*



*நீரை சேகரித்துக் கொள்ள முடியும். வீட்டு உபயோகத்திற்கான இரண்டு அல்லது மூன்று குடங்களில் நீர் இங்கிருந்து சுமந்து செல்ல வேண்டும்.)*


ஆலமர் கடவுளரான தக்ஷிணாமூர்த்தி ரிஷிகள் நால்வருக்கும் ஸ்ரீமந் நாராயணனே பர தத்வம் என்று உபதேசம் செய்யும் திருக்கோலம்.

சுற்றியுள்ள நந்தவனத்தில் பலவகைப் பூக்கள் பூத்திருக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக இந்த சிவன் கோயில் உள்வளாகத்தில் நூற்றுக்கணக்கான துளசிச் செடிகள் செழித் தோங்கி வளர்ந்திருக்கும். ஒரு மின்னல் தோன்றும் போது ஒரு தாழம்பூ பூக்கும் என்று கிராமத்து மக்கள் நம்பி வந்தனர். இந்தத் தாழங்காடுகளில் விஷப் பாம்புகள்

பதுங்கியிருக்கும். கோயில் கட்டிய பிறகு எஞ்சிய கருங்கற் பாறைகள் ஆங்காங்கே காணப்படும்.

இந்த சிவன் கோயில் விமானத்தின் அடுக்குகளில் சிவ கணங்களுடன் ஸ்ரீராமாயண, கிருஷ்ணாவதாரக் காட்சிகளும்; இதர தசாவ தாரக் காட்சிகளும் இடம் பெற்றிருக்கும். சிவன் கோயிலில் விஷ்ணுவிற்கென தனி உத்ஸவ விக்ரஹம் உண்டு. அந்த ஆகமத்தின்படி விஷ்ணு ஒரு பரிவார தேவதை. உத்ஸவ காலங் களில் ஆராதனங்கள் நடைபெற்ற பிறகு அம்பாள் ஸந்நிதியில் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் படிக்கப்படும்.

இந்த சிவன் கோயிலில் வேலைப்பாடுகளுடன் கூடிய பெரிய நடராஜர் விக்ரஹம் அமைந்துள்ளது. நடராஜருக்கு ஒரு பக்கத்தில் சிவகாமசுந்தரியும் மற்றொரு பக்கத்தில் மாணிக்க வாசகரும் எழுந்தருளியிருப்பர். மார்கழி மாதம் திரு வாதிரை யின்போது இந்த நடராஜர், சிவகாமி, மாணிக்கவாசகர் ஆகி யோருக்கு விசேஷ அபிஷேகம் நடைபெறும். இதே கோயி லில் கைலாசநாதர் கோயிலிலிருந்து கொண்டு வரப்பட்ட பெரியதொரு நடராஜர் சிவகாமசுந்தரி விக்ரஹங்களும் இடம் பெற்றிருந்தன.

சிவன் கோயில் மடைப்பள்ளி கோயிலின் தென்கிழக் குப் பகுதியில் அமைந்திருக்கும். சுற்றிலும் உயரமான மதில்கள். அந்த ஊரில் ஒரே ஒரு பெருமாள் திருக்கோயில் நாங்கள் வசித்து வந்த இடத்திலிருந்து நான்கு கிலோமீட்டர் தொலைவில் அகரம் களப்பாளில் அக்ரஹாரத்தின் மேற்குப் பகுதியில் அமைந்திருந்தது. அக்ரஹாரத்தில் இருபது அந்தணர் குடியிருப்புகள் இருந்தன.

## 36) பூமா மாமியின் வளர்ப்பு மகன் நான்

களப்பாளின் ஏழு பகுதியிலும் நான்கு ஸ்ரீவைஷ்ணவக் குடும்பங்கள்தான் வசித்துவந்தன. ஒருவர் ஆனைகாத்த பெரு மாள் கோயில் அர்ச்சகர், மற்றொருவர் எங்கள் வீட்டிற்கு மேற்குப்



பகுதியில் குடியிருந்த ஸ்ரீமாந்தேசிக ஐயங்கார் ***(எனக்குச் சிறுவயதில் பாலும், வெண்ணெயும், நெய்யும் கொடுத்து தன்னுடைய குழந்தைபோல் வளர்த்துவந்தவள் ஸ்ரீமாந் தேசிக ஐயங்காரின் இல்லத்தரசி ஸ்ரீமதி பூமா. இவர்களுடைய செல்லக் குழந்தையாகவே நான் பேணி வளர்க்கப்பட்டுவந்தேன். இரவு உறங்குவதற்கு மட்டுமே என்னை, எங்கள் வீட்டில் கொண்டு வந்து விடுவாள் பூமா மாமி.)*** , இன்னொருவர் ஸ்ரீமாந் சம்பத் ஐயங்கார் மற்றும் எங்கள் குடும்பம்.

இத்தகைய சூழலில் ஸ்ரீவைஷ்ணவ பண்பாடுகளைக் கற்றுக் கொள்வதோ அல்லது நாலாயிர திவ்யப்பிரபந்தம் மூலத்தை அதிகரிப்பதோ எத்துணை கடினமான செயல் என்பதை அனைவரும் ஊகித்துக் கொள்ளலாம்.

***(ஒரு திவ்யதேசத்தில் அதிலும் திருவரங்கம், திருவல்லிக் கேணி, திருநாங்கூர் போன்ற பகுதிகளில் வசிப்பவர்கள் அந்தந்தக் காலங்களில் நடைபெறும் விழாக்களிலும், ஆழ்வார் ஆசார்யர் திருநக்ஷத்திரங்களிலும் பங்கெடுத்துக்கொள்ளும் வாய்ப்பு உண்டு. அருளிச்செயலை சந்தை முறையில் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு களும் பல திவ்யதேசங்களில் உள்ளன. ஆனால் தஞ்சை மாவட்டத் தின் ஏதோ ஒரு கோடியில் ஸ்ரீவைஷ்ணவ சமூகத்தின் திரண்ட அமைப்பு இல்லாத இடத்தில் வசித்துவரும் குடும்பங்கள் பெரும் பாலும் ஸ்மார்த்தர்களுக்கு உரிய பேச்சுவழக்கு மற்றும் பழக்க வழக்கங்களையும் அவர்களை அறியாமல்கைக்கொள்ள நேர்கிறது. மனிதன் சூழலால் உருவாக்கப் படுகிறான் என்ற உண்மை இதனால் நிலைநாட்டப் படுகிறது.)*** ஆனைகாத்த பெருமாளுக்கு ‘விழுந்த பெருமாள் கோயில்’ என்ற ஒரு வழக்குச் சொல்லும் உண்டு.

## 37) ஆவணி அவிட்டக் கொண்டாட்டங்கள்

ஆனைகாத்த பெருமாள்கோயிலின் வடமேற்குப் பகுதியில் நான்கு பக்கங்களிலும் படிக்கட்டுகளுடன் கூடிய புஷ்கரிணி அமைந்துள்ளது. இந்த புஷ்கரிணியில்தான் ஆவணி அவிட்டத்தின் போது கிராமத்தில் உள்ள அனைத்து அந்தணர் குடும்பங்களும்

யஜ்ஞோபவீதத்தை மாற்றிக்கொள்வர். அதன் பிறகு ஆனைகாத்த பெருமாள்கோயில் மண்டபத்தில் ஹோமம் மற்றும் வேத ஆரம்பம் நடைபெறும்.

ஆவணி அவிட்ட நாளன்று அவரவர் தங்கள் இல் லத்தில் யஜ்ஞோப வீதத்தை மாற்றிக்கொண்டு 'காமோ கார்ஷீத்' ஜபம் ஆகியவற்றை முடித்துக்கொண்டு காலையில் பரிமாறப்படும் அப்பம் மற்றும் இட்டலி சிற்றுண்டி அருந்தியபிறகு சுமார் 10 மணி அளவில் ஆனைகாத்த பெரு மாள்கோயிலுக்குச் செல்வார்கள். அங்கே மீண்டும் ஸ்நானம் செய்யவேண்டும்.

***(ஒருவர் குளித்துவிட்டு நெற்றியில் அவரவர் சமயத்துக் குரிய சின்னங்களைத் தரித்துக்கொண்டபிறகு வைதிக கார்யங்களைச் செய்யவேண்டும். ஆனால், உப்புப்போட்ட பதார்த்தங் களை உண்டால் மீண்டும் குளித்துவிட்டு சமயச்சின்னங்களை அணிந்து கொண்டுதான் வைதிக காரியங்களைத் தொடர வேண்டும். அதன்படி ஆவணி அவிட்டத்தன்று யஜ்ஞோபவீத தாரணம் மற்றும் காண்டரிஷி தர்ப்பணம், ஹோமம், வேதாரம்பம் ஆகியவற்றைச் செய்யவதற்கு முன்பு மீண்டும் குளிக்க வேண்டும்.)***

அனைத்து வைதிக சடங்குகளும் முடிவடைவதற்கு மதியம் சுமார் 1 மணி ஆகும். அதன்பிறகு, வீட்டிற்கு கால் சுடச்சுட மண்சாலையில் நடந்துவரவேண்டும். வீட்டு வாசலில் ஆரத்தி எடுப்பார்கள். அதன்பிறகு வீட்டில் பெரியவர்களை வணங்கி ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளவேண்டும். திருவாராதனத்தை முடித்துக் கொண்டு தீர்த்தம் ஸ்வீகரித்த பிறகே மதிய உணவு பரிமாறப்படும்.

## 38) ஆனைகாத்த பெருமாள் கோயிலும், விஷ்ணு துர்க்கையும்

இந்த ஆனைகாத்த பெருமாள்கோயிலில் தெற்கு நோக்கி



விஷ்ணு துர்க்கையின் ஸந்நிதி அமைந்துள்ளது. இந்த விஷ்ணு துர்கை 6 அடி உயரம் கொண்ட விக்ரஹம். ***(பொதுவாக கர்ப்ப க்ருஹத்தை சுற்றியுள்ள பகுதி திருஉண்ணாழி என்று அழைக்கப்படும். கிழக்குநோக்கி அமைந்துள்ள திருக்கோயில்களில் திருஉண்ணாழியின் தென்கிழக்குப் பகுதியில் விஷ்வக்சேனருடைய படைத்தலைவர்களில் ஒருவரான கஜானனர் எழுந்தருளி யிருப்பார். இவரே பிள்ளையாராகக் கொள்ளப்படுகிறார். திருஉண்ணாழியின் வடக்குப் பகுதியில் துர்க்கை ஸாந்நித்யம் கொண்டிருப்பாள். களப்பாளில் திருக்கோயில் ஜீரண மானபிறகு வடக்கு நோக்கி எழுந்தருளியிருந்த துர்க்கை விக்ரஹம் கோயி லினுள் உள்ள மண்டபத்தில் தெற்குநோக்கி எழுந்தருளப்பட்டுள்ளது.)*** சுற்று வட்டாரத்தில் உள்ள கிராமத்து மக்கள் வெள்ளிக்கிழமைகளில் இந்த விஷ்ணு துர்க்கைக்கு அர்ச்சனை செய்வ தற்காகத் திரண்டு வருவர். இந்தக் கோயில் அர்ச்சகர் அதில் கிடைக்கும் வருமானத்தைக் கொண்டே ஜீவனம் நடத்த வேண்டும்.

கோயிலுக்கென்று தனி வருமானம் கிடையாது. ஊரில், அறுவடை சமயத்தில் நெற்களத்தில் நெல் அளக்கப் படும் போது முதல் மரக்கால் ஊரில் உள்ள விஷ்ணு கோயிலுக்கு அளக்கப்படும். கோயில் அர்ச்சகர் பல இடங்களுக்குச் சென்று இவ்வாறு அளக்கப் படும் நெல்லை சேகரித்துக்கொள்ள வேண்டும். கோயிலில் அர்ச்சனை செய்வோர் நான்கணாவைத் தட்டில் காணிக்கையாக ஸமர்ப்பிப்பர். ஆனைகாத்த பெருமாள் கோயில் தாயார் ஸந்நிதி முழுதும் இடிந்த நிலையில் காணப்படுகிறது. மூலவர் தாயார் மற்றும் உத்ஸவர், பெருமாள் ஸந்நிதியில் எழுந்தருளியுள்ளனர்.

## 39) சத்திரத்தில் நடைபெறும் ராதா கல்யாண மஹோத்ஸவம்

இந்த அக்ரஹாரத்தின் வடக்குப் பகுதியில் பெரிய தொரு சத்திரம் உண்டு. இந்தச் சத்திரத்தில் ஆண்டுதோறும் வைகுண்ட ஏகாதசியன்று ராதாகல்யாண மஹோத்ஸவம் நடைபெறும். அந்த

காலத்தில் பிரபலமாக விளங்கிய பஜனை வித்வான்கள் நீடா மங்கலம் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் ஸ்ரீவாஞ்சியம் ராமசந்திரன் சகோதரர்கள் ஆகியோர் பங்கு கொள்வர். இந்த ஏழு களப் பாளிலும் உள்ள அனைத்து அந்தணர் குடும்பத்தினருக்கும் மூன்று நாட்கள் இந்த சத்திரத்தில் 'ஸமாராதனை' ***(ஸ்ரீவைஷ்ணவ பரிபாஷையில் இதற்கு ததீயாராதனம் என்று பெயர்)*** நடைபெறும். விடியவிடிய திவ்யநாம சங்கீர்த்தனமும், டோலோத்ஸவமும் நடைபெறும்.

அக்காலத்தில் கிராமங்களில் உணவு விடுதிகள் கிடை யாது. ஆங்காங்கே ஏழை மக்களுக்கான தேனீர் விடுதிகள் மட்டுமே உண்டு. வெளியூரிலிருந்து அந்த ஊருக்கு வரும் பெரியவர்கள் இந்த சத்திரத்தில் தங்கியிருப்பார்கள். அவர்களுக்கு அங்கேயே உணவும் அளிக்கப்படும். பல ஆண்டுகள் இந்த சத்திரம் மீனாக்ஷி சுந்தரம் அய்யர் என்பாருடைய பொறுப்பில் பராமரிக்கப்பட்டு வந்தது. இந்த சத்திரத்தில் தர்மம் நன்கு நடைபெறுவதற்காக உள்ளூரிலிருந்த புதுப் பண்ணை முதலாளியான இராமலிங்க முதலியாருடைய முன்னோர்கள் பல வேலி நிலங்களை தானமாக எழுதி வைத்திருந்தனர்.

## 40) ஆனைகாத்த பெருமாள் கோயில் கல்வெட்டுகள்

இந்த ஆனைகாத்த பெருமாள் கோயில் மிகப் புராதன மான கோயிலாகும். இந்தக் கோயிலில் நான்கு கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன.

ஆனைகாத்த பெருமாள் கோயிலின் வடக்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ள, சடையவர்மன் ராஜராஜன் சுந்தரபாண்டியன் காலத்துக் கல்வெட்டு. S.I.I. Vol.8, எண்.26, A.R.No.660 of 1902 [இவனே இரண்டாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் என்று கொண்டாடப்படுபவன். இந்தக் கல்வெட்டு பொறிக்கப்பட்ட காலம் கி.பி.1290]



களப்பாளில் வசித்து வந்த கிடாம்பி ஸ்ரீநரஸிம்ம பட்ட னுக்கு விஜயகண்ட கோபாலனுக்கும் இடையே நடைபெற்ற நிலப்பறிமாற்றத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

இந்தக் கல்வெட்டில் கோயிலுக்கான நிவந்தங்களைப் பற்றி குறிப்பு கள் ஏதும் இல்லை. ஆயினும் சோழ பாண்டியர் கால மரபுப் படி நிலம் விற்றல் வாங்கல் பற்றிய செய்திகள் திருக்கோயில் களில் கல்வெட்டுகளாகப் பொறிக்கப்பட்டு வந்தன. திருக்கோயில் கல்வெட்டுகள் தற்காலத்திய துணை நிலப்பதிவு அலுவலகத்தில் பதிவுசெய்யும் முறைமைக்கு ஒப்பாகும்.

1. ஸ்வஸ்திஸ்ரீ கோற்சடைபன்மரான த்ரி[புவ]னச்சக்கரவத்திகள் ஸ்ரீஇர[ாச]ராசன் சுந்தரபாண்டியதேவற்கு யாண்டு 13ஆவது ஸிம்ஹநாயற்று அமரப[க்ஷ]த்து அ[ஷ்]டமியும் வெள்ளிக் கிழமையும் பெற்ற உரோசணி நாள் கிடாம்பி ஸ்ரீநாரஸிம்ஹ பட்டனென் நில விலைப்ரமாணம் தென்புற[ணி] இரா[ச]ரா[ச] வளநாட்டுவெண்டாழைநாட்டு வாகூருடையான் மே[ய்]க்குந் தேவர் மகனார் சொக்கநாயனார் விசையகண்ட கோபாலற்கு நில விலைப்ரமாணம் பண்ணிக்குடுத்த பரிசாவது இற்றை நாள் இவற்கு நான் விற்றுக்குடுத்த நிலமாவது இவூர் பிடாகை களப்பாள் சுத்தவல்லிநல்லூர் நிலம் .... சோழணுக்க நல்லூர் ...

2. [ப]ஆக நிலம் ........ இன்னிலம் ஐம்பதுமாக் காணியும் விற்றுக்குடுத்துக் கொள்வதான எம்மி விசை[ந்]த விலைப் பொரு[ள்] அன்றாடுநற்காசினால் .. 1500 இப்பணம் ஆயிரத்து ஐஞ்ஞூறும் ஆவண[க்களரி]யே காட்டேற்றி[க]ச் சிலவற கைக்கொண்டு விற்று விலைப்ரமா[ண]ம் பண்ணிக்குடுத்த இந்நிலத்து மேனோக்கின மரங்களும் கீழ்நோக்கின கிணறு களும் பாக[மு]ம் பாகாஸ்ரயங்களும் மற்றும் எப்பேற்பட்ட உரிமைகளுமகப்பட விற்றுக்குடுத்த இந்நிலத்துக்கு இதுவே விலையாவுவதாகவும் இதுவே பொருள்மாவி[லை]யாகவும் இது

வல்லது வேறு பொருள்மாவறுதிப் பொருள் சிலவோலை காட்டக் கடவ தல்லவாகவும் இப்படி சம்மதித்து விலைக்குற விற்றுப்

3. பொருளற கைக்கொண்டு விற்று விலைப்ர(மா)ணம் பண்ணிக்குடுத்தென் சொக்கநாயனார் வி(சய)கண்டகோபாலற்கு கிடாம்பி ஸ்ரீநாரஸிம்ஹபட்டனென் ஸ்ரீநாரஸிம்ஹபட்ட(ன்) தற்குறியானமைக்கு ஊர்க்கணக்கு குழலூருடையான் கருமாணிக்காழ்வானென் என் எழுத்து இப்படி யறிவென் பிள்(ளை) ெ(தந்) திருவரங்கநாராயணபட்டனென் இப்படி அ(றி)வென் ஆன நரசிங்கபட்டனென் இப்படி யறிவென் ஆன திருச்சிற்றம்பலமுடையான் பட்டனென் இப்படி யறிவென் சாண்டிலன் வரதர(ா)சபட்டனென் இப்படி யறிவென் விளத்தூருடையான் எறுதிருவுடையானென் இப்படி அறிவென் வெள்ளை நல்லூருடையானென்.

4. இந்த சாதனத்தின்படி பலரும் ப்ரமாணம் பண்ணுகை(யில்) பலர் பக்கலிலும் கொண்டதா(வது) சாதனம் ஒன்றினால் கொ(ண்டி) வரதராசபட்டன் பக்கல் கொண்ட பிடாகை சுத்த வல்லிநல்லூர் நிலம் 305 ...க்கு ....1050 இப்பணம் ஆயிரத்து ஐம்பதுக்கு நில முப்பத்தஞ்சு மாவும் இ(வ்)வாண்டு கன்னி நாயற்று பூறுவபக்ஷத்து (த்ரி)தியையும் பு(த)ன் கிழமையும் பெற்ற விசாகத்து நாள் காற்(கி)யன் திருச்சிற்றம்பலமுடையான் பட்டர் பக்கல் கொண்ட சுத்தவல்லிநல்லூர் நிலம் .... சுத்த வல்(லிந)ல்(லூ)ர் சோழணுக்க நல்லூர் நிலம் 408 ... சோழணுக்கநல்லூர் நிலம் ......... க்கு ரூபாய் 1700 இப்பணம் ஆயிரத் ....

1. ல்லூர் சோழணுக்கநல்லூர் நிலம் .... இராயூர் சொட்டை திருவடிகள் பட்டர் பக்கல் கொண்டுடையே

2. னான சுத்தவல்லிநல்லூர் சோழணுக்கநல்லூர் நிலம் ..... பிடாகை சோழணுக்கநல்லூர் நிலம் .....ம்



3. கொண்டி வரதராசபட்டர் பக்கல் கொண்டுடையேனான சுத்த வல்லிநல்லூர் சோழணுக்க நல்லூர்

4. நிலம் ..... ஆக .....க்கு ரூபாய் 6250 இப்பணம் ஆறாயிரத் திருநூற்று ஐம்பதுக்கும் ஆ...

II. திருக்கோயிலின் தெற்குப் பகுதியில் பொறிக்கப் பட்டுள்ள கல்வெட்டு. S.I.I. Vol.8, Gs.266, A.R.No.661 of 1902. மாறவர்மன் திரிபுவனச் சக்கரவர்த்தி குலசேர தேவன். (முதலாம் மாறவர்மன் குலசேகரப் பாண்டியன், 8.7.1301ஆம் தேதியிட்ட கல்வெட்டு.)

*இக்கல்வெட்டில், திருக்கோயிலுக்கு உய்யக்கொண் டான் பட்டனுடைய மனைவியான கற்பகம் கொண்டிச்சானி என்பாளால் தான மாகக் கொடுக்கப்பட்ட, திருநாமத்துக்காணி நிலத்தைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.*

1. ஸ்வஸ்தி ஸ்ரீ: – கோமாறுபன்(மர்) (திரி) புவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலசேகரதேவர்க்(கு) யாண்டு 34ஆவது கற்கடகநாயற்று பூர்வபக்ஷத்து (த்ரி)தியை(ய்யும்) சனி(க்கி)ழமையும் பெற்ற ம(க)த்து நாள் ராஜேந்த்ரசோழவளநாட்டு புறங்கரம்பை நாட்டு அகரம் ஸ்ரீமுடிவழங்குசோழச் சதுர்வேதிமங்கலத்து முடிவழங்கு சோழ விண்ணகர் எம்பெரு(மா)ன் திருமுற்றத்து ஸ்ரீஸேநாபதி ஆழ்வார் ஸ்ரீப(ண்)

2. டாரத்தாற்கு இவ்வூர் கோமடத்து உய்யக்கொண்டான் பட்டன் பார்ய்யை எங்கள் (த)மையனார் கோம(பு)றத்து சேசவபட்ட ஸர்வ்வக்ரதுயாஜியாரை முதுகண்ணாக உடைய கற்பகங் கொண்டிச்சானியேந் தர்ம்மதானப்ரமாண இசைவுதிட்டு இவ்பூ (ரி)ல் எங்களுக்கு ஸாதாரணமாய் முன்னாள் பற்றிலியாய்க் கிடந்த நிலமான கொழு(ந்)தன் ஆழ்வார் தன் பேர் நாட்டிக் காணிஎ(ற)ட்டு பற்றுகிற நாளில் எங்களை கூட்டாதே பற்றியி லாய் ப்ஸேதம் பெறுகையாலே கடமை இறுக்கை ஆழ்வாற்கே பரமாகைய(ா)

3. ல் இவன் கடமை இறாதே போய் இவன் பேர்கடமைக்கு புணைப்பட்ட ஸ்ரீகோவிந்தப்பெருமாள் இந்நாயனார்க்கு இவன் பேர்கடமைக்கு விற்ற நிலங்களில் என் பர்த்தாவின் கூறாய் என்னுதாந [ஒ]ன்று பாதியில் இவன் விற்ற நில[ம்] ...... க்கும் ...... க்கும் ஒக்க இவ்வூ[ரி]ல் நீக்கி உள்ள நிலங்களில் ஆற்றூர் கூற்றிலே திருநாமத்துக்காணியாகப் பற்றிக்கொள்ளவும் நான் இன் நாயனாற்கு தர்ம்மதானமாக குடுத்த நிலமாவது பிடாகை சோழணுக்கநல்லூர் ஸ்ரீதேவிவதிக்கு மேற்குத் திருவரங்கவாக் க[ா]லுக்குத் தெற்கு 4 க்ணணாற்று 2 சதிரத்து ஆற்றுக்கு மேற்கு

4. ப்பட்ட நிலத்து .... 2 கண்ணாற்று 1 சதி[ர]த்து ஸ்ரீகோவி[ந்த]ப் பெருமாள் விலையால் திருநாமத்துக்காணியான நிலத்து என் னோபாதியாய் நான் கு[டுத்]த நிலம் .... இவ்வதிக்குக் கிழக்கு இவ்வாக்காலுக்[கு]த் தெற்கு 1 கண்ணாற்று 1 சதுரத்து எடுப்பு இரண்டினால் நிலத்து நிலம் .....ம் உத்திரத்து மனை எடுப்பு உட்பட நிலம் ... வல் முன்பு ஆழ்வார் கூறாய் இவன் தன்வழி யால் இன்நாயனாருதான நிலம் நீக்கி என்னு[தான] நிலம் 1க்கு ...ம் ஆக என்னுதான மனைஎடுப்பு உட்பட்[ட] நிலம் ... ... இந்நிலம[ா] அரைமா அரைக்கா....

இந்தக் கோயிலில் காணப்படும் கல்வெட்டு எண்.A.R.E. 662 of 1902 இன் வழி விஜயகண்ட கோபாலன் என்பார் ஆனை காத்த பெருமாள் திருக்கோயிலுக்கு நிலங்கள் அளித்தமை அறியப் படுகிறது. இந்தக் கல்வெட்டு முழுமையான வடிவில் நமக்குக் கிடைக்கவில்லை. இந்தக் கல்வெட்டானது மாறவர்மன் என்று அழைக்கப்பட்டு வந்த திரிபுவன சக்கரவர்த்தி குலசேகரப்பாண்டி யனின் 23ஆவது ஆட்சியாண்டில் ஏற்படுத்தி வைக்கப்பட்டது. இதில் கண்டுள்ள விஜயகண்ட கோபாலன் என்பார்க்கு நிலம் விற்றமையைக் கல்வெட்டு எண்.663/1902 தெரிவிக்கின்றது. இந்தக் கல்வெட்டு மாறவர்மன் (எ) ராஜராஜசுந்தரபாண்டிய தேவருடைய [2]3 ஆட்சியாண்டில் ஏற்படுத்தி வைக்கப்பட்டது.



## 41) என் தந்தையாரின் மதிப்புக்குரிய நண்பர் ஸ்ரீதேசிக ஐயங்கார்

எங்கள் வீட்டின் முன்பகுதியில் 700 அடி நீளமும் 300 அடி அகலமும், 20 அடி ஆழமும் கொண்ட மிகப்பெரிய குளம் அமைந்திருந்தது. 7 களப்பாளிலும் இத்தகைய நீள அகலம் கொண்ட குளம் அமையப்பெறவில்லை. இந்தக் குளத்தின் தெற்குக் கரையில் வடக்குநோக்கி எங்களுடைய இல்லம் அமைந்திருந்தது. இந்த வீட்டின் மேற்குப் புறத்தில் ஸ்ரீதேசிக ஐயங்காருடைய குடியிருப்பு இருந்தது. பாரதமாதா கூட்டுறவு பண்டக சாலை உருவாகுவதற்கு காரணமாய் இருந்தவரும் இவரே. இவருடைய இல்லத்தரசியே திருமதி பூமா. பூமா மாமி பால் கறக்கும் போதும், தயிர் கடையும் போதும் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டு அதை வேடிக்கை பார்ப்பது எனது வழக்கம். கூட்டுறவு பண்டகசாலையில் ஏற்பட்ட நஷ்டத்திற்கு ஸ்ரீதேசிக ஐயங்கார் பலிகடாவாக ஆக்கப்பட்டார். அதன் காரணமாக அவரும் அவருடைய இல்லத்தரசியாரான பூமாவும் களப்பாளை விட்டு அகன்று தஞ்சைக்கு அண்மையில் உள்ள வெண்ணாற்ற ங்கரை என்னும் ஊருக்குச் சென்றுவிட்டார்கள். என்னுடைய தகப்பனாரின் நெருங்கிய நண்பராய் விளங்கி வந்ததோடு மட்டுமல்லாமல் கடைசி காலம் வரை அவருடன் கடிதப் போக்குவரத்தையும் மேற்கொண்டு வந்தார் ஸ்ரீதேசிக ஐயங்கார்.

வாழ்க்கையில் ஏற்பட்ட ஏற்ற தாழ்வு, இன்பதுன்பங் களை அவ்வப்போது அஞ்சல் அட்டைகள் மூலம் இவ்விரு வரும் பரிமாறிக்கொள்வர். ஸ்ரீதேசிக ஐயங்கார் பரமபதிப் பதற்கு முன்பு பூமா மாமி தம்முடைய 58ஆவது வயதில் பரமபதித்து விட்டார். அப்போது உள்ளம் நெகிழ்ந்து ஸ்ரீதேசிக ஐயங்கார் எழுதிய கடிதத்தைப் பலமுறை என்னுடைய தகப் பனார் எனக்குப் படித்துக்

காட்டுவார். தம்முடைய மனைவி பரமபதித்த சில ஆண்டுகளி லேயே தேசிக ஐயங்காரும் ஆசார்யன் திருவடி அடைந்தார்.

பாரத மாதா கூட்டுறவு பண்டகசாலையில் ஸ்ரீதேசிக ஐயங்காருடைய மிகப்பெரிய நிழற்படம் இருந்ததை 1970ஆம் ஆண்டு அந்த ஊருக்குச் சென்றபோது காணலுற்றேன். தற்போது அவருடைய திருவுருவப்படம் அங்கு உள்ளதா என்பது தெரிய வில்லை.

## 42) ஆசிரியர் நாராயணசாமி அய்யரின் புத்திர சோகம்

எங்கள் வீட்டின் கீழ்ப்புறம் நாராயணசாமி அய்யர் என்ற பள்ளி ஆசிரியர் குடியிருந்தார். இவருடைய ஒரே மகன் பஞ்சாமி என்று அழைக்கப்பட்டு வந்த பஞ்சாபகேசன். ***(குளத்தின் மேற்குக் கரையோரம் மலையாள மர வியாபாரிகள் நீண்டதொரு குழியை வெட்டி பெருப்பெருத்த மரங்களை பெரிய ரம்பம் கொண்டு அறுத்துவந்தனர். இந்தக் குழியில் சேகரிக்கப்படும் மரத்தூளை அனைவரும் அள்ளிச்செல்வர். அவ்வாறு மரத்தூள் எடுக்கச்சென்றபோது எட்டுவயது சிறுவனான பஞ்சாபகேசன் தலைகுப்புற அந்தக் குழியில் விழுந்தான். அந்தக் குழியின் ஆழம் 10 அடி. தலையில் பலத்த அடிபட்டு அது மூளையை பாதித்துள்ளது. உரிய நேரத்தில் தக்க மருத்துவ உதவி அளிக்கப்படாததால் அவன் உயிர் பிரிந்தது. இந்த அகால மரணம் அந்தத் தெருவில் உள்ள அனைவருக்கும் மிகுந்த வேதனையைத் தந்தது. மரம் அறுப்பதற்காக வெட்டப்பட்ட குழி மூடப்பட்டதோடு மட்டுமல்லாமல் கேரளாவைச் சார்ந்த அந்த மர வியாபாரி களும் ஊரைவிட்டு அடித்து விரட்டப்பட்டனர்.)***

ஸ்ரீதேசிக அய்யங்கார் குடியிருந்த வீட்டை அடுத்து உள்ளூர் புரோகிதர் ஸ்ரீஅய்யாவு அய்யருடைய குடியிருப்பு; அதற்கு மேற்கில் புன்செய் திடல்களைத் தாண்டி நாங்கள் எல்லோரும் அன்போடு அழைத்துவந்த 'அத்தைப்பாட்டியின்' குடியிருப்பு. இந்த வீட்டிலிருந்த மூதாட்டியை எல்லோரும் 'அத்தைப்பாட்டி' என்றே



அழைப்பார்கள். அன்றைய வழக்கப்படி தலையை மழுங்க சிரைத்துப் பழுப்புநிறப் புடவையை உடுத்தியிருப்பாள். எப்பொழுதும் கையில் துளசி மணி மாலை; வாய் 'ஸ்ரீராமஜயம் ஸ்ரீராமஜயம்' என்று முணு முணுத்துக் கொண்டிருக்கும்.

## 43) அத்தைப்பாட்டியின் விபூதி வைத்தியம்

சுற்று வட்டாரத்தில் எந்தக் கைக்குழந்தைக்கு உடல் நலம் குன்றியிருந்தாலும் இந்தப் பாட்டி, குழந்தையின் நெற்றியில் திருநீறு இட்டுவிடுவாள். உடனே, வியாதி நீங்கிக் குழந்தை சிரிக்கத் தொடங்கும். இதற்காக அந்த அம்மையார் எந்தக் கைமாறையும் எதிர்பார்ப்பதில்லை.

அத்தைப்பாட்டியினுடைய புதல்வர் திரு.நடராஜ ஐயர். திருத்துறைபூண்டி இரயில் சந்திப்பில் **Vegetarian Refreshment Stall** இவருடைய நிர்வாகத்தின் கீழ் இயங்கி வந்தது. குன்னியூருக்கு அருகாமையில் முள்ளியாற்றின் கரையில் திருவண்டுதுறை என்ற ஊரைச் சார்ந்தவர். மனக்கவலையைப் போக்கும் மருத்துவராக அத்தைப்பாட்டி அந்த அக்ரஹாரத்தில் வாழ்ந்து வந்தாள். எந்த விதமான மக்கள் தொடர்பு சாதனங்களும் இல்லாத காலத்தில் இந்த அத்தைப் பாட்டியின் வீட்டில்தான் இல்லத்தரசிகள் ஒன்றுகூடி தங்களுக்குள் அளவளாவிக் கொண்டிருப்பார்கள்.

அந்தக் காலத்தைய ஆரம்பப்பள்ளி ஆசிரியர்கள் பெரும் பாலும் குடுமி, கச்சம், இவற்றோடு விளங்கும் ஆசார சீலர்கள். இவர்கள் வெளியூரிலிருந்து மாற்றல் உத்தரவு பெற்று பள்ளியில் பணியாற்றுங்கால் அத்தைப் பாட்டியின் இல்லத்தில்தான் உணவு உட்கொள்வார்கள். உள்ளூரில் உணவுவிடுதிகள் கிடையாது. சத்திரத்தில் ஒன்றிரண்டு நாட்கள்தான் தங்கலாம். பல்வேறு காரண ங்களால் களப்பாளுக்கு மாற்றல் உத்தரவு பெற்றுவரும் ஆசிரி யர்கள் குடும்பத்தினரை தங்களோடு அழைத்துவர இயலாது. அத்தகைய

இக்கட்டான சூழ்நிலையில் அத்தைப் பாட்டியின் ஆதரவு அவர் களுக்கு உறுதுணையாய் அமைந்திருந்தது.

குளத்தின் வடகரையில் பாபு என்று எல்லோராலும் அழைக்கப்பட்டு வந்த கிராமப் பட்டாமணியம் வசித்துவந்தார். அந்த வீட்டிற்குக் கிழக்குப்புறத்தில் நெடும்பலம் பண்ணை அமைந்திருந்தது. அந்த வீட்டு அண்ணியின்பெயர் அன்னப்பூரணி. மூக்கிலும், காதிலும் வைர ஆபரணங்கள் மின்னிட சாக்ஷாத் அன்னப்பூரணி போன்றே காட்சியளிப்பாள்.

***குளத்தின் கிழக்குப் பகுதியில் எந்தக் குடியிருப்பும் கிடையாது. சிவனுடைய நேர்பார்வையில் குடியிருப்புகள் இருக்கக்கூடாது என்பது சாஸ்திரம்.***

இந்தக் குளத்தைச்சுற்றி குறிப்பாகத் தெற்குக் கரையோரத் தில் பல்வகை மாமரங்கள் தழைத்தோங்கியிருக்கும். கோடை காலத்தில் வகைவகையான மாங்காய்களும், மாம்பழங்களும் காய்த்துக் குலுங்கும். ஒவ்வொருவருடைய வீட்டிற்கு முன் பும் பனைமரத் துண்டுகள் பதித்த இறங்கு துறை உண்டு. மாமரங் களுக்கு ஊடே தென்னை மரங்களும் உண்டு. குளத்தைச் சுற்றி ஏராளமான நொச்சிச் செடிகள் வளர்ந்திருக்கும்.

***(நொச்சியில் இருவகை உண்டு. ஒன்று ஐந்து இலைகளை ஒரு கொத்தில் கொண்ட வெண்நொச்சி. மற்றொன்று மூன்று இலைகளை ஒரு கொத்தில் கொண்ட கருநொச்சி. புறத்திணையில் நொச்சிப்பூவைச் சூடிக் கோட்டையினைக் காப்பாற்றும் வீரம் ஒரு திணையின்பாற்படும். மருத்துவ குணங்கள் நிரம்பப்பெற்ற இந்த நொச்சி இலைகளை, சூடுபடுத்தப்பட்ட செங்கல்லின் மேல் பரப்பி, பின்பு அந்த இலைகளை ஒரு துணியில் சுற்றி ஒத்தடம் கொடுத்தால் தலைவலி பறந்தோடிவிடும். நொச்சி இலை, வேப்பிலை, யூகலிப்டஸ் இலை ஆகிய மூன்றையும் நீரில் கொதிக்கவைத்து அதன் ஆவியை நுகர்ந் தாலும் தலைவலி நீங்கிவிடும். கருநொச்சிப்பூவில் மற்ற பூக்களைக் காட்டிலும் அதிக அளவில் தேன் சுரக்கும். இதன் பூக்களைப் பறித்து வாயில் வைத்து உறிஞ்சினால் இனிப்பாக இருக்கும்.) கரை யோரங்களில் கிருஷ்ண துளசி (ஆராதனத்திற்கு மிகவும் உகந்தது கிருஷ்ண துளசி.)*** அதிக அளவில் செழித்து வளர்ந்திருக்கும்.



## 44) ஸந்நிதி களப்பாள் குளமும் யமனே மாமர மாக வேரூன்றி நின்ற நிலையும்

எங்கள் வீட்டிற்கு எதிரில் அமைந்திருந்த இறங்குதுறைக்கு மேற்புறத்தில் பெரியதொரு மாமரம் இருந்தது. அந்த மரம் எந்த ஆண்டும் காய்த்ததில்லை. ஆனால் அதன் கிளைகள் எங்கள் வீட்டு ஓட்டுப் பகுதியையும், அடுத்த வீட்டு ஓட்டுப் பகுதியையும் தொட்டுக் கொண்டிருக்கும்.

1951ஆம் ஆண்டு என்றுமில்லாத அளவில் இந்த மரம் காய்த்துக் குலுங்கியது. ஒரு நாள் மாமரக்கிளைகளில் சிக்கி யிருந்த இரும்புப் பூணோடு கூடிய கோடரியின் பிடி என்னுடைய தமைய னாரான பார்த்தசாரதியின் தலையில் காற்றடிக்கும்போது விழுந்தது. அதன் காரணமாக ஏற்பட்ட புண் ஆறாமல் புரையோடி அவன் இறந்துபோனான். எங்கள் குடும்பத்தைப் பொருத்தவரை யமனே மாமரமாகக் குளத்தின் கரையில் வேரூன்றி என் அண்ணன் பார்த்தனுடைய உயிரைப் பறித்துக் கொண்டான் என்றே கொள்ள வேண்டும். இந்த மாமரம் அந்த ஒரு ஆண்டு தான் காய்த்துக் குலுங்கியது; அதன்பிறகு அது காய்க்கவில்லை.

## 44) ‘அக்ஷராப்யாஸம்’

குளத்தின் மேற்குகரைப் பகுதியில் அழகானதும், அகல மானதுமான கருங்கற்களால் அமைக்கப்பெற்ற படித்துறை ஒன்று உண்டு. மேற்குக் கரையில் கோயில் குருக்களான கிருபாநிதீச குருக்களின் வீடு அமைந்திருந்தது. அவருடைய பத்தினியார் பெயர்

திருமதி ஜெயம். இந்தக் கிருபாநிதீச குருக்களுடைய தமையனார் பெயர் தண்டபாணி குருக்கள். இந்த தண்டபாணி குருக்களுடைய புதல்வர்களில் ஒருவர் ஜடாதரன். தனக்கு உதவியாக இருக்கக்கூடும் என்ற எண்ணத் தில் ஜடாதரனை களப்பாளில் வளர்த்துவந்தார் கிருபாநிதீச குருக்கள். நாங்கள் இவனை ஜடை என்றே அழைப்போம். என்னுடைய 5 வயது பூர்த்தியான நிலையில் ஒரு விஜயதசமி அன்று என்னையும் ஜடாதரனையும் ஒரே நாளில் பள்ளியில் சேர்த்தார்கள்.

அந்தக் காலகட்டத்தில் அக்ஷராப்யாஸம் எனப்படும் பள்ளியில் சேர்க்கும் விழா மிகுந்த கோலாகலத்துடன் நடை பெறும். பள்ளியில் சேர்வதற்கு மாட்டுவண்டியில் என்னையும் ஜடாதரனையும் அழைத்துச்சென்றார்கள். அன்றைய தினம் புத்தாடை அணிந்து பள்ளிக்குச் சென்றோம். அங்கே நெல் லைப் பரப்பி அதில் '**ஹரிஓம்**' என்று எழுதிய பிறகு '**ஓம் நமோ நாராயணாய**' என்று எழுத வேண்டும். ஆசிரியர் மாணவனுடைய கையைப் பிடித்து இவ்வாறு எழுதச் சொல்லுவார். அதன்பிறகு மணலில் மீண்டும் எழுத வேண்டும். அன்றைய தினம் சக மாணவர்களுக்கு வீட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட காப்பரிசி ***(வெல்லம், தேங்காய், சன்ன அரிசித் துகள் கலந்த ஓர் இனிப்புப்பண்டம்)*** வழங்கப்படும். ***(தற்போது வழங்கப்படும் சாக்லெட்டுகள் அந்தக்காலத்தில் கிடையாது. பெப்பர்மின்ட் எனப்படும் இனிப்புக் கலவை கடைகளில் விற்கும். இதில் பல வண்ணங்கள் உண்டு. அதனை கையில் எடுத்த உடன் கசகச என ஒட்டிக் கொண்டு பிசுபிசுப்பை ஏற்படுத்தும்.)***

இருவருக்கும் ஒரே ஒரு ஓலைச்சுவடியை மட்டுமே தந்தனர். எனக்குத் தனி ஓலைச்சுவடி தந்தால்தான் பள்ளிக்கூடம் செல்வேன் என்று அன்றையதினமே போராட்டத்தைத் தொடங்கினேன். என்னுடைய தந்தையார் மீண்டும் பனை ஓலைகளை நறுக்கிக் கொண்டு வந்து எழுத்தாணி கொண்டு வாசகங்களை எழுதி மஞ்சள்



குங்குமம் தடவி கோர்த்துக் கொடுத்த பிறகுதான் நான் என் போராட்டத்தைக் கைவிட்டு பள்ளிக்கூடம் சென்றேன்.

## 45) பஜனைகளில் பங்குகொண்ட பூரிப்பு

என்னுடைய தகப்பனார் உள்ளூரிலும், சுற்றுப்புற கிராமங்களிலும் நடைபெறும் பஜனைகளில் அவ்வப்போது கலந்துகொள்வார். அவருடைய குரல் வளம் அவருடைய எண்ணத்திற்கு என்றுமே ஒத்துழைத்ததில்லை. அவருக்கு 'கீச்சுமூச்சு ஐயர்' என்றதொரு புனைபெயரும் உண்டு. ஆயினும் அவர் பஜனை களில் கலந்துகொண்டு பாட முயற்சிப் பார். திவ்யநாம பஜனையின் போது கழுத்திலும், சிகையிலும் பூச்சரங்களை அணிந்து, மார்பில் சந்தனத்தைப் பூசிக்கொண்டு ஒருவர்க்கொருவர் கைகோர்த்துக் கொண்டு திருவிளக்கைச் சுற்றி கையில் ஜால்ராவை வைத்துக் கொண்டு ஒலி எழுப்புவது மற்றும் கோலாட்டம் போன்ற நிகழ்ச்சி களில் தம்மை ஈடுபடுத்திக் கொள்வார். கிருஷ்ணனைப் பிரிந்த கோபிமார் ஒருவர்க்கொருவர் தழுவிக்கொண்டு ஆறுதல் சொல்லும் நிகழ்ச்சிகளும் இதில் உண்டு. இந்த திவ்யநாம பஜனை விடியவிடிய நடை பெறும். சிறு குழந்தையான என்னையும் தன் தோளில் சுமந்து கொண்டுபஜனை நடைபெறும் இடத்திற்கொல்லாம் அழைத்துச் செல்வார்.

ஸதாசிவ ப்ரஹ்மேந்திரர் என்ற மஹான் அருளிய கீழ்க் கண்ட கீர்த்தனைகளை, ஓய்வு நேரங்களில் இவர் மெல்லிய குரலில் கைத்தாளத்துடன் பாடிக் கொண்டிருப்பார்.

**கல்யாணி ராகம்** **ஆதிதாளம்**

பஜ ரே கோபாலம் – மானஸ, பஜ ரே கோபாலம்
பஜ கோபாலம் பஜிதகுசேலம்
த்ரிஜகந்மூலம் திதிஸுதகாலம் (பஜ)

ஆகமஸாரம் யோகவிசாரம்
போகசரீரம் புவநாதாரம் (பஜ)
கதநகடோரம் கலுஷவிதூரம்
மதநகுமாரம் மதுஸம்ஹாரம் (பஜ)
நதமந்தாரம் நந்தகிசோரம்
ஹதசாணூரம் ஹம்ஸவிஹாரம் (பஜ)

(கோபாலனை வழிபடுவாய் (வணங்குவாய்) மனமே! கோபாலனை வணங்குவாய். குசேலரால் பூஜிக்கப்பெற்றவனும் மூன்று உலகங்களுக்கும் மூலகாரணமானவனும், அசுரர்களுக்கு யமனாய் இருப்பவனுமான கோபாலனை வணங்குவாய். வேதங்களின் உட்பொருளானவனும் யோகத்தால் ஆராய்ந்த பொருளானவனும் ஆனந்தானுபவத்திற்காக (ஆனந்தமயமான) சரீரத்தைக் கொண்டவனும் உலகங்களைத் தாங்குவோனு மாகிய கோபாலனை வணங்குவாய்.

பாபங்களைக் கடிந்து போக்குவோனும் மனக் கலக்கத்தை நீக்குவோனும் மன்மதனைக் குமாரனாக உடையவனும் மது என்னும் அரக்கனை அழித்தவனுமான கோபாலனை வணங்குவாய். வணங்குவோருக்கு மந்தார மென்னும் கற்பக விருக்ஷமானவனும், நந்தகோபனுக் குக் குழந்தையானவனும் சாணூரன் என்னும் மல்லனைக் கொன்ற வனும் (அன்னங்களோடு) பரமஹம்ஸர்களோடு விளையாடு வோனுமான கோபாலனை வணங்கி பக்தி செய்வாய்.)

**ஸுருடி ராகம்** **ஆதிதாளம்**

ப்ரூஹி முகுந்தேதி – ரஸநே, ப்ரூஹி முகுந்தேதி
கேசவ மாதவ கோவிந்தேதி
கிருஷ்ணாநந்த ஸதாநந்தேதி (ப்ரூஹி)
ராதாரமண ஹரே ராமேதி
ராஜீவாக்ஷ கநச்யாமேதி (ப்ரூஹி)



கருடகமந நந்தகஹஸ்தேதி
கண்டிததசகந்தரமஸ்தேதி (ப்ரூஹி)
அக்ரூரப்ரிய சக்ரதரேதி
ஹம்ஸநிரஞ்ஜந கம்ஸஹரேதி (ப்ரூஹி)

***(இதை செஞ்சுருட்டியில் பாடுகிறார்கள்)***

'முகுந்தனே!' என்று சொல்லு, நாக்கே! 'முகுந்தனே' என்று சொல்லு. ' கேசவனே! மாதவனே! கோவிந்தனே! என்றும் கிருஷ்ணனே! ஆனந்த மயனே! எப்பொழுதும் ஆனந்தமுடையவனே!' என்றும் சொல்லு. 'ராதாதேவியின் காதலனே!' 'ஹரியே' 'இராமனே!' என்றும் 'தாமரைக் கண்ணா!' 'மேகம் போன்ற கருநிற முடையவனே!' என்றும் சொல்லு.

'கருடன் மீது ஏறிச் செல்வோனே! நாத்தகமென்னும் வாளைக் கையிற் கொண்டவனே!' என்றும் 'தசக்கிரீவனுடைய (இராவணனு டைய) தலைகளை வெட்டியெறிந்தவனே! என்றும் சொல்லு. 'அக்ரூர ருக்கு நண்பனே!' 'திருச்சக்கரத்தை ஏந்தியவனே!' என்றும் 'ஹம்ஸம் போல மாசற்றவனே!' 'கம்ஸனைக் கொன்றவனே!' என்றும் சொல்லு.

**ஜஜ்ஜோடி ராகம்** **ஆதிதாளம்**

பிப ரே ராமரஸம் – ரஸநே, பிப ரே ராமரஸம்
தூரீக்ருதபாதக – ஸம்ஸர்கம்
பூரிதநாநாவித – பலவர்கம் (பிப)
ஜநநமரணபயசோகவிதூரம்
ஸகலசாஸ்த்ர நிகமாகமஸாரம் (பிப)
பரிபாலிதஸரஸிஜகர்பாண்டம்
பரமபவித்ரீக்ருதபாஷண்டம் (பிப)
சுத்தபரமஹம்ஸாச்ரமகீதம்
சுகசௌநககௌசிகமுகபீதம் (பிப்)

***(இதை சஹானா ராகத்தில் பாடுகிறார்கள்)***

'ராம' என்னும் அமுதத்தைப் பருகுவாய், ஏ நாக்கே! ராமாமிர் தத்தைப் பருகுவாய். பாவங்களின் சம்பந்தத்தைப் போக்குவதாயும் பல் வேறு விதமான பழரஸத்தால் நிரம்பியதுமான (பல் வேறு வகைப் பலன் களையும் பக்தர்களுக்கு உதவுவதற்காக தன்னுள்ளே நிரப்பிவைத்துக் கொண்டிருப்ப துமான) ராமாமிர்தத்தைப் பருகுவாய்.

பிறப்பு இறப்பு அச்சம் துன்பம் இவற்றைப் போக்குவதும் நிகமம், ஆகமம் என்னும் எல்லா சாஸ்திரங்களிலும் ஸாரமாக உள்ளது மான (ராமாமிர்தத்தை), ப்ரம்மாண்டங்களைப் பாதுகாப்பதும் பாஷாண் டர்களையும் பரமபாகவதர்களாகச் செய்வதுமான (ராமாமிர்தத்தை) சுகர், சௌனகர், கௌசிகர் முதலியோர் (வாய்கொண்டு) பருகியதும் பரிசுத்தர்களான பரமஹம்ஸர்களின் ஆசிரமங்களிலே (பரமஹம்ஸர்களாலே) பாடப் பெற்றதுமான ராமாமிர்தத்தைப் பருகுவாய்.

## 46) குலம் தரும், செல்வம் தந்திடும் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம்

என்னுடைய தந்தையார் தம்முடைய வாழ்நாளில் கடைபிடித்து வந்ததொரு மிக உயரிய பழக்கத்தை இங்கு குறிப்பிடவேண்டும். காலையில் எழுந்து ஸ்நானம் செய்த பிறகு தமக்குக் கிடைக்கும் ஓய்வு நேரங்களிலும், நடந்து செல்லும் போதும் (தம்முடைய 60ஆவது வயது வரை காலில் செருப்பு அணிந்துகொண்டதே இல்லை) பல முறை ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமத்தை பாராயணம் செய்து கொண்டே இருப்பார்.

காலையில் '**ஶுக்லாம் பரதரம் விஷ்ணும்**' என்று தொடங்கி '**ஸ்ரீமாந் நாராயணோ விஷ்ணுர் வாஸுதேவோ (அ)பிரக்ஷது, ஸ்ரீவாஸுதேவோ(அ)பிரக்ஷது ஓம் நம இதி**' என்று சொல்லி முடித்தபின்னர், '**விஶ்வம் விஷ்ணுர் வஷட் காரோ பூதபவ்ய பவத்ப்ரபு:**' என்று தொடங்கி '**ஸ்ரீமாந் நாராயணோ விஷ்ணுர்**' என்று முடித்தபிறகு மீண்டும் மீண்டும் ஸஹஸ்ர நாமத்தை சொல்லிக்கொண்டே இருப்பார். இரவு படுக்கப் போவதற்கு முன்பு



'**இதீதம் கீர்த்தநீயஸ்ய கேஶவ வஸ்ய மஹாத்மந:**' என்று தொடங்கி பலஶ்ருதியைச் சொல்லி பூர்த்தி செய்திடுவார். தம்முடைய வாழ்நாளில் இவர் ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தை பல லக்ஷம் உரு சொல்லி யிருக்கக்கூடும். இந்த வேள்வியின் பலனாகத்தான் அவருடைய சந்ததியினரான நாங்கள் இன்று நல்ல நிலைமையில் உள்ளோம்.

## 47) உலகியல் நிகழ்ச்சிகளும் ஜாதக விசேஷமும்

ஒவ்வொருவருடைய பிறப்பின்போது அரங்கேறும் உலகியல் நிகழ்ச்சிகள் அவருடைய எதிர்காலத்தை உருவாக்கு கின்றது. ஒருவருடைய ஜனனகாலத்தில் நிலைகொண்டிருக் கும் கோள்களும், நக்ஷத்திரங்களும் அவர் இறக்கும்வரை அவரை பின்தொடர்ந்தே வரும். ஒருவருடைய ஜாதகத்தில் குருவின் பார்வை ஓங்கியிருந்தால் அவர் அறிவுடையவனாக விளங்குவார். சனியினுடைய பார்வை பல நேரங்களில் தாங்க முடியாத துன்பத்தையும், சில நேரங்களில் செல்வத்தையும் அளித்திடும். இவையெல்லாம் ஜோதிட பூர்வமான கோள்களின் செயல்பாடு களாகக் கொள்ளப்படுகின்றன.

ஆனால் என்னுடைய வாழ்க்கையில் பலமுறை 'எழுத்து யுத்தம்' செய்யவேண்டியிருந்ததோடு மட்டுமல்லாமல் அதைத் தொடர்ந்தும் செய்துகொண்டு இருக்கின்றேன். இதற்கு காரணம் என்ன என்று நான் ஆராயுங்கால் சில உண்மைகள் புலப்படலாயின. உலகத்தையே ஆட்டிப்படைத்த இரண்டாம் உலகப்போர் தொடங்கிய ஆண்டில் நான் பிறந்ததும் ஒரு காரணமாக அமைந்திருக்குமோ என்னவோ? அடிமைப்பட்ட இந்திய நாட்டில் கி.பி.1857ஆம் ஆண்டு தொடங்கி ஆங்கி லேயர்களுக்கு எதிரான போராட்டம் பல்வேறு காலகட்டங்களில் நிகழ்ந்துவந்தன. இந்தப் போராட் டங்களினால் முடிவான தீர்வு ஏற்படவில்லை. இரண்டாம் உலகப்போர் இந்தியா சுதந்திரம் அடைவதற்கு ஒரு மறைமுகக் காரணமாக அமைந்திருந்தது.

## 48) இரண்டாம் உலகப்போர் எவ்வாறு தொடங்கியது

*கி.பி.1933ஆம் ஆண்டு ஹிட்லர் ஜெர்மானிய நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றினார். அவருடன் இத்தாலிய நாட்டு முஸோலினியும் கூட்டு சேர்ந்துகொண்டார். இவ்வாறு ஐரோப்பா கண்டத்தில் வலிமைபெற்ற சர்வாதிகாரியாய்த் திகழ்ந்த ஹிட்லருடன் கூட்டு சேர்ந்த முஸோலினி கி.பி. 28.06.1919 அன்று கையெழுத்திடப்பட்ட* Treaty of Versailles*இன் ஒப்பந்த விதிகளை மீறி அபிஸீனியா மீது படையெடுத்தான்.*

*ஹிட்லரும் தன் பங்கிற்கு ஜெர்மன் நாட்டினுடைய கடற் படையை விரிவுபடுத்தினார். அதன்ஞணூடிச் நாட்டை ஜெர்மனியுடன் இணைத்துக் கொண்டார். இதன் விளைவாக ஹிட்லருடைய நாடு பிடிக்கும் ஆசை கொழுந்து விட்டு எரிய ஆரம்பித்தது.* Czecho-slovakia *நாட்டின் ஒருபகுதி 15.03.1939ஆம் நாளன்று ஜெர்மன் நாட்டுடன் இணைக்கப்பட்டது.*

*1939ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் தேதி ஜெர் மானிய போர்வீரர்கள் போலந்து நாட்டின் எல்லைகளைத் தாண்டிச் சென்று அதன்மீது படையெடுத்தனர். அன்றைய தினமே இரண்டாம் உலகப்போர் தொடங்கியதாக பிரிட்டீஷ் பாராளுமன்றத்தில் பிரதம மந்திரி* Chamberlain *அறிவித்தார். இந்த உலக மஹா யுத்தம் 6 ஆண்டுகள் நீடித்தது; 1945ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முடிவுற்றது.*

*1/9/1939 தொடங்கி 9/4/1940 ஈறாக போலந்து, நார்வே, டென்மார்க் ஆகிய நாடுகள் மீது தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. 9/4/40 தொடங்கி 1942ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முடிய உலகப்போர் உச்சகட்டத்தை அடைந்தது. ஸ்கேண்டிநேவ்யா (ஏப்ரல் 1940), நெதர்லாந்த் (1940ஆம் ஆண்டு மே 10 தொடங்கி 28 ஈறாக), ஃப்ரான்ஸ் (1940ஆம் ஆண்டு ஜூன் 5 முதல் ஜூன் 25 முடிய),*



*பிரிட்டன் (1940 ஜூலை 10 முதல் செப்டம்பர் 17 முடிய), அட்லாண்டிக் பெருங்கடல் பகுதி (1939 செப்டம்பர் தொடங்கி 1942 டிசம்பர் முடிய) அதன்பிறகு ரஷ்யா (1941 தொடங்கி போரின் இறுதிகட்டம் வரை) ஆகிய நாடுகளில் இந்தப் போர் நடைபெற்றது.*

## 49) ஜப்பான் மீது அமெரிக்காவின் அணுகுண்டு தாக்குதல்

*இந்தப்போரில் ஜப்பான் நாடு ஜெர்மனியுடன் இணைந்து போரிட்டது. பசிபிக் பெருங்கடல் சூழ்ந்த நாடுகளின் மீது 7.12.1941ஆம் தேதியன்று படையெடுத்து ஜப்பான் பல வெற்றிகளை அடைந்தது. 1945ஆம் ஆண்டு செப்டம்பர் 2 ஆம் தேதி இந்தப் போர் முடிவுற்றது. அதற்கு முன்னராக 1945ஆம் ஆண்டு ஆகஸ்டு 6ஆம் நாளன்று ஹிரோஷிமா மீதும், 1945ஆம் ஆண்டு ஆகஸ்டு 9ஆம் நாள் நாகஸாகி மீதும் அமெரிக்கப் படையினர் அணுகுண்டு தாக்குதலை நடத்தினர். இதன் விளைவை இன்றுவரை மனித சமுதாயம் அனுபவித்து வரு வதை நாம் அனைவரும் அறிவோம்.*

## 50) விடுதலைப் போராட்டமும் இரண்டாம் உலகப் போரும்

*1939இல் இரண்டாவது உலகப் போர் தொடங் கியவுடன் அன்றைய வைஸ்ராய் லில்லித்கோ பிரபு, மத்திய சட்ட சபையையோ, மக்கள் பிரதிநிதிகளையோ கலந்து பேசாமல்,* **இந்தியா ஜெர்மனிக்கு எதிராகப் போர்தொடுக்கும் எனத் தெரி வித்தார்**. *இந்த அறிவிப்பினால் சினம் கொண்ட காங்கிரஸ் கட்சித் தலைவர்கள், இந்திய மக்களின் ஒப்புதலின்றி இந்தியா வைப் போரில் ஈடுபடுத்துவதை கடுமையாகக் கண்டித்தனர்.* **இந்தியா சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டால்தான், அது போரில் ஈடுபட்டு ஒத்துழைக்கும் என்று காங்கிரஸ் தெளிவுபடுத்தியது**.

போர் முடிவுற்ற பின்னர் 1935ஆம் ஆண்டு சட்டத்தில் மாற்றம் கொண்டுவரத் தயார் நிலையில் உள்ளதாக பிரிட்டிஷ் அரசு தெரிவித்தது. பேச்சு வார்த்தைகள் பயனற்றது என்று உணர்ந்த காங்கிரஸ் கட்சியினர் அக்டோபர் 1939இல் தாம் பொறுப்பு வகித்து வந்த ஏழு மாநிலங்களில் பதவியை ராஜிநாமா செய்தனர்.

அது சமயம் ஜெர்மனி, அநேக ஐரோப்பிய நாடுகளைக் கைப்பற்றி நேசநாடுகளுக்குப் போரில் மிகவும் மோசமான திருப்பத்தை உண்டாக்கியது. பிரிட்டனுக்கு ஏற்பட்ட இந்த நெருக்கடியைப் பயன்படுத்திக்கொள்ள காங்கிரஸ் கட்சி விரும்பவில்லை. மத்தியில் தற்காலிக தேசிய அரசை அமைக்க வும், இந்தியாவின் சுதந்திர உரிமையை ஏற்கவும் செய்தால், பிரிட்டிஷ் அரசுக்கு ஒத்துழைப்பை நல்குவதாக காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் தெரிவித்தனர்.

1940-ஆகஸ்டில் பிரிட்டிஷ் அரசு ஒரு உடன்படிக்கைக்கு தனது விருப்பத்தினைத் தெரிவித்தது. இந்திய வைஸ்ராயின் செயற்குழுவில் மேலும் அதிகப்படியான இந்தியர்களைச் சேர்த்துக் கொள்ளும் வகையில் செயற்குழு விரிவுபடுத்தப்படும் என்றும், போருக்கான ஆலோசனைக்குழு அமைக்கப்படும் என்றும், போருக்குப் பின்னர், இந்தியர்களைக் கொண்ட குழு, புதிய அரசியல் திட்டத்தைத் தயாரிக்கும் என்றும் பிரிட்டிஷ் அரசு கூறியது. காங்கிரஸ் இந்தக் கருத்தை ஏற்க வில்லை. **‘எங்களுக்கு சுதந்திரம் வேண்டும்; தனியாட்சி உரிமை அல்லாத எந்த அந்தஸ்து நிலையும் தேவை யில்லை’** என்று ஜவகர்லால் நேரு கூறினார்.

இந்திய மக்கள் ஏமாற்றத்தால் வெறுப்புற்றிருந்தபோது யுத்தத்தின் போக்கு கவலை தரும் திருப்பத்தை எட்டியது. பிரிட்டனுக்கு எதிரான கூட்டணியில் ஜப்பானும் சேர்ந்து கொண்டது. மின்னல் வேகத்தில் ஜப்பானியப் படைகள் சிங்கப்பூரைக் கைப்பற்றின; மலேயாவை வென்று, ரங்கூன்



மாண்டலேவைக் கைப்பற்றின. இதன் காரணமாக 1942ல் இந்தியா ஒரு யுத்தகளமாக மாறும் நிலைக்கு வந்துவிட்டது. விசாகப் பட்டினம், காகிநாடா முதலிய நகரங்களின் மீது விமான குண்டு வீச்சு தாக்குதல்கள் நடைபெற்றன.

## 51) அமெரிக்கா நேச நாடுகளுக்கு உதவி செய்ததும் ஜப்பானியப் படைகள் Pearl Harbourஐ நாசம் செய்ததும்

1939ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் உலகப்போர் தொடங்கியபோதும் ஓராண்டிற்கு அமெரிக்கா இந்தப் போரில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளவில்லை. 1940ஆம் ஆண்டு செப் டம்பர் மாதம் தொடங்கி நேசநாடுகளுக்கு தன் மறைமுக மான உதவிகளைச் செய்து வந்தது. அமெரிக்க கடற்படை ஐஸ்லாண்ட் தொடங்கி கிழக்காசிய நாடுகள் வரையிலான கடற்பகுதியில் ரோந்துப் பணிகளைச் செய்து வந்தது. 1941ஆம் ஆண்டு நாஸி படைகளுடைய கரம் வலுவடைந்ததோடு மட்டு மல்லாமல், க்ரீஸ், வடஆப்ரிக்க நாடுகள் மற்றும் எகிப்தின் மீது படையெடுக்கத் தொடங்கியது. 22.06.1941 அன்று ஹிட்லரு டைய படைகள் ரஷ்யா மீது படையெடுத்தது. நாஸி கூட்ட மைப்பில் தன்னை இணைத்துக் கொண்ட ஜப்பான் 7.12.1941ஆம் நாளன்று Pearl Harbour துறைமுகத்தை நாசம் செய்தது. தென்கிழக்கு ஆசிய நாடான சிங்கப்பூர் மீது படையெடுத்து ஜப்பானியர்கள் வெற்றி கொண்டார்கள்.

1942ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வங்காள விரிகுடாக் கடலில் ஜப்பானிய போர்க் கப்பல்கள் இந்தியா மீது தாக்குதல் நடத்தும் எண்ணத்துடன் நடமாடிக்கொண்டிருந்தன. நேச நாடு களின் வட்டாரத்தில் இந்தியாவின் கதி பற்றி பெரும் அச்சமும், கவலையும் ஏற்பட்டன. அமெரிக்க அதிபர் ரூஸ்வெல்ட்டும், சைனாவின் சியாங்-கை-ஷேக்கும், இந்தியத் தலைவர்களுடன் ஒரு உடன்

படிக்கைக்கு வருமாறு பிரிட்டிஷ் அரசைக் கட்டாயப்படுத்தினர். இந்த நெருக்கடியான நேரத்தில் பிரிட்டிஷ் அரசு, சர் ஸ்டாப் ஃபோர்டு கிரிப்ஸ் என்ற இங்கிலாந்தின் அமைச்சர் ஒருவரை, இந்தியாவிற்கு அனுப்பி இக்கட்டான நிலைமைக் குத் தீர்வுகாண தீர்மானித்தது.

## 52) வெள்ளையனே வெளியேறு இயக்கம்

கிரிப்ஸ் ஒரு இடதுசாரி சோஷியலிஸ்ட். நேருவுக்கு உற்ற நண்பராகத் திகழ்ந்துவந்தவர். அவருடைய ஆலோசனை களுக்கு பண்டித ஜவஹர்லால் நேரு தகுந்த ஒத்துழைப்பினை அளிக்கக்கூடும் என்ற எண்ணத்தில் அப்போதைய ஆங்கிலேய அரசு அவரை இந்தியாவிற்கு அனுப்பிவைத்தது.

1942இல் இந்திய அரசியல் அரங்கம் நெருப்புப் பிடித்துக் கொள்ளும் அளவு வெப்ப நிலையை எட்டியிருந்தது. இரண்டாம் உலகப்போர் உச்சகட்டத்தை எட்டியதோடு மட்டு மல்லாமல் உலகத் தாயின் இதய இரத்த ஓட்டத்தை அது உறிஞ்சிக் கொண்டிருந்தது. அமெரிக்காவும் ஜப்பானும் ஆசிய வானத்தைப் போர் விமானங்களாலும், தென்கிழக்கு ஆசிய மண்ணைக் குண்டுகளின் புகையாலும் போர்த்திக் கொண்டிருந்தன.

வங்க மண்ணின் தங்கப் புதல்வன் நேதாஜி இந்திய நாட்டைவிட்டு வெளியேறி ஓர் இலட்சிய நோக்கில் தம் பயணத்தைத் தொடங்கினார். கிரிப்ஸ் வெறுங்கையால் முழம் போட்ட வித்தையில் மயங்காத இந்தியத் தலைவர்கள் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் மூலம் சுதந்திரப் போராட்டத்தின் இறுதி அத்தியாயத்தை எழுதலாயினர்.

18.08.1942ஆம் நாள் அகில இந்தியக் காங்கிரஸ் குழு, 



தனது பம்பாய் ஆலோசனைக் கூட்டத்தில் 'வெள்ளையனே வெளியேறு' தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னர், 'செய் அல்லது செத்துமடி' (Do or Die) என்ற முழக்கம் நாடெங்கும் ஒலித்தது. அடுத்தநாள் காலை (09.08.1942) காந்திஜியும், காங்கிரஸ் நிர்வாகக்குழு உறுப்பினர்களும் இந்தியப் பாது காப்புச் சட்டத்தின்கீழ் சிறைப்படுத்தப்பட்டனர். நிர்வாகக் குழு உறுப்பினர்களை அகமத்நகர் கோட்டையில் சிறை வைத்தது ஆங்கிலேய அரசு. காந்திஜியும் அவரது தோழர்களும், யாவரும் அறிய புனாவில் ஆகாகான் அரண்மனையில் அடைத்து வைக்கப்பட்டனர். அனைத்து காங்கிரஸ் குழுக்களும் சட்ட விரோதமான அமைப்புகளாக அறிவிக்கப் பட்டன. வெள்ளை யனே வெளியேறு போராட்டத்தை காந்திஜி 1944 மே மாதம் சிறையிலிருந்து விடுதலை ஆகும்வரை இந்திய மக்கள் தொடர்ந்து நடத்தி வந்தனர்.

## 53) களப்பாளில் ஒலித்த வெள்ளையனே "வெளியேறு முழக்கம்"

களப்பாள் கிராமத்தில் இரத்தினம் என்ற காங்கிரஸ் தியாகி எப்போதும் கதர் ஆடையை உடுத்திக் கொண்டு, கதர் குல்லாவை அணிந்திருப்பார்; இவர் வீட்டு வாசலில் பெரியதொரு கம்பத்தில் காங்கிரஸ் கொடி பறந்துகொண்டே இருக்கும். இராமசாமி தேவர் என்பவர் ஒரு சிறு நிலச் சுவான்தார். ஸ்ரீநிவாஸ ராவ் என்ற மாத்வ பிராமணர் ஒருவர் வீடுவீடாகச் சென்று நிலைப்படியில் ஸ்ரீராமஜெயம் என்று அச்சிடப்பட்ட காகிதத்தை ஒட்டிவருவார். இவர்கள் அனைவரும் காந்தியக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட வர்கள். களப்பாள் கிராமத்தில் இவர்களைப் போன்ற பலர் 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டனர்.




*1942*ஆம் ஆண்டு காந்தி கைதானபின் களப்பாளைச் சுற்றியுள்ள சில கிராமங்களைச் சார்ந்த மக்கள் ‘வெள் ளையனே வெளியேறு’ என்ற முழக்கத்துடன் ஊர்வலமாகச் சென்றார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்ற ஊர்வலம் தென்பரை கிராமத்தில் தொடங்கி களப்பாள் வழியாகப் பல ஊர்களைக் கடந்து மேற்கே நாணலூர் கிராமத்தைச் சென்று சேர்ந்தது. இந்த ஊர்வலத்தை என்னுடைய நான்காவது வயதில் பாத்தேன்.

## 54) உணவு பஞ்சமும், பதுக்கல் பேர்வழி களும்

இரண்டாம் உலகப்போரின் விளைவுகள் செயற்கைப் பஞ்சத்தில் உலகைத் தள்ளியிருந்தன. போரில் ஆக்ரமிப் பாளர்கள் அயல் நாடுகளில் முற்றுகை இட்டுக் கொண்டிருக்க, உணவுத் தட்டுப்பாடு ஒவ்வோருவருடைய வீட்டின் சமையற் கூடத்தை ஆக்ரமித்துக்கொண்டிருந்தது. எது கிடைத் தாலும் சாப்பிடத் தூண்டுகிற கொடிய பசி மனிதனைத் தின்று கொண்டிருந்தது.






அந்த சமயத்தில் அரிசிக்கு மாற்றாகக் கோதுமை, ரவா போன்ற தமிழ் மக்கள் பரவலாக அறிந்திராத உணவுப் பொருள்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வுணவுப் பொருள்களும் தாரா ளமாகக் கிடைக்கவில்லை. பதுக்கலும் கள்ளச்சந்தையும் விலை வாசி உயர்வும் பண்டங்களின் பற்றாக்குறையும் உரமிட்டு வளர்ந்த பயிர்கள் போல் வேகமாய் வளர ஆரம்பித்தன. ஒவ்வொரு பிடி அரிசிக்கும் மக்கள் போராட வேண்டியிருந்தது. ‘ரவா’ பணம் படைத்தோர் வீட்டில் மட்டும் அபூர்வமாகப் பயன்படுத்தப்பட்டது. ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கத்தை ஒடுக்க அரசு மிகக் கடுமையான நடவடிக்கைகளைக் கையாண்டது. வானத்திலிருந்து இயந்திரத் துப்பாக்கி கொண்டு பாட்னா, பாகல்பூர், பீகாரிலுள்ள மோங்கீர், வங்காளத்தில் உள்ள நாடியா, தால்சர் ஆகிய ஐந்து நகரங்களில் மக்கள் சுடப் பட்டனர்.

பல மாநிலங்களில் வன்முறை வெடித்தது. ஆயிரக் கணக்கானோர் உயிர்த்தியாகம் செய்தனர். ராணுவமும், காவல் துறையும் கட்டவிழ்த்துவிடப்பட்ட நிலையில் பாரதமெங்கும் மக்கள் சொல்லொணாத் தொல்லைகளையும் கொடுமை களையும் அனுபவித்து வந்தனர். வட மாநிலங்களில் மக்கள் போராடிய அளவிற்குத் தென் மாநிலங்களில் போராட்டம் வலுப்பெறவில்லை.

## 55) தென் மாநிலங்களில் என்ன நடந்தது ?

இவ்வியக்கத்தின் உயிர்த்தியாகிகளில் ஒருவனான, கள்ளிக்கோட்டை சாமேரின் கல்லூரியின் 19 வயது குஜராத் மாணவன் நவீன் சந்த் ஈஸ்வர்லால் ஷராஃப் என்பவனைக் குறிப்பிடவேண்டும். அவனுக்கு ரூ.75 அபராதம் விதிக்கப்பட் டது. அவ்வாறு விதிக்கப்பட்ட அபதாரதத் தொகையை செலுத்தத் தவறினால் மூன்று மாத சிறைத்தண்டனை எனவும் அறிவிக் கப்பட்டது. அபராதத்தைத் தனது தாய் செலுத்தக் கூடாது என அவன் தடுத்துவிட்டான். அலிபுரம் சிறையில் ‘சி’ வகுப்பில் வைக்கப்பட்டு மிகமிக மட்டமான உணவு தரப்பட்டதன் விளைவாக அவன் விடுதலை பெற நான்கு நாட்கள் இருக்கும் போது சிறையில் ‘டைஃபாய்டு’ நோய் காரணமாக இறந்து விட்டான்.

கோயம்புத்தூரில் ராணுவ விமான தளம் தீயிடப் பட்டது. அருகிலிருந்த கிராமத்தின் அனைத்து ஆண்களும் கைது செய்யப்பட்டு, சிறிய அடைப்பிற்குள் ஒரு வார காலம் நின்று கொண்டிருக்குமாறு வைக்கப்பட்டனர். கோயம் புத்தூருக்கு ஒன்பது மைல்களுக்கு அப்பால், ஒரு ராணுவ முகாம் தீயிடப்பட்டது. வரிசையாகப் பல கூடாரங்களும் எரிந்து சாம்பலாயின. 200 பீரங்கி மோட்டார் வண்டிகள் (Tanks) அழிக்கப்பட்டன. அதிகாரப் பூர்வமற்ற செய்தியின்



படி, ராணுவம் மக்களின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியதில் 20 முதல் 30 பேர்வரை இறந்தனர். சென்னையில் புகழ்பெற்ற கர்னாடிக் பக்கிங்ஹாம் துணி ஆலை உட்பட பல தொழிற் சாலைகள் வேலை நிறுத்தத்தை மேற்கொண்டன.

இந்த இயக்கத்தின் மிகப்பெரிய பலவீனம் மக்கள் ஒன்றிணைந்து செயல்படத் தவறியதே ஆகும். தலைவர்கள் கைது செய்யப்பட்ட பின்னர், பல மாநிலங்களில் ஆணை யிடவோ, இணைந்து செயல்படவோ தலைமை நிறுவன மில்லாமல் போயிற்று.

## 56) காலைவாரிவிட்ட கம்யூனிஸ்டுகள்

போராட்டத்தின் தொடக்க நிலையில் கம்யூனிஸ் டுகள், காங்கிரசை ஆதரித்து பிரிட்டிஷ் அரசை வெளியேற்ற போராட் டத்தில் ஈடுபட்டனர். ஆயினும் மே 1943இல் அச்சு நாடு களுக்கு எதிராக ***(ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் நாடுகளின் கூட்டமைப்பு அச்சு நாடுகள் என வழங்கப்பட்டது.)*** ரஷ்யா நேச நாடுகளுடன் ***(பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்க நாடுகளின் கூட்டமைப்பு)*** சேர்ந்து கொண்டதும், இந்திய கம்யூனிஸ்டு கட்சி, இந்திய விடுதலையை விரும்பும் அனைத்து இந்தியர் களையும் கொண்ட தேசிய ஐக்கிய முன்னணியை உருவாக்கி, நாட்டை ஃபாசிச சக்தியின் கொடுமைகளிலிருந்தும், ஏகாதிபத்திய அடிமைத்தளையிலிருந்தும் விடுவிக்க வேண்டுமென்று, ஆதரித்துப் பேசியது. அது முதல் இந்திய கம்யூனிஸ்டுகள் வெளிப்படையாக ‘வெள் ளையனே வெளியேறு’ இயக்கத்தை எதிர்த்தனர்.

***(இந்திய கம்யூனிஸ்டுகளின் சித்தாந்தத்திற்குத் தாயகம் ரஷ்யா. அவர்கள் இந்திய மண்ணில் வசித்துவந்தாலும் பிறந்த வீட்டையே நினைத்துப் புலம்பிக்கொண்டிருப்பர். எதற்கெடுத்தாலும்***

***ரஷ்யாவைப் பார், சீனாவைப்பார் அங்கு மக்கள் இன்ப வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே தேனாறு ஓடுகிறது; பாலாறு பாய் கிறது இங்கே பன்னுக்கும் ரொட்டிக்கும் கையேந்த வேண்டியுள்ளது என்று புலம்பித் தவிப்பார்கள். பூஷ்வாக்கள்*** (Bourgeois) ***பாட்டாளி மக்களின் ரத்தத்தை அட்டைப்போல உறிஞ்சுகிறார்கள் - என்ற முழக்கமே இவர்களைத் தஞ்சை மவாட்டத்தில் செல்வாக்கு மிக்கவர் களாய் ஆக்கியது. ரஷ்ய கூட்டமைப்பு சிதறுண்டபிறகு இந்திய கம்யூனிஸ்டுகள் இடது சாரி, வலது சாரி என இரு வகையாகப் பிரிந்து நின்று செயல்பட்டு வருகின்றனர். இவர்களுக்கென தனி அரசியல் செல்வாக்கு கிடையாது. ஆனால் கம்யூனிஸ்டுகள் கைதேர்ந்த குதிரை சவாரிக் காரர்கள்*** (Horse Riders). ***அதாவது இவர்களுடைய ஒத்து ழைப்பு இல்லாமல் அரசைக் கைப்பற்றிட முடியாத நிலையில் ஒரு கட்சிக்கு தாங்கள் ஆதரவு அளிப்பதாகக் கூறி ஒப்புதல் கடிதத்தை மாநில ஆளுநரிடமோ அல்லது இந்திய ஜனாதிபதியிடமோ அளிப்பர். ஒவ்வொரு நாளும் குதிரைமேல் சவாரி செய்யும் நிலையில் தங்கள் விருப்பப்படி நாட்டின் பொரு ளாதார சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்று கட்டாயப் படுத்துவார்கள்.***

***மாநில அரசைப் பொறுத்த வரை மேற்கு வங்காளத்தில் தொடர்ந்து ஆட்சி பீடத்தில், இருந்துவருப வர்கள். தெற்கில் கேரள மாநிலத்தில் உதிரி கட்சிகளோடு அவ்வப்போது அரசியல் உறவு வைத்துக்கொண்டு ஆட்சியில் அமர்வார்கள். இந்த இரு மாநிலங் களைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் இவர்களுக்குப் போதிய அரசியல் செல்வாக்குக் கிடையாது. 'வெள்ளையனே வெளியேறு' போராட்டத்தில் இவர்களுடைய உண்மையான நிறம் வெளிப்பட்டது. காங்கிரஸ் கட்சியோடு கூட்டு சேர்ந்து இந்திய மண்ணின் விடுதலைக்குப் போராடுவதாக அறிவித்து விட்டு திடீரென்று ரஷ்யா பிரிட்டனோடு உறவு வைத்துக்கொண்டிருப் பதால், பிரிட்டனுக்கு எதிரான கோஷங் களை இந்திய மண்ணில் எழுப்ப மாட்டோம் என்று பின் வாங்கினார்கள். என்னே இவர் களுடைய தேசப்பற்று!)***



'வெள்ளையனே வெளியேறு இயக்கம்' இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஒரு முக்கிய கட்டமாகும். அது இறுதியான தும், இந்தியாவில் ஆங்கிலேயர்களுக்கு எதிராக இந்திய சுதந்திரப் போராட்டத்திற்காக நிகழ்த்தப்பட்ட போராட்டங் களில் கடுமையானதும் ஆகும். இதற்கு முன்னர் நடத்தப்பட்ட அனைத்து இயக்கங்களையும் விட, 1857ஆம் ஆண்டு நிகழ்ந்த மாபெரும் புரட்சி உட்பட, அளவிலும், கடுமையிலும் விஞ்சி நின்றது இவ்வியக்கம், இது அநேகமாக இமயமலை முதல் குமரி வரை எல்லா மாநிலங்களிலும் பரவியிருந்தது.

## 57) எந்த நேரத்திலும் குண்டு போடலாம்! அச்சம் கொண்ட மக்கள்

உலகப்போரின்போது ஜப்பான் போர்க்கப்பல்கள் வங்காள விரிகுடாவில் அதிக அளவில் வலம் வந்து கொண்டி ருந்தன. எந்த நேரத்திலும் கிழக்குக் கடற்கரை ஓர நகரங்களில் தாக்குதல் நடத்தப்படக்கூடும் என்ற அச்சம் மக்களிடையே நிலவியிருந்தது. குறிப்பாக சென்னை, கடலூர், நாகப்பட்டினம் போன்ற கடற்கரைப் பகுதிகளில் வசித்துவந்த பெரும்பாலா னோர், நாட்டின் உட்பகுதியில் வாழ்ந்துவந்த உறவினர் களுடைய இல்லங்களில் தஞ்சம் புகுந்தனர்.

இந்தச் சூழ்நிலையில் - நாகப்பட்டினத்தில் வசித்து வந்த என்னுடைய தாயாரின் மாதுலரான ஸ்ரீமான் தாத்தா சார்யரும் அவருடைய திருமதியாரும், சென்னை பெரம்பூரில் வசித்து வந்த எனது தாயாரின் பெரியம்மாவும், அவருடைய கணவர் ஸ்ரீமான் சேஷாத்ரி ஐயங்காரும் கீழைப் பனையூரில் பல மாதங்கள் தங்கியிருந்தனர். தெருவில் ஆங்காங்கே கூட்டம் கூட்டமாக நின்று கொண்டு பொதுமக்கள் உலகமகா யுத்தத்தின் போக்கைப் பற்றியும், வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைப் பற்றியும் அன்றாடம் தமக்குத் தெரிந்த

செய்திகளைப் பரிமாறிக் கொண்டிருப்பர். அந்தக் காலத்தில் சென்னை யிலிருந்து வெளி வந்து கொண்டிருந்த ‘சுதேச மித்ரன்’ பத்திரிகை தபாலில் வந்து சேரும். ஊரில் நான்கு அல்லது ஐந்து நபர்கள்தான் இவ்வாறு தபாலில் செய்தித் தாளினை வரவழைத்துக் கொள்வர். ஆங்கில பத்திரிகையைப் படித்து அறிந்து கொள்ளும் அளவிற்கு கிராமங்களில் கல்வியறிவு பெருகியிராத காலம் அது. இவ்வாறு ஒரு சிலருக்கு மட்டும் தபாலில் வரும் செய்தித்தாளை அவர்கள் படித்து முடித்த பிறகுதான் மற்றையோர் படிக்க இயலும்.

***(உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்வதற்கு வானொலி போன்ற தொலைத்தொடர்பு சாதனங்கள் கிராமங்களில் வேரூன்றாத காலகட்டத்தில் முதன்முதலாக அந்த கிராமத்தில் கி.பி.1950ஆம் ஆண்டு புதுப்பண்ணை என்று அழைக்கப்பட்டுவந்த திரு.குமரப்ப முதலியாரு டைய இல்லத்தில்தான் வானொலிப்பெட்டி வாங்கப்பட்டது. அவரு டைய வீட்டு மாடியில் சுமார் 50 அடி உயரமுள்ள Antenna (மின் காந்த ஒலி அலைகளை உள் வாங்கிக்கொள்ளும் கம்பி) பொருத்தப் பட்டு வானொலியின் இயக்கத்திற்காக மின்கலப்பெட்டிகள் அமைக்கப் பட்டிருந்தன. மின்சார வசதி கிராமங்களைச் சென்றடையாத காலத்தில் இத்தகையதொரு வானொலிபெட்டி ஒரு அருங்காட்சியகப் பொருளாக விளங்கியது.)*** இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது, வதந்தி என்னும் பூதம் முழுநேர ஊழியனாகப் பணிபுரிந்து வந்ததால் ஆங்காங்கே புதிது புதிதாக யுத்தம் பற்றிய செய்திகள் பரவி வந்தன. பதுக்கல் பேர்வழிகள் கொள்ளை லாபம் ஈட்டி வந்தனர்.

## 58) நேதாஜி என்ற நம்பிக்கை நக்ஷத்திரம் அரசியல் வானில் தோன்றியது

இரண்டாம் உலகப்போரின்போது ஆரம்பிக்கப்பட்ட



‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கம் பிரிட்டிஷ் அரசாங் கத்தின் இரும்புக் கரங்கள் கொண்டு ஒடுக்கப்பட்டது. இந்தியா



சுதந்திரம் அடைவதற்கு பிரிட்டிஷ் அரசாங்கத்தின்மீது போர் தொடுத்து அதன் வழி நாட்டின் விடுதலையைப் பெறலாம் என்ற எண்ணம் கொண்டவர்களில் நேதாஜி சுபாஷ் சந்திரபோசும் ஒருவராவார். நடை பெற்றுக் கொண்டிருக் கும் உலகப் போரில் இந்திய மக்களும் பங்கு கொண்டு ஆங்கி லேயர்கள் மீது போர் தொடுத்து நாட்டின் விடு தலையைப் பெறலாம் என்ற எண்ணத் துடன் ஜப்பானியர்கள் உதவியோடு இந்திய தேசியப்படையை நிறு வினார். அவர் காந்தியின் அஹிம்சைக் கொள்கையாலோ, நேருவின் அச்சு நாடுகளுக்கு எதிரான கொள்கைகளாலோ இந்தியா விடுதலை அடைய முடியாது என்ற கருத்தைக் கொண்டி ருந்தார்.

1939ஆம் ஆண்டு மார்ச் மாதம் காங்கிரஸ் இயக்கத்தின் தலைமைப் பொறுப்பில் இருந்த நேதாஜி ஆங்கிலேய அரசை இந்தியாவை விட்டு ஆறு மாத கால அவகாசத்திற்குள் அகற்றிவிட வேண்டும் என்ற தம்முடைய எண்ணத்திற்கு காங்கிரஸ் செயல் வடிவம் தரவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தார். இதனை காங்கிரஸ் குழுவின் மற்றைய அங்கத்தினர்கள் ஏற்கவில்லை. எனவே, காங்கிரஸ் தலைமைப் பதவியை விட்டு விலகிய நேதாஜி Forward Bloc என்ற பெயரில் புதுக்கட்சி ஒன்றினைத் தொடங்கினார். இரண்டாம் உலகப்போர் தொடங்கிய உடன் நாடு முழுவதும் சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்ட நேதாஜி ஆங்கிலேய அரசுக்கு எதிரான முழக்கத்தைச் செய்ததோடு மட்டுமல்லாமல் நடந்துவரும் உலகப்போரில் பிரிட்டிஷ் படையினருக்கு உதவி

செய்யக்கூடாது என்றும் மக்களிடம் அறிவுறுத்தி வந்தார். 6.4.1940ஆம் நாளன்று 'ஒத்துழையாமை' இயக்கத்தில் பங்குகொள்ளுமாறு இந்தியர்களுக்கு அறை கூவல் விடுத்தார்.

27.07.1940ஆம் நாளன்று எவ்வித விசாரணைக்கும் உட்படுத்தப்படாது நேதாஜி சிறையில் அடைக்கப்பட்டார். சிறையிலிருந்த அவர்,

''1. இந்த உலகப்போரின் இறுதியில் பிரிட்டன் தோல்வியைத் தழுவும்; அதன் விளைவாக ஆங்கிலேய ஏகாதிபத்தியம் சிதறும். 2. தான் ஒரு தாழ்வு நிலையை எய்தினாலும் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் இந்திய மக்கள் விரும்பும் சுதந்திரத்தை அளித்திட முன்வரமாட்டார்கள். 3. தற்போது நடைபெற்றுவரும் உலகப் போரில் பிரிட்டனுக்கு எதிரான சக்திகளான ஜெர்மனி, ஜப்பான் நாடு களோடு இணைந்து போரிட்டால் போரின் முடிவில் இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு அதிக வாய்ப்பு உண்டு''

என்ற தன்னுடைய எண்ணங்களுக்கு தகுந்த செயல் வடிவம் கொடுத்திட முடிவுசெய்தார்.

## 59) ஆங்கிலேயர்களது பிடியில் சிக்காத நேதாஜி

தன்னை எவ்வித விசாரணைக்கும் உட்படுத்தாது சிறையில் அடைத்ததற்கு எதிர்ப்பு தெரிவித்திடும் வகையில் 29.11.1940ஆம் நாள் காலவரையறையற்ற உண்ணா விரதத்தினை மேற்கொண்டார் நேதாஜி. 6 நாட்கள் கழித்து அரசாங்கம் அவரை விடுதலை செய்தது. ஆயினும் அவர் வசித்துவந்த மாளிகையைச் சுற்றிப் பலத்த பாதுகாப்பு வளையம் அமைக்கப் பட்டிருந்தது. 17.01.1941ஆம் நாள் வீட்டு சிறைவாசத்திலிருந்து தப்பிய நேதாஜி பல இன்னல் களைக் கடந்து 'கால்ஜி பத்தான்' போலே வேடம் அணிந்து காபூல்நகரை அடைந்தார். அங்கு



சிலநாட்கள் தங்கியிருந்த பிறகு மாஸ்கோ வழியாக 28.03.1941 ஆம் நாள் பெர்லின் நகரைச் சென்றடைந்தார்.

ஜெர்மன் அரசாங்கம் அவருக்கு உரிய வரவேற்பளித்ததோடு மட்டுமல்லாமல், பிரிட்டனுக்கு எதிரான தமது கருத்துக்களை அந்நாட்டு வானொலிமூலம் இந்திய மக்களுக்கு தெரிவிப்பதற்கு நேதாஜிக்கு அனைத்து உதவிகளையும் செய்தது. 1941ஆம் ஆண்டு ஜெர்மானியப்படை ரஷ்ய நாட்டின்மீது படையெடுத்திடும்போது, ஜெர்மானியர்களுக்கு வெற்றி உறுதியென எண்ணங்கொண்ட நேதாஜி இந்தியப் படைவீரர்களை அந்தப் படையுடன் இணைத்துக் கொண்டு மத்திய ஆசியாவின் மீது போர்தொடுக்க விரும்பினார். அதன் பிறகு வடமேற்கு மாகாணங்களில் முகாமிட்டிருந்த ஆங்கிலப் படைகளை அழித்திடலாம் என்றும் எண்ணம் கொண்டார்.

29.05.1941ஆம் நாள் ஹிட்லருடன் நீண்டநேரம் உரையாடிய நேதாஜி தமது எண்ணத்திற்கு ஜெர்மானியர்கள் தகுந்த ஒத்துழைப்பை நல்கிடும் நிலையில் இல்லை என்பதை உணர்ந்தார். ஆகவே ஜப்பானியர்களுடன் இணைந்து இந்தியாவின் விடுதலைக்கு பாடுபடவேண்டும் என்று முடிவெடுத்தார். இதனிடையில் ஜப்பானிய படைகள் பசிபிக் மஹாசமுத்திர நிலப் பகுதிகளிலும், தென்கிழக்கு ஆசிய நாடு களிலும் பெற்ற வெற்றி உற்சாகமூட்டுவதாய் அமைந்திருந்தது.

## 59) ஜப்பானில் இந்திய விடுதலைப் படை

ராஷ்பிகாரி போஸ் என்பவர் டோக்கியோவில் 28.03.1942 ஆம் நாள் நடத்திய கூட்டத்தில் இந்திய விடுதலைப் போர் படையை உருவாக்குவதற்கான திட்டத்தை வெளிப் படுத்தினார். இதன் தொடர்பாக 15.06.1942 தொடங்கி 22.06.1942ஆம் நாள் வரை பாங்காக்கில் நடைபெற்ற 2ஆவது

மகாநாட்டில் நேதாஜியை இந்தப் படையின் தலைமைப் பொறுப்பை ஏற்கும்படி வேண்டிக்கொள்வது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனிடையில் மலேசியாமீது படையெடுத்த ஜப்பானியர்கள் அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் படை யினரை வெற்றிகொண்டனர். பிரிட்டிஷ் ராணுவத்தில் பணி புரிந்த கேப்டன் மோகன் சிங் என்பாரை இந்திய விடுதலை போராட்டக் குழுவினருடன் இணைந்து பணி புரியுமாறு ஜப்பானியர்கள் கேட்டுக்கொண்டனர். மேலும் ஜப்பானியர்களால் பல்வேறு நாடுகளிலிருந்து சிறை பிடிக்கப்பட்ட இந்தியர்கள் அனைவரும் திரு.மோகன் சிங்கிடம் ஒப்படைக்கப்பட்டனர். மேற்கூறப்பட்டவர்களை கொண்டதோர் படைக்கு Indian National Army (இந்தியதேசியப் படை) என்ற பெயரிடப்பட்டது. திரு.மோகன்சிங் டோக்கி யோவிலும் பாங்காக்கிலும் நடைபெற்ற கூட்டங்களில் கலந்து கொண்டதோடு மட்டுமல்லாமல் இந்திய தேசியப்படையின் தளபதியாகவும் பொறுப்பேற்றுக் கொண்டார்.

1942ஆம் ஆண்டு ஆகஸ்டு மாத இறுதியில் இந்திய தேசியப்படைவீரர்களின் எண்ணிக்கை 16,000மாக உயர்ந்தது. போரில் ஜப்பானியர்களிடம் சரணடைந்த 40,000த்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் இந்திய தேசியப் படையில் இணைந்து பணிபுரிவதாக சூளுரை செய்தனர். ஆயினும் ஜப்பானியர்கள் இந்த இணைப்பை ஆதரிக்கவில்லை. இதனிடையில் கேப்டன் மோகன் சிங்கிற்கும் ராஷ் பிகாரி போஸிற்கும் இடையே கருத்து வேற்றுமைகள் தோன்றலாயின. படைத்தளபதி என்ற நிலையிலிருந்து திரு.மோகன் சிங் அகற்றப்பட்டார். ஜெர்மனியில் இருந்த நேதாஜி பாங்காக்கிற்கு வந்து தாம் படைத்தளபதி பொறுப்பை ஏற்றுக் கொள்வதாகத் தெரி



வித்தார். அப்போதைய சூழ்நிலையில் ஜெர்மன் நாட்டிலி ருந்து பாங்காக்கிற்கு நேதாஜி வந்துசேருவது அத்துணை எளிய செயலாக இருக்கவில்லை. ஆங்காங்கே சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்ததால் தரைவழிப் பயணத்தை நேதாஜி யால் மேற்கொள்ள முடியவில்லை. கடல் வழிப் பாதைகளை நேச நாடுகளுடைய போர்க்கப்பல்கள் பாதுகாத்து வந்ததால் ஜெர்மனியிலிருந்து பாங்காக்கிற்கான கடல்வழிப் பயணத் தையும் நேதாஜியால் மேற்கொள்ள முடிய வில்லை.

## 60) நேதாஜியின் வீரதீரச்செயல்கள்

8.2.1943ஆம் நாள் ஜெர்மனியின் ஓடிஞூடு துறைமுகத் திலிருந்து நீர்மூழ்கிக் கப்பலில் புறப்பட்ட நேதாஜி அட் லாண்டிக் பெருங்கடலைத் தாண்டி மடகாஸ்கர் தீவிற்கு தென்மேற்கே 400 மைல் தூரத்திற்கு அப்பால் ஒரு படகிலே பிரயாணம் செய்துகொண்டிருந்தார். அங்கிருந்து ஜப்பான் நாட்டு நீர்மூழ்கிக் கப்பலில் அவருடைய நண்பரான கர்னல் ஙுச்ட்ச்ட்ணிஞுணிவுடன் பிரயாணம் செய்து 13.06.1943ஆம் நாள் டோக்கியோவைச் சென்றடைந்தார். அங்கே அவர் ஜப்பானிய நாட்டின் பிரதமந்திரியான திரு.தோஜோவையும் மற்றைய அரசியல் அதிகாரிகளையும் சந்தித்தார். ஹிட்லரும், முசோல னியும் அளிக்கத் தயங்கிய உறுதிமொழியினை ஜப்பான் நாட்டு பிரதம மந்திரி நேதாஜிக்கு அளித்தார். இந்திய தேசியப்படை அதிகாரிகளிடம் நிலவியிருந்த கருத்து வேற்றுமைகளைக் களைந்து அவர்களிடையே ஒற்றுமை உணர்வினை உண்டாக்கினார்.

## 61) அந்நிய மண்ணில் அமைந்த இந்திய அரசின் முதல் பிரதம மந்திரி நேதாஜி

சுதந்திர இந்தியாவின் தற்காலிக அரசை சிங்கப்பூரில் நிறுவினார் நேதாஜி. நாம் வருங்காலங்களில் மிகப் பலம்

பொருந்திய, அதே சமயம் மனசாட்சிக்குக் கட்டுப்படாத இரக்க குணமற்ற அங்கிலேயர்களை எதிர்த்துப் போராடவேண்டும். இந்தப்போரில் நாமும் நமது இந்திய குடிமக்களும் பசி, உயிர்ப் பலி, உடைமைகளை இழத்தல், இருப்பிடத்திலிருந்து துறத்தப் படுத்தல் போன்ற கொடு மைகளுக்கு ஆளாக வேண்டிவரும். இவற்றை யெல்லம் உறுதிபடைத்த உள்ளத்தோடு எதிர் கொண்டு 'டெல்லியை நோக்கி நாம் செல்வோம்' என்ற உணர்ச்சிமிக்கதொரு அறைகூவலை தனது படைவீரர்களுக்கு விடுத்தார்.

ஜப்பானிய படைவீரர்களோடு இணைந்து தீவிர போர் பயிற்சி பெற்ற இந்திய தேசியப்படை வீரர்கள் 1943ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பர்மாவை நோக்கிப் புறப்பட்டனர். இதனிடையில் அக்டோபர் 21ஆம் நாள் இந்திய நாட்டின் தற்காலிக அரசு நேதாஜியின் தலைமையில் பாங்காக்கில் பதவி யேற்றுக்கொண்டது. திரு.நேதாஜி பிரதம மந்திரியாகவும், முப்படைகளின் தளபதியாகவும், நிதியமைச்சராக திரு.A.C. சாட்டர்ஜியையும், விளம்பரத்துறை அமைச்சராக திரு.S.A. ஐயரும், பெண்கள் நலத்துறை அமைச்சராக திருமதி.லக்ஷ்மி சுவாமிநாதனும் பொறுப் பேற்றுக்கொண்டனர்.

பதவி ஏற்பு நிகழ்ச்சிக்குப் பிறகு ரவீந்தரநாத் தாகூரின் பாடலான 'ஜனகண மன...' தேசிய கீதமாய் இசைக்கப் பட்டது. இந்தத் தற்காலிக அரசை ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி மற்றும் 6 நாடுகள் அங்கீகரித்தன. நேதாஜியின் தலைமையில் கூடிய மந்திரி சபை அமெரிக்கா மற்றும் பிரிட்டன் மீது உடனடியாக படையெடுப்பைத் தொடங்க வேண்டும் என்ற முடிவினை எடுத்தது. இந்த அரசின் பொருளாதாரத் தேவைகளை எதிர் கொள்வதற்கு உலகில் ஆங்காங்கே வசித்து வந்த இந்திய குடிமக் களும், ஜப்பான் அரசாங்கமும் உதவி செய்தனர். இதன்



படை வீரர்கள் ஒருவரை ஒருவர் காணும்போது 'ஜெய்ஹிந்த்' என்ற கோஷத்தை எழுப்ப வேண்டும். மேலும், காங்கிரஸ் கட்சியின் மூவண்ணக்கொடி இந்தியாவின் தேசியக் கொடி யாகவும், ரவீந்தரநாத் தாகூரின் பாடல் தேசிய கீதமாகவும் அறிவிக்கப்பட்டன. ஜப்பானியரால் போரிலே கைப்பற்றப்பட்ட அந்தமான் நிக்கோபார் தீவுகள் நேதாஜியின் தலைமையிலான இந்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. சில மாதங் களுக்குப் பிறகு இந்திய தேசியப் படையின் தலைமை யிடமாக ரங்கூன் அறிவிக்கப்பட்டது.

## 62) நேதாஜி என்னும் வீரத்தாரகை விண்ணில் மறைந்தது

4.2.1947ஆம் நாள் ரங்ககூனிலிருந்து புறப்பட்ட இந்திய தேசியப்படை வீரர்கள் இந்திய எல்லைக்கு வந்து சேர்ந்தனர். அங்கிருந்து நாகாலாந்தின் தலைநகரான கோஹிமாவை இவர்கள் சென்றடைந்தனர். நவீன ஆயுதங்கள் மற்றும் சரியான தொலைத் தொடர்பு சாதனங்கள் கிடைக்கப்பெறாததால் அவை இந்திய தேசியப் படையின் செயலாக்கத்திற்கு தடைக் கற்களாய் மாறின. உலகப்போரின் இறுதிகட்டத்தில் ஜப்பானியப் படைகள் தோல்வியைத் தழுவ ஆரம்பித்தன. அதன் விளைவாக ரங்கூனிலிருந்த ஜப்பானியப் படைவீரர்கள் முகாம் அகற்றப்பட்டு தென் பசிபிக் தீவுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டது. இந்த முடிவால் இந்திய தேசியப்படைக்குத் தேவையான ஆயுதங்களும் எரிபொருள்களும் கிடைக்காமல் போயிற்று. அந்த ஆண்டு பெய்த பெருமழையின் விளைவு களை எதிர் கொள்ள இயலாத இந்தியப் படைவீரர்கள் அதிக அளவில் நோய்வாய்ப்பட்டனர். உணவுப் பண்டங்கள் வந்து சேராத நிலையில் படைவீரர்கள் பல நாட்கள் பட்டினி கிடந்தனர்; வீரர்கள் பலர் இறந்தனர். இத்தகைய சூழ்

நிலையில் நேதாஜி அவர்கள் தாமே தலைமைப் பொறுப் பேற்று எஞ்சிய படைவீரர்களுடன் கோஹிமாவிலிருந்து இந்தியா நோக்கி படையெடுக்க முற்பட்டார். இந்திய தேசியப் படையின் அப்போதைய நிலைமை கண்டு அஞ்சிய நேதாஜி இந்தியா மீது படையெடுக்கும் தமது முயற்சியைக் கைவிட்டார். 20.04.1945ஆம் நாள் ஜப்பானியப் படை ரங்கூன் நகரை விட்டு நாடு திரும்பப் போவதாக அறிந்த நேதாஜி சிங்கப்பூரைச் சென்றடைந்தார். 13.08.1945ஆம் நாள் ஜப்பானியர்கள் நேசநாட்டு கூட்டமைப்பின்முன் சரணடையப் போவதாய் அறிந்த நேதாஜி சிங்கப்பூரிலிருந்து பாங்காக்கிற்குச் சென்றார். அங்கிருந்து சைகோன் சென்ற நேதாஜி ஜப்பானி யர்கள் ஏற்பாடுசெய்திருந்த விமானத்தில் டோக்கியோ நோக்கிப் புறப்பட்டார்.

18.08.1945ஆம் நாள் ஃபார்மோஸா தீவிலிருந்து புறப்பட்ட அந்த விமானம் வானிலே தீப்பற்றி சிதறி விழுந்தது. நேதாஜியும் அவருடன் பயணம் செய்த ஹபிபுர் ரஹ்மானும் தீக்காயங்களுடன் உயிர் தப்பித்தனர். பெருத்த தீக்காயங் களுடன் உயிர் தப்பிய நேதாஜி மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். **அதன் பிறகு என்ன நடந்தது என்பதைப் பற்றிய உண்மைகள் இன்றுவரை வெளிக் கொணரப்பட வில்லை.** இவ்வாறாக இந்திய நாட்டின் வீரப் புதல்வனின் வாழ்க்கை வரலாறு முடிவுற்றது. ஆயினும் நேதாஜியின் வீர உணர்வுகள் இந்திய சுதந்திரப் போராட்டத் திற்கு அடி உரமாய் அமைந்தன. ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடும் வல்லமை பெற்றவர்கள் இந்தியர்கள் என்பதை நடைமுறைபடுத்திக் காட்டியவர் நேதாஜி.

என்னுடைய ஐந்தாவது வயதில் நேதாஜியின் வீரத்தை தந்தையார், பத்திரிகைகளின் உதவிகொண்டு படித்துக் காட்டு வார். காந்தியின் கொள்கைகளில் தீவிர ஈடுபாடு கொண்ட



வராய் இருந்தும், நேதாஜியின் வீரத்தை அவ்வப்போது புகழ்ந்து கூறுவார். நான் பள்ளிக்குச் செல்லும்போதுதான் கால் சட்டை மற்றும் மேல் சட்டை அணிந்து செல்லவேண்டும். பள்ளி சென்று வந்தபிறகு அந்த உடைகளை ரேழியிலே (ரேழி - இடைகழி - வாயிற் படிக்கும் உள் தாவாரத்தின் நிலைப்படிக்கும் இடைப் பட்ட பகுதிக்கு ரேழி என்று பெயர்.) களைந்திட வேண்டும். அதன் பிறகு துவைத்து உலர்த்தப்பட்டிருக்கும் வேட்டியைத்தான் அணிந்துகொள்ள வேண்டும். ஆனால் நான் அவ்வாறு செய்தி டாமல் காக்கி கால்சட்டை மற்றும் மேற்சட்டையை அணிந்து கொண்டு இடுப்பில் பெல்ட்டை மாட்டிக்கொண்டு கையில் தடியுடன் தெருவின் மேற்கு பகுதிக்கும், கிழக்குப் பகுதிக்கும் பல தடவை நடந்து சென்று நான் நேதாஜியைப் போல படைவீரனாக ஆவேன் என்று போவோர் வருவோரிடம் சில காலம் கூறிக் கொண்டிருந்தேன். அதன் பிறகு அந்த நினைவுகள் கலைந்து சென்றன.

## 63) சிவன்கோயில் திருப்பணி

களப்பாள் முதலியார்கள் சைவர்கள். ஊரின் வட கிழக்கு மூலையில் புராதனமான பாண்டியர்காலத்து கைலாச நாதர் கோயில் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் திப்பு சுல்தானுடைய படைவீரர்களால் இடித்துத் தள்ளப்பட்டது. இந்த படையெடுப்பின்போதுதான் ஆனைகாத்த பெருமாள் கோயிலும் பாழ்படுத்தப்பட்டது. ஆனைகாத்த பெருமாள் கோயிலுக்கு வீழ்ந்த பெருமாள் கோயில் என்ற ஒரு பெயரும் உண்டு என்பதை முன்னமே குறிப்பிட்டிருக்கிறேன். ஊரில் சிவன் கோயில் இல்லாத நிலைமையை மாற்றுவதற்காக களப்பாளில் இருந்த சைவ முதலிகள் தங்களுடைய குடும்ப சொத்தில் விஸ்வநாதர் உடனுறை ப்ரஹந்நாயகி கோயிலை நிர்மாணித்தனர்.

இந்தக் கோயிலின் விரிவாக்கம் நிதிநிலைமை யைப் பொறுத்து அவ்வப்போது நடைபெற்று வந்தது. கோயில் திருப்பணி செய்வதற்கு அந்தக் காலகட்டத்தில் சிமெண்ட் உபயோகிக்கப்படவில்லை. எஃகு கம்பிகளைக் கொண்டு R.C.C.மண்டபங்கள் நிர்மாணிக்கப் படுவதில்லை. மாறாக உயர் ரக மரங்களைக் கொண்டு விட்டம் அமைத்து, அதன் மேல் கட்டுமான சாந்தின் உதவிகொண்டு மெல்லிய எடை குறைவான செங்கற்களால் கூரை அமைத்திடுவர். கோயிலின் அனைத்து கட்டுமானப் பணிக்கும் தனியாகச் சுண்ணாம்பு சாந்து தயாரிக்கப்படும்.

சுண்ணாம்போடு சேர்த்து நன்றாகப் பசைபடும் வண்ணம் மணலை அரைத்துக் கொள்வார்கள். இக்கல வையை நன்றாகப் புளிக்கவைத்து, மிக நுண்மையாக சிறுகட்டிகள்கூட இல்லாமல் தயாரிக்கப்பெற்ற வெல்லச் சாற்றை விட்டுக் குழைப்பார்கள். பிறகு கடுக்காய், பெரு நெல்லிக் காய், தான்றிக்காய், உளுந்து ஆகியவற்றை நுண்மை யான மாவாக ஆகும்வரை மூன்று, நான்குமுறை இடித்து, சுத்த மான தண்ணீரில் ஊற வைத்துத் தயாரிக்கப் பெற்ற கருஞ் சாற்றோடு முன்சொல்லப் பெற்ற சுண்ணாம்புக் கலவையில் நன்றாக கலப்பார்கள். இது மிக உறுதியான கட்டிடச் சாந்தாகும்.

இந்தக் கட்டிடச் சாந்தை தயாரிப்பதற்கெனக் குளத்தின் தென்மேற்கு பகுதியில் ஒரு பெரிய சாந்து தயாரிக்கும் கூடம் நிறுவப்பட்டிருந்தது. வட்டவடிவில் அமைந்திருந்த இந்த கூடத்தில் கல்லால் ஆன உருளை, சுற்றிவருவதற்கான அமைப் புடன் காணப்படும். இந்த உருளையை 2 அடி அகலமும், 3 அடி ஆழமும் கொண்ட வட்டப் பாதையில் மாடுகளைக் கொண்டு சுழற்றி வருவர். உருளை செல்லும் வழியில்



சுண்ணாம்பு சாந்து பரப்பப்பட்டிருக்கும். பலமுறை இந்த உருளை சுற்றி வருவதால் மிக நுண்ணியதான கலவை பெறப்படும்.

இந்தக் கலவை வழித்தெடுக்கப்பட்டு பக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த சுமார் 12 அடி நீளமும் அகலமும், 6 அடி ஆழமும் கொண்ட தொட் டிகளில் சேகரிக்கப்பட்டு, அவற்றைத் தென்னங் கீற்றுகளைக் கொண்டு மூடிப் பாதுகாத்து வருவர். காற்றில் தென்னங்கீற்றுகள் பறந்து சென்றிடா வண்ணம் அவற்றின் மேல் கருங்கற்கள் பாரமாக வைக்கப் பட்டிருக்கும்.

தொட்டியில் சேமித்து வைக்கப்பட்ட சுண்ணாம்புக் கலவையினை இரண்டுமாதம் கழித்து மீண்டும் உருளை கொண்டு அறைக்கப்படும். இவ்வாறு சுண்ணாம்பு கலவையை தயாரிக்கும்போது அதை வேடிக்கைப் பார்ப்பது எனக்கு ஒரு பொழுதுபோக்கு.

## 64) மூலிகைச் செடிகளும் மனித சமூகமும்

இந்தச் சுண்ணாம்பு ஆலையைச் சுற்றி தும்பைச் செடி களும் (Leucas aspera (Willd) Link; Labiatae), மிளகாய்ப் பூண்டு (Croton bonplandianus Baillon; Euphorbiaceae) என்று அழைக்கப்பட்டுவந்த இரயில் பூண்டு செடிகளும் பெரு மளவில் வளர்ந்திருக்கும். இந்த தும்பைப் பூவிற்குப் போலி யாக தூய வெண்ணிறத்தோடு சுண்ணாம்புக் கலவை மிளிர்ந்து கொண்டிருக்கும்.

எதிரடுக்கில் அமைந்த கூரான நீண்ட கரும்பச்சை இலைகளையும் நாற் கோண வடிவில் அமைந்த தண்டு களையும் பாத வடிவிலான தேன் நிறைந்த வெண்ணிறச் சிறு மலர்களையும்

உடையது தும்பைச் செடி. குறிப்பாக மழை காலத்தில் எல்லா இடங்களிலும் காணப்பெறும். ஈரமுள்ள இடங்களில் எல்லாப் பருவத்திலும் தழைத்திருக்கும். இலை, பூ ஆகியவை மருத்துவப் பயனுடையவை.



இந்தத் தும்பைப் பூவை பறித்து தாய்ப் பாலில் தோய்த்துக் கண்களில் வைத்துக் கொண்டால் அதிக வெப்பத்தால் மூடியிருக்கும் கண்கள் மெல்ல திறந்து கொள்ளும். பாம்பு தீண்டியவர்களுக்கு தும்பைச் சாறு ஒரு சிறந்த மருந்தாகும். மிளகாய் இலை வடிவில் உள்ள மாற்றடுக்கில் அமைந்த இலைகளையும் வெண்ணிறப் பூங்கொத்துகளையும் ஆமணக்குக் காய்வடிவில் சிறு காய்களையும் உடைய மிகச் சிறு செடி மிளகாய்ப்பூண்டு. எலியாமணக்கு என்றும் குறிப்பிடுவதுண்டு. இதன் இலை விதை வேர் ஆகியவை மருத்துவப் பயனுடையவை.

## 65) கொழுந்துவிட்டு எரியும் சுண்ணாம்பு காள வாயும், திருநாவுக்கரசரும்

சுண்ணாம்புச் சாந்து தயாரிப்பதற்கு மூலப்பொருளான சுண்ணாம்புத் துகள்கள் அரைவை நிலையத்திற்கு அண்மையில் அமைந்திருந்த சுண்ணாம்புக் காளவாயி லிருந்து பெறப்படும். இந்தச் சுண்ணாம்புக் காளவாய் வட்டவடிவில் களிமண்ணா லான உயரமான அமைப்பாகும். இதில் சுண்ணாம்புக் கிளிஞ்சல்கள் அதிக வெப்ப நிலையில் எரியூட்டப்படும். சுண்ணாம்புக் காளவாயிலிருந்து எழும் தீப்பிழம்புகள் இரவில் கொள்ளி வாய்ப் பிசாசுகள் போல் தோற்றம் அளிக்கும்.



*1944-45* ஆண்டுகளில் கல்கியில் 'சிவகாமியின் சபதம்' தொடர்கதையாக வெளிவந்துகொண்டிருந்தது. அதில் திருநாவுக்கரசர் என்று பிற்காலத்தில் பெயர் பெற்ற வாகீசரின் வாழ்க்கை வரலாற்றைக் கல்கி குறிப்பிட்டுள்ளார். ஜைன மதத்தைத் தழுவியிருந்த மகேந்திர பல்லவன் எவ்வாறு சைவ மதத்தில் சேர்ந்தான் என்பதை 'நமனை அஞ்சோம்' என்ற தலைப்பில் மூன்றாம் பாகத்தில் குறிப் பிட்டுள்ளார். கல்கி வார இதழை இரவு தமக்கே உரித்தான நெகிழ்ந்த குரலில் வீட்டில் அனைவரும் கேட்டு ரசிக்கும்படி கீழ்க்கண்டப் பகுதியை ஒருநாள் படித்துக்காட்டினார் என் தந்தையார்.

'சமண சமயத்தைத் தழுவிய மருள் நீக்கியார் [திருநாவுக் கரசர்] மீது பாடலிபுரத்துச் சமணர்கள் பற்பல குற்றங்களைச் சுமத்திக் காஞ்சிப் பல்லவ சக்கரவத்திக்கு விண்ணப்பம் செய்து கொள்ள, மகேந்திர பல்லவர் உண்மையை விசாரித்து உணரும் பொருட்டு அவரைக் காஞ்சிக்கு வரும்படி கட்டளை அனுப்பினார். கட்டளை யைக் கொண்டுபோன ராஜ தூதர்கள் அந்த மகா புருஷரைக் கொஞ்சம் அச்சுறுத்தினார்கள். 'எனக்கு இறைவன், சிவ பெருமான் தான்; உங்களுடைய அரசன் கட்டளையை நான் மதியேன்!' என்று திருநாவுக்கரசர் கூறித் தூதர்களைத் திடுக்கிடச் செய்தார்.' **உம்மைச் சுண்ணாம்புக் காளவாயில் போடுவோம்.** யானையின் காலால் மிதிக்கச் செய்வோம்; கழுத்திலே கல்லைக் கட்டிக் கடலிலே போடு வோம்' என்றெல்லாம் தூதர்கள் பயமுறுத் தினார்கள். அப்போது, மருள்நீக்கியார் [திருநாவுக்கரசர்] ஒரு பாடலைப் பாடினார் : –

'நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம் ........
......கோமாற்கே நாமென்று மீளா வாளாய்க்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே!'

என்ற பாடலை ஓலையிலே எழுதுவித்து, இதை எடுத்துக் கொண்ட போய் உங்கள் அரசரிடம் கொடுங்கள் என்றார் சிவனடியார். தூதர்களும் தங்களுக்கு வேறு கட்டளையில்லாமையால் திரும்பிச் சென்று பாடலைச் சக்கரவர்த்தியிடம் கொடுத்தார்கள். அவர்கள் எதிர்பார்த்தற்கு மாறாகக் காரியம் நடந்தது. அதாவது பாடலைப் படித்த மகேந்திர பல்லவர் அத்தகைய தெய்வப் பாடலைப் பாடக்கூடிய மகானைத் தரிசிக்க விரும்பினார். அவரைத் தரிசித்த பிறகு, தாமும் ஜைன மதத்தை விட்டுச் சைவ சமயத்தைச் சேர்ந்தார்'.

என் தந்தையார் படித்துக்காட்டிய திருநாவுக்கரசருடைய வைபவம் என் மனத்தில் ஆழமாகப் பதிந்திருந்தது. அந்த சுண்ணாம்புக் காளவாயைத் தாண்டிச் செல்லும் போதெல்லாம் திருநாவுக்கரசரைப் பற்றிய நினைவுகள் என் நெஞ்சில் நிழலாடும்.

## 66) பூக்களைப் பறிக்காதீர்கள்

இந்தச் சுண்ணாம்புக் காளவாயிலிருந்து 100 அடி தொலை வில் ஒரு நாகலிங்க மரம் நெடி துயர்ந்து வளர்ந்திருந்தது. இதனுடைய பூக்கள் சிவ வழிபாட்டிற்கு மிகவும் உகந்தது. மிக அபூர்வமாக காணப்படும் இந்தப் பூ வகை யைப் போன்று சிவன் கோயிலைச் சுற்றிய அகழிப் பகுதிகளில் வெள்ளை நிற விருட்சி மலர், ஒற்றை மற்றும் அடுக்கு நந்தியாவட்டை, செம்பருத்தி, மஞ்சள் நிற அரளிச் செடி, பவள மல்லி, பன்னீர் புஷ்பம், தாழம் பூச்செடி, செவ்வரளி, கஸ்தூரி அரளி போன்ற பூச்செடிகள் வளர்க்கப் பட்டுவந்தன. குறிப்பாக சரஸ்வதி பூஜை சமயத்தில் ஆனைகாத்த பெருமாள்கோயில் அக்ரஹாரத்திலிருந்து பூப்பறிக்க வரும் சிறுமியர்களை, பறிக்க விடாமல் நானும் எனது நண்பன் ஜடையும் தடுத்து



நிறுத்துவோம். அவர்கள் கெஞ்சிய பிறகு இந்த அளவிற்கு தான் பூப்பறித்துக் கொள்ளலாம் என்ற நிபந்தனையோடு அனுமதிப்போம்.


நாகலிங்கப் பூக்கள்



## 67) மதிப்பிற்குரிய முதலாம் வகுப்பு ஆசிரியர்

என்னுடைய முதலாம் வகுப்பு ஆசிரியருடைய பெயர் திரு. ராமசாமி ஐயர். அந்த ஊரில் ஜில்லா போர்டில் அதிகார வரம்புக்கு உட்பட்ட நடுநிலைப்பள்ளி இயங்கி வந்தது. அதாவது முதலாம் வகுப்பு தொடங்கி எட்டாம் வகுப்பு வரையில் இந்த ஒரு பள்ளிதான் அமைந்திருந்தது.

சுற்றுப்புறத்தி லிருந்து 5 கிலோமீட்டர் தொலைவுக்கு உட்பட்ட கிராமங்களில் உள்ளோர்க்கு இந்த ஒரு பள்ளிக் கூடம்தான் புகலிடம். பல மாணவர்கள் வாய்க்கால், வரப்பு என்று பாராமல் கொட்டும் மழையில் சணல் சாக்கை குடலையாகத் தலையில் மாட்டிக் கொண்டு, உடைகள் முழுதும் நனைந்து சொட்ட சொட்ட பள்ளிக்கு வருவார்கள். அவர்களுக்கு மதிய உணவு கையில் கொண்டுவரும் அலுமினியம் அல்லது பித்தளைத் தூக்குகளில் கொண்டு வரப்படும் சிற்றுண்டியே. இதில் பெரும்பாலோர் கொண்டு வரும் உணவு பழைய சோறும் ஊறுகாயுமே! உள்ளூரில் இருந்த என்போல்வார் மதிய உணவு இடைவேளை யின்போது வீட்டுக்குச் சென்று சாப்பிட்டு விட்டு வருவோம். நெருங்கிய நண்பர்களுக்கு பண்டிகை நாட்களில் திண்பண்டங்களைக் கொண்டு வந்து தருவோம்.

எந்த வகுப்பு ஆசிரியர்களையும் பெயர்சொல்லி அழைக்க மாட்டோம். எந்த ஆசிரியரைக் கண்டாலும் மரியா தையோடு வணங்கிச் சொல்வோம். ஆசிரியர் வரும்போது உட்கார்ந்திருந்தால் எழுந்துநின்று மரியாதை செலுத்துவோம். என்னுடைய முதலாம் வகுப்பு ஆசிரியர் நான் கல்லூரிப் படிப்பு முடித்துவிட்டு வந்த பிறகும் முதலாம் வகுப்பிற்குத்தான் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். என்னுடைய



கல்லூரிப் படிப்பு முடிந்த பிறகு அவரை வணங்கி அவருடைய ஆசியினைப் பெற்றேன்.

ஆசிரியர்கள் கடவுளுக்கு ஒப்பானவர்கள். அனைவரை யும் மேலே ஏற்றிவிட்டு தான் மட்டும் அதே நிலையில் இருக்கும் ஏணியைப் போன்வறர் ஆசிரியர். முதலாம் வகுப்பில் அ, ஆ, இ ... இவை உயிரெழுத்து, க், ங், ச், ஞ், ட்,.. இவை மெய்யெழுத்து என பாடம் போதித்த அந்த ஆசிரியரை வாழ்நாள் உள்ள அளவும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இந்த நன்றி உணர்வோடு என்னுடைய முதலாம் வகுப்பு ஆசிரியரான திரு. ராமசாமி ஐயரை இன்றும் மனத்தால் போற்றி வணங்குகிறேன்.

## 68) பெயர் மாற்றம்

பள்ளியில் சேர்க்கும்போது என்னுடைய பெயரை கிருஷ்ணமூர்த்தி என்று ஏட்டில் பதிவு செய்துகொண்டனர். ஓரிரு நாட்கள் கழித்து முதலாம் வகுப்பு ஆசிரியரான திரு. ராமசாமி ஐயர் ‘ஏய்! கிருஷ்ணமூர்த்தி என்று ஐயங்காரில் பெயர் வைத்துக் கொள்ளமாட்டார்கள். உன் பெயரை கிருஷ்ணமாசாரி என்று பதிவு செய்துள்ளேன். இதை உன் தகப்பனாரிடம் சொல்’ என்று கூறினார்.

ஒவ்வொரு குடும்பத்திலும் தாய்மாமன் வைக்கும் பெயர்தான் பிள்ளைக்குச் சூட்டப்படும். இது சமுதாயம் கைக் கொண்டுள்ள பழக்க வழக்கங்களில் ஒன்றாகும். என்னுடைய மாதுலரான ஸ்ரீ.உ.வே. ஸம்பத்குமாராசார்யர் என்னைத் தொட்டிலிடும்போது கிருஷ்ணமூர்த்தி என்ற பெயரைச் சூட்டியதால் அந்தப் பெயரையே பள்ளி ஏடுகளிலும் பதிவு செய்தார் என் தகப்பனார். ஆனால் என்னுடைய முதலாம் வகுப்பு ஆசிரியருடைய தெளிவான சிந்தனையினாலே நான்

இன்று ஐயங்கார்களுக்கு உரித்தான கிருஷ்ணமாசார்யர் என்ற பெயரைப் பெற்றுள்ளேன். மூத்த உறவினர்கள் அனைவரும் கிருஷ்ணமூர்த்தி என்றே இன்றும் என்னைப் பெயர்சொல்லி அழைத்துவருகின்றனர்.

## 69) புளியம் வளார் வைத்தியம்

என்னுடைய மூன்றாவது வகுப்புவரை பள்ளி செல்வது என்பது விளக்கெண்ணெய் குடிப்பது போன்ற ஒரு உணர் வினை ஏற்படுத்தி வந்தது. ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி பள்ளிக்குச் செல்லாமல் வீட்டிலேயே இருந்து விடுவேன். அப்படியே பள்ளிக்கூடத்திற்குப் போவதாக வீட்டைவிட்டுப் புறப்பட்டாலும், சிவன் கோயில் சுற்றுப் பிராகாரத்தைச் சுற்றி விட்டு அங்கே உள்ள கருங்கற்களில் ராமர், லக்ஷ்மணர், சீதை என்ற மூன்று வடிவங்களுக்கு பிரதிபிம்பமாக மூன்று சிறு கற்களை வைத்து அதற்குப் பாலால் திருமஞ்சனம் செய்து, தையற் கூடத்தில் சேகரித்த சிறு துணிகளைச் சுற்றி வைத்து தேங்காய் உடைத்து, கற்பூரம் கொளுத்தி பூஜை செய்வேன். இல்லாவிட்டால் சிவன் கோயிலில் அபிஷேகத்திற்கு கிணற்றி லிருந்து சின்னக் குடத்தில் நீர் எடுத்துக்கொண்டு கொடுப்பேன்.

இத்தகைய செயல்களை என் தந்தையார் கண்டு கொள்ளமாட்டார். ஆனால் என்னுடைய எதிர்காலத்தில் அக்கறை கொண்ட என்தாயார் இந்தப் போக்கைத் தடுப்பதற்கு ஒரு அதிர்ச்சி வைத்தியத்தைக் கையாண்டார்.

குமரப்ப முதலியார் பண்ணையில் விவசாயத்தைக் கவனிப்பதற்கென ஒரு மணியகாரர், அவருக்குக்கீழ் விசாரிப்புக் காரன், தலையாரி போல்வார் பணியாற்றி வந்தனர். இதில் ஷேக்தாவூது என்ற ஒரு விசாரிப்புக்காரர் காலை நேரங்களில் வயல்களில் விவசாயப் பணிகளை மேற்பார்வையிட்டபிறகு






எங்கள் வீட்டு வழியாக, காலை ஒன்பது மணிக்குத் தம் இல்லம் நோக்கிச் செல்வார்.

ஒருநாள் கையில் பையைக் கொடுத்து பள்ளிக்கூடம் போகச்சொன்னார் என்னுடைய தாயார். நான் போக மாட்டேன் என்று வாசல் திண்ணையிலே உட்கார்ந்து கொண்டேன். அப்போது அங்குவந்த ஷேக்தாவூதிடம் இந்தப் பையனை நீங்கள் புளியம் வளாரைக் கொண்டு அடித்துப் பள்ளியிலே விட்டு வாருங்கள் என்று கூறினாள். அவரும் பக்கத்திலிருந்த புளிய மரத்திலிருந்து ஒரு கொம்பை ஒடித்து, என்னைப் பள்ளி செல்லும் வரை முதுகிலே அடித்து வகுப்பறையில் கொண்டு விட்டார். அன்று போட்ட கூக்குரலைக் கேட்ட அந்தத் தெருவில் இருந்த அனைவரும் என் தாயை ஈவு இரக்க மற்ற அரக்கி என்று வசை பாடினர்.

'இவள் இந்தக் குழந்தையைப் பெற்றவள்தானா?' என்று சாடினர். ஆனால் அன்றோடு என்னுடைய அழிச் சாட்டியம் அழிவுற்றது. அன்று தொடங்கி என்னுடைய கல்லூரிப் படிப்பு வரை தகுந்த காரணமின்றிக் கல்விக் கூடத்திற்கு செல்லாமல் இருந்ததில்லை. என் வாழ்க்கையில் ஒரு திருப்பு முனையாய் அமைந்தது இந்த சம்பவம். இதற்கு நான் ஷேக்தாவூதிற்கும் என்னுடைய அன்னையாருக்கும் நன்றி சொல்ல கடமைப் பட்டுள்ளேன். ஷேக்தாவூது என்னைப் பார்க்கும் போதெல்லாம் 'என்ன தம்பி ஒழுங்கா பள்ளிகூடம் போயிட்டு வர்ரீங்களா ?' என்று குசலம் விசாரிப்பார்.

## 70) டாக்டர் பிச்சுமணி ஐயரும், காயத்ரி ஜபமும்

பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்தில் ஒரு கிராமப்புற மருத் துவமனை இருந்தது. இதில் மருத்துவராகப் பணிபுரிந்தவர் திரு.பிச்சுமணி ஐயர். இவர் ஒரு L.M.P. (Licensed Medical Practitioner) படித்த மருத்துவர். அந்தக்காலத்திய மெடிக்கல் டிப்ளமோ படிப்பு. இவருடைய ஆசாரம் அனைவருக்கும் ஓர் எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது. இவர் தன்னுடைய இல் லத்தில் குளித்து முழுகித் துவைத்துக் காய்ந்த ஆடையை உடுத்திக்கொண்டு மருத்துவமனைக்கு வருவார். அங்கு வந்ததும் பீரோவிலிருந்து ஒரு பையை எடுப்பார். அதற்குள் ஏற்கெனவே வைத்துள்ள ஆடையை அணிந்துகொள்வார். இல்லத்திலிருந்து உடுத்தி வந்த ஆடையை மடித்து அந்தப் பைக்குள் வைத்து அதே பீரோவில் பத்திரப்படுத்துவார். பிறகு வைத்தியத்தைத் தொடங்குவார்.

முடிந்தவரை நோயாளிகளைத் தொடாமலே, 'என்ன செய்கிறது? ''எத்தனை நாளாக உடம்புக்கு முடிய வில்லை?'' என்று கேட்பார். அவர்கள் பதிலைக் கொண்டே நோயை முடிவு செய்து மருந்தைக் கொடுத்தனுப்புவார். சில சமயம்



நோயின் தீவிரத்தை அறிந்துகொள்ள வேண்டிய அவசியம் அவருக்கு ஏற்படும். அப்பொழுது மட்டும் நோயாளிகளைத் தொட்டு அவர் நாடிபார்ப்பார். பிச்சுமணி ஐயர் மாலை இல்லத்திற்குத் திரும்பும் போது, மருத்துவ மனைக்கு எதிரே உள்ள குளத்தில் இறங்கி அலையக் குலையத் தலை முழுகுவார். பிற்பாடு காலையில் உடத்தி வந்த உடை அணிந்து கொள்வார். பகலில் அணிந்த ஆடை பீரோவில் பதுங்கும். இந்த இருவித ஆடைகளிடையே கூடத் தீட்டு பரவவிடாமல் எச்சரிக்கையாயிருப்பார்.

தம்முடைய கடமையைச் சரிவரச் செய்துவந்ததோடு மட்டு மல்லாமல் தன் குலத்துக்கு உரிய ஆசாரத்தையும் பாதுகாத்து வந்தார். தினந்தோறும் சாயங்கால வேளை ஸந்த்யா வந்தனத்தின் போது 1008 காயத்ரி ஜெபத்தினை செய்து முடிப்பார். அந்த சமயத்தில் அவர் யாருடனும் பேசமாட்டார். அவர் நெற்றியில் எப்போதும் விபூதி துலங்கிக்கொண்டே இருக்கும். தூய கதர் ஆடைகளையே அவர் அணிவார்.

வைதிக ஆசாரத்தை இழை பிசகாமல் கடை பிடிக்கும் சிலர் அந்த கிராமத்தில் இருந்தார்கள். சலவைத் தொழிலாளி வெளுத்துக் கொண்டுவந்த தங்களதுத் துணிகளை அவர்கள் மறுபடியும் தண்ணீரில் நனைத்துக் காயவைத்த பிறகுதான் உடுத்திக்கொள்வார்கள். பிச்சுமணி ஐயரின் மகன் பஞ்சு என்று அழைக்கப் பட்டுவந்த பஞ்சநதம் இவருக்கு உதவியாக மருத்துவ மனையில் பணி புரிந்து வருவார். பச்சை நிறத்திலும் சிவப்பு நிறத்திலும் 'மிக்ஸர்' என்னும் மருந்து பெரிய கண்ணாடி ஜாடிகளில் தயாரித்து வைக்கப்பட்டிருக்கும். ஜுரம் வந்த வர்களுக்கு இந்த மருந்துக் கலவை சீசாக்களில் ஊற்றிக் கொடுக்கப்படும்.

## 71) அம்மைப்பாலும், அரப்புத்தூளும்

பள்ளிக்கூடம் செல்லும் சிறுவர்களுக்கு அவர்கள் செல்கின்ற வழியில் தற்காலிகமாக மறைவான இடத்தில் அமைக்கப்பட்ட பந்தல்களில் அம்மைத் தடுப்பு ஊசியை அவ்வப்போது போடுவார்கள். நான் இரண்டாம் வகுப்பு படிக்கும்போது ஒருநாள் கால்சட்டை அணிந்த ஒருவர் 'தம்பி உனக்கு ஒரு பென்சில் தருகிறேன் உள்ளே வா' என்று அழைத்துச் சென்றார். அந்தக் காலத்தில் பென்சில் என்பது கிடைத்தற்கரிய பொருள். ஐந்தாம் வகுப்புவரை சிலேட்டும் அதில் எழுதுவதற்கு சிலேட்டுக்குச்சியையும்தான் பயன் படுத்தி வந்தனர். அந்தப் பென் சிலை வாங்குவதற்காக உள்ளே போனால் ஒரு நர்ஸ் இரண்டு கைகளிலும் ஒரு சிறு சுத்தி செய்யப்பட்ட மருத்தவ உபகரணத்தால் கீறி அம்மைத் தடுப்பு மருந்தை அதில் செலுத்தினார். கொடுத்த பென்சிலை வாங்கிக் கொண்டு பள்ளிக்கூடம் செல்லாமல் அழுது கொண்டே வீட்டிற்குத் திரும்பினேன். அம்மை ஊசி போட்டு விட்டார்கள் என்பதை அறிந்த என்னுடைய தாயார் அத்தைப்பாட்டியிடம் ஆலோசனை கேட்க அவள், இந்த குழந்தைக்கு சேர்ந்தாற் போல் ஐந்து நாளைக்கு ஜுரம் வரும் இந்த அம்மைப் பாலை உடனே அரப்புப்போட்டு அலம்பி விடு என்று அறிவுரைக் கூறினாள். அதன்படி எனது தாயாரும் என் கையில் குத்தப் பட்டிருந்த அம்மைத் தடுப்பு மருந்தை அரப்புப் போட்டு அகற்றினாள்.

***(இலுப்பைப் புண்ணாக்கிற்கு அரப்பு என்று பெயர். அந்தக் காலத்தில் நல்லெண்ணெய் தேய்த்துக்கொண்டு நன்றாக ஊறிய பின்பு அரப்புத் தேய்த்துக் குளிப்பாட்டிவிடுவார்கள். அதன் பிறகுதான் சிகைக் காய் தூள் உபயோகத்திற்கு வந்தது. தற்போது அரப்பும் போய், சிகைக்காயும் போய் பல்வகை ஷாம்புகள் உலாவுகின்றன. இந்த ஷாம்புகளில் இயற்கை ரசாயன பொருள்களும், சில நேரங்களில் செயற்கை ரசாயனப் பொருள்களும் கலக்கப்படுகின்றன. இவை கேசத்திற்கும் தோலின் மேற் பகுதிக்கும் கேடு விளைவிக்கும் பொருள் களாகும். நாம் சிகைக்காய், அரப்புப் போன்றப் பொருள்களை உபயோகிக்கும் காலத்திற்கு ஒருநாள் மீண்டும் அழைத்துச் செல்லப் படுவோம்.)***



## 72) கிராமப்புறங்களில் பெரியம்மையின் தாக்கம்

1940-1950 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் மருத்துவம் வளர்ச்சியடையவில்லை. இந்த காலகட்டத்தில் தான் செறிவூட்டப்பட்ட யுரேனியத்தைக் கொண்டு அணு குண்டை தயாரிக்கும் முயற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண் டனர் விஞ்ஞானிகள். இந்த அணுகுண்டு வீச்சினால் தான் இரண்டாம் உலகப்போரே முடிவுக்கு வந்தது. கிராமப் புறங் களில் அறியாமையால் அம்மைத் தடுப்பு ஊசிகளை கூட ஏற்றுக்கொள்ளாத நிலையைத்தான் மேலே குறிப்பிடப் பட்ட நிகழ்ச்சி தெரிவிக்கின்றது. கோடை காலங்களில் பெரியம்மை, சின்னம்மை நோய்கள் பரவலாக கிராமங்களில் காணப்படும். இது கிராமத்தில் ஒரு வீட்டில் காணப்பட்டால் அது அந்தத் தெருவில் உள்ள வீடுகளுக்குப் பரவி பின்னர் அந்த கிராமத்தையே வலம் வரும்.

இந்த நோயிற்கு எந்த இனத்தவர்களும் விதிவிலக் கல்ல. அம்மை மாரியம்மனின் கோபம் என்ற மனித சமுதாயத்தின் நம்பிக்கையால் அந்த நோய்கண்டவர்க்கு வைத்தியம் ஏதும் செய்யமாட்டார்கள். வேப்பிலையைக் கொண்டு விசிறிவிடுவார்கள். சித்த ஆயுர்வேத வைத்தி யர்கள் அம்மைக்காக எந்த மருந்தையும் கொடுக்க மாட்டார்கள். அலோபதி பயின்ற மருத்துவர்களும் அம்மை கண்டவர்களுக்கு வைத்தியம் பார்க்க மாட்டார்கள். பெரியம்மை கொடிய

தொத்துநோய். அம்மை கண்ட வீட்டிற்கு அடையாளமாக வீட்டின் கூரை முகப்பில் வேப்பிலை சொறுகப் பட்டிருக்கும் அதைக் கண்டவர்கள் அந்த வீட்டிற்குள் செல்ல மாட்டார்கள். இந்த நோய் குணமடைய வேண்டுமானால் மாரியம்மன் தாலாட்டு பாடவேண்டும் என்ற பழக்கம் இன்றும் கிராம மக்களி டையே நிலவி வருகிறது. கோபம் கொண்ட மாரியம்மன் தாலாட்டைக் கேட்டு சாந்தம் அடைவாள் என்பது அவர்களுடைய நம்பிக்கை.

பெரியம்மை கொண்ட நோயாளிகளை பெரிய வாழை இலையில்தான் படுக்க வைப்பார்கள். வேப்பந் தழையால் உடலை மென்மையாக வருடிவிடுவார்கள். அம்மை கண்டவர் களுடைய முகம் கல்லில் பொளிந்ததுபோல் காணப்படும். இந்த அம்மைத் தழும்புகள் பல ஆண்டுகள் நீடித்திருக்கும். சிலருக்கு அந்தத் தழும்புகள் மறையவே மறையாது. பெரிய அம்மை யினுடைய தாக்கம் தீவிரமானால் நோயாளியின் கண் களுக்கு பாதிப்பு ஏற்படும்.

என்னுடைய தமையனாரான பார்த்தசாரதிக்குப் பெரி யம்மை தாக்கியதால் அவனுடைய ஒரு கண்ணில் பூ விழுந்தது. சில ஆண்டுகள் சென்ற பிறகு திருச்சி ஜோசப் மருத்துவ மனையில் கண் கோளாறுக்கு வைத்தியம் பார்த்தபோதும் அவன் ஒரு கண்ணின் பார்வை இழக்க நேரிட்டது. இவ்வாறு அம்மைநோய் கண்டவர்களில் சிலர் இறந்து விடுவார்கள். அவ்வாறு இறந்தவருடைய உடலை எரிக்கா மல் புதைத்து விடுவார்கள். அதை இடுகாட்டுக்கு எடுத்துச் செல்வதற்கு பெரியம்மை கண்டு பிழைத்தவர்களே பாடை சுமப்பார்கள். மழைக்காலம் காலரா எனப்படும் வாந்திபேதிக்கும், வெயிற் காலம் அம்மைக்கும் கொண்டாட்டமான பருவங்கள்.



## 73) சமையற்கட்டின் அன்றைய தோற்றம்

அக்காலத்தில், வீட்டுவேலைக்கு வேலைக்காரி வைத்துக் கொள்ள மாட்டார்கள். அவரவர்கள் வீட்டு பாத்திரங்களையோ அல்லது வீட்டை சுத்தம் செய்வதோ அந்தந்தக் குடும்பத் தலைவியின் பொறுப்பாகும். சாப்பிட்ட பிறகு பாத்திரங்களை ஒழித்து முற்றத்தில் போடவேண்டும். அவ்வாறு போடும் போது நிறைய தண்ணீர் தெளிக்க வேண்டும். கருக மரத்தை உடைத்துப் பெறப்படும் விறகு களைக் கொண்டுதான் வீட்டில் சமையல் செய்யப்படும். ஒவ்வொரு வீட்டிலும் மண்ணால் ஆன ஒற்றை அடுப்பும், இரட்டை அடுப்பும் உண்டு. இரட்டை அடுப்பின் தீ முழுமையான முறையில் உபயோகம் கொள்ளப் படும். பித்தளை மற்றும் வெண்கலப் பாத்திரங்களும் ஈயத் தாலான சொம்புகளும் அடுக்குகளும், கல் ஈயக்கச்சட்டி என்று அழைக்கப்பட்டு வந்த மெல்லிய கருங்கற்களால் ஆன பாண்டங்களும், புது மண் பாண்டங்களும் உபயோகத்தில் இருந்துவந்தன.

கெட்டியான பாலை மண் சட்டிகளில் நன்றாகக் காய வைத்து உறைமோர் ஊற்றினால் கெட்டித் தயிர் கிடைக்கும். இவைகள் தென்னை நாறுகளால் ஆன உறிகளில் பாதுகாப்பாக வைக்கப்படும். இந்த உறிகள் உத்திரங்களில், பூமியிலிருந்து 5 அல்லது 6 அடி உயரத்தில் தொங்கிக் கொண் டிருக்கும். பித்தளை மற்றும் வெண்கலப் பாத்திரங்களுக்கு மாவு தடவி அடுப்பில் வைக்கவேண்டும். இவ்வாறு மாவு தடவி அடுப்பில் வைப்பதால் அவைகளில் படிந்துள்ள கரியை சுலபமாக நீக்கி விடலாம்; இல்லையேல் வெண்கலப் பானை கரிப்பானையாகி விடும். கரியுடன் கூடிய வெண்கலப் பானையை அடுப்பில் வைப்பது ஆசாரத்திற்கும் விரோத மானது. மாவு தடவாமல் ஒருநாள் வெண்கலப் பானையை அடுப்பில் வைத்ததற்கு

எனக்கு குளத்தில் வெண்கலப் பானையின் கரிபோக தேய்த்து வரவேண்டும் என்ற 'தண்டனை' விதிக்கப்பட்டது.

## 74) 'எவர்சில்வரின்' மேலாதிக்கமும் 'வெண் கலத்தின்' வீழ்ச்சியும்

எவர்சில்வர் எனப்படும் உலோகக் கலவையாலான வீட்டு உபயோகப் பொருட்கள் 1947-1948 கால கட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. ஈயம் பூசிய பித்தளைப் பாத்திரங் களை உபயோகித்து வந்த வைதிகக் குடும்பங்களிலும் மெல்ல மெல்ல எவர்சில்வர் ஆக்கிரமித்துக்கொண்டது. என்னுடைய தந்தையார் உணவு அருந்துவதற்காக ஒரு எவர்சில்வர் தட்டை கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் சேர்த்து மன்னார்குடிக்குச் சென்று வாங்கி வந்தார் என் தாயார்.

***(சில்வர் என்றால் வெள்ளி. ஆனால் எவர்சில்வருக்கும் வெள்ளிக் கும் எந்தவிதத் தொடர்பும் கிடையாது. உருக்குடன் (Steel) குறிப் பிட்ட உலோகத்தைக் கலப்பு செய்வதன் மூலம் எவர் சில்வர் உற்பத்தி செய்யப் படுகிறது. பாமர மக்கள் எவர்சில்வர் என்று குறிப்பிட்டாலும் அதன் அசல் பெயர் 'ஸ்டெயின்லஸ் ஸ்டீல்' என்பதாகும். இதை விளக்கிச் சொல்வதனால் 'துருப்பிடிக்காத உருக்கு' எனலாம்.***

***முதன் முதலில் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பாத்திரங்கள் விற் பனைக்கு வந்தபோது வியாபாரிகள் கவர்ச்சியாக இருக்கட்டுமே என்று இதற்கு எவர்சில்வர் என்று பெயரிட்டனர். பின்னர் அதுவே நிலைத்து விட்டது. வீட்டு ஸ்டீல் பீரோவில் நீங்கள் புதிதாக வாங்கிய வெள்ளிப் பாத்திரங்களையும் அத்துடன் சில எவர்சில்வர் பாத்திரங்களையும் வைத்துப் பாருங்கள். சில மாதங்கள் கழித்துப் பார்த்தால் வெள்ளிப் பாத்திரங்கள் கறுத்துப் போயிருக்கும். அப்படிக் கறுமை நிறத்தை அடைந்தால் அவை நல்ல வெள்ளியால் செய்யப்பட்டவை என்று அர்த்தம். ஆனால் அருகில் வைக்கப்பட்ட எவர் சில்வர் பாத்திரங்களில் கரும்புள்ளிகள் உண்டா காமல் இருக்கும். அந்த வகையில் எவர்சில்வர், என்பது பொருத்தமான பெயரே. இங்கிலாந்தில் 'ஹார்வி பிரியர்லி' என்பவர் துப்பாக்கிகளுக்கு மேலும் தரமான குழல்களைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்த போது தற்செயலாக எவர்சில்வர் கண்டு பிடிக்கப்பட்டது. அவர் உருக்குடன் வெவ்வேறு உலோகங்களைச் சேர்த்து உற்பத்தி செய்து பரிசோதித்து வந்ததார். சரியாக அமையாத உலோக மாதிரிகளை மூலையில் தூக்கிப் போட்டு வந்தார். சில காலம் கழித்து அவர் மூலையில் கிடந்தவற்றை உற்றுக் கவனித்தபோது மற்ற மாதிரிகளை எல்லாம் துருப்பிடித்திருக்க, ஒன்று மட்டும் துருப்பிடிக்காமல் பளபள என்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. அது அவருக்கு ஆச்சர்யத்தை அளித்தது. அவர் சிந்தித்துப் பார்த்ததில் உருக்குடன் கணிசமான அளவு குரோமியம் என்ற உலோகத்தைக் கலப்பு செய்து அது உருவாக்கப்பட்டது என்பது நினைவுக்கு வந்தது. இவ்விதம் தற்செயலாக உருவான எவர்சில்வர் பின்னர் நமது வீடுகளில் பித்தளை, வெண்கல, தாமிரப் பாத்திரங்களை யெல்லாம் விரட்டி விட்டு ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது.***



***உருக்கு (Steel) என்பது இரும்பிலிருந்து வேறுபட்டது. இரும்பில் குறிப்பிட்ட அளவுக்கு கார்பன் இருக்குமானால் அது உருக்கு ஆகும். இந்த உருக்குடன் குறைந்தபட்சம் 12 % அளவுக்கு குரோமியம் கலந்தால் அந்த ஸ்டீல் ஸ்டெய்ன்லஸ் ஸ்டீல் (எவர்சில்வர்) எனப்படும். இந்த குரோமியத்தின் அளவு மாறுபடும்போது ஸ்டெயின்லஸ் ஸ்டீலின் தன்மையும் மாறுபடும்.***

***எவர்சில்வர் தயாரிப்பின்போது குரோமியம் மட்டுமன்றி தாமிரம், நியோபியம், மாலிப்டெனம், நிக்கல் போன்ற பல்வேறு வகை உலோகங்களையும் கலப்புச் செய்வது உண்டு. எவர்சில்வரில் நூற்றுக்கும் மேற்பட்ட வகைகள் உள்ளன.)***

இல்லங்களில் 1960ஆம் ஆண்டுவரை எவர்சில்வர் பாத்திரங்கள் முழுமையான உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் படவில்லை. வீட்டு உபயோகத்திற்கான நீர் குவளைகள் (டம்ளர்கள், டபராக்கள்) பூனா பித்தளை எனப்படும் ஒருவகை உலோகத்தால் வார்க்கப்பட்டிருந்தன. சாதம் வடிப்பதற்கு வெண்கலப் பானைகள் உபயோகத்தில் கொள்ளப்பட்டன.

இந்த வெண்கலம் எனப்படுவது காப்பர் எனப்படும் செப்பு 80% ஈயம் எனப்படும் Stannum 20% கொண்ட கலவையாகும்.

மற்றைய உபயோகத்திற்கு பித்தளைப் பாத்திரங்கள் பயன் படுத்தப்பட்டன. (பித்தளை எனப்படுவது Zinc மற்றும் Copper ஆகியவற்றின் உலோகக் கலவை.) இந்தப் பித்தளைப் பாத்திரங்களுக்கு ஈயம் பூசுவது ஒரு இன்றிய மையாத செயலாக அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டுவந்தது. இதற்கென சில தொழிலாளர்கள் சில மாதங்களுக்கு ஒருமுறை தெருக்களில் ஈயம் பூசித் தருவார்கள். பாத்திரங் களில் ஈயம் சரியாகப் பூசப்படவில்லையென்றால் உணவுப் பொருள்களில் நச்சுத் தன்மை புகுந்து விடும். அதனால் ஒவ்வொரு வீட்டிலும் அவ்வப்போது ஈயம் பூசுவதை விடாமல் மேற்கொண்டு வந்தனர்.

## 75) பாத்திரங்களுக்கு ஈயம் பூசுவது எப்படி?

ஈயம் பூசுவதற்கான பாத்திரங்கள் ஒவ்வொரு வீட்டி லிருந்தும் சேகரிக்கப்பட்டு அந்தத் தெருவின் கோடியில் ஒரு மரத்தின் நிழலில் உலை ஏற்படுத்தப்படும். இந்த உலைக்கு துருத்தி கொண்டு காற்று செலுத்தப்படும். துருத்தியினால் பெறப்படும் காற்றின் வேகம் கொண்டு உலையின் வெப்பம் 300 டிகிரி சென்டிகிரேட்டை அடையும். ஈயம் பூசப்பட வேண்டிய பாத்திரங்கள் நன்றாகக் கழுவப்பட்டு பனை மட்டைகளின் அடிப்பாகம் கொண்டு தேய்க்கப்படும். இதனால், அதில் ஒட்டிக் கொண்டிருந்த பழைய ஈயத்துகள்கள் விடுவிக்கப்படும்.

அவை 300 டிகிரி வெப்பம் கொண்ட உலைகளின்மீது வைக்கப்படும் போது ஈயம் உருகிவிடும். அதன்பிறகு அந்தப் பித்தளைப் பாத்திரங்கள் சுத்தி செய்யப்பட்டு, அமோனியம் குளோரைடு அவற்றின் மீது துவப்படும். இந்த அமோனியம் குளோரைடு ஒரு ரசாயன கலவை ($NH_4Cl$). 300 டிகிரி வெப்ப நிலை கொண்ட பித்தளை பாத்திரத்தில் அமோனியம் குளோரைடு தூவப்படும் போது அது அமோனியா என்ற வாயு நிலையையும் ($NH_3$), ஹைட்ரோ க்ளோரிக் திராவாகம் (HCl) என்ற திரவ நிலை யையும் அடையும். இந்த ஹைட்ரோ குளோரிக் திராவக மானது அனைத்துப் புறப்பொருள்களையும், பித்தளைப் பாத்திரங் களிலிருந்து அகற்றிவிடும். அப்போது குச்சி வடிவில் உள்ள ஸ்டேனம் எனப்படும் ஈயம் பாத்திரங்களின் மீது தடவப்படும். அது சமமாகப் பாத்திரத்தில் ஒட்டிக்கொள் வதற்கு அமோனியம் குளோரைடு கொண்டு பாத்திரத்தின் உட் பகுதியில் அனைத்து இடங்களுக்கும் துணியால் இழுத்துச் செல்லப்படும். இவ்வாறு ஈயம் பூசப்பட்ட பாத்திரங்களின் மீது சுத்த மணல் நிரப்பிக் கவிழ்த்து வைக்கப்படும். பாத்திரத்தின் வெப்பத்தன்மை அடங்கிய பிறகு நீரால் சுத்திகரிக்கப்பட்டு அவரவர் இல்லங்களில் கொண்டு சேர்க்கப்படும்.



தெரு முனையில் இவ்வாறு பித்தளைப் பாத்திர ங்களுக்கு ஈயம் பூசுவதை வேடிக்கை பார்ப்பது என்னைப் போன்ற சிறுவர்களுக்கு ஒரு பொழுதுபோக்கு.

## 76) அமாவாசை வந்தால் ஆபத்து

அமாவாசை தினத்தன்று வீடு முழுவதும் சாணத்தால் மெழுகப்படும். தினந்தோறும் வாசலில் சாண நீர்கொண்டு தெளிப்பது இல்லத்தரசியின் முதற் கடமையாகும். மார்கழி மாதத்தில் ஒவ்வொருவர் வீட்டு வாசலிலும் விதவிதமான கோல மிட்டு அதன் மேல் ஐந்து சாணி உருண்டைகளில் பரங்கிப் பூ, வண்ணப்பூக்களான காக்கரட்டைப் பூ போன்ற

வைகளை சொருகி வைப்பர். போகியன்று பூவோடு கூடிய சாணி உருண்டைகளை அடுப்பில் இடப்படும்.

அமாவாசை தினத்தன்று காலையில் ஐந்து மணிக்கே அவரவர் படுக்கையை விட்டு எழுந்திருக்க வேண்டும். ஏனென்றால் அனைத்து இடங்களையும் மெழுகுவதற்கு இரண்டு மணிநேரம் பிடிக்கும். தர்ப்பணம் முடிந்த பிறகுதான் அனைவருக்கும் காஃபி கிடைக்கும். அன்றைய தினம் காஃபி அருந்துவதற்கு சுமார் 9 மணி ஆகலாம். சாப்பாடு என்பது அனைவருக்கும் ஒருவேளைதான். இரவு அனைவருக்கும் பலகாரம்.

## 77) OPERATION FLOOD (பால் உற்பத்திப் பெருக்கம்)

எங்கள் இல்லத்தில் நான்கு பசுமாடுகள் கொட்டிலில் எப்பொழுதும் காணப்படும். கன்றுக்குட்டிகளைக் கட்டுவதற்கெனத் தனி கொட்டகை உண்டு. அவைகளை அவிழ்த்து மாடு கறக்க அழைத்துச் செல்லும்போது அவை துள்ளிஓடும்; அதைக் காணும்போது உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். பால் கறப் பதற்கு முன்பு கன்று குட்டியினை ஊட்ட விடவேண்டும். அப்போது மாட்டின் காம்புகள் சுரக்கும். மடியில் உள்ள அனைத்துப் பாலையும் ஒட்டக் கறக்கக்கூடாது. இறுதியில் கன்றுக்குட்டிக்கும் பால் நிறைந்த அளவில் இருக்கும்படி பால் கறப்பதை முடித்துக்கொள்ளவேண்டும்.

வீட்டில் உள்ள 4 மாடுகளில் லக்ஷ்மி என்று பெயரிடப் பட்ட வெளிர் சிவப்பு நிற மாடு ஒன்றை என்னுடைய மாடாக அபிமானத்துக்கொண்டு அது மற்றைய மாடுகளைவிட அதிக மாக பால் சுரக்கவேண்டும் என்பதற்காகத் தினந்தோறும் பள்ளிக்கூடம் சென்று வந்தபிறகு ஊறவைத்த பருத்திக் கொட்டையைக் கல் உரலில் நன்றாக அரைத்து, ஊற வைத்தப்



புண்ணாக்குடன் கலந்து தவிடு சேர்த்து மரத்தால் ஆன தொட்டிகளில் மாட்டுக்கு முன் வைப்பேன். நான் கலந்து வைத்த அனைத்து தீனியையும் அந்த மாடு அன்று சாப்பிட வேண்டும். இல்லாவிட்டால் அதற்கு அடி விழும்.

மேலும், வீட்டுக்கு அண்மையில் உள்ள வயல்களின் கரையில் வளர்ந்திருக்கும் புல்லை அறுத்துக்கொண்டுவந்து மாட்டிற்குக் கொடுப்பேன். அன்றைய தினம் பால் கரக்கும் போது பக்கத்தில் நின்று கொண்டு என்னுடைய அபிமான மாட்டின் பாலை தனிச்சொம் பில் கறக்கவேண்டும் என்று என் தாயாரிடம் கூறுவேன். அவர்களும் அவ்வாறே அந்தப் பாலைத் தனிச் சொம்பில் கறந்து என்னுடைய அபிமான மாடு அதிகப் பால் கொடுத்துள்ளது என்று அறிவிக்க வேண்டும். இல்லையேல் அன்று இரவு உணவு உட்கொள்ள மாட்டேன்.

சங்கராந்தியன்று வீட்டின் முற்றத்தில், பெரிதாகக் கோலமிட்டு சூரியபகவானுக்கு ஆராதனம் நடைபெறும். அதன் பிறகு இல்லத்தில் கோயில்கொண்டிருக்கும் பெரு மாளுக்கு ***(ஒரு மரப்பெட்டியில் எழுந்தருளப் பண்ணப்பட்டிருக்கும் சாளக்ராம மூர்த்திக்கு)*** என்னுடைய தகப்பனார் விசேஷ திருவாராதனம் ஸமர்ப்பித்து திருப்பாவை ஸேவை சாற்றுமுறை செய்திடுவார். எங்கள் இல்லத்தில் கிருஷ்ணன் ஊஞ்சலில் அமர்ந்திருக்க நந்தகோபன் பக்கத்தில் நின்று கொண்டிருக்க யசோதை பிராட்டி வெண்ணெயை ஊட்டும் திருக்கோலத்தில் ஒரு படம் மாட்டப் பட்டிருக்கும். மேலும், இராமபிரானிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் என்னுடைய தந்தையார்.

## 78) பத்ராசலம் ராமரும், பக்த ராமதாஸரும்

எங்கள் இல்லத்தில் இராமர் பட்டாபிஷேகப் படமும் , பத்ராசல ராமர் படமும் இருந்தன. என் தந்தையார் பல நாட்கள் எங்களுக்கு பத்ராசலம் ராமதாஸர் கதையை சொல்லி

இருக்கிறார். அப்பொழுது, பக்த ராமதாஸர் ஒரு எறும்பை துன்புறுத்தியதால் பல ஆண்டுகள் சிறைவாஸம் அனுபவித்தார் என்பதை கீழ்க் கண்ட கதையின் மூலம் எங்களுக்குச் சொல்வார்.

கோதாவரிக் கரையில் ராமதாஸர் ஹைதராபாத் நவாபுக்கு செலுத்தவேண்டிய வரிப்பணத்தைக் கொண்டு ஸ்ரீராமருக்கு கோயில் கட்டினார்; நவாபுக்கு வரிப்பணத்தை செலுத்தாததால் அவர் கோல்கொண்டா சிறையில் அடைக் கப்பட்டார். ஓர் எறும்பை துன்புறுத்தி இவர் செய்த பாவச் செயலுக்கு தண்டனையாக இந்த சிறைவாஸத்தை அனுபவிக்க நேரிட்டது. பின்னர் ஸ்ரீராமனும் இலக்குவனும் ராமோஜி லக்ஷ்மோஜி என்ற மானிட உருவில் ஹைதராபாத் நவாபிடம் சென்று பொற்காசுகளை சேர்ப்பித்து பக்தராம தாஸரை சிறையிலிருந்து விடுவித்தனர்-என்று பக்தராம தாஸரின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகளை சுவையாக எடுத்து ரைப்பார். இந்தக் கதையைக் கேட்ட நாள் முதல் எனக்கு பத்ராசலம் சென்று சங்குசக்கரத்தோடும், வில்லோடும் எழுந்தருளியுள்ள சீதாராமனை ஸேவிக்க வேண்டும்; கோல்கொண்டா அரண்மனையில் ராமதாஸர் அடைத்து வைக்கப்பட்டிருந்த சிறையைக் காணவேண்டும் என்ற ஆசை துளிர்விடத் தொடங்கியது. மனதில் தோன்றிய இந்த ஆசை நிறைவேறுவதற்கு பல ஆண்டுகள் பிடித்தன. 1967 ஆம் ஆண்டின் இறுதியில் விசாகப்பட்டினம் இந்தியன் ஆயில் நிறுவனத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது நானும், என்னுடைய பெற்றோர்களும் பாழடைந்த கோல் கொண்டா அரண்மனைக்குச் சென்று பத்ராஜலம் ராமதாஸ் சிறைவைக்கப் பட்டிருந்த இடத்தை தரிசித்தோம்.

விசாகப்பட்டினத்திலிருந்து புறப்பட்டு கோதாவரி



நதியின் தென்புறத்தில் உள்ள கோவூர் வழியாக பத்ரா சலத்தை சென்றடைந்தோம். ஓர் இரவு அங்கே தங்கி அழகான அந்தத் திருக்கோயிலைப் பலமுறை வலம் வந்தோம். ஸ்ரீராமர் சங்கு சக்கரங்களோடும் ஒரு கரத்தில் வில்லோடும், இடதுபுரத்தில் சீதாபிராட்டியோடும் எழுந் தருளியிருக்கும் திருக்கோலம் அனைவரையும் பரவ மூட்டும்.



## 79) ஸ்ரீஜெயந்தி கொண்டாட்டம்

ஒவ்வொரு நாளும் இரவு ராமாவதார, கிருஷ்ணா வதார கதைகளை விவரித்து எங்களுக்கு சொல்லி மகிழ் விப்பார் எங்கள் தந்தையார். ஸ்ரீஜயந்தி அன்று இரவு 11 மணிக்குமேல் தான் திருவாராதனம் நடைபெறும். கண்ணன் பிறந்த அந்த நடுநிசியில்தான் எங்களுக்குச் சாப்பாடு. இளம் வயதில் பசி பொறுக்காததனால் அழுதுகொண்டே தூங்கிவிடுவேன். மறு நாள் காலையில்தான் பட்சணங்கள் கிடைக்கும்.

வாசலிலிருந்து கண்ணனுடைய பாதங்களை மாவுக் கோலமாக தளிகை அறையில் வெண்ணெய் வைத்திருக்கும் உறி மற்றும் பக்ஷணங்கள் தயாரிக்கும் அடுப்பு வரையிலும் இடுவார் என்தாயார். கண்ணன் உறியில் வெண்ணெயைச்

சாப்பிட்டுவிட்டு என்ன பக்ஷணம் செய்கிறார்கள் என்பதை எட்டிப் பார்த்துவிட்டுப் போவதை இவ்வாறு கோல மிட்டுக் காட்டுவதாக மேலும் கூறுவார்.

## 80) ஸ்ரீஜயந்தியும், ஸ்ரீராமநவமியும்

ஸ்ரீஜயந்தியன்று கண்ணனுக்கு அமுது படைப்பதற்காக நாவல் பழத்தை, சாளுவனாற்றுக் கரையில் உள்ள மரங்களி லிருந்து பறித்து வருவோம். அந்த மரங்களைப் பாதுகாப்பதற்கு ஒரு காவலன் இருப்பான். அவனிடம் அரைப்படி அரிசி கொடுத்தால் போதும். அவன் நாவல்பழங்களை சிறு மூங்கிற் கூடைகளில் எடுத்துத் தந்திடுவான். அன்றைய தினம் வீட்டி லேயே கடைந்த வெண்ணெய், சட்டியிலே தோய்த்த தயிர், அன்று மாலை கறந்த பசும் பால், நாவல் பழம், பாரத மாதா கூட்டுறவுப் பண்டகசாலையில் வாங்கி வந்த பேரிக்காய், வாழைப்பழம் ஆகியன கண்ணனுக்கு அமுது செய்விக்கப் படும். வீட்டுக் கொல்லையிலேயே அபரிமிதமாய் விளைந் திருக்கும் கீரையைப் பறித்து கண்ணனுக்கு மிவும் பிடித்த மசியல் கண்டருளப் பண்ணப்படும். இதே போன்று ஸ்ரீராம நவமியன்று பானகம், நீர்மோர், விடாய்ப் பருப்பு ***(ஊறவைத்துத் தோல் நீக்கிய பயத்தம் பருப்பு. முழு பயத்தம் பருப்புகளின்மீது தேங்காய் எண்ணெய் தடவி கல் இயந்திரத்தில் உடைக்கப்படும். உடைக்கப்பட்ட பயிறு மணிகள் மர உரலில் குத்தப்படும். அதன் மெல்லிய தோல் இவ்வாறு நீக்கப்பட்ட பின்பு முறத்தில் இட்டு புடைத்து, அதற்கென உரிய சல்லடையில் சலிக்கப்படும். இதுவே பாசிப்பருப்பு என்று அழைக்கப்படுகிறது.)*** ஆகியன இராமனுக்கு அமுதுபடிகளாக ஸமர்ப்பிக்கப்படும்.

## 81) திருக்கண்ணங்குடியுள் நின்றானே!

நான் நான்காவது வகுப்புப் படித்துக்கொண்டிருக்கும் காலத்தில் என்னுடைய சிறிய தகப்பனாரான ரங்கஸ்வாமி



ஐயங்காருக்கும், திருக்கண்ணங்குடி திவ்யதேசத்தில் புகழ்மிக்க நாலாயிர அத்யாபகராய்த் திகழ்ந்து வந்த ஸ்ரீ.உ.வே.அப்பு ஐயங்கார் ஸ்வாமியின் திருக்குமாரத்தியான ஸ்ரீரங்கநாயகிக்கும் திருமணம் நடைபெற்றது.

திருக்கண்ணங்குடி திவ்யதேசம் சோழநாட்டு திவ்ய தேசங்களில் ஒன்றாகும். திருமங்கையாழ்வார் 9ஆம் பத்து முதல் பதிகத்தில் மங்களாசாஸனம் செய்துள்ளார். திருமங்கையாழ் வார் நாகப்பட்டினத்திலிருந்த தங்கத்தாலான புத்த விக்ரஹத்தை எடுத்துவந்தபோது, இந்த ஊரில்தான் அந்த விக்ரஹத்தைப் பத்திரப்படுத்தி வைத்ததாகக் குருபரம்பரை நூல்கள் தெரி விக்கின்றன. ஸ்ரீமணவாளமாமுனிகள் இந்தத் திவ்யத் தேசத்திற்கு எழுந்தருளி சில மாதங்கள் வாஸம் செய்துவந்தார். இந்த திவ்ய தேசத்தில் அனைத்துத் தீர்த்த மரியாதைகளும் பாலூரார் வம்சத்திற்கே உரியன. ஸ்ரீ.உ.வே. அப்பு அய்யங்கார் ஸ்வாமி திருக்கண்ணங்குடி திவ்யதேசத்தில் தீர்த்த மரியாதையைப் பெற்றுவந்தவர்களில் ஒருவராவார். இவருடைய திருக்குமார ரான ஸ்ரீ.உ.வே. சத்யநாராயணன் அந்த ஊரிலேயே நித்யவாஸம் கொண்டு தற்போது தாமோதரப் பெருமாளுக்குக் கைங்கர் யங்கள் பல செய்துவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

***(நான்கு ஆண்டுகளுக்கு முன்பு இந்த திவ்யதேச மஹா ஸம்ப்ரோ க்ஷணம் வெகு விமர்சையாக நடைபெற்றது. வைகானஸ ஆகமத்தின்படி திருவாராதனங்களும் விழாக்களும் நடைபெற்றுவருகின்றன. பாலூர் வம்சத்தவர்கள் தங்களுடைய அபிமான திவ்யதேசமாகிய திருக் கண்ணங்குடியில் ப்ரஹ்மோத்ஸவம், பவித்ரோத்ஸவம் போன்ற உத்ஸவங்களை குறை வற நடத்திவருவதற்காகப் பல ஊர்களில் நஞ்சை, புஞ்சை நிலங்களைத் தானமாக அளித்துள்ளனர். சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு அனைத்து உத்ஸவங்களும் குறைவற நடை பெற்றுவந்தன. ஆனால் சென்ற 30 ஆண்டுகளாக இதற்கென அளிக்கப்பட்ட நிலங்களிலிருந்த வருவாயைக் கோயிலாரிடம்***

***செலுத்தாதனால் இந்த உத்ஸவங்கள் நடைபெறவில்லை. மஹா ஸம்ப்ரோக்ஷணத்திற்குப் பிறகு பாலூர் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் தற்போது சித்திரை மாத ப்ரஹ்மோத்ஸவத்தையும் மற்றைய விழாக்களையும் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். )***

## 82) எங்கும் தவளை, எதிலும் தவளை

என்னுடைய சிறிய தகப்பனார் அவருடைய திருமணம் முடிந்த பிறகு, வேதாரண்யத்திற்கு அண்மையில் அமைந்துள்ள செம்போடை என்னும் கிராமத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்த வந்தார். ஒரு கோடை விடுமுறையின்போது நான் அந்த ஊருக்குச் சென்றேன்.




உப்பங்கழியின் ஓரத்தில் அமைந்துள்ள கிராமம் செம்போடை. இந்த ஊரில் பிறந்த கீ.வைத்தியநாத அய்யர் புகழ் பெற்ற காந்தியவாதி.



எங்கு நோக்கினும் முந்திரி புன்னை மற்றும் இலுப்பமரக் காடுகள் நிறைந்திருக்கும் ஊர். என்னுடைய சிறிய தகப்பனார் குடியிருந்த வீடு உப்பங்கழி யின் கரையோரத்தில் அமைந்திருந்தது. இந்த ஊரின் அண்மையில் தேத்தாகுடி ரயில்வே நிலையம் அமைந்துள்ளது. குடிநீர் கொண்டு வருவதற்கு இரண்டு கிலோமீட்டர் தூரம் நடக்க வேண்டும். திருத்துறைப்பூண்டி - வேதாரண்யம் ரயில் பாதை யில் அமைந்துள்ள குரவப்பலம் என்னும் ஊரில் இரயில் இஞ்ஜினி லிருந்து அந்த ஊர்மக்கள் குடிநீரை எடுத்துக்கொள்வர். அந்த இஞ்ஜின் ஓட்டுனரும் இரயில் இஞ்ஜினின் இயக்கத்திற்காக சேமித்து வைத்திருந்த நீரை அவர்களுக்குக் கொடுப்பார். இரயில் நிற்கும் 3 அல்லது 4 நிமிடத்தில் இந்தக் குடி நீர் வழங்கும் நிகழ்ச்சி நடை பெறும்.



என் சிறிய தகப்பனார் குடியிருந்த வீட்டில் உப் பங்கழி யிலிருந்து தரைக்கு இரை தேடவந்த பாம் புகள் - தவளை கள்

ஆகி யவை சில பாண்டங் களின் அடியில் குடிகொண்டிருக்கும். நீர் அருந்துவதற்காகத் தண்ணீர்க் குவளையை எடுத்தால் அதிலிருந்து ஒரு தவளை எகிறிக் குதித்துக் கொண்டு ஓடும். இதையெல்லாம் கண்ட நான் இந்த ஊரில் இனி ஒரு வினாடி கூட இருக்கமாட்டேன். இப்போதே என்னை ஊரில் கொண்டு போய்விடுங்கள்; என்று அழுது புலம்புவேன். ஏதாவது தின் பண்டங்களை வாங்கிக் கொடுத்து என்னை சமாதானப்படுத்தி சில நாட்கள் கழித்து களப்பாளுக்கு அழைத்துச் சென்றனர். அவர்கள் அந்த ஊரில் குடியிருந்தவரை நான் விடுமுறைக்கு அங்கு செல்லவில்லை.

## 83) நெய்தல் நிலவளம்

என்சிறிய தகப்பனார் திருத்துறைப்பூண்டி வேதா ரண்யம் சாலையில் அமைந்துள்ள ஆயக்காரம்புலம் என்ற ஊருக்கு பணி மாற்றலாகிச் சென்ற பிறகு, அந்த ஊருக்கு பள்ளி விடு முறை நாட்களில் செல்வேன். இந்த ஆயக்காரம் புலத்தைச் சுற்றிப் புகையிலைத் தோட்டங்களும், சிறு சிறு மணற் குன்றுகளும் அமைந்துள்ளன. ஆங்காங்கே சிறிய நீர்க் குட்டைகள் அதைச் சுற்றிக் குடிசைகள். ஓட்டுவீட்டைப் பார்ப்பதே அபூர்வம். இந்த நீர்க் குட்டையில் உள்ள நீர் மிகத் தெளிந்த நிலையில் இருக்கும். நீரில் காசைப் போட்டு, பின்பு அதனை எடுக்கலாம்; அத்துணை தூய்மையான நீர். நெய்தல் நிலத்திற்கே ***(ஐந்திணைப் பாகு பாட்டில் கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்படும்)*** உண் டான இலுப்பந் தோப்புகளும், புன்னை மரங்களும், தாழைக் காடுகளும் அடர்ந்து காணப்படும்.

இங்கு, காய்கறிகள் மிகுந்த அளவில் பயிரிடப்படும் குறிப் பாகப் புடலங்காய், கத்தரிக்காய் போன்றவைகள் இந்த



மண்ணில் நல்ல விளைச்சலைத் தரும். இந்த ஊரில் கிடைக்கும் மணல்தக்காளி வற்றல் சுவை மிக்கதாக இருக்கும். புகை யிலைத் தோட்டங்கள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும். வேதா ரண்யத்தில், புகையிலை பதனிடும் தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்தில் வெற்றிலைபாக்கு போடும் பழக்கம் மிகுந்த அளவில் இன்றும் உள்ளது. வேதாரண்யத்தில் தயாரிக் கப்பட்டுவந்த 'ஸ்ஸ்திக்' புகையிலையை பலர் விரும்பி சுவைத்துவந்தனர்.

## 84) திரௌபதியம்மன் கோயில் விழாக்களும், பீமன் ஊர்வலம் வருதலும்

அந்தக் காலத்தில் கிராமங்களில் பல விழாக்கள் நடை பெற்றுவந்தன. அதில் முக்கியமானது திரௌபதியம்மன் கோயிலில் நடைபெறும் விழாவாகும். பெரும்பாலான கிரா மங்களில் திரௌபதியம்மனுக்கெனத் தனிக்கோயில் உண்டு. இந்த திரௌபதி அம்மன்கோயிலில் ஆண்டுதோறும் கோடை காலத்தில் மஹா பாரத நிகழ்ச்சிகளை நினைவூட்டும் வகையில் விழா நடைபெறும். அந்த விழாவின் இறுதியில் தீமிதி நடை பெறும். தீமிதி விழா மாரியம்மன்கோயில், காளியம்மன் கோயில் விழாக்களிலும் முக்கியப் பங்கு வகித்துவருகின்றது. தீமிதியை 'பூ மிதித்தல்' என்று கொண்டாடுவார்கள். மக்கள் தம்முடைய விருப்பம் ஈடேறினால் அதற்குக் காணிக்கையாக தீமிதித்து வழிபாடு செய்வதாக வேண்டிக்கொள்வர். பாமர மக்களுக்கு இத்தகையதொரு நம்பிக்கையே உயிர் மூச்சாக விளங்குகிறது. **அதிக அளவில் சாத்திரங்களைப் படித்தவன்தான் நாட்டைக் குழப்பிக் கொண்டிருப்பான். இந்த நம்பிக்கைகள் நன்னம்பிக் கைகளோ அல்லது மூடநம்பிக்கைகளோ நீண்ட நாட்களாக மக்கள் கடைபிடித்துவரும் பழக்க வழக்கங் களாகும். இந்தப் பழக்க வழக்கங்களை எளிதில் யாராலும் ஒழித்துவிட இயலாது.**

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு கீழைப் பனையூருக்கு மேற்கு திசையில் அமைந்துள்ள மேலைப்பனையூர், நாயன் மார்களால் பாடல்பெற்ற திருக்களர் என்ற ஊருக்கு வடக்குத் திசையில் காடுவாகுடி, கீழைப்பனையூருக்கு தெற்குதிசையில் அமைந்துள்ள கருப்பக்கிளார், களப்பாள் ஆகிய கிராமங்களில் திரௌபதியம்மன் திருநாள் சிறப்பாக நடைபெற்று வந்தது. விழாவின் ஒருநாளின்போது அர்ஜுனன் தவம் செய்த நிகழ்ச்சி நடைபெறும். உறுதியான 15 அல்லது 20 அடி உயரமுள்ள பனைமரத்தாலான கம்பத்தை நட்டு, அதில் ஏறிச் செல் வதற்கான கூறுகளை அமைத்து அதன் உச்சியில் தேவையான அகல நீளம் கொண்ட மரப்பலகையில் அர்ஜுனன் வேடமிட்ட நபர் அமர்ந்து தவம் செய்வதைக் கொண்டாடி மகிழ்வர். வன வாஸத்தின்போது அர்ஜுனன் மேலே சுற்றும் மீனை அதனுடைய நிழல் கொண்டு அம்பெய்து திரௌபதியை மணந்த நிகழ்ச்சியும், பாண்டவர்கள் அஜ்ஞாத வாஸம் கொண்டிருந்த போது திரௌபதியிடம் தகாதமுறையில் நடந்து கொண்ட கீசகனைப் பீமன் வதம் செய்தநிகழ்ச்சியும் வெவ்வேறு நாட்களில் நடைபெறும்.

இந்த விழாவின் மிக முக்கியமான நாள் பஞ்சபாண்ட வர்கள் திரௌபதியோடு வீதி வலம் வரும் நிகழ்ச்சியாகும். அன்றைய தினம் காலை திரௌபதியம்மனுடைய கர்ப்ப க்ருஹத்தில் பூஜிக்கப்பட்டுவரும் கதையை பூசாரி எடுத்து பீமன் வேடம் பூண்டிருப்பவரிடம் கொடுப்பார். இந்த கதை மரத்தா லான ஒரு ஆயுதம். இதற்கு நன்றாக எண்ணெய் தேய்த்து பாதுகாத்துவருவார்கள். இதன் கைப்பிடி நீண்டிருக்கும். ஐந்து நபர்களுக்கு பஞ்சபாண்டவர்கள் வேடம் அணி விக்கப்படும். பீமன் வேடம் பூணுவோர் உடம்பு முழுவதும் கருப்பு வண்ணத்தைப் பூசிக்கொண்டு காலில்



சலங்கைக் கட்டிக் கொண்டு இடுப்பில் கனத்த ஆடையை அணிந்துகொண்டிருப்பார். இந்த வேடமிட்டாருடைய தோற்றமே அச்சமூட்டுவதாய் இருக்கும். அவருடைய இடுப்பில் வெண்கலத்தாலான சிறு மணிகள் கட்டப் பட்டிருக்கும். இந்த வேடமிட்டிருப்போர் கையில் கதையை எடுத்துக் கொண்டவுடன் ஒரு ஹூங்காரம் செய்வார். அது அனைவர் மனத்திலும் இனந்தெரியாத அச்சத்தை உண்டு பண்ணும். பீமன் வேடமிட்டிருப்போர் திரௌபதியம்மன் ஸந்நிதியிலிருந்து வெளியில் வரும்போது அனைவர் உள்ளத்திலும் ஒரு பயம் ஏற்படும்.

தெருவிலே மணியோசை கேட்க தருமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் மற்றும் திரௌபதியோடுவரும் பீமனுக்கு ஒவ்வொரு வீட்டின்முன்பும் மட்டையுடன் கூடிய தேங்காய் வைக்கப்பட்டிருக்கும். கதையைக் கொண்டு ஒரே அடியில் அந்தத் தேங்காயைப் பிளந்திடுவார் பீமன். உடைத்த மட்டை யோடு கூடிய தேங்காயிலிருந்து சொட்டும் நீரைப் பருகிவிட்டு தூக்கி எறியும் இந்தத் தேங்கையைப் பீமனுடைய அருட் பிரசாதமாக மக்கள் ஏற்றுக்கொள்வார்கள்.

## 85) பீமனின் அருள்பெற்றோர் யார்?

பீமன் யார் வீட்டில் உட்கார்ந்து பால் அருந்துகிறாரோ அந்த வீட்டில் மேலும் செல்வம் கொழிக்குமென மக்கள் நம்பி வந்தனர். இதற்காகப் பீமனை யாரும் கட்டாயப்படுத்த இயலாது. அவ்வாறு பீமன் ஒருவீட்டில் உட்கார்ந்தால் அவர் அளிக்கும் மஞ்சள் பொடியை பயபக்தியுடன் அனைவரும் பெற்றுச் செல்வர். திரௌபதி வேடமிட்டுக்கொள்வோரும் ஆண் என்பது குறிப்பிடத்தக்கது. பீமன் ஒரு தெருவில் வந்தால் கர்ப்பிணிகளும் சிறுவர்களும் வீட்டிலேயே இருக்கும்படி அறி

வுறுத்தப்படுவர்கள். வீட்டுக்கு விலக்கானவர்கள் வெகுதூரத் திற்குச் சென்றுவிடவேண்டும். இல்லாவிட்டால் அந்த வீட்டின் வாசலில் பீமன் ஹூங்காரம் இட்டுக்கொண்டே ஒரே இடத்தில் நின்று கொண்டிருப்பார். சிறுவர்கள் ஜன்னல் கதவின் இடுக்கின்வழியாகத்தான் பீமனை தரிசிப்பார்கள்.

இவ்வாறு பீமன் வரும்போது கீழைப் பனையூரில் ஆசார்யபுருஷரான ராமாநுஜ திருவேங்கடாசார்யர் ஸ்வாமி திருமாளிகையின் முன்பு மட்டைத் தேங்காயை வைப்ப தில்லை. ஆனால் கிராமத்தில் மாரியம்மன் அல்லது திரௌபதி யம்மன் திருவிழாவிற்குக் காப்புக்கட்டினால் ஆசார்ய புருஷரான ராமாநுஜ திருவேங்கடாசார்யர் திருமாளிகைக்கு வந்து ஒருபடி அரிசியும், ஒரு ரூபாய் பணமும் பெற்றுக் கொண்டபிறகே நிதி திரட்டத்தொடங்குவர்.

[*கிராமத்தில் உள்ள அனைத்துக் கோயில்களிலும் அந்தந்தக் காலத்துக்குரிய பூசைகள் நடைபெற வேண்டும். கிராமத்தின் வளத்திற்கு அனைத்து தெய்வங்களுடைய அருட்பார்வையும் தேவை.*

வணங்கும்துறைகள் பலபலவாக்கி✱ மதிவிகற்பால்
பிணங்கும்சமயம் பலபலவாக்கி✱ அவையவைதோறு
அணங்கும்பலபலவாக்கிநின்மூர்த்திபரப்பிவைத்தாய்
இணங்குநின்னோரையில்லாய்!✱ நின்கண்வேட்கையெழுவிப்பனே.

*என்று நம்மாழ்வார் பல்வேறு தெங்யவங்களைப் படைத்த பரமனின் அருளை திருவிருத்தம் - 96ஆம் பாசுரத்தில் கொண்டாடுகிறார்.*

*ஸாத்விக, ராஜஸ, தாமஸ குணம் படைத்தோர்க்கு ஏற்பக் கடவுளரும் பலர். மனிதன் இந்த முக்குணங்களுக்கும் வசப்பட்டவன். ஒவ்வொரு நேரத் திலும் ஒவ்வொரு குணம் ஓங்கியிருக்கும். காலையில் ஸாத்விக குணமும், உச்சிப்பொழுதில் ராஜஸ குணமும், இரவு தாமஸ குணமும் மீதூர்ந்திருக்கும். ஸ்ரீமந் நாரயணனே உபாய உபேயம் என்று கொண்டிருக்கும் திருமாலடியார்களுக்கு மற்றைய தெய்வங்களின் வழிபாடு தேவையற்றது என்று விதித்துள்ளனர்.*



ஆழ்வானை ஒரு பட்டன், ‘தேவதாந்தரங்களை நீங்கள் கண்டால் பண்ணும் ஆசாரமென்?’ என்று கேட்க, ‘ஶாஸ்த்ர விருத்தமாகக் கேளாதே கொள்ளாய்; தேவதாந்தரங்கள் உங்களைக் கண்டால் பண்ணும் ஆசாரமென்? என்று கேளாய்!’ என்றார்.

கூரத்தாழ்வானை நோக்கி அந்தணர் ஒருவர், ‘பிற தேவதை களைக் கண்டால் நீங்கள் (ஸ்ரீவைஷ்ணவர்கள்) எப்படி நடந்து கொள்வீர்கள்?’ என்று கேட்க, அதற்கு அவர், ‘சாத்திரத்திற்கு மாறாகக் கேள்வி கேட்காதே. ஸ்ரீவைஷ்ண வர்களைக் கண்டால் மற்ற தேவதைகள் எப்படி நடந்துகொள்ளும் என்று கேள்’ என்றாராம்! ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டால் மற்ற தேவதைகளும் வணங்கி வழிபட்டுச் செல்லும் என்ற கருத்தினை உட்கொண்டு கூரத்தாழ்வான் இப்படி அருளிச்செய்தார் – என்று ஆயி திருப்பாவை நாலாயிரப்படி வ்யாக்யானத்தில் அருளிச் செய்துள்ளார்.

*இதன் நிலையில் நின்றொழுகி வந்த ராமாநுஜ திருவேங்கடா சார்யர் ஸ்வாமி திருமாளிகை முன்பு மற்றைய தேவதைகளுக்குரிய வழிபாட்டினைச் செய்வதில்லை.*]

## 86) ஐயனார் கோயில் மண்குதிரைகளும், ஒற்றைக் கூந்தல் பனை மரத்திலிருந்து எழும் ஓசையும்

***என்னுடைய எட்டாவது வயதிலிருந்து குறுக்கே வயல் களையும் ஆறுகளையும் 6 கி.மீ. கடந்து களப்பாளிலிருந்து கீழைப்பனையூர் கிராமத்திற்குப் பல முறை சென்று வருவேன். இவ்வாறு செல்லும்போது சாளுவன் மற்றும்***

**பொன்னுக் குண்டான் ஆகிய இரு ஆறுகளையும் கடந்து செல்ல வேண்டும். இவை தவிர அதிக ஆழம் கொண்ட பாசன வாய்க்கால்களையும் தாண்டிச் செல்லவேண்டும். இந்த ஆறுகளைக் கடப்பதற்கு ஒருவர்க்கு நீச்சல் தெரிந்திருக்க வேண்டும். கிராமத்தில் வளர்ந்ததன் பெரும்பயன் நீச்சல் கலையை நான் கற்றுக் கொண்டது. களப்பாளில் எங்கள் இல்லத்திற்கு எதிரில் அமைந்திருந்த குளத்தில் குளிக்கும் போது தெற்கு வடக்காக இரு கரைகளிலும் உள்ள மரங்களின் கிளைகளைத் தொட்டு வருவதுண்டு.**

***(இந்த நீச்சல் கலையை இன்று நம்மில் பலர் கற்றுக்கொள்ள வாய்ப்பில்லை. நாம் கிராமங்களை விட்டு நகரங்களில் குடிபெயர்ந்த தோடு மட்டுமல்லாமல் குளங்கள் போன்ற அமைப்புகள் இல்லாமை யும் அடிப்படைக் காரணங்களாகும். குறிப்பிட்ட நீச்சல் குளங்களில் கட்டணம் செலுத்தி நீச்சல் அடிக்கக் கற்றுக்கொள்வது என்பது அனைவர்க்கும் இயலாததொன்று.)***

இவ்வாறு செல்லும்போது மழைக்காலங்களில் சாளுவ னாறு பெருக்கெடுத்து ஓடும். இந்த ஆற்றைக் கடப்பதற்கு எந்த விதமான மரப் பாலங்களும் கிடையாது. ஆற்றின் கரையோர மாகக் கிழக்கேச் சென்று மூன்று கி.மீ. தொலைவில் சாளுவ னாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள சிமெண்ட் பாலத்தைக் கடந்து கப்பிரோட்டின் வழியாகக் கீழைப் பனையூரைச் சென்ற டைய வேண்டும். இவ்வாறு செல்வதால் மூன்று கிலோமீட்டர் தூரம் அதிகமாக நடந்துசெல்லவேண்டும்.

பொன்னுக்குண்டான் வடிகால் நீரை எடுத்துச்செல்லும் ஒரு ஆறு. அவ்வப்போது வயல்களில் தேங்கியுள்ள அதிகப் படியான நீரைச் சிறு வாய்க்கால்கள் மூலம் எடுத்துச்சென்று இந்த ஆற்றில் கலக்க விடுவார்கள். விவசாயத்திற்குப் பாசன வாய்க்கால்கள் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தனவாகக்



கொள்ளப்படுகின்றனவோ அவ்வாறே வடிகால் வாய்க்கால்களும் முக்கியத்துவம் வாய்ந்தன. நாற்று விடும்போதும் ஒரு குறிப் பிட்ட கால அளவிற்குப்பிறகு அப்பால் வயல்களிலிருந்து நீரை வெளியேற்றவேண்டியது விவசாயத்தில் மிக முக்கியமானப் பணியாகும். இந்த வடிகால் வாய்க்கால்களை கோடை காலங்களில் தூர் வாருவார்கள்.

கோடை காலங்களில் விவசாயத் தொழிலாளிக்கு அதிக வேலை வாய்ப்பு இராது. அந்தக் காலத்தில் வாய்க்கால்களைத் தூர் வாருவது, கரையை பலப் படுத்துவது, புஞ்சைத் தோட்டங்களில் முள்வேலிகளை அமைத்தல் மற்றும் பலப்படுத்துதல், தென்னை மரங்களுக்கு ஆற்றுமணல் அடித்தல், மழைக்காலத்திற்கான சேமிப்பாக கருவேல மரங்களை விறகிற்காக வெட்டுதல் போன்ற பணி களை மேற்கொள்வார்கள். பொன்னுக்குண்டான் ஆற்றைக் கடந்து வடக்கு நோக்கிச் சென்றால் அங்கே ஆள் நடமாட்டம் இல்லாத, ஒரு ஐயனார் கோயில் உள்ளது. கிராம தேவதைகளுக்கான கோயில்களில் ஐயனார் கோயிலும் ஒன்று.

இந்தக் கோயில் கிராமத்தின் புறத்தே அமைந்திருக்கும். கிராமத்தில் தொற்று நோய் பரவா மல் இருப்பதற்கும், கள்ளர் பயம் நீங்கி இருத் தலுக்கும், இயற்கைப் பேரழிவு நேரிடும்போது மக்களைக் காத்திடுவதற்கும் ஐயனார் வழிபாடு கிராம மக்களால் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. குழந்தைப்பேறு இல்லாதோர் ஐயனாருக்கு வேண்டிக் கொண்டால், அவர்கள் எண்ணப்படி குழந்தைச் செல்வம் பெற்றிடுவர் என்றதொரு நம்பிக்கையும் உண்டு. தங்களுடைய எண்ணம் ஈடேறினால் சுட்ட மண்ணாலான (Terracota)குதிரைகளைக் காணிக்கையாக அளித்திடுவர். ஒரே அளவு உயரமுள்ள பல மண் குதிரைகள் ஐயனார் சிலைக்கு முன்பு இருமருங்கிலும் அணிவகுத்து நிற்கும்.

ஐயனாருடைய கரத்தில் இளம் பாளைக் குருத்தையும் கள்ளையும் வைத்து வழிபடுவர் கிராம மக்கள். இந்த ஐயனார் கோயிலைச் சுற்றி ஒன்றிரண்டு ஒற்றைக் கூந்தல் பனை மரங் களைக் காணலாம். இந்த பனைமரங்களில் மரத்தினாலான சிறு தொட்டில் களும், அவற்றின் கிளைகளில் காய்ந்த மலர் மாலை களும் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருக்கும். இந்த ஐயனார் கோயில் பொட்டல் வெளியில் இருப்பதால் காற்று பலமாக வீசிடும்போது கூந்தல் பனைமரங்களுடைய கிளைகளிலிருந்து விசித்திர ஒலி ஒன்று வெளிப்படும். சுற்றுவட்டாரத்தில் 1 கி.மீ. தூரத்திற்கு யாரும் கண்ணில் தென்படமாட்டார்கள். அந்தக் கோயிலைச் சுற்றி திருகு கள்ளி, சப்பாத்திக் கள்ளி, பனை மரங்கள், ஈச்சமரங்கள் ஆகியன அதிக அளவில் காணப்படும். இந்த இடத்தைத் தாண்டிச்செல்லும் போது பகல்நேரமானாலும் ஒரு இனம் தெரியாத அச்சம் ஏற்படும். அந்த இடத்தைக் கடக் கும் போது எவ்வளவு வேகமாக ஓடிச் செல்ல முடியுமோ, அவ் வளவு வேகமாக ஓடிச்சென்ற பிறகுதான் திரும்பிப்பார்ப்பேன்.

இவ்வாறு கீழைப் பனையூருக்குச் செல்லும்போது பொன்னுக் குண்டான் ஆற்றின் கரையோரமாக 1 கி.மீட்டர் தூரம் நடந்து செல்லவேண்டும். அப்போது அதன் கரையோரப் பகுதிகளில் குந்துமணிச் (குன்றிமணி) செடிகள் கள்ளிச் செடி களின் மீது படர்ந்திருக்கும்.

பளிச்சிடும் நீண்ட சிறகுக் கூட்டு இலைகளையுடைய ஏறு கொடி. முட்டைவடிவ விதைகளில் மூக்கு கறுப்பாகவும் உடல் முழுவதும் வெண்மையாகவோ சிவப்பாகவோ காணப் படும். இலை விதை வேர் ஆகியவை மருத்துவப்பயனுடையவை. குப்பை யிலிருந்தாலும் குந்துமணியின் நிறம் மாறாது என்பது பழமொழி. ***(நற்பண்புகளை உடையோர் கொடியவர்கள் மத்தியில் வாழ நேரிட்டாலும், அவர்கள் கொண்டிருக்கும் பண்புகளில் மாற்றம் இருக்காது என்பதே இந்தப் பழமொழி வெளிப்படுத்தும் பொருளாகும்.)***





60 ஆண்டுகளுக்கு முன்பு தங்கத்தின் எடையை நிர்ண யிக்க குந்துமணியை ஒரு அளவையாகப் பயன்படுத்திவந்தனர். ஒரு தங்கச்சங்கிலி இத்தனை குந்துமணி எடை என்று குறிப்பிடப்படும். தங்கத்தை எவ்வளவுதரம் நெருப்பிலிருட்டுக் காய்ச்சினாலும் சுத்தியல் கொண்டு அடித்தாலும் அதற்கு எந்த வருத்தமும் ஏற்படாதாம். மாறாக அதன் மினுமினுப்பு அதிகரிக்கும். ஆனால் அந்தத் தங்கத்திற்கு ஒரு மனக்குறை உண்டு; உயர்ந்த உலோகமாகிய தன்னை குந்துமணியின் உதவிகொண்டு எடைபோட்டுபார்ப்பது வருத்தத்தை அளித்திடுமாம். (இவ்வாறே, நாம் பரமபுருஷனான ஸ்ரீமந் நாரா யணனிடம் என்னுடைய கோரிக்கையை ஏன் நிறைவேற்றித் தரவில்லை என்று சண்டைபோடலாம்; ஆனால் அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு மற்றைய தேவதைகளின் காலில் விழுந்தால் ஸ்ரீமந் நாராயணனுக்கு வருத்தம் ஏற்படுமாம். நான் இவர்களுக்கு உகந்த வேளையில் காரியம் தலைக்கட்டிக் கொடுப்பதற்காக எண்ணங் கொண்டிருக்க, இவர்கள் என்னாலே படைக்கப்பட்ட இதர தேவதைகள் காலில் விழுந்து காரியைத்தை சாதித்துக்கொள்ள முற்படுகிறார்களே என்று வருத்தம் அடைவானாம். )

அனைத்து குந்துமணிகளும் ஒரே எடை கொண்டன வாக இருப்பதால் எந்தக் குந்துமணியைப் பயன்படுத்தினாலும் அதன் எடையில் மாற்றம் இருக்காது. இந்தக் குந்துமணிகளைச் சேகரித்து போகும்வழியெல்லாம் இறைத்துக்கொண்டு போவது ஒரு பொழுதுபோக்கு.

## 87) ராஜமன்னார்குடி ப்ரஹ்மோத்ஸவமும், சிறுவர்களின் கொண்டாட்டமும்

கிராமப்புறங்களில் நடைபெறும் விழாக்களே பெரும் பாலும் பொழுதுபோக்குச் சாதனங்களாக அந்தக் காலகட்டத்தில் அமைந்திருந்தன. திரைப்படங்கள் மிகமிகக் குறைந்த அளவிலேயே தயாரிக்கப்பட்டுவந்தன. ஆண்டுக்கு இரண்டு மூன்று திரைப் படங்களே வெளிவரும். அந்தத் திரைப்படங்களைப் பார்ப்பதற்கு



திருத்துறைப்பூண்டி அல்லது மன்னார் குடிக்குச் செல்லவேண்டும். வேறு ஏதாவது காரியநித்தமாக அந்த ஊர் களுக்குச் செல்லும் போதுதான் திரைப்படங்களைக் காண இயலும். ஆகவே ஆண்டுக்கு ஒருமுறைதான் திரைப்படங்களைப் பார்க்கும் வாய்ப்பு எங்கள் போல்வார்க்கும் கிடைக்கும்.

ஆண்டுதோறும் பங்குனிமாதம் மன்னார்குடியில் நடைபெறும் ராஜகோபாலனுடைய ப்ரஹ்மோத்ஸவத்திற்கு தஞ்சை ஜில்லாவின் அனைத்துப் பகுதி மக்களும் கலந்து கொள்வர். கருடஸேவை, யானை வாகனம், வெண்ணெய்த்தாழி, திருத்தேர் போன்ற விழா நாட்களின்போது மக்கள் பெருமளவில் தங்களுடைய குழந்தைச் செல்வங்களை அழைத்துக்கொண்டு உத்ஸவம் காணப்புறப்படுவர். இந்த உத்ஸவத்திற்குச் சென்று வரும் கனவிலேயே சிறுவர்களாகிய நாங்கள் மிதந்து கொண்டிருப்போம்.

## 88) கம்பஸேவை திருவிழா வெளிப்படுத்திய வைணவக் கோட்பாடுகள்

களப்பாள் கிராமத்தில் நடைபெறும் கம்பஸேவை திருவிழா குறிப்பிடத்தக்கதொன்றாகும். அந்த விழாவின்போது அல்லி-அர்ஜுனா, பவளக்கொடி, லவகுசா, சீதாராம கல்யாணம், நள-தமயந்தி சரித்திரம், நல்லத்தங்காள் கதை, அரிச்சந்திரா போன்ற நாடகங்களை இத்திருவிழாவின் போது நீடாமங்கலம் மற்றும் கும்பகோணத்திலிருந்து நாடகக் குழுவினர் வருகை தந்து நடத்தித்தருவர்.

கி.பி. 1930-1950 காலகட்டத்தில் போக்குவரத்து வசதிகள் மிகக் குறைந்த அளவிலேயே அமைந்திருந்தன. ஆயினும் ஏழுமலையானுக்கு வேண்டிக்கொண்டு திருமலைக்குச் சென்று வருவது என்பது கிராம மக்களிடையே நிலவியிருந்த ஒரு பழக்கமாகும். இரயிலில் பிரயாணம் செய்து மீண்டும் தங்கள் சொந்த ஊருக்கு வருவதற்கு குறைந்தது 20 நாட்கள் ஆகும். மக்கள்

திருமலைக்குப் புறப்படும்போது மீண்டு வந்து கம்ப ஸேவை நடத்துவதாக வேண்டிக்கொள்வர். இந்தக் கம்ப ஸேவை விழா தஞ்சை மாவட்டத்தில்மட்டும்தான் ஒரு காலத்தில் நடைபெற்ற வந்தது. கி.பி.1960ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்த வழக்கம் நின்று போய்விட்டது.

திருமலைக்குச் செல்லும் முன்பாக அந்தக் குடும்பத்தினர் மஞ்சள் ஆடை உடுத்தி ஒரு பித்தளைச் சொம்பில் திருமண் காப்பினைச் சேர்த்து, அவர்கள் நெற்றியிலும் திருமண் காப்பினை அணிந்துகொண்டு அந்த கிராமத்தில் உள்ள அனைத்து இல்லங் களுக்கும் சென்று பிக்ஷயிடுமாறு வேண்டிக் கொள்வர். அவர்கள் கொடுக்கும் அரிசி, பணம் இவற்றின் உதவியோடு திருமலை யாத்திரையை மேற்கொள்வர். திருமலைக்குச் செல்ல முடியாத வர்கள் இவ்வாறு தங்களால் இயன்ற பொருளுதவியோ, நிதி யுதவியோ செய்து அதற்குரிய பலனை அடைந்துவந்தனர். இது ஒரு ஆழமான தெய்வ நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்த செயலாகும். இவ்வாறு திருமலைக்குச் செல்லும் குடும்பத்தினர், கிராமத்தார் பிக்ஷயாக இட்ட அரிசியை வேகவைத்து உண்பர். வெளியிடங்களில் எந்த வகையான உணவையும் வாங்கி உண்ண மாட்டார்கள்.

***(இன்று எந்த இடத்திலும், எத்தகையான உணவை உட் கொள்வதிலும் நமக்கு எவ்வித தயக்கமும் இல்லை. ஒரு காலத்தில் பெரியவர்கள் வெளியில் உணவு அருந்தமாட்டார்கள். அதற்குக் காரணம் அது யாரால், எவ்வாறு, எந்த சூழ்நிலையில் தயாரிக்கப் பட்டது என்பதை அறியாத நிலையில் அத்தகைய உணவுப் பண்டங் களை உட்கொள்வது உடல் நலத்திற்குக் கேடு விளைவிக்கும் என்பதால் அத்தகையதொரு பழக்கத்தைக் கைக்கொண்டுவந்தனர். இறைவனுக்குப் படைக்காத உணவை உட்கொள்ளமாட்டார்கள். குறிப்பாக அனைத்து இனத்தைச் சார்ந்த மக்களும் கோயில்களுக்கு யாத்திரையாகச் செல்லும் போது வெளியில் தயாரிக்கப்படும் உணவை உண்பதில்லை. அதற்குக் காரணம் தாங்கள்***



***ஏற்றுக்கொண்ட விரதத்திற்கு அது களங்கம் விளைவிக்கும் என்பதால்தான். ஆனால் நிலைமை இன்று தலைகீழாக மாறிவிட்டது. திருக்கோயில்களில் பிரஸாத ஸ்டால் என்ற பெயரில் அனைத்து உணவு வகைகளும் விற்பனைசெய்யப்படுகின்றன. இன்னும் கொஞ்சம் நாளில் காபி, டீ, கொக்ககோலா, பெப்ஸி ஆகியவையும் கோயில் பிரஸாதங்களாக விற்கப்படும். தயாரிக்கப்படும் உணவில் தூய்மை இல்லை.***

***சேர்க்கப்படும் பொருள்களில் தூய்மைஇல்லை. சமைப்பவர்களோ குல ஆசாரத் தைத் தாண்டிய பீட்டர், முகம்மது அலி போன்றவர்களே! ஏனெனில் இவர்கள் பெருகிவரும் கேட்டரிங் கல்லூரிகளில் டிப்ளமோ பயின்று கைகளில் உறை மாட்டிக்கொண்டு உணவு தயாரித்து வருகின்றனர். திருமலைக்குச் செல்லும் ரயிலில் பன்னிரண்டு திருமண்காப்பை சாற்றிக்கொண்டுள்ள ஸ்வாமியும், 9 கஜம் உடுத்திய அவருடைய தர்ம பத்னியும் போட்டி போட்டுக்கொண்டு நடைமேடை விற்பனையாளர் களிடமிருந்து உணவுப்பண்டங்களை வாங்கி உண்ணும் காட்சியை கண்கொண்டு காணஇயலவில்லை. அன்று பிக்ஷவாங்கிய அரிசியை சமைத்து அதைமட்டும் உணவாகக் கொண்ட கிராம மக்கள் எங்கே? இந்த நவீன வேடதாரிகள் எங்கே? ஆசாரத்தின் இன்றைய அவலநிலையை சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும்.)***

திருமலையில் குடும்பத்தினர் அனைவரும் முடியைக் காணிக்கையாக அளித்தபின்னர் திருமலையப்பனை தரிசித்து கிராமத்திற்கு மீண்டு வருவர். இவர்கள் ஊர்வந்து சேர்ந்தபிறகு கம்ப ஸேவையை நடத்திடுவர். பெரும்பாலும் இந்த கம்ப ஸேவை கோடைகாலத்தில் நடைபெறும். ஊரில் உள்ள பஜனை மடத்தின் எதிரில் ஒரு கம்பத்தை நட்டு அதில் திருமலை யப்பனான ஸ்ரீவேங்கடேசனை எழுந்தருளியிருக்குமாறு வேண்டிக்கொள்வர். ஏழுநாட்கள் இந்த கம்பத்திற்குப் பூசைகள் நடைபெறும். முதல் மூன்று நாட்களுக்கு இரவில், இந்த கம்பத்துக்கு எதிரில் இடை விடாது பஜனை நடைபெறும். அடுத்த நான்கு நாட்களுக்கு இரவு 11 மணிக்கு ஆரம்பித்து விடியற்காலை 5 மணிவரை நாடகங்கள் நடைபெறும். இந்த நாடகத்தின் ஊடே அவ்வப்போது கிருஷ்ணன் அல்லது அர்ஜுனன் வேடமிட்டி ருப்போர் பல பாடல்களைப் பாடி

மக்களை மகிழ்விப்பர். சில நேரங்களில் இந்தப் பாடல்கள் அரசாங்கம் கடைபிடித்துவரும் கொள்கைகளுக்கு எதிரான பாடல்களாகக்கூட அமைந்திருக்கும். வரிச்சுமை, காவலர் அடக்கு முறை, சுமயமரியாதைக் கொள்கைகளைப் பரப்பும் பாடல்கள் ஆகியவற்றை கிருஷ்ணன் அல்லது அர்ஜுனன் வேடமிட்டோர் பாடும்போது மேடையில் ரூபாய் நோட்டு களும் காசுகளும் தூக்கி எறியப்படும்.

இவ்வாறு இடையிடையே பாடல்களைப் பாடி மக்களை மகிழ்விப்பதால் இந்த நாடகங்கள் விடியவிடிய நடை பெறும். வீடுபோய் சேர்வதற்குள் பொழுது புலர்ந்துவிடும். இந்த நாடக நடிகர் நடிகைகள் நன்றாகப் பகலில் உறங்கிவிட்டு மாலை வேளையில் ஸந்நிதி களப்பாள் குளத்திற்கு நீராட வருவர். இந்த வேடமிட்டோரை பக்கத்தில் நின்று பார்ப்பதற்கு அந்த சுற்று வட்டாரத்தில் உள்ள மக்கள் அனைவரும் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கக் கூடியிருப்பர். நடிகர் நடிகைகளை நேரில் பார்ப்பது என்பது மனித இனத்தின் ஒரு இயல்பு என்பதை இந்த நிகழ்ச்சி வெளிப்படுத்துகிறது.

இந்தக் கம்பஸேவையின்போது அனைத்து இனத்தைச் சார்ந்த மக்களுக்கும் அன்னதானம் வழங்கப்படும். இதற்கென ஊர்ப்பெரியவர்கள் கணிசமான நிதியுதவியினை வழங்குவார்கள். குறிப்பாக திருக்குலத்தோர் என்று அழைக்கப்படும் ஹரிஜனங் களுக்கு கம்பஸேவையின் முதல்நாளன்று எண்ணெய், சிகைக் காய்த்தூள் வழங்கப்படும். இவர்கள் எண்ணெய் தேய்த்து நீராடி வந்தபிறகு பஜனை மடத்திற்கு முன்பு போடப்பட்டிருக்கும் பந்தலில் அமர்ந்து உணவு உண்பர். அனைவருக்கும் வாழை யிலையில் கதம்பசாதம், தயிர்சாதம் இனிப்புப் பண்டங்கள் ஆகியவை பரிமாறப்படும். அனைவருக்கும் நிறைவான விருந்து அளிக்கப்படும். அன்றைய தினம் எத்துணை நபர்கள் வந்தாலும் அவர்கள் அனைவர்க்கும் உணவு அளிக்கப்படும். அன்று இரவு விடிய விடிய பஜனை நடைபெறும்.



**குலம்தாங்குசாதிகள் நாலிலும்கீழிழிந்து✸ எத்தனை**
**நலந்தானிலாத சண்டாளசண்டாளர்களாகிலும்✸**
**வலந்தாங்குசக்கரத்தண்ணல் மணிவண்ணற்காளென்றுஉள்**
**கலந்தார்✸ அடியார்தம்அடியார் எம்மடிகளே. (3-7-9)**

என்ற நம்மாழ்வாரின் திருவாய்மொழி பாசுரத்திற்கு இலக் கணமாய் அமைந் திருப்பது இந்தக் கம்பஸேவை நிகழ்ச்சி.

ஸ்மார்த்தர்கள் திருமலைக்குச்சென்று வந்தால் 'ஸமாரா தனை' (வழிபடுதல், ப்ராஹ்மண போஜனம்) என்ற பெயரில் இந்த நிகழ்ச்சியை நடத்திடுவர். ஸ்ரீவைஷ்ணவர்கள் அளித்திடும் அன்னதானத்திற்கு 'ததீயாராதனம்' என்ற பெயர் சூட்டப் பட்டுள்ளது. உலகத்திலே சிறந்த கொடை, தக்க நேரத்தில் அளித்திடும் உணவாகும். மனிதனுக்குப் பொருளாக எவ்வளவு தந்தாலும் அவனுடைய ஆசை அடங்குவதில்லை; மாறாக அது பேராசையாகக் கொழுந்துவிட்டெரியும். ஆனால் அன்ன தானத்தைப் பெற்றுக்கொள்வோர் தம்மு டைய தேவை நிறைந்த அளவிலேயே 'போதும் போதும்' என்று மன நிறைவுடன் பலமுறை கூறிடுவர். ஆகவே இதுவொன்றே நிறைவான கொடையாகும். அனைத்து உயிரினங்களிலும் அந்தர்யாமியாய் ஸ்ரீமந்நாராயணன் எழுந்தருளியிருக்கிறான். அவனுடைய ஐந்து நிலைகளில் ஒன்று அந்தர்யாமித்வம். அந்த அந்தர்யாமியை ஆராதிப்பது உயர்ந்த தர்மமாகும். இதுபற்றியே திருமங்கை யாழ்வாரைத் திருத்த முற்பட்ட குமுதவல்லி, தான் அவரை மணந்து கொள்ள வேண்டுமானால் நாள்தோறும் ஆயிரம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் ததீயாராதனம் செய்திட வேண்டும் என்ற நிபந்தனையை விதித்தாள்.

## 89) காமன் பண்டிகையும் ரதியின் ஓலமும்

மாசி மாதத்தில் நடைபெறும் கிராமத் திருவிழாக்களில் ஒன்று காமன் பண்டிகை. தன்னுடைய தவத்தை மலர் அம்புகளை

எய்து கலைத்த மன்மதனை நெற்றிக்கண்ணால் எரித்து சாம்ப லாக்கி விட்டார் சிவபெருமான். மன்மதனுடைய பிரிவை நினைத்து வாடி நின்ற ரதியின் வாட்டத்தைப் போக்குவதற்கு மன்மதன் அவளுடைய கண்களுக்கு மட்டும் தெரிவான் என்ற வரம் சிவபெருமானால் அளிக்கப்பட்டது. மன்மதனுக்கு 'அனங்கன்' என்ற தொரு பெயரும் உண்டு.

**தையொரு திங்களும் தரைவிளக்கித்**
**தண்மண்டலமிட்டுமாசிமுன்னாள்★**
**ஐயநுண்மணற்கொண்டுதெருவணிந்து**
**அழகினுக்கலங்கரித்து அனங்கதேவா!**
**உய்யவுமாங்கொலோவென்று சொல்லி**
**உன்னையும் உம்பியையும் தொழுதேன்★**
**வெய்யதோர்தழலுமிழ்சக்கரக்கை**
**வேங்கடவற்கு என்னை விதிக்கிற்றியே.**

என்று ஆண்டாள், நாச்சியார் திருமொழி முதல் பதிகத்தில் கண்ணனோடு தன்னைக் கூட்டி வைக்கும்படி காமனைத் தொழுது பத்து பாசுரங்களை அருளிச் செய்துள்ளாள்.

குறிப்பாக வேளாளர் வாழும் தெருக்களின் ஒரு பகுதியில் கரும்பை நட்டு அதன் நடுப்பகுதியில் சாணியிலான வரட்டி யைக் கட்டுவித்தபிறகு அதில் கண், மூக்கு, வாய் போன்ற அவயவங் களைச் சுண்ணாம்பால் வரைந்து அந்தக் கரும்பிற்கு மலர் மாலையை அணிவித்து ஏழுநாட்கள் இரவில் காமன் பண்டி கையைக் கொண்டாடுவர். மன்மதனைப் பறிகொடுத்த ரதி பாடும் பாடல்களாக நாட்டுப்புறப் பாடல்கள், தமுக்கின் இசையுடன் இணைந்து பாடப்படும். பெரும்பாலும் இந்த சோககீதம் இரவு பதினோரு மணிக்குமேல் இசைக்கப்படும். இதன் ஒலி ஸந்நிதி களப்பாளில் உள்ள எங்கள் வீடுவரை கேட்கும். ஒலிபெருக்கி ஸாதனங்கள் இல்லாமல் அந்த இரவின் அமைதியில் பாடப்படும் பாடல்கள் வரி உள்ளத்தில் ஒரு இனம்தெரியாத சோகத்தை



ஏற்படுத்தும். ***(பொருள் பொதிந்த இந்த நாட்டுப்புறப் பாடல்களைப் பாடுவோர் இன்று இல்லை. பல்கலைக் கழகங்களில் திரு.புஷ்பவனம் குப்புசாமி, திரு.என் வானமாமலை போன்றவர்களுடைய பெரு முயற்சியால் நாட்டுப்புறப் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன.)*** லாவணி என்பது ஒருவகை இசைக்கூத்து. இதில் இரண்டு கட்சியினரில் ஒரு குழுவினர் நிகழ்ச்சியை ஆதரித்தும் மற்றொரு குழுவினர் அதற்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்தும் பாடுவார்கள். அப்போது தமுக்கின் ஓசை அந்தப் பாடல் வரிகளோடு இணைந்து இசைக்கப்படும்.



மன்மதன் இறந்தான் என்பது ஒரு குழுவினருடைய வாதமாக இருக்கும், அவன் இறக்கவில்லை, எங்கும் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பது மற்றொரு குழுவினருடைய வாதமாக இருக்கும். இவ்வாறு வாதிடும்போது இதிஹாஸ புராண நிகழ்ச்சி களை மேற்கோள்காட்டி அவரவர் தம் கருத்துக்களைத் தெரிவித் திடுவர். மன்மதன் எரிக்கப்பட்ட பின்பு இத்தகைய வாதங்கள், பிரதி வாதங்கள் நடைபெறும். இதில் பங்கு கொள்வோர் அனைவரும் இறந்தவீட்டிற்குச் சென்று வருவது போன்ற நிலையை அடைவதால் குளத்தில் குளித்து விட்டுத்தான் அவரவர் வீட்டிற்குச் செல்வர்.

ஐந்தாம் வகுப்பில் என்னுடன் படித்துக்கொண்டிருந்த சிவப்புண்ணியம் என்ற மாணவன் ஒவ்வொரு ஆண்டும் கையில் கங்கணம் அணிந்து இந்தவிழாவில் பங்குகொள்வான். நாங்கள் இருவரும் எட்டாம் வகுப்புவரையில் அந்தப் பள்ளிக்கூடத்தில் ஒன்றாகப் படித்துவந்தோம்.

***(இத்தகைய காமன் பண்டிகை விழாவில் பாடப்படும் பாடல்கள் தஞ்சை மராட்டிய மன்னர்கள் காலத்தில் புனையப் பட்டன என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். மராட்டிய மாநிலத்தில் காமன் பண்டிகைவிழா சிறப்பாகக் கொண்டாடப் பட்டுவந்ததால் அவர்கள் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்த காலத்தில், லாவணி என்ற மராட்டிய இசைப் பாடல்கள் தமிழ்நாட்டில் வேரூன்றின. மராட்டியர் வருகைக்கு முன்பு தமிழ்நாட்டில் காமன் பண்டிகைக் கொண்டாடப்பட்டு வந்த போதிலும் மராட்டியர்களுடைய வருகை ஒரு புதிய மாற்றத்தை உண்டுபண்ணியது.)***

## 90) பதினெட்டாம்பெருக்கு

**உழவர் ஓதை; மதகு ஓதை,**
**உடைநீர் ஓதை, தண்பதங் கொள்**
**விழவர் ஓதை, சிறந்து ஆர்ப்ப**
**நடந்தாய்; வாழி, காவேரி!**



**விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப**
**நடந்த எல்லாம் வாய்காவா**
**மழவர் ஓதை வளவன் - தன்**
**வளனே; வாழி, காவேரி!**

***(கானல்வரி - காவிரியை நோக்கிப் பாடியன - 2:4)***

***(உழவரின் ஏர்மங்கல ஓசையும், மதகிலே நீர் வடிகின்ற ஓசையும், வரப்புகளை உடைத்துப் பாய்கின்ற நீரின் ஓசையும், புதுப் புனல் விழாக்கொண்டாடும் மக்களின் மகிழ்ச்சி ஆரவாரமும் மிகுதியாக இருமருங்கும் ஆர்ப்பரிக்க, நீ நடந்து வருபவள். விழாக் கொண்டாடு வோரின் ஆரவாரமும் சிறந்து ஒலிக்க நீ நடந்தாயே, அஃதெல்லாம், அரணிடத்தைக் காவல் செய்வதும், வேண்டாமைக்கு ஏதுவாகிய வீரமறவர்களின் போர்முழக்கத்தினை உடையதுமான சோழனது ஆட்சி வளனின் பயனேயாகும் என்பதை நீயும் அறிவாயாக. காவேரியே, நீ வாழ்வாயாக!)***

**பூவர் சோலை மயில் ஆலப்**
**புரிந்து குயில்கள் இசைபாடக்,**
**காமர் மாலை அருகு அசைய**
**நடந்தாய்! வாழி, காவேரி!**

*(கானல்வரி - காவிரியைநோக்கிப் பாடியன 11 : 26)*

***(பூக்கள் மலிந்த சோலையிலே மயில்கள் ஆடும்; குயில்கள் தாமே விரும்பி இனிதாக இசைபாடும்; விருப்பம் விளைவிக்கும் மாலைகள் அருகிலே அசையும்; இவற்றினூடே நீயும் நடந்தாய். காவிரியே நீ வாழ்க!)*** என்று சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகளால் போற்றப்பட்ட காவிரி தஞ்சை மாவட்டத்தை வளப்பம் நிறைந்த பூமியாகச் செய்து கொண்டிருக்கிறது. இந்தக் காவிரி அன்னை குதூகலித்துக் கொண்டு பாய்ந்தோட அந்த மகிழ்ச்சியினை மக்கள் கொண்டாடும் முகத்தான் பதினெட்டாம் பெருக்கு விழா அனைத்து தஞ்சைமாவட்டத்துக் கிராமங்களிலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.





அன்றைய தினம் வளையல், கருகுமணி (மகளிர் உட் கழுத்தில் அணியும் கறுப்பு மணிவகை), மஞ்சள்கயிறு, வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு ஆகிய மங்கலப் பொருட்கள் காவிரி நதியில் சேர்க்கப்படும். கரையோரத்தில் தேங்காயை உடைத்து கற்பூரம் கொளுத்திக் காவிரி அன்னையை பெண்கள் வழிபடுவர். அதன் பிறகு காவிரி நீர் முழங்காலைத் தொட்டுக் கொண்டு செல்ல விதவிதமான சுவைமிக்க சித்ரான்னங்களை உண்டு மகிழ்வர். அன்றையதினம் ஒவ்வொரு தெருவிலும் உள்ளவர்கள் காவிரிநதிக்கரையில் இவ்வாறு ஒன்றுகூடி உண்டு மகிழ்வர்.

களப்பாளில் நாங்கள் குடியிருந்த பகுதியிலிருந்து சாளுவ னாற்றுக்குச் செல்லவேண்டுமானால் இரண்டு கிலோ மீட்டர் தூரம் வாய்க்கால் வரப்புகளூடே நடந்து செல்ல வேண்டும். அதனால் ஸந்நிதி களப்பாளில் உள்ளோர் குளத்தின் படித்துறையில் காவிரி அன்னைக்கான வழிபாட்டினைச் செய்து உண்டு மகிழ்வர். ஆனால், நான் பிறந்த ஊராகிய கீழைப்பனையூரில் எங்கள் வீட்டிற்கு பின்புறம் முள்ளியாறு 'நுங்கும் நுரையுமாய்' ஆடி மாதத்தில் குதித் தோடி வரும். ***(நுங்கு என்பது இளம் பனங்காய்களைக் குறிக்கும். நுரை யென்பது நீர்க் குமிழ்களின் தொகுதியாகும். வெள்ளம் கரைபுரண்டு வரும்போது கரையோரத்தில் பனைமரங்களிலிருந்து விழுந்த காய்கள் ஆற்று வெள்ளத்தில் நுரையுடன் கூடிவரும். இதையே நுங்கும் நுரையும் கூடிய நீர் பெருக்கென்று வர்ணிக்கப்படுகிறது.)*** அக்ரஹாரத்தில் உள்ள அனை வரும் ஆற்றின் கரையோரத்தில் இருந்த மாமரப் படித்துறையில் ஒன்றுகூடி உண்டு மகிழ்வோம். அன்று பெண்கள் விதவிதமான வண்ணங்களில் பட்டாடை உடுத்தி, புதிய வளையல்களை அணிந்து வருவர்.

## 91) துலாக் காவிரி புனிதக் குளியல்

ஐப்பசி மாதத்தில் காவிரியில் துலாஸ்நானம் செய்வது புனிதச் சடங்காக மேற்கொள்ளப்பட்டுவருகிறது. கீழைப் பனையூர்

கிராமத்தில் அனைவரும் ஐப்பசி மாதம் முழுவதும் காவிரியின் கிளைநதியான முள்ளியாற்றில் குளித்து மகிழ்வர். ஐப்பசி மாதத்தின் கடைசி நாள் குடமுழுக்கு என்றும், அதற்கு அடுத்த நாள் முடவன் முழுக்கு என்றும் இந்த விழா இன்றும் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த மாதத்தின் 30 நாட்களிலும் காவிரியில் குளித்து விட்டு தேங்காய், பழம் நைவேத்யம் செய்வதை ஒரு கடமையாகக் கொண்டுள்ளனர் தஞ்சை மாவட்டத்து மக்கள்.

முடவன் ஒருவன் காவிரியில் நீராடுவதற்காக தொலை தூரத்திலிருந்து புறப்பட்டு வந்ததாகவும், அவன் வருவதற்குள் துலா மாதம் முடிந்துவிட்டதால் வருத்தமுற்றிருந்தபோது காவிரி அன்னை அவனுக்கு ஆறுதல் அளிக்கும் பொருட்டு ''கார்த்திகை முதல்நாளில் நீ நீராடுவதால் ஐப்பசி முப்பது நாளும் நீராடிய பலத்தினைப் பெறுவாய்'' என்று கூறியதை நினைவுகூறும் பொருட்டு முடவன் முழுக்கு கொண்டாடப்படுகிறது. ஆகவே காவிரியில் 30 நாளும் நீராடிய பலனை ஒருவர் கார்த்திகை முதல் நாள் நீராடும்போது பெறுவார் என்று பெரியோர்கள் கூறுவர்.

தஞ்சை மாவட்டத்தில் மிகச்சிறப்பான விழாவாக 'துலா காவேரி ஸ்நானம்' மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஐப்பசி மாதத்தில் தலைக்காவிரியில் ஸ்நானம் செய்வதும் மிகப் புனித மாகக் கருதப்படுகிறது.

## 92) காவிரி நதியின் உற்பத்தியும், கடலரசனுடன் கலத்தலும்

தஞ்சை மாவட்டத்தின் உயிர் நிலையாக விளங்குவது காவிரிநதி. 'வான்பொய்த்திடினும் தான் பொய்யா காவிரி' என்று காவிரி அன்னை கொண்டாடப்படுகிறாள். உற்பத்தியாகும் குடகிலிருந்து கடலில் கலக்கும் இடமான பூம்புகார் வரை காவிரியின் நீளம் 756 கி.மீ. ஆகும். மைசூர் பகுதியில் 'ப்ரஹ்ம கிரி' மலைத்தொடரில், கடல்



மட்டத்திற்கு மேல் 1320 மீட்டர் உயரத்தில் அமைந்து 'ஸஹ்யாத்ரி' மலைப்பகுதியில் காவிரி உற்பத்தியாகின்றது. தலைக்காவிரி என்று கொண்டாடப் படும் இந்த இடத்தில் நான்கடி நீளம், நான்கடி அகலம் கொண்ட ஒரு சிறிய குளத்தில் வந்து சேரும் சுனை நீரே காவிரி உற்பத்தியாகும் இடமாகும். அங்கு தோற்றமளிக்கும் காவிரி, மலைகளின் அடிப்பகுதிகளில் பாய்ந்தோடி 'பாகமண்டலா' என்னும் ஊரில் வெளிப்படுகிறது. இங்கு காவிரி நதியுடன் 'கனகா' மற்றும் 'சுஜ்ஜோதி' ***(இந்த நதி கண்ணுக்கு புலப்படுவதில்லை.)*** ஆகிய நதிகள் கூடுகின்றன. அந்த இடத்திலிருந்து அடர்ந்த காடுகளி னூடே பாய்ந்தோடும் காவிரி நதியுடன் ஹேமாவதி, தொப்பையாறு, சரபங்கா, மணிமுத்தாறு, கபினி ஆகிய ஆறுகள் கூடுகின்றன.

காவிரி நதியின் குறுக்கே கி.பி.1911ஆம் ஆண்டு மாமேதையான விஸ்வேஸ்வரய்யாவின் பெருமுயற்சியால் கிருஷ்ணராஜ ஸாகர் என்றழைக்கப்படும் அணை கட்டப்பட்டது. இந்த அணை 40 மீட்டர் உயரமும், 260 மீட்டர் நீளமும் கொண்டது. இதில் தேக்கி வைக்கப்படும் நீரின் பரப்பளவு 122 சதுரமைல் ஆகும். புகழ்பெற்ற 'பிருந்தாவன்' தோட்டம் இதன் கரையில் அமைந்துள்ளது. சிவசமுத்திரத்தில் நீர் வீழ்ச்சியாக கீழே பாயும் காவிரிநதியோடு கண்வராறு கூடுகின்றது. தர்மபுரிக்கு அருகில் 'ஹொக்கனேக்கல்' எனப்படும் இடத்தில் சமவெளியில் பாய் கின்றது காவிரி நதி. 'ஹொகே' என்ற சொல் கன்னட மொழியில் புகையைக் குறிக்கும். இந்த இடத்தில் காவிரி மேடான இடத்திலிருந்து கீழே பாயும்போது நீர்த் திவலைகள் புகைபோன்ற ஒரு வட்டத்தை ஏற்படுத்துவதால் 'ஹொக்கனேக்கல்' என்ற பெயர் அமைந்துள்ளது. அதன் பிறகு காவிரி நதி மேட்டூர் அணையில் தேக்கி வைக்கப் படுகிறது.

***(20.7.1925-ஆம் நாள் இந்த அணை கட்ட ஆரம்பிக்கப்பட்டு, 21.8.1934-ஆம் நாள் இந்த அணை கட்டி முடிக்கப்பட்டது. அப்போதைய சென்னை மாகாண கவர்னரான திரு.ஸ்டான்லி என்பவரால் காவிரி நீர் பாசனத்திற்கு திறந்து விடப்பட்டது. இந்த அணையின் உயரம் 214 அடி,***

***நீரின் கொள்ளளவு உயர்ந்தபட்சம் 120 அடி. இதில் தேக்கி வைக்கப்படும் நீர் 16,300 சதுர மைல்கள் ஆகும். இந்த அணையை வடிவமைத்தவர் திரு.Ellis என்ற பொறியாளர் ஆவார். இந்த அணையில் தேக்கி வைக்கப்படும் நீரின் மூலம் கணிசமான மின் உற்பத்தி செய்யப்படுகிறது. சுமார் 17 லக்ஷம் ஏக்கர் நிலங்களுக்கு பாசன வசதி கிடைக்கிறது.)***

காவிரி நீர் தேவைக்கேற்ப இந்த அணையிலிருந்து திறந்து விடப்படுகிறது. இவ்வாறு பாயும் காவிரி நதியுடன் பவானி, நொய்யல், அமராவதி போன்ற ஆறுகள் கூடுகின்றன. திருவரங் கத்தை அடைவதற்கு முன்பு காவிரி இரு கூறுகளாகப் பிரிந்து மீண்டும் கூடுகின்றது. திருவரங்கத்தில் பள்ளி கொண்டிருக்கும் எம்பெரு மானுடைய திருவடிகளை வருடிக் கொண்டு செல்கிறது காவிரி நதி.

**து$_3$க்$_3$தா$_4$ப்$_3$தி$_4$ர் ஜநகோ ஜநந்யஹமியம் ஸ்ரீரேவ புத்ரீ வர:**
**ஸ்ரீரங்கே$_3$ச்வர ஏதத$_3$ர்ஹமிஹ கிம் குர்யாமிதீவாகுலா |**
**சஞ்சச்சாமர சந்த்$_3$ரசந்த$_3$ந மஹாமாணிக்ய முக்தோத்காராந்**
**காவேரீ லஹரீகரைர் வித$_3$த$_4$தீ பர்யேதி ஸா ஸேவ்யதாம் ||**

*- ஸ்ரீரங்கராஜ ஸ்தவம் பூர்வ சதகம் : 21*

[‘தெளிவிலாக் கலங்கல் நீர் சூழ் திருவரங்கம்’ என்கிற படியே காவிரிநீர் கலங்கிய நிலையில் திருவரங்கத்தில் பெருக் கெடுத்து ஓடுவதற்கான ஒரு காரணத்தைப் பட்டர் கற்பனை செய்கிறார். உலகத்தில் பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தவர்கள் பொருளாதார வசதியற்றவர்களாய் இருந்தால் சீர் சிறப்புகள் எப்படியிருந்தாலும் குற்றமில்லை; அது சிறப்புடையதாக இல்லாமல் இருந்தாலும் அது ஒரு குற்றமில்லை; ஆனால், பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்தவர்கள் பொருள்படைத்தோராயிருந்தால் அதற்கீடாகச் சிறப்புகள் கனத்திருக்கவேண்டும்; இதுவே உலகியல். நதிகளுக்கெல்லாம் கடல் கணவனாகச் சொல்லப்படுகிறது. பிராட்டி திருப்பாற்கடலில் நின்றும் தோன்றினவளாதலால் கடலரசன் அவளுடைய தந்தை யாவான்.

அதனால் காவிரியாறு பிராட்டிக்குத் தாயாக உருவகப்படுத்தப்



படுகிறாள். மகளோ ஸாக்ஷாத் லக்ஷ்மி; மணவாளப்பிள்ளையோ ‘பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமே ஆள்கின்ற செங்கோலுடைய திருவரங்கச் செல்வனாராயி ருக்கி ன்றார்’. ஆக இப்படி நம் பெண்ணுக்குப் புக்கவிடமும் பிறந்தவிட முமாகிய இரண்டு பக்கங்களிலும், சீரியதாயிருக்கையாலே இந்தச் சீர்மைக்குத் தகுந்தபடியாக நாம் என்ன சிறப்புச் செய்யவல்லோம் என்று மணமகளின் தாயாகிய காவிரி கலக்கமுற்றாளாம், என்று காவிரி கலங்கிச் செல்வதற்கான காரணத்தை, ஸ்ரீபராசரபட்டர் தம்முடைய ஸ்ரீரங்க ராஜஸ்தவம் என்னும் துதி நூலில் அழகுற வர்ணித்துள்ளார்].

அதன் பிறகு இரண்டாம் கரிகாலசோழனால் கட்டப்பட்ட கல்லணையில் காவிரிநீர் தேக்கி வைக்கப்படுகிறது. அதிலிருந்து காவிரி, வெண்ணாறு போன்ற ஆறுகள் தஞ்சை மாவட்டத்தை வளமிக்க பூமியாக்கப் பிரிந்து செல்கின்றன. கொள்ளிட நீர் கல்லணையிலிருந்து 108 கி.மீ.தூரத்தில் உள்ள கீழணையில் [அணைக்கரை] தேக்கிவைக்கப்படுகிறது. உபரி காவிரி நீர் இங்கிருந்துதான் புகழ்பெற்ற வீராணம் ஏரிக்குச் சிற்றாறுகள் மூலம் சென்றடைகிறது. பல கிளை நதிகளாகப் பாய்ந்து வளப்பமூட்டி வரும் காவிரி பூம்புகாரில் கடலோடு சங்கமிக்கின்றது.

## 93) தீபாவளிப் பண்டிகை

*கிராமத்து மக்களால் தீபாவளிப் பண்டிகையின் போது நகரங்களில் அமைந்துள்ள ஜவுளிக் கடைகளுக்குச் சென்று புத்தாடைகள் வாங்க இயலாது. கிராமங்களில் பழக்கமான வாடிக்கையாளர்களுக்கு வெளியூர்களிலிருந்து வரும் சிறு வியாபாரிகள் புடவை, பாவாடைத் துணி, வேட்டி ஆகிய வற்றைத் தவணை முறையில் விற்பனை செய்து வருவது வழக்கம். ஆயத்த புத்தாடைகள் (Readymade Garments) அந்தக் காலகட்டத்தில் கிடையாது. உள்ளூரிலிருக்கும் தையற்காரரிடம் (Tailor) அளவு கொடுத்தே தைத்துக்கொள்ள வேண்டும். தீபாவளி அன்று இரவு*

வரை தைத்த துணிமணிகள் வந்துசேராது. வசதிபடைத்தோர் மன்னார்குடி அல்லது திருத்துறைப் பூண்டிக் குச் சென்று தமக்கு வேண்டிய புத்தாடைகளை வாங்கி வருவர். கைத்தறி வேட்டி களையும், புடவைகளையும்தான் அனைவரும் உடுத்தி வந்தனர். காந்தியின் சுதேசிக் கொள்கை களில் பற்றுடையோர் இறக்குமதி செய்யப்பட்ட ஆடைகளை வாங்க மாட்டார்கள். அவர்கள் கதர் ஆடைகளையே உடுத்தி வந்தனர்.

எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டுவந்த காலமது. நாகரிகம் என்றபெயரால் விதவிதமான பகட்டு ஆடைகளை யாரும் அணிந்துகொள்வதில்லை. தீபாவளிக்கான திண்பண்டங்கள் அவரவர் வீட்டிலேயே தயாரிக்கப்படும். தீபாவளி மருந்திற்கான பொருள்களை வீட்டிலேயே கலந்து இடித்து, சலித்து வெல்லப் பாகுவைத்து, நெய்கலந்து தயாரித்திடுவர். தீபாவளியின்போது பலவகையான திண்பண்டங்களை உட்கொள்வதால் ஏற்படும் அஜீரணக்கோளாறுகளுக்கு இது ஒரு அருமருந்தாகும். இந்த மருந்தை ஒரு மாத காலத்திற்கு பாதுகாத்து அனைவருக்கும் கொடுப்பர். கடைகளில் விற்கப் படும் இனிப்பு, காரவகைகளை மேட்டுக்குடி மக்கள் வாங்குவது கிடையாது. பாரத மாதா கூட்டுறவு பண்டக சாலையில் தீபாவளி சமயத்தில் ஜிஞ்சர்சோடா அமோக விற்பனையை எட்டும். தீபாவளி மருந்தைத் தயாரித்து உட்கொள்ள இயலாத வர்களுக்கு இந்த ஜிஞ்சர் சோடாவே உற்ற துணைவனாம். உள்ளூர்க் கடைகளில் விற்பனையாகும் ஓலை வெடி, ஒற்றை வெடி, லக்ஷ்மிவெடி, வெங்காயவெடி, கேப், துப்பாக்கி, கம்பி மத்தாப்பு, தரைசக்கரம், புஸ்வானம் போன்ற பட்டாசு வகைகளை வாங்கி தீபாவளி யினைக் கொண்டாடுவர் கிராமத்து மக்கள்.

வசதி படைத்த குடும்பத்தினரின் உறவினர்கள் தீபாவளி யின் போது உயர்ரக பட்டாசு வகைகளை, சென்னை போன்ற நகரங்களிலிருந்து வாங்கிக் கொண்டுவந்தால் ஊர்மக்கள்



அனைவரும் அவர் வீட்டு வாசலில் நின்று வெடிக்கும் பட்டாசு வகைகளைக் கண்டு களிப்பர்.



## 94) கார்த்திகை சொக்கப்பனை

கார்த்திகை மாதத்தில் கார்த்திகையன்று நாங்கள் குடி யிருந்த ஸந்நிதி களப்பாள் சிவன் கோயிலின் முன்பு சொக்கப் பனை கொளுத்தப்படும். அன்றைய தினம் குளத்தின் கரை யோரத்தில் மொட்டைத் தென்னை மரத்தை நட்டு அதைச் சுற்றிப் பனை ஓலைகளைக் கொண்டு தடுப்பும் கூரையும் அமைத்திடுவர். அன்றைய மாலைப்பொழுதில் சிவன் கோயில் கிருபாநி தீச குருக்கள் மேளதாளத்தோடும், சிவன் ஸந்நிதியில் ஏற்றப் பட்ட பெரிய அகல் விளக்கு, பொரி ஆகியவற்றோடும் இந்த சொக்கப்பனை அருகே வந்து பூஜைகளை செய்த பிறகு அவரால் சொக்கப்பனை கொளுத்தப் படும். அது சுடர் விட்டு எரியும்போது அதில் பட்டாசுகளைப் போடுவதும் உண்டு.

உள்ளூர்க் குயவரிடம் திருக்கார்த்திகைக்குப் பத்து நாட்கள் முன்னதாகவே புது அகல் விளக்குகளை வாங்கி வந்து, அவற்றை நீரில் அமிழ்த்து வைப்போம். விளக்கேற்றும்போது எண்ணெய் அகலின் உட்பகுதியில் உறிஞ்சப்படாமல் இருப்பதற்காக இத்தகைய முறை கையாளப்பட்டு வந்தது. பெரும்பாலான கார்த்திகை தீப நாளின்போது புயல் அடிப்பது அந்த கால கட்டத்தில் ஒரு வழக்க மாக இருந்தது அல்லது பெரும் மழை பெய்து கொண் டிருக்கும்.



*(வடகிழக்குப் பருவக்காற்று தமிழ கத்தின்மீது புரட்டாசி இறுதியிலும், ஐப்பசி கார்த்திகை ஆகிய மாதங்களிலும் வீசும். இதன் விளைவாக இயல்பான மழைப் பொழிவு ஏற்படுகிறது. ஆயினும் இவை ஒரு சமமான அளவில் மழையைத் தருவ தில்லை. அடிக்கடி குறைந்த காற்றழுத்த மண்டலங்கள் உருவாகி அது புயலாக மாறி, பெரும் நாசத்தை விளைவிக்கின்றது. குறிப்பாக வங்காளவிரிகுடாப் பகுதியில் இந்தப் புயல் பெரும்பாலும் ஐப்பசி மற்றும் கார்த்திகை மாதங்களில் உருவாகின்றது. சில சமயம் இந்தப் புயல் தமிழகத்தில் நாகப்பட்டினம்- புதுச்சேரிக்கு இடைப்பட்ட பகுதியில் கரையைக் கடக்கும் அல்லது ஆந்திரா நாட்டின் நெல்லூர், சிராலா, பாபட்லா, ஓங்கோல், மசூலிப்பட்டினம் பகுதிகளைத் தாக்கும். இது ஆண்டுதோறும் மக்கள் எதிர்கொள்ளும் ஓர் இயற்கைப் பேரழிவாகும்.)*

## 95) புயல் எவ்வாறு உருவாகிறது?

குறைந்த காற்றழுத்த மண்டலம் மழையைக் கொண்டு வருவதாகும். காற்றழுத்தத்துக்கும் மழைக்கும் தொடர்பு உண்டு. குறைந்த காற்றழுத்த மண்டலம் என்பதைக் ‘காற்றுப் பள்ளம்’ என்று வருணிக்கலாம். சமதரையாக இருக்கிற ஒரு வெட்ட



வெளியின் நடுவே பெரிய பள்ளம் இருந்தால் மழை நீர் அந்தப் பள்ளத்தை நோக்கி ஓடிவரும். அது போலவே பிற பகுதிகளில் காற்று அழுத்தம் சாதாரண அளவில் இருக்க, குறிப்பிட்ட பகுதியில் காற்று அழுத்தம் குறைவாக இருக்குமானால் அது பள்ளம் போல ஆகிவிடுகிறது.

காற்று அழுத்தம் அதிகமாக உள்ள இடங்களிலிருந்து குறை வான காற்று அழுத்தம் உள்ள இடத்தை நோக்கி வீச ஆரம்பிக்கிறது. குறிப்பிட்ட சூழ்நிலையில் காற்று அழுத்தம் குறைவாக உள்ள இடத்தில் காற்று வலம் இடமாகச் சுழல ஆரம்பிக்கிறது. கடலில் இவ்விதம் ‘காற்றுப் பள்ளம்’ ஏற்படும்போது அது பல பின் விளைவுகளைத் தோற்றுவிக் கின்றது.

காற்றுக்கும் எடை உண்டு. இது எந்த அளவுக்கு நம்மை அழுத்துகிறது என்பதை வைத்து காற்றழுத்தம் ‘மில்லி பார்’ என்ற அளவு முறையில் கணக்கிடப்படுகிறது. கடல் மட்டத் தில் சாதாரண நிலையில் காற்றழுத்தம் 1013 மில்லிபார் அளவில் இருக்கும். குறைந்த காற்றழுத்த மண்டலம் உருவாகின்ற இடத்தின் நடுவே காற்று அழுத்தம் 960 மில்லிபார் என்ற அளவில் இருக்கக்கூடும். ஒரு சமயம் பசிபிக்கில் கடும் புயல் உருவான இடத்தில் உலக சாதனை யாக காற்றழுத்தம் மிகக் குறைவாக 877 மில்லிபார் என்ற அளவில் இருந்தது.

முதலில் குறைந்த காற்றழுத்த மண்டலமாக ஆரம்பித்து அது ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக வலுப் பெறலாம். அதுவே பின்னர் புயலாக உருவெடுக்கலாம். குறைந்த காற்றழுத்த மண்டலத்தை மெதுவான சுழற்சி என்று வருணித்தால் புயல் என்பது அதிவேக சுழற்சியாகும். இப்படிப்பட்ட வேகமான சுழற்சியின் போது தான் புயலின் ‘கண்’ உருவாகிறது. குறைந்த காற்றழுத்த மண்டலமானது தொலைவில் உள்ள மேகங்களை அதிக அளவில் ஈர்ப்பது கிடையாது. தவிர அதன் மையத்தை சுற்றிச் சுழலும்

மேகங்களும் அதிக வேகத்தில் சுழல்வது கிடையாது. ஆனால் புயலாக மாறும்போது அது தொலைவில் உள்ள மேகங்களையும் ஈர்க்கிறது. மையத்தைச் சுற்றி மேகங்கள் வட்ட வடிவில் செங்குத்தாக சுவர்களை எழுப்பியது போல அமைந்து வேகமாகச் சுழல்கின்றன.

தீவிர காற்றழுத்தத் தாழ்வு மண்டலமாக இருந்தாலும் சரி, புயலாக இருந்தாலும் சரி, பொதுவில் அது வடமேற்குத் திசையை நோக்கி நகரும். புயல் காற்று ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் மையம் கொண்டு மண்ணிலிருந்து விண்ணை நோக்கி புனல் போல சுழன்றால் அது ‘சூறாவளி’ எனப்படுகிறது. ஒரே சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட சூறாவளிகள் தோன்றவும் வாய்ப்புண்டு. இதுவரை அதிக பட்சமாக ஒரே நேரத்தில் எட்டு சூறாவளிகள் தோன்றியுள்ளன. சூறாவளியானது புவியின் வடஅரைக் கோளப் பகுதியில் இடஞ்சுழியாகவும் சூழலும்.

சூறாவளியானது தோன்றிய ஒரு சில நிமிஷங்கள் மட்டுமே நிலத்துடன் தொடர்புகொண்டிருக்கும். அதன் பின்னர் சுழற்றிவிட்ட பம்பரத்தைப்போல சுழன்றுகொண்டே வேகமாக இடம் பெயரும். சூறாவளி தென்மேற்கு திசையில் இருந்து வடகிழக்கு திசையை நோக்கிப் பயணம் செய்யும். ஒரு மணி நேரத்துக்கு நீடிக்கும் சூறாவளி மணிக்கு 16 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில் 32 கிலோ மீட்டர் தொலைவைக் கடக்கும். பல மணி நேரங்களுக்கு நீடிக்கும் சூறாவளி மணிக்கு 97 கிலோமீட்டர் வேகத்தில் 322 கிலோ மீட்டர் தொலைவைக் கடக்கும். இத்தகைய சூறாவளியின் விட்டம் சுமார் 2.4 கிலோ மீட்டர் இருக்கும். இது பெரும் சேதத்தை விளைவிக்கக் கூடியதாகும்.

## 96) பொரியமுது

கார்த்திகை தீபத்தின்போது மண் சட்டியிலே கார் நெல்லைக் கொண்டு பொரி தயாரிக்கப்படும். கார்த்திகை



தீபத்திற்கு இரண்டு நாள் முன்பு தனியாக ஒரு அடுப்பில் இந்தப் பொரி தயாரிக்கப்பட்டு அது சுத்தம் செய்யப்படும். வெல்லப்பாகு வைப்பதற்கு அச்சு வெல்லம் பயன்படுத்தப் படுவதில்லை. இதற்கென உருண்டை வடிவில் கடைகளில் கிடைக்கும் பாகு வெல்லத்தையே பயன்படுத்துவர். ஏலக் காயுடன் சிறிய வடிவில் தேங்காய் நறுக்கப்பட்டு அத்துடன் சேர்க்கப்படும். பக்குவமாகப் பாகு வைத்த பிறகு பொரியை அதில் கலந்து, உருண்டைகளாகப் பிடிக்கப்படும். இந்தப் பொரி உருண்டைகளே எம்பெருமானுக்கு அமுதுபடிகளாகக் ஸமர்ப்பிக்கப்படும்.

இவ்வாறே அவல் பொரியும் தயாரிக்கப்படும். கார் நெல்லை ஊற வைத்து, உரலில் இடித்து, சல்லடை கொண்டு சலித்து, முறம் கொண்டு புடைத்து அவல் தயாரிக்கப்படும். இந்த அவலை வாணலியில் இட்டு பொரிக்க அவல் பொரி கிடைக்கும். அவலாகட்டும் அல்லது நெல் பொரி ஆகட்டும் அதற்குரிய தூய்மையுடன் தயாரிக்கப்பட்ட பிறகே இறை வனுக்கு அர்ப்பணிக்கப்படும். அவ்வாறு தயாரிக்கும் போது அந்தப் பண்டங்களை ருசி பார்ப்பதோ அல்லது ஒரு பகுதியை எடுத்து உண்பதோ கிடையாது. ***(இந்தப் பழக்கம் தற்போது பெரும் மாற்றம் அடைந் துள்ளது. கடைகளில் விற்கப்படும் அவல் மற்றும் பொரி விலைக்கு வாங்கப்பட்டு, அதுவே இறைவனுக்குப் படைக்கப்படு கிறது. இவ்வாறு விற்கப்படும் பொரி அல்லது அவல் அத்துணை தூய்மைப் படைத்ததாக நாம் கொள்ள இயலாது. இது காலத்தின் கட்டாயமாக இருக்கலாம். திருக்கோயில்களில், குறிப்பாக திருவரங்கம் பெரிய கோயிலில் பனிரெண்டு கலம் பொரியமுது அமுதுபடிகளில் ஒன்றாகக் கல்வெட்டுகளில் குறிப்பிடப் படுகிறது).***

## 97) வெடி மருந்து’ விஞ்ஞானி சுப்புணி

தீபாவளிக்குப் பிறகு சிறிய அளவில் சேமித்து வைக்கப் பட்டிருக்கும் பட்டாசு வகைகள் அன்றைய தினம் கொளுத்தப்

படும். ஆண்பனை மரத்திலிருந்து தயாரிக்கப் பட்ட துகள்களைக் கொண்டு சிறு சிறு பொறிகளாக வெளிப்படும் உள்ளூர் பட்டாசு வகையினை அன்று பலர் கரங்களில் காணலாம். எங்கள் தெருவில் குடியிருந்த ஜோசியர் அப்பாவு அய்யரின் இரண்டாவது குமாரர் சுப்ரமணியம், அந்தத் தெருவில் இருக்கும் குழந்தைகளுக்கு இதனைத் தயாரித்துத் தருவார். இதற்கென வயல்வெளிகளில் உள்ள ஆண் பனை மரத்தைத் தேடிக் கண்டுபிடித்து, அவர் அதில் ஏறி ஆண் விந்துகளைப் பறித்துக் கொண்டு வந்து, அவற்றை நன்றாகக் காயவைத்து, உரலில் இடித்து அதற்கென தயாரிக்கப்பட்ட ஒரு துணிப்பையில் இடிக்கப்பட்ட துகள்களை நூலிட்டுக் கட்டி வைப்பார். கார்த்திகை அன்று இந்த முடிச்சில் ஒரு நெருப்புக் கட்டியை இட்டு, ஒரு கம்பைக் கொண்டு சுழற்றினால் அதிலிருந்து பொறிகள் வெளிப்படும். இவ்வாறு கார்த்திகை யன்று 'உள்ளூ ரில் தயாரிக்கப்பட்ட, தீங்கை விளைவிக்காத பட்டாசு வகையை' வெடிப்பதில் நாங்கள் அனைவரும் உவகை கொள்வோம். எங்கள் கண்களுக்கு சுப்ரமணியம் என்ற சுப்புணி ஒரு மாபெரும் வெடிமருந்து விஞ்ஞானியாகத் தோற்ற மளிப்பார். அவர் ஏதோ ஒரு பெரிய கண்டுபிடிப்பைச் செய்துள்ளார் என்ற எண்ணமே சிறுவர்களாகிய எங்கள் மனத்தில் அப்போது தோன்றியது.

## 98) குப்பைக் கார்த்திகை

பெரும்பாலான கார்த்திகையின் போது முன்னர் குறிப்பிட்டபடி புயல் சின்னம் உருவாவதால் பெரும் மழை பெய்து கொண்டேயிருக்கும். அதைத் தொடர்ந்து வீசும் காற்றால் ஏற்றி வைக்கப்பட்ட விளக்குகள் அணைந்துவிடும். இது குறித்து நாங்கள் மிகவும் கவலைப்படுவோம். கார்த்தி கைக்கு அடுத்த நாள் 'குப்பைக் கார்த்திகை' என்று கொண் டாடுவர். கார்த்திகை மாதம் முழுவதும் வாசலில் அகல் விளக்கு ஏற்றி வைக்கப்பட்டிருக்கும். திருக்கார்த்திகைக்கு



அடுத்த நாள் ஒவ்வொரு வீட்டின் பின்புறம் அமைந்துள்ள இயற்கை உரம் தயாரிக்கப்படும் குப்பைக்குழி, காய்கறித் தோட்டம் ஆகியவற்றுக்கு அண்மையில் மிகுந்த பாது காப்புடன் அகல் விளக்குகள் ஏற்றி வைக்கப்படும். சில மணி நேரங்களுக்குப் பிறகு அவை பாதுகாப்புக் கருதி வீட்டினுள் எடுத்துச் செல்லப்படும். ஒரு வீட்டிற்கு அழகு அதன் முன்பகுதி மட்டுமல்ல, அந்த வீட்டின் பின்பகுதியும் தூய்மையாக வைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் நிகழ்ச்சியே 'குப்பைக் கார்த்திகை'.

## 99) பெருமாள் கோயில், சிவன் கோயில் விழாக்கள்

களப்பாளில் அமைந்துள்ள சிவன் கோயில் மற்றும் ஆனைகாத்த பெருமாள் திருக்கோயில்களில் கொடிமரம் கிடையாது. அந்தக் கோயில்களில் பவித்ரோத்ஸவம், ப்ரஹ்மோத்ஸவம் போன்ற பெருவிழாக்கள் நடைபெறுவ தில்லை. ஆனால் சித்ரா பௌர்ணமி, சிவன் கோயிலில் நடராஜருக்கு ஆனித்திருமஞ்சனம், புரட்டாசி மாதம் நவராத் திரி, ஐப்பசியில் தீபாவளி, கார்த்திகை மாதம் திருக் கார்த்திகை சொக்கப்பனை, மார்கழி மாதம் முப்பது நாளும் திருப்பள்ளி யெழுச்சி ***(இதை கிராமத்து மக்கள் 'திருப்பட்சி' என்று அழைப்பர்),*** சிவன் கோயிலில் மார்கழி மாதம் திருவாதிரை,ஆனைகாத்த பெருமாள் கோயிலில் வைகுண்ட ஏகாதசி பரமபத வாசல் திறப்பு, தை மாதம் மகர சங்கராந்தி, கனுப்பிடி வைத்தல், சிவன் கோயில் மாசி மாதம் சிவராத்திரி ஆகிய விழாக்கள் கொண்டாடப்பட்டு வந்தன.

முன்பே குறிப்பிட்டிருந்தபடி ஸந்நிதி களப்பாளில் அமைந்துள்ள சிவன் கோயிலில் நடை பெறும் அனைத்து விழாக்களிலும் நான் பங்கு கொண்டுள்ளேன். குறிப்பாக நவராத்திரியின் போது பெட்டியிலிருந்த ஆபரணங்களை குருக்களுக்கு எடுத்துக் கொடுக்கும் பணி என்னுடையது.

அன்றைய தினம் எந்த மாதிரியான அலங்காரம் அம்மனுக்கு ஸமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதை என்னிடம் கேட்டுத் தான் குருக்கள் அம்மன் சிலையை அலங்கரிப்பார். வைகுண்ட ஏகாதசி யன்று மட்டும் சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரத்தி லுள்ள ஆனைகாத்த பெருமாள் கோயிலுக்குச் சென்று வருவேன்.

உள்ளூர் சத்திரத்தில் வைகுண்ட ஏகாதசியையொட்டி ஐந்து நாட்களுக்கு விடிய விடிய திவ்யநாம பஜனை நடை பெறும். வைகுண்ட ஏகாதசியன்று நான் கண் விழித்திருந்து திவ்யநாம பஜனையைக் கண்டு களிப்பேன். வைகுண்ட ஏகாதசிக்கு அடுத்த நாள் துவாதசியன்று காலை ஏழு மணிக்கு 'பாரணை' நடைபெறும். அன்று அனைத்து பிராமண சமூகத் தினருக்கும் சத்திரத்தில் தான் சாப்பாடு. வைகுண்ட ஏகாதசி யன்று ப்ரஸாதமாக உட்கொள்ளும் சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கலைத் தவிர வேறு ஆகார வகைகளை உட் கொள்வதில்லை.

## 100) எங்கள் வகுப்பில் பாடம் பயின்ற 'M.K. ராதா'

களப்பாளில் வாசம் கொண்டிருந்த பிரபலமானவர் களில் இராமசாமித் தேவர் என்ற நெல் அரவை மில் முதலாளி ஒரு காந்தியவாதி. இவருடைய மகன் ராதா என்னுடைய பள்ளித்தோழன். அவனுக்கு நாங்கள் சூட்டிய பட்டப் பெயர் 'எலி ராதா' என்பதாகும். மிக மெலிந்த தோற்றத்தைக் கொண்ட வனாக இருந்ததால் இவனுக்கு இந்தப்பெயர் சூட்டப்பட்டது. எங்கள் வகுப்பில் ராதா என்ற பெயர் கொண்ட இன்னொரு மாணவனும் இருந்ததால் அவனுக்கு அன்றைய தினம் பிரபல மாய் இருந்த திரைப்பட நடிகரான 'M.K.ராதா' என்ற பெயர் சூட்டப்பட்டது. அந்த மாணவனுடைய தந்தையார் பெயர் ராமு முதலியார் என்பதாகும். பள்ளி மாணவர்களாகிய நாங்கள் அந்த மாணவனுடைய Initial ஆகிய R என்பதை மாற்றி



திரைப்பட நடிகரை நினைவூட்டும் M.K. என்ற Initialஐ கொடுத்து விட்டோம். இவன் பார்ப்பதற்கு நல்ல தோற்ற முடையவனாய் இருந்ததால் இந்தப் பெயர் அவனுக்குச் சூட்டப்பட்டது. ஒரே வகுப்பில், ஒரே பெயருடைய இரு மாணவர்கள் இருந்தால் இதுதான் நடக்கும். இவையெல்லாம் 'பள்ளிக் குறும்புகள்'. இந்தப் பெயர் வைக்கும் படலமே பள்ளிக்குறும்பின் முதற் படியாகும். இவ்வாறே ஆசிரியர் களுக்கும் புனைபெயர்கள் சூட்டப்படுவதுண்டு. மெலிந்த தோற்ற முடைய, நல்ல உயரம் கொண்ட ஆசிரியரான இராம னாதன் பிள்ளைக்கு 'ஓணான் வாத்தியார்' என்றும், வகுப்பு நடந்து கொண்டிருக்கும் போது கரும்பலகைக்குப் பின்பு, கொண்டு வரப்பட்ட மோரையும், வெண்ணையையும் விழுங்கும் 'ஏத்தக்குடி' ரங்கனாத அய்யங்கார் என்ற ஆசிரியருக்கு, 'கொக்கு வாத்தியார்' என்ற பெயரும் சூட்டப் பட்டன.

## 101) மார்கழி மாத பஜனையும் கையில் சுடச்சுட பொங்கலும்

இராமசாமித் தேவருடைய பெரும் முயற்சியால் பஜனை கோஷ்டி ஒன்று அந்த ஊரில் உருவாக்கப்பட்டது. இதில் பெரும்பாலும் வேளாளர் தெருக்களில் குடியிருப் போர் கலந்து கொண்டு ஆனைகாத்த பெருமாள் கோயிலி லிருந்து புறப்பட்டு, சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரம் தெருக்களில் கஞ்சிரா, ஜால்ரா, மிருதங்கம் ஆகியவற்றை இசைத்துக் கொண்டு திருவெம்பாவை, திருப்பாவை, ஒன்றிரண்டு திருப்புகழ் பாசுரங்கள் ஆகியவற்றைப் பாடிக்கொண்டு வருவர். இவர்கள் சிவன் கோயிலை வலம் வந்த பிறகு மீண்டும் ஆனை காத்த பெருமாள் கோயிலைச் சென்றடைவர். அங்கு அவர் களுக்கு பெருமாளுக்கு அமுது செய்விக்கப்பட்ட பொங்கல் வினியோகம் செய்யப்படும். மார்கழி மாதம் பெய்யும் பனிப்பொழிவையும் பொருட் படுத்தாது இந்த கோஷ்டியினர்

சுமார் ஆறு கிலோ மீட்டர் தூரம் பாடல்களை இசைத்துக் கொண்டே செல்வர். இந்தப் பஜனைகளில் ஓரிரு முறை நான் கலந்து கொண்டு ஆனை காத்த பெருமாள் கோயிலில் விநியோகிக்கப்பட்ட சூடான வெண்பொங்கலைப் பெற்றுக் கொண்டுள்ளேன்.

## 102) 'ஐயாவுக்கு சங்கு ஊதியாச்சு!'

மார்கழி மாதங்களில் கிராமத்தில் உள்ள 'சங்கு ஊதிப் பண்டாரம்' என்பார் அனைத்துத் தெருக்களிலும் வீட்டின் முன்பு விடியற்காலை சுமார் இரண்டு மணியிலிருந்து ஐந்து மணிக்குள் சேமக்கலத்தில் ஒலியெழுப்பிக் கொண்டு, பெரிய தொரு சங்கினை வாயில் வைத்து ஒலியெழுப்புவார். இந்த ஒலி சிறுவர்களாகிய எங்களுக்கு அச்சத்தை ஊட்டும். அந்தத் தெருவின் ஆரம்பத்தில் சங்குஊதிப் பண்டாரம் வந்து விட்டாலே, போர்வையை நன்றாக இழுத்துப் போர்த்திக் கொண்டு, ஒருவருக்கொருவர் கட்டிப் பிடித்துக் கொண்டு நடுக்கத்துடன் படுத்துக் கொண்டிருப்போம். எங்கள் வீட்டு வாசலில் அவன் ஊதும் போது அந்த ஒலி நன்றாக வெளிப்படும். இந்த சங்கு ஊதிப் பண்டாரத்திற்கு ஊர் மக்கள் அவ்வப்போது அறுவடையின் போது கொடுக்கும் நெல்லே ஜீவாதாரம் ஆகும். அந்தணர் அல்லாதார் வீடுகளில் இறந்த உடலை இடு காட்டிற்கு எடுத்துச் செல்லும் போது இந்த சங்கு ஊதிப் பண்டாரம் சங்கினை ஊதிக்கொண்டே செல்ல வேண்டும். இதற்கென அந்தப் பண்டாரத்திற்கு சிறு தொகை அளிக்கப்படும். கிராமங்களில் 'ஐயாவுக்கு சங்கு ஊதியாச்சு' என்று குறிப் பிட்டால் 'அவர் இறந்துவிட்டார்' என்று பொருள்படும். சங்கராந்தியன்று சங்கு ஊதிப் பண்டாரம் பகல் நேரத்தில் வந்து ஒவ்வொரு வீட்டிலும் கொடுக்கப்படும் அரிசி, வெல்லம், பணம் காசு ஆகியவற்றைப் பெற்றுச் செல்வார். அன்று தான் அவருடைய முகத்தோற்றத்தை சிறுவர்களாகிய நாங்கள் அச்சமின்றி பார்த்திடுவோம்.



## 103) 'பெருமாள் மாடும் YES BOSS கோட்பாடு களும்'

சங்கராந்திக்குப் பிறகு தெருவில் வரும் பெருமாள் மாடு விதவிதமான வண்ண ஆடைகளை அணிந்து கொண்டிருக்கும். அதை ஓட்டி வருபவர்களும் பல வண்ணங் களில் ஒட்டுப் போட்ட ஆடைகளை அணிந்திருப்பர்.

இதன் கொம்புகளை இணைத்து மணிகள் கட்டப் பட்டிருக்கும். கழுத்தைச் சுற்றி ஒலியெழுப்பும் சிறு மணிகளும், கால்களில் சிறு சலங்கைகளும் கட்டப் பட்டிருக்கும். நெற்றியில் திருமண்காப்பு இடப்பட்டிருக்கும். இந்த மாட்டுடன் இருவர் அல்லது மூவர் வாத்தியங்களுடன் ஒவ்வொரு வீட்டு வாசலிலும் நின்று தாங்கள் கொண்டு வந்துள்ள கருவிகளிலிருந்து விதவிதமான ஒலியினை எழுப்பிடுவர். அவர்கள் நெற்றியிலும் திருமண்காப்பு காணப் படும். 'ஐயாவுக்கு நல்ல காலம் பொறக்கிறது. அப்படித் தானே?' என்று மாட்டுக்காரன் சொன்னால் அந்தப் பெருமாள் மாடு தலையசைக்கும். அவ்வாறு தலையினை அசைத்திடும் போது விதவிதமான ஒலிகள் எழும்.



***(ஒருவரிடம் நமக்கு காரியம் ஆக வேண்டுமானால் அவர் என்ன சொன்னாலும், அதிலுள்ள உண்மையை ஆராய்ந்தி டாமல் 'ஆமாம், ஆமாம்' என்று கூறுவதை 'பெருமாள் மாடு தலையசைப்பது' போலே என்று கூறுவர். இதனை மேலா ண்மைக் கொள்கைகளில் (Management Principles) YES BOSS PRINCIPLE என்று அழைப்பர். தன்னுடைய மேலதிகாரிகள் உதிர்த்திடும் அனைத்து வார்த்தைகளுக்கும் 'ஆமாம், ஆமாம்' என்று ஆமோதிப்பவர் ஒரு 'பெருமாள் மாடு' ஆவார். ஏனெனில் யஜமானன் சொல்லும் அனைத்து வார்த்தைகளிலும் ஏதோ ஒரு பொருள் இருப்பதாக அதை அறிந்து கொள்ள இயலாத மாடு தலையாட்டுவதைப் போலத்தான், மேலதிகாரியை 'காக்கா பிடித்து' தன் காரியத்தைச் சாதித்துக் கொள்ள நினைக்கும் இவனும் 'ஆமாம் ஆமாம்' என்று தலையசைத்திடுவான். இத்தகைய ஊழியர்களின் செயலால் அந்த நிறுவனம் அழிவை நோக்கிச் செல்லுமே ஒழிய முன்னேற்றப் பாதையில் செல்லாது).***

## 104) தீமிதி

ஒவ்வொரு கிராமத்திலும், கிராமதேவதைகள் அந்த கிராமத்தின் சில குறிப்பிட்ட பகுதிகளில் கோயில் கொண்டிருக்கும். அனைத்து கிராமங்களிலும் பொதுவாகக் காணப் படும் கிராம தேவதைக் கோயிலில் மாரியம்மன் கோயிலும் ஒன்றாகும். சில கிராமங்களில் மாரியம்மனுக்கென்றும் திரௌபதியம்மனுக்கென்றும் தனிக் கோயில்கள் உண்டு. குறிப்பாக கிராமத்தில் யார் வீட்டிலும் அம்மை கண்டிருந் தால் மாரியம்மனுக்கு அபிஷேகம் செய்வது, விளக்குக்கு எண்ணெய் ஸமர்ப்பிப்பது, அங்கப்பிரதக்ஷணம் பண்ணுவது, மாரியம்மன் கோயில் வளாகத்தில் ஒரு இரவு படுத் துறங்குவது, மாவிளக்கு போடுவது போன்ற வேண்டுதல்களை மக்கள் நிறை வேற்றிடுவர். அவ்வாறு வேண்டிக் கொள்ளும்போது அந்தணர் அல்லாத குடும்பத்தினர் தீமிதி மிதிப்பதாக வேண்டிக் கொள்வர். மாரியம்மன் கோயில் திருவிழா பெரும்பாலும்



கோடை காலத்தில் நடைபெறும். தெருத் தெருவாகத் தமுக் கடித்து மாரியம்மன் கோயிலில் காப்புக் கட்டப்பட்டுள்ளது. விழா முடியும்வரை ஊரை விட்டு யாரும் வெளியூர் செல்லக் கூடாது என்று அறிவிப்பர்கள்.

***(கிராமக்கோயில்களில் காப்புக் கட்டப்பட்டது - அதாவது ரக்ஷாபந்தனம் ஆகிவிட்டது - என்று தெரிந்தாலோ அல்லது அறிவிக் கப்பட்டாலோ அந்த ஊர்மக்கள் மக்கள் வெளியூர் செல்வதையோ அல்லது வெளியூரிலிருந்து வந்தவர்கள் திருவிழா முடியும் வரை தங்கள் ஊருக்குத் திரும்பிச் செல்வதையோ தவிர்த்துவிடுவார்கள். இந்தக் கொள்கையை அந்த காலத்தில் மக்கள் முழுமையாகக் கடைபிடித்து வந்தனர்.)***

தீ மிதிக்கானப் பகுதியில் அதற்கான ஏற்பாடுகளைக் காலந்தொட்டு தச்சுத் தொழில் ஈடுபட்டிருக்கும் கைவினை ஞர் களே செய்திடுவர். தீமிதிக்கானக் குழி 10 அடி நீளமும் 3 அடி அகலமும், 9 அங்குலம் ஆழமும் கொண்டதாய் அமைக்கப்படும். இதற்கென கருவேலமரங்கள் தேவையான அளவில் அந்தக்குழியில் இடப்பட்டு எரிக்கப்படும். இந்தப் பணியானது தீமிதி தொடங்குவதற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்பு நடைபெறும். அந்தக் குழியில் இருக்கும் சாம்பலும் சிறு நெருப்புக்கட்டிகளும் நீக்கப்படும். நீண்ட உருண்டையான தடிகொண்டு குழியில் இருக்கும் நெருப்புக் கட்டிகள் ஒரே அளவில் இருக்கும்படி உடைத்துவிடப்படும். மாலை நேரங்களில் சுமார் நான்கு மணியளவில் இந்தத் தீமிதி விழா நடைபெறும். தீமிதிக்காக தயாரிக்கப்பட்டுள்ள குழியின் முகப்பில் 3 அடி நீளமும் இரண்டடி அகலமும் கொண்ட நீர்த் தொட்டி ஒன்று அமைக்கப்பட்டிருக்கும் இந்த நீர்த்தொட்டியும் தீமிதிக்கான குழியும் சமதளத்தில் இருக்கும். தீ மிதிப்பவர்கள் மஞ்சள் ஆடை உடுத்தி, கழுத்தில் மலை அணிந்து கையில்

வேப்பிலைக் கொத்துக்களை வைத்துக்கொண்டிருப்பர். தீயின் மீது தலையில் கரத்தோடு முதன் முதலில் அந்தக் கோயில் பூசாரி நடந்து செல்வார், அவரைத் தொடர்ந்து தீ மிப்பதாக வேண்டுதல் செய்துகொண்டோர் செல்வர்.

இவ்வாறு தீ மிதியில் ஈடுபட்டிருப்பவர்கள் கடை பிடிக்கவேண்டிய விரதங்களில் முக்கியமானது, காப்புக் கட்டிய நாளிலிருந்து புலால் உண்ணாதிருத்தல், மதியம் ஒருவேளை மட்டும் உணவு உட்கொள்ளுதல், மது அருந்தா திருத்தல் போன்றவற்றை கடைப்பிடித்திருப்பர். இவர்கள் அனை வருடைய வலது கரங்களிலும் மஞ்சள் கயிறு (காப்பு நாண்) கட்டப்பட்டிருக்கும்.

தீமிதி நடைபெறும் நாளன்று உண்ணா நோன்பிருந்து விரதம் முடிந்தவாறே, உணவை உட்கொள்வர். இவ்வாறு தீமிதி நடைபெறும்போது மேளம், உடுக்கை மற்றும் பறை போன்ற கருவிகளைக் கொண்டு ஒலி எழுப்பப்படும். அனைவரும் மாரியம்மன் குறித்த நாட்டுப்பாடல்களைப் பாடிக்கொண்டிருப்பர்.

***(நம்பிக்கையே வாழ்க்கையின் ஆதாரமாக அமைந்துள்ளது. மாரியம்மனின் அருளால் இவ்வாறு தீமிதியில் ஈடுபட்டு வருபவர் களுக்கு காலில் எந்தத் தீப்புண்களும் ஏற்படுவதில்லை. அவ்வாறு ஒரு வருக்குத் தீக்கொப்பளங்கள் காலில் காணப்பட்டால், அவர்கள் மேற் கொண்ட விரதத்தில் குறைபாடு நேர்ந்துள்ளது அதனால் அவர்கள் மீது அம்மன் கோபம் கொண்டுள்ளாள் என்றும் மக்கள் நம்பி வந்தனர். நம்பிக்கைகள் ஒருபுறமிருக்க இதன் பின்னணியாக அமைந்துள்ள விஞ்ஞானக் கூறுகளைக் கருத்தில் கொள்ளுதல் ஒரு தெளிவினை ஏற்படுத்தும். தீமிதிக்கான நெருப்புக் கட்டிகள் மீது நடக்கும்போது அவர்களுடைய கால்களின் புறப்பரப்பில் ஈரப்பதம் நிறைந்திருக்கும். தீயின்மீது நடக்கும்போது நீராவியின்மீதுதான் நடக்கிறார்களே யொழிய தீப்பிழம்புகளின்மீது அல்ல. கருவேல மரங்கள் எரிக்கப் படுவதால் உண்டாகும் தணலுக்கு தீயைத் தக்கவைத்துக்கொள்ளும் தன்மையும் தீயை மற்றொரு இடத்திற்கு பரப்பும் தன்மையும் மிகக் குறைந்த அளவில் அமைந்துள்ளன. மனிதர்களுடைய கால்பரப்பு தடித்தத் தோல்பகுதியைக் கொண்டது. உடலின் மற்றைய உறுப்புக்களை வெப்பம் தாக்குதற்கும் காப்பகுதியைத் தக்குதற்கும் வேறுபாடு உண்டு. சில நிமிடங்களுக்கு தீயினால் ஏற்படும் வெப்பத்தைத் தாங்கும் சக்தி காலுக்கு உண்டு. )***



இவ்வாறு நடைபெறும் தீமிதியைச் சென்று பார்ப் பதற்கு என் அம்மாவின் அனுமதி கிடைக்காது. அன்றைய தினம் வேறு ஏதாவது சாக்குபோக்கு சொல்லி சில ஆண்டு களில் இந்த விழாவை நான் கண்டதுண்டு. அப்படி நான் தீமிக்கு சென்று வந்தது என் அம்மாவிற்குத் தெரிந்தால், வாசலில் உள்ள குளத்தில் தலை முழுக்கிட்டு வேறு உலர்ந்த ஆடைகளை அணிந்துகொண்டுதான் வீட்டிற்கு உள்ளே நுழையமுடியும்.

## 105) இல்லத்தூய்மை

பழக்கவழக்கங்களையும், ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உரிய ஆசார அனுஷ்டானங்களையும் கடைபிடிப்பதில் என் தாயாருக்கு மிகுந்த பற்றுண்டு. ஒரு குடும்பத்தில் தாய் தந்தையர் ஒழுக்க நெறிகளை மேற்கொண்டால் அவர்களால் வளர்க்கப்படும் சந்ததியினர் நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக்கொள்வர்.

இல்லத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ளுதல், குளித்தபிறகு காலை உணவை உட்கொள்ளுதல், முந்தைய நாள் அணிந்திருந்த ஆடைகளை அணியாதிருத்தல் இறை வனுக்குப் படைத்த பிறகே மதிய உணவு உட்கொள்ளுதல், வெள்ளிக்

கிழமை, அமாவாசை மற்றைய பண்டிகை நாட்களில் சாணி கொண்டு இல்லம் முழுதும் தூய்மைப் படுத்துதல், சாப்பிட்ட இடத்தை சாணிகொண்டு மெழுகுதல் போன்ற பழக்கங்களை நாங்கள் கற்றுக்கொண்டோம்.

## 106) எங்கள் குடும்பத்தில் நிகழ்ந்த பிறப்பும், இறப்பும்

எங்கள் வீட்டில் நானும் என்னுடைய தமையனாரான பார்த்தசாரதியுமே மூத்தவர்கள். (எனக்கு முன் பிறந்த சந்தானகிருஷ்ணன் இரண்டு வயதில் இறந்துவிட்டான்.) நான் பிறந்த ஐந்து வருடங்களுக்குப் பிறகு பிறந்தவள் என் தங்கை கமலா. அதன்பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்து பிறந்தவன் ஸ்ரீனிவாஸன். அவன் பிறந்த இரண்டு வருடங் களுக்குப் பிறகு பிறந்தவள் இன்னொரு தங்கையான ராஜலக்ஷ்மி. அவளுக்குப் பின் பிறந்தவர்கள் பிரேமா, ராமாநுஜன், பூமாலக்ஷ்மி ஆகியோர். இவர்களில் பிரேமா, ராஜலக்ஷ்மி ஆகியோர் முறையே, 4, 20 வயதில் இறந்து விட்டார்கள். என் தமையனார் பார்த்தசாரதி 15ஆம் வயதில் அகால மரணம் அடைந்ததை முன்னரே குறிப்பிட்டு உள்ளேன்.

## 107) வீட்டு வேலைகளைச் செய்யக் கற்றுக் கொள்ளுதல்

வீட்டில் மூத்த ஆண் பிள்ளைகளான நானும் பார்த்த சாரதியுமே என் அம்மா வீட்டுக்கு விலக்கான நேரங்களில் தளிகை செய்திட வேண்டும். அவ்வப் போது குறிப்புகளைக் கேட்டு அதன்படி சமையல் செய்ய வேண்டும். அது மட்டு மல்லாமல் இட்டிலி மாவு அரைப்பது, காஃபி கொட்டை யையும், பொன்அவரை விதைகளையும் (குறைந்த அளவில்) வறுத்து, இடித்து சலித்து காஃபிபொடி தயாரித்தல், பாத்திரங் களை ஸுத்தி செய்தல், மாட்டுக்கு பருத்திக் கொட்டை அரைத்தல், புண்ணாக்கை ஊற வைத்தல், மாடு கறத்தல்



போன்ற வேலைகளை நாங்கள் இருவரும் செய்தாக வேண்டும்.

***(இந்த பொன்அவரை விதை மருத்துவ குணம் கொண்டது. தற்போது உபயோகப் படுத்தப்படும் சிக்கிரி போன்று அந்நாளில் காஃபிக் கொட்டையுடன் பொன்அவரை விதை கலந்து இடிக்கப்பட்டது. கூரான முனையையுடை கூட்டிலைகளையும் மஞ்சள் நிற மலர்களையும் தட்டையான வெடிக்கக்வடிய காய்களையும் உடையது பொன்அவரை. இதன் இலைகளை கீழா நெல்லியுடன் சேர்த்து அரைத்து சிறிதளவு மோருடன் உட்கொண்டு வந்தால் அது காமாலை நோய்க்கு அருமருந்தாகும்.)***

## 108) ஒவ்வொருவருக்கும் தெரிந்திருக்க வேண் டிய சமையற்கலை

மேல்நாடு சென்று படிக்கும்/வேலைபார்க்கும் பெரும் பாலானோர் தங்களுக்கான உணவினைத் தானே தயார் செய்து கொள்ளவேண்டிய கட்டாயத்திற்கு ஆட் படுத்தப்பட்டுள்ளனர். ஆனால் இவர்கள் தங்கள் தாய் தந்தையுடன் இருக்கும்போது சமையலறைக்குள் செல்வதில்லை. அவ்வப்போது சமையல் நுணுக்கங் களை அறிந்துகொள்வதும், தானே சமையல் செய்ய முற்படுவதும் ஒவ்வொருவருடைய வாழ்க்கைக்குத் தேவை யானதொன்றாகும்.

என்னைப் பொறுத்தவரையில் இளம் வயதில் அனைத்து சமையல் நுணுக்கங் களையும் கற்றுக் கொண்டதால் இன்று எந்தக் கவலையும் இல்லாமல் தேவைபட்டபோது எனக்கு வேண்டிய எந்த உணவுப் பதார்த்தங்களையும் தயாரித்து சாப்பிட முடியும். இது மட்டுமல்லாமல் ஆண்டுக்குத் தேவையான அப்பளம், வடாம் போன்றவற்றை தயாரிக்கும் போது உதவி செய்யவேண்டும்.

## 109) ஊருக்கு உபகாரியான எனது பாட்டி

என்னுடைய தந்தை வழி பாட்டியான செங்கமல வல்லிக்கு காதுகேளாது. அவரை எல்லோரும் பிச்சுப் பாட்டி என்றழைப்பார்கள். இளம் வயதிலேயே கணவரை பறி கொடுத்ததனால் தென்கலையாருக்கு உரிய ஆசாரப்படி வெள்ளைப்புடவையைத்தான் அணிந்திருப்பார். தென்கலை யார்களில் வைதிக கெடுபிடிகள் நிறைந்த காலத்தில் கணவன் இறந்தால் தலையை மழுங்க சரைத்தல் கிடையாது. ஆனால் ஸ்மார்த்த ப்ராஹ்மணர்கள் மற்றும் வடகலையார் வழக்கமாக கணவனை இழந்த பெண்ணின் தலையை மழுங்கச் சரைத்தல், முக்காடிட்டுக்கொள்ளுதல் போன்ற சடங்குகளை மேற் கொண்டுவந்தனர். உண்மையான புருஷன் ஸ்ரீமந் நாராயணன்; அவனுக்கு ஜீவாத்மா பத்னியாக விளங்குகிறாள். கர்மத்தின் பிடியில் சிக்கி ஒரு ஜீவாத்மா ஆணாகவும், மற்றொரு ஜீவாத்மா பெண்ணாகவும் பிறக்கின்றது. இந்த கர்மத்திற்குட்பட்டு இவர்கள் கணவன் மனைவியாக இணைகிறார்கள்.

கணவனுடைய விதி முடிந்தவாறே அவன் இறந்து படுகிறான். ஆனால் என்றும் எக்காலத்தும் கணவனாய் விளங்குபவன் ஸ்ரீமந்நாராயணன் ஒருவனே! அதனால் கணவனை இழந்த பெண்ணை அலங்கோலத்துக்கு உட்படுத்தாமல் வாழ்ந்திட வழிவகுத்திட வேண்டும் என்ற மிக உயரிய கொள்கைகளை நடைமுறைப் படுத்தியது தென் கலையாருடைய இந்த வழக்கமாகும். பெண்கள் உரிமைக்குப் போராடிய பாரதி, ராஜாராம் மோகன் ராய் போன்ற சீர்திருத்த வாதிகளுக்கு முற்பட்டு இந்த வழக்கத்தை கடுமையான வைதிக நெறிகளுக்கு அப்பாற்பட்டு நடை முறையிலே கொண்டிருந்தவர் தென்கலையார்கள். இன்று ஒரு பெண் மணமான வளா அல்லது கணவனை இழந்தவளா என்பதை



அவளுடைய புறத் தோற்றங்களைக் கொண்டு அறிந்து கொள்ள இயலாது. இன்றைக்கு அவர்கள் தலையை சரைத்துக் கொள்வதும் இல்லை; வெள்ளை ஆடையை உடுத்திக் கொள்வதும் கிடையாது.

பிறருக்கு சரீரத்தால் உதவிசெய்வதே இந்தப் பாட்டி யினுடைய குறிக்கோளாகும். கீழைப்பனையூரில் இருந்த 20 ஸ்ரீவைஷ்ணவ குடும்பங்களும் ஒன்றுக்கொன்று உறவு கொண்டவை. அவர்கள் வீட்டில் மங்கல நிகழ்ச்சிகள் மற்றும் நீத்தார் நினைவு தினங்களிலும், யாரேனும் இறந்து விட்டால் 13 நாட்களுக்கும் சரீரத்தாலான அனைத்து உதவி களையும் செய்திடுவார் இவர்.

## 110) பிரஹ்மோத்ஸவம் ஸேவிக்கச் செல்லும் மூதாட்டி யர்கள் குழு

இவர் ஆண்டின் பல நாட்களில் திவ்யதேசங்களில் நடைபெறும் உத்ஸவங்களில் மற்றையோருடன் திவ்யதேச யாத்திரையாக புறப்பட்டுச் செல்வார். குறிப்பாக திருக் கண்ணபுரம், திருக்கண்ணங்குடி, திருக்கண்ணமங்கை, திருச் சேறை ஆகிய திவ்யதேசங்களில் நடைபெறும் பல்வேறு உத்ஸவங்களுக்கு இவருடன் இவர் வயதையொத்த பாட்டிமார் களுடன் சென்று ஸேவித்து வருவார். சில நாட்கள் என்னுடைய சித்தப்பாவான ரங்கசாமி ஐயங்கார் இல்லத்திலும், பல நாட்கள் களப்பாளிலும் தங்கியிருப்பார். அப்போ தெல்லாம் எங்களுக்கு கதைகள் சொல்லி மகிழ்விப்பார். 'பாட்டி, பாட்டி கதை சொல்லு' என்று நாங்கள் அவரை சூழ்ந்துகொண்டு கேட்டால் 'வெண்கல மாமியார் கதை' 'அத்தரிபாச்சா கொழுக்கட்டை கதை' மற்றும் ஆழ்வார் ஆசார்யர்கள் ஸம்பந்தமான சில துணுக்குக் கதைகளைச்

சொல்லி எங்களை மகிழ்விப்பார். சில சமயம் கதை கேட்டுக்கொண்டே மடியில் தூங்கிவிடுவேன்.

## 111) கோரைப்பாய் முடைதல்

சம்பாக்கோரை என்ற தடித்த கோரை வகை கிராமத்துக் குட்டைகளில் வளர்ந்திருக்கும். இவை 4 அடி உயரத்திற்கு தடித்த கோரைப் புற்கள். நாம் அன்றாடம் பயன்படுத்தும் கோரைப்பாய்களில் உபயோகப்படுத்திடும் கோரை வேறு, இந்தக்கோரை வேறு. இவற்றை ஆங்காங்கே சென்று அறுத்துக் கொண்டுவந்து இளம் வெய்யிலில் காயவைத்து அவற்றின் நுனி மற்றும் அடிபாகங்களைக் களைந்து 6 அடி நீளம் 4 அடி அகலம் கொண்ட கோரை பாய்கள் மற்றும் மெல்லிய வைக் கோலை வைத்து அடைக்கப்பட்ட கோரைத் தலையணைகள் ஆகிய வற்றைத் தானே முடைவார் .

ஒரு கோரை பாயைத் தயார் செய்வதற்கு குறைந்தது இரண்டுமாதகாலம் பிடிக்கும். அவ்வாறு தயாரிக்கப்பட்ட கோரைப்பாய்களை களப்பாளிலிருந்து எங்கள் சித்தப்பா வீட்டிற்கும் அத்தை வீட்டிற்கும் இவர் மீண்டும் செல்லும் போது தலையில் சுமந்து செல்வர். சிறுவர்களாகிய நாங்கள் குளிர்காலத்தில் இதை போர்வையாகவும் பயன்படுத்திக் கொள்வோம். உளுத்தம்பருப்பு, பாசிப்பருப்பு, புளி போன்றவை களை வெய்யிலில் காயவைத்து பத்திரப்படுத்துவதற்கும் இது போன்ற பாய்களை சிறியவடிவில் என் பாட்டியார் முடைந்துத் தருவார்.

அந்தக் காலத்தில்பகலில் உறங்கும்போது பஞ்சு அடைக்கப்பட்ட தலையணைகளையோ, துணிப்போர்வை களையோ உபயோகப்படுத்தமாட்டார்கள். அவ்வாறு அவற்றில் படுத்து உறங்கினால் அது ஆசாரக் குறைவாகக் கருதப்பட்டுவந்தது. அன்று துவைத்துக் காயவைத்தத் துணிகளையும் கோரைப்புற்களால் தயாரிக்கப்பட்ட தலை யணையும் பயன்படுத்துவர். இவைதவிர சதா ஏதாவது வேலை செய்துகொண்டே இருப்பார் எனது பாட்டியார்.



## 112) அப்பளக் கச்சேரி

அப்பளம் இடுவதற்காக உளுந்தை உடைத்து, காய வைத்து, ஊறவைத்து, தோலை நீக்கி அவற்றைக் கோரைப் பாயில் நன்றாகக் காயவைத்து பின்னர் கல்இயந்திரத்தில் மாவாக அறைத்திடுவார். இதற்கென தரமுள்ள உளுந்து வகை களை அவர்கள் தேர்ந்தெடுப்பர். ***(இன்றைக்குத் தொலை காட்சியில் தரமுள்ள ஸ்ரீகோல்டு உளுத்தம்பருப்பு, துவரம்பருப்பு ஆகியவற்றைப் பற்றிய விளம்பரங்களை நாம் பார்க்கிறோம். ஆனால் அந்தக்காலத்தில் உளுந்தப்பருப்பின் தரத்தை அவர்கைள் வேறு வகைகளில் கண்டறிந்து வந்தனர். தரமற்ற எந்தப் பொருளையும் வீட்டில் உபயோகப்படுத்தமாட்டார்கள். பெரும் பாலான குடும்பங்களில் ஒரு ஆண்டிற்கான பருப்பு வகைகள் மற்றும் புளி எண்ணெய் வகைகள் சேமிக்கப்பட்டு வந்தன. தேங்காய் எண்ணெய் நாட்டு செக்கில் ஆட்டி அது உபயோகத்தில் கொள்ளப் பட்டது. இவ்வாறு செக்கில் ஆட்டப்படும் எண்ணெய்களில் உள்ள கொழுப்புப் பொருள்கள் எவ்வித இரசாயன மாற்றமும் அடைவதில்லை என்று இன்றைய விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். பெரிய இயந்திரங்களின் உதவிகொண்டு தயாரிக்கப்படும் எண்ணெயில் இரசாயன மாற்றங்கள் ஏற்பட்டு அவற்றில் உள்ள கொழுப்புப் பொருள்களும், புரதச்சத்துக்களும் மாற்றமடைவதாகக் கண்டறிந்துள்ளனர்.)***

இவ்வாறு தயாரிக்கப்பட்ட உளுத்தமாவில் தேவை யான அளவு உப்பும், பெருங்காயத்தையும், பிரண்டைச்

சாரையும் சேர்த்து நன்றாக பிசைந்து பெரும் உருண்டை களாக தயாரித்திடுவர். அவற்றை ஒருநாள் அவ்வாறே வைத்திருந்து அதற்கடுத்தநாள், வீட்டிலே தயாரிக்கப்பட்ட விளக்கெண் ணெயை அதில் சேர்த்து இரும்பு உலக்கை கொண்டு அம்மியில் நன்றாக இடித்து பிசைந்து சிறுசிறு உருண்டைகளாக தயாரித்திடுவர். இந்த உருண்டைகள் ஐந்து ஐந்து அடுக்குகளாக தயாரிக்கப்பட்டு அதன் மீது அரிசிமாவு தூவப்பட்டு பாத்திரங்களில் வைத்து மூடப்படும்.

***(பிரண்டை, சதைப்பற்றான நாற்கோண வடிவத் தண்டு களையுடைய ஏறுகொடு, பற்றுக் கம்பிகளும் மடலான இலைகளும், கொண்டிருக்கும் ஒருவகைக் கொடியாகும். சிவப்புநிற உருண்டை யான சிறிய சதைக் கனியுடையது. இதில் உருட்டுத் தண்டுகளை யுடைய மூங்கிற் பிரண்டை அல்லது கோப்பிரண்டை என்ற இனமும் காணக்கிடைக்கின்றன. வச்சிரவல்லி என்னும் பெயராலும் குறிப்பிடப்பெறும். குடல்வாயு அகற்றல், பசி மிகுத்தல், நுண்புழுக் கொல்லுதல் ஆகிய குணங்களை உடையது. பிரண்டைத் துவையல் செரியாமையை நீக்கி பசியைத் தூண்டும். அதனால்தான் ஸ்ரார்த்தா திகளில் பிரண்டை துவையலை நெய்யுடனும், அன்னத்துடனும் முதலில் உட்கொள்கின்றனர். அன்று பலவகைபதார்த்தங்கள் பரிமாறப் படுவதாலும் நெய் அதிக அளவில் சேர்த்துக்கொள்ளப்படுவதாலும் அவற்றின் செரிமானத்திற்கு தகுந்ததோர் மருந்தாக இந்தப் பிரண்டைத் துவையல் முதலில் சேர்த்துக்கொள்ளப்படுகிறது. )***

அதன் பின்பு, அதற்கென அமைந்துள்ள பலகைகளில் அப்பளமாக இடப்பட்டு இளம் வெய்யிலில் காயவைக்கப் படும். ஏனெனில், அதிக வெப்பத்தில் இவை காய வைக்கப் பட்டால் அவை உடைந்துவிடும். இவ்வாறு இடப்படும் அப்பளம் கட்டுகளாக அடுக்கி, ஈயம் பூசப்பட்ட பித்தளை சம்படங்களில் பாதுகாப்பாக வைக்கப்படும்.



***[தற்போது கடைகளில் விற்கப்படும் அப்பளங்களின் தயாரிப் பாளர்கள் பிரண்டைச்சாறை உபயோகப்படுத்துவதில்லை. அதற்கு பதிலாக சோடா உப்பு என்று அழைக்கடும் சோடியம் பை கார்பனேட் ($Na\ HCO_3$) சேர்க்கப்படுகிறது. இவ்வாறு தயாரிக்கப்படும் அப்பளங்கள் அக்காலத்தில் தயாரிக்கப்பட்ட அப்பளங்களைப் போன்று சுவை மிகுந்ததாக இருக்காது. காதுகேளாமை யோடு அவ்வப்போது வயிற்று வலியினாலும் அவதியுற்றிருந்தார் எனது பாட்டியார். அப்போதெல்லாம் சிறிது சோடா உப்பை வாயில் இட்டுக்கொண்டு நீரை அருந்துவார்கள். இதனால் வாய்க்குள் ஒரு இரசாயன மாற்றம் ஏற்பட்டு அதன் வழி வெளிப்படும் கார்பன்-டை-ஆக்ஸைடு உள்ளே செல்லும். இது செரிமானத்தைத் துரிதப் படுத்தி வயிற்றுவலியைப் போக்கிடும் குண முடையது. மேலும், உணவு விடுதிகளில் பரிமாறப்படும் அன்னம் வெண்மை நிறத்தில் இருக்கும்பொருட்டு அதில் சோடாஉப்பினை சேர்க்கிறார்கள். இதைத் தொடர்ந்து சாப்பிட்டு வருபவர்களுக்கு பலவித வயிற்று உபாதைகள் ஏற்படும். சோடா நீரில் கார்பன்- டை-ஆக்ஸைடு கரைந்திருப்பதால் அவ்வப்போது வயிற்று வலியால் அவதிப்படுபவர்கள் கடைகளில் விற்கப்படும் சோடா நீரை வாங்கி அருந்துகிறார்கள். ஆனால் ஆசாரத்தைக் கடைப் பிடிக்கும் என்பாட்டி போல்வாரான மூதாட்டிகள் கடைகளில் விற்கப்படும் மென்பானங்களை அருந்தமாட்டார்கள்.]***

## 113) ஆளவந்தாரும் தூதுவளைக்கீரையும்

என்னுடைய பாட்டி அவ்வப்போது வேலி ஓரங் களில் காணப்படும் அபூர்வ மூலிகைப்பொருளான தூது வளைக் கீரையையும், அதன் காய்களையும் பறித்துவருவார். அவ்வாறு பறித்து வந்த கீரையை சமைத்துக்கொடுத்தால், ‘முள் இருக்கிறது; நாக்கில் குத்தும், அதனால் நாங்கள் சாப்பிட மாட்டோம்‘ என்று அடம் பிடிப்போம். அப்போது, ஆள வந்தார் இந்த இலையை விரும்பி சாப்பிடுவார் என்று மணக்கால் நம்பிகள் ஆளவந்தாரைத் திருத்திப் பணி கொண்ட

வரலாற்றை எங்களுக்குக் கூறுவார் அவர். ***(அன்று பாட்டி எனக்கு சொன்ன கதையை இன்று என் பேரனுக்கு நான் அவ்வப்போது சொல்லி தூதுவளைக் கீரையை சாப்பிடச்சொல்லி வற்புறுத்தி வருகிறேன்.)***

***(தூதுவளைக் கீரை முட்களுடன் கூடிய கரும்பச்சை நிறமுடைய கொடியாக வேலிகளில் படர்ந்து கிடக்கும். இதனை தூதுளம், தூவேளை என்றும் அழைப்பார்கள். இக்கீரையில் வைட்டமின்கள் உள்ளன. இவை இரத்தத்திலுள்ள சிவப்பணுக் களைப் பலப்படுத்தி நோய் எதிர்ப்புச் சக்தியை அளிக்கின்றன. இதன் காய்களை மோரில் ஊறவைத்து, அவற்றைப் பழைய சோற்றுடன் உண்பது கிராமத்து மக்களுடைய பழக்கமாகும்.)***

## 114) செந்தூரக்கட்டியின் மருத்துவ குணம்

எம்முன்னோர்கள் தொன்றுதொட்டு அருமருந்தாக செந்தூரக் கட்டியொன்றினைப் பாதுகாத்து வந்தார்கள். வீட்டில் குழந்தைகளுக்கு வாந்தி, பேதி, பசியின்மை, ஜுரம் வந்தால் இந்தச் செந்தூரக்கட்டியைத் தேனில் குழைத்து நாக்கில் தடவிவிடுவார்கள்.

***(செந்தூரள் என்ற சொல்லின் திரிபே செந்தூரம் எனப்படு கிறது. சிவப்பு நிறப்பொடி எனப்பொருள்படும். பாதரசம்*** (Mercury Hg), ***முதலிய உலோகத்தோடு இரும்பு*** (Fe), செம்பு, (Cu), ***துத்தநாகம்*** (Zinc-Zn), ***தங்கம்*** (Aurum-Au-Gold) ***போன்ற உபரசங்கள் ஆகியவற்றை மூலிகைச் சாற்றிலோ, பொருத்தமான புகை நீராலோ அரைத்துச் செந்நிறம் காணும்வரை வறுத்தோ, புடமிட்டோ, நன்கு தணலில் வைத்து ஊதியோ எடுத்துப் பொடித்துக்கொள்வதே செந்தூரம் செய்முறையாகும். செந்தூரங்கள் 500 ஆண்டுகள் வன்மையுடன் இருக்கும்.)***



## 115) "Hurricane Light"

மின்சார வசதி இல்லாத அந்தக் காலத்தில் மண்ணெண்ணெய் விளக்கின் உதவிகொண்டுதான் இரவு நேரத்தில் வேலைகளைச் செய்வோம். ஹரிகேன் லைட் அதிக அளவு புழக்கத்தில் இருந்தது. டார்ச்லைட் மற்றும் பேட்டரி செல்கள் நடையாடாத அக்காலத்தில் இரவில் நீண்டதூரம் செல்பவர் களுக்குத் துணைவன் இந்த ஹரிகேன் லைட். என்ன காற்றடித்தாலும், எவ்வளவு மழை பெய் தாலும் அணையாது சுடர்விட்டு இந்த விளக்கு எரிந்துகொண்டிருக்கும். மெல்லிய கைப் பிடியின் உதவியால் இதை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லவர். இது தவிர வீட்டில் சுவரொட்டி என்ற பெயர் கொண்ட சிறு மண்ணெண்ணெய் விளக்குகள், சிமினி விளக்குகள் ஆகியவை உபயோகத்தில் இருந்துவந்தன. அந்தக் காலத்தில் ஒரு லிட்டர் மண்ணெண் ணெய்யின் விலை 4 அணா. (25 பைசா) இதற்கு சீமெண் ணெய் என்ற பெயரும் உண்டு. அந்தக் காலகட்டத்தில் இந்திய நாட்டில் எண்ணெய் சுத்திகரிப்புச் சாலைகள் இல்லை. அனைத்து வகை பெட்ரோலியப்பொருள்களும் ‘சீமையி லிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்ததால் இது சீமண்ணெய் ஆயிற்று’. மண்ணிலிருந்து Crude Oil எடுக்கப்பட்டு, அதிலி ருந்து பிரித்து எடுக்கப்படுவதால் மண்ணெண்ணெய் என்ற பெயர் இதற்கு அமைந்துள்ளது. இதுவே கெரசின். (Kerosene)

## 116) வீட்டு வைத்தியம்

வீட்டில் யாருக்கேனும் ஜுரம் கண்டால் உடனடி யாக கைவைத்தியத்தில் ஈடுபடுவார் எனது தாயார். இதற்கென கஷாயம் ஒன்றை தயாரித்துத் தந்திடுவார். பண்ணையில் வேலை செய்யும் மேஸ்திரி, விசாரிப்புக்காரன், நீராணி ***(வாய்க்கால்களில் ஓடும் நீரை அவ்வப்போது தடுப்பிட்டு அதன்***

***போக்கை வேண்டிய இடத்திற்கு திசை திருப்பிவிடும் நபருக்கு நீராணி என்று பெயர்.)*** தலையாரி ஆகியோருக்கும் எனது தாயார் இந்தக் கஷயாத்தைத் தயாரித்துத் தருவார். அவர்களும் காய்ச்சல் நீங்கிய பிறகு 'அம்மா நீங்க புள்ளகுட்டியோட நல்லா யிருக்கனும்' என்று வாழ்த்திவிட்டுச் செல்வார்கள்.

வேலி ஓரங்களில் காணப்படும் ஆடாதொடை, ***(நீண்ட முழுமையான ஈட்டி வடிவ இலைகளையும், வெள்ளை நிறப் பூக்களையும் உடைய குறுஞ்செடி.)*** வேப்பம் பட்டை, கறிவேப் பிலையின் ஆர்க்கு, கொத்தமல்லி விதை, சுக்கு, மிளகு, ஓமம், துளசியிலை, வெற்றிலை ஆகியவற்றை நீரில் இட்டு கொதிக்கவைத்து சிலமணி நேரங்கள் ஊறியபிறகு அதனை ஒரு வெள்ளைத்துணியில் வடிக்கட்டி அந்தக் கஷாயத்தை ஒருவர் மூன்று, நான்கு வேளை அருந்தி வந்தால் காய்ச்சல் பறந்தோடிவிடும். இதுதான் அந்தக் காலகட்டத்தில் கிராமத்தில் சுலபமாகக் கிடைக்கக்கூடிய மருந்து.

ஆறு குளங்களில் புதிய நீர் வரத்தின்போது மட்டுமே கொசுக்கள் சில இடங்களில் காணப்படும். மழை காலங்களில் சில நாட்கள் கொசுத்தொல்லை இருக்கும். ஒரு மண் சட்டியில் காய்ந்த நொச்சி, வேப்பிலைகளை இட்டு அதில் நெருப்புத் தனலைப் போட்டால் அதிலிருந்து எழும் புகையின் தாக்கத்தால் கொசுக்கள் பறந்து ஓடிவிடும். ***(தற்காலத்தில் ஆல்வுட், குட்நைட், டார்ட்டாய்ஸ், மார்ட்டீன் போன்ற கொசு விரட்டிகளில், அதிக அளவில் உடலுக்குத் தீங்கு பயக்கும் இரசாயனப்பொருள்கள் கலக்கப்படுகின்றன. இதிலிருந்து வெளிப்படும் புகையினால் கொசுக்கள் அழிவதில்லை. மாறாக இந்தப் புகையை நுகரும் மனிதர்களுக்கு பக்க விளைவுகள் ஏற்படுகின்றன. 60 ஆண்டுகளுக்குமுன் கையாண்ட முறைகளைப் பின்பற்றி நாம் ஏன் நம் உடல் நலத்தைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடாது.)***



## 117) களப்பாளில் கம்யூனிஸ்டுகளின் கலவரம்

தஞ்சை மாவட்டத்தில், காங்கிரஸ் கட்சிக்கு அடுத்த நிலையில் மக்களிடையே வேரூன்றி இருந்த மாபெரும் இயக்கம் கம்யூனிஸ்டு கட்சியாகும். களப்பாளில் சின்ன குப்பு, பெரிய குப்பு என்ற இருவர் இந்த இயக்கத்தின் முன்னோடி களாக இருந்தனர். நான் ஐந்தாம் வகுப்பு படித்துக் கொண்டி ருக்கும்போது பெரியதொரு கலகம் களப் பாளில் நிகழ்ந்தது. (அப்போது எனக்கு வயது 10) ஒருநாள் இரவு ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த விவசாயிகள் குமரப்ப முதலியார் பண்ணைவீட்டையும் அவரிடம் பணிபுரியும் மணியகாரர், கணக்கப்பிள்ளை, மேஸ்திரி ஆகியோருடைய வீடுகளை சூறையாட முற்பட்டனர். இரவு 3 மணியளவில் கையில் அரிவாள், கடப் பாறை, நீண்ட தடி போன்ற ஆயுதங் களுடன் கோஷ மிட்டுக்கொண்டு கும்பலாக ஸந்நிதிக் களப் பாளிலிருந்த பிள்ளை வகுப்பைச் சார்ந்த மணியகாரர் வீடு மற்றும் எங்கள் வீட்டு கதவுகளை உடைத்து உட்புகுந்து சூறை யாடுவதற்காக வந்தனர்.

மணியகாரர் வீடு பலப்படுத்தப் பட்டிருந்ததால் வீட்டுக் கதவை உடைத்து அவர்களால் உட்புக முடிய வில்லை. அந்த வீட்டிற்குக் கிழக்குப் பகுதியில் இருந்த எங்கள் வீடு தாழ்வான ஓட்டுப் பகுதியைக் கொண்டது. ஒருவர் அதன்மீது ஏறி திறந்த முற்றத்தின் வழியாக வீட்டிற்குள் நுழைந்துவிடலாம். அன்றையதினம் எங்கள் வீட்டின் ஓட்டின்மீது சிலர் ஏறி உள்ளே புக முற்பட்டபோது, அதிலிருந்த ஒரு சிலர் 'கீச்சு மூச்ச ஐயரு நல்லவருடா! இவரால நமக்கு எந்தத் தொந்தரவும் இல்லடா! இவர விட்டுடுங்கடா' என்று சொல்லி முன்பகுதி ஓட்டை மட்டும் சேதப்படுத்திச் சென்றார்கள். அடுத்தநாள் ஊரெங்கும் மயான அமைதி நிலவியிருந்தது. ஊருக்கு வரும்

அனைத்துப் பாதைகளிலும் கையில் தடியேந்திய கம்யூனிஸ்டுகள் காவல் காத்து வந்தனர். அப்போது எங்கள் ஊரில் காவல் நிலையம் அமைக்கப்படவில்லை.

## 118) என் தந்தையார் ஓடி ஒளிந்து சென்று அழைத்து வந்த மலபார் போலீஸ்

களப்பாளிலிருந்த மேற்கே 6 கிலோமீட்டர் தூரத்தில் இருந்த பெருகவாழ்ந்தான் என்னும் ஊருக்குச் சென்றுதான் காவல்நியத்திற்கு தகவல் தெரிவிக்கவேண்டும். அன்றைய தினம் யாரும் ஊரைவிட்டு அகலமுடியாத அளவிற்கு கம்யுனிஸ்டுகளுடைய கெடுபிடி இருந்தது. அப்போது எனது தந்தையாரை பெருவாழ்ந்தானுக்குச் சென்று போலீஸ் படையை அழைத்துவருமாறு அனுப்பி வைத்தார் எங்கள் பண்ணை முதலாளியான குமரப்ப முதலியார். அவர் சற்று குள்ளமாக இருந்ததால் கம்யூனிஸ்டுகளின் பார்வை யிலிருந்து தப்பி ஊரைவிட்டுச் செல்வதற்கு வயல்களில் வளர்ந்து நின்ற பயிர்களின் ஊடே குனிந்துசென்று 30 மணி நேரம் கழிந்து இரண்டு லாரிகளில் மலபார் ஸ்பெஷல் போலீஸ் படையுடன் ஊர் வந்து சேர்ந்தார். அதுவரை நாங்கள் எங்கள் வீட்டைவிட்டு நீங்கி சிவன் கோயில் குருக்கள் வீட்டில் தங்கியிருந்தோம். மலபார் ஸ்பெஷல் போலீஸ் வந்தபிறகு கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்த ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. அவர்களை முட்டிபோட வைத்து கருங் கற்களை பரப்பி அதன் மீது ஊர்ந்து செல்லுமாறு முதுகிலே சாட்டைகொண்டு அடித்தார்கள். இதை நாங்கள் அனைவரும் அச்சத்துடன் பார்த்துக்கொண்டிருந்தோம். உடலில் இரத்தம் சொட்ட சொட்ட அவர்களை அடித்துத் துன்புறுத்தினார்கள் மலபார் ஸ்பெஷல் போலீஸ் படையினர். இது 1948இல் நடந்தது.



## 119) இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றமும், வளர்ச்சியும்

இந்த நிகழ்ச்சியின் பின்புலத்தை அறிந்துகொள் வதற்கு தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளின் நிலை என்ன? அவர்களை வழிநடத்திய ஸ்ரீநிவாஸராவ், மணலி கந்தசாமி, களப்பாள் சின்னகுப்பு போன்றவர்களுடைய தியாக வரலாற்றை நாம் அறிந்துகொள்ளவேண்டும்.

1917ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் தேதி நடைபெற்ற ரஷ்ய புரட்சிக்குப் பின்பு இந்தியாவில் அதன் தாக்கத்தால் தொழிலாளர் வர்க்கங்கள் ஒன்றுபட்டன. ஸ்ரீ.ஆ.கூ. ஆசார்யா மற்றும் M.N. ராய் போன்றவர்கள் இந்த கம்யூனிஸ்ட் கட்சியைத் தோற்றுவித்தனர். தமிழ்நாட்டில் 1920ஆம் ஆண்டு மா.சிங்காரவேலன் மே தினத்தை பெரியதொரு விழாவாகக் கொண்டாடி தமிழ்நாட்டில் செங்கொடியை ஏற்றி வைத்தார். 1922ஆம் ஆண்டு நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தில் பலர் கைது செய்யப்பட்டு தண்டனை அடைந்தனர். அந்த இயக்கத்தில் கலந்து கொண்டவர்களில் பிற்காலத்தில் கம்யூனிஸ்டுகளின் பெருந்தலைவராக விளங்கிய க. ராம மூர்த்தி, ஓ.கு. கோபாலகிருஷ்ணன் போன்றோர் தம்முடைய தன்னலமற்றத் தொண்டால் தொழிலாளிகளுடைய நலனைப் பாதுகாப்பதற்குப் பாடுபட்டனர். 1920ஆம் ஆண்டு தொடக்கத் திலிருந்து இந்தியாவின் பல பகுதிகளில் கம்யூனிஸ்டு குழுக்கள் உருவாவதையும் அவை இன்டர் நேஷனல் கம்யூனிஸ்டு கட்சியுடன் இணைக்கப்படுவதையும் கண்ட ஆங்கிலேய அரசாங்கம், இதில் ஈடுபட்டவர்கள்மீது பல பொய் வழக்கு களைத் தொடுத்தனர்.

தேசபக்தராய் விளங்கிய ஜீவா என்ற ஜீவானந்தம் 1927ஆம் ஆண்டு செட்டிநாட்டுப் பகுதியில் ஒரு குருகுலத்தை

*நடத்திவந்தார். கம்பராமாயணத்தில் ஆழங்கால் பட்டவர். 'கம்பரசம்' எழுதிய C.N.அண்ணாதுரைக்குத் தினவடங்க மறுமொழி அளித்தவர். 1928ஆம் ஆண்டு 'சைமன் திரும்பிப் போ' 'சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை' என்று இந்தியர்கள் முழக்கமிட்டனர். இவ்வாறு முழக்கமிட்டவர்களில் ஜீவான ந்தமும் ஒருவராவார். ஆங்கிலேய அரசாங்கம் இங்கிலாந்தில் தயாரிக்கப்படும் உப்பை இந்தியாவில் விற்பனை செய்யும் பொருட்டு இங்கே உற்பத்தியாகும் உப்புமீது வரி விதித்தது. இதனால், இந்தியர்களுக்குச் சொந்தமான உப்பளங்கள் பெரும் பாதிப்பிற்கு ஆளாகி அவைகளை மூடவேண்டிய நிலைமை உருவாகியது. இதனால் கி.பி.1930ஆம் ஆண்டு மஹாத்மா காந்தி உப்பு சத்தியாகிரகத்தைத் தொடங்கினார்.*

*1930ஆம் ஆண்டு மார்ச் 12ஆம் தேதி குஜராத்தில் உள்ள தண்டியை நோக்கி சபர்மதியிலிருந்து 70 தொண்டர்களுடன் மஹாத்மாகாந்தி 247 மைல் தூரத்தை 24 நாட்களில் கடந்து தண்டி உப்பளத்தில் இறங்கி உப்பை அள்ளினார். அதே போல் தமிழகத்தில் ராஜாஜி தலைமையில் ஒரு பயணக்குழு 1930ஆம் ஆண்டு ஏப்ரல் 13ஆம் தேதி திருச்சியிலிருந்து புறப்பட்டு நடந்தே வேதாரண்யம் சென்றது. கவிஞர் நாமக்கல் ராம லிங்கம்பிள்ளை எழுதிக் கொடுத்த; 'கத்தி யின்றி இரத்தமின்றி, யுத்தமொன்று வருகுது' என்ற பாடலைப் பாடிக்கொண்டே சென்ற போராட்டக் குழுவினர் ஏப்ரல் 30ஆம் தேதி காலையில் வேதாரண்யத்திற்கு அருகிலுள்ள அகத்தியம் பள்ளியில் உப்பளத்தில் இறங்கி உப்பை அள்ளிக் கைதாயினர்.*

## 120) தோழர் ஸ்ரீநிவாஸராவ்

*உப்பு சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்தவர்களும் பங்கு கொண்டனர். இதில் ஈடுபட்டவர்களில் தோழர் P.ஸ்ரீநிவாஸராவும் ஒருவர். இவர் ஒரு மாபெரும் சமுதாயச் சிந்தனையாளர்.*



**உருகும் வேளையிலும் - நல்ல**
**ஒளிதரும் மெழுவர்த்தி**
**ஒளிதரும் வேளையிலும் - தியாக**
**உணர்வினைத் தூண்டிவிடும்.**

*உழவுத் தொழிலாளர்களின் உரிமைக்குப் போராடிய தியாகி. P. ஸ்ரீநிவாசராவ் வாழ்க்கையை இப்பாடல் படம் பிடித்துக்காட்டுகிறது. கல்லூரிப் படிப்பின்போதே அன்னிய ஆட்சியை எதிர்த்து விடுதலை வேட்கை கொண்டார் ஸ்ரீநிவாசராவ். பர்மா, ரங்கூன் நகருக்குச் சென்றவர், 23ஆவது வயதில் சென்னை வந்தார்.*

*1930களில் அன்னியத் துணிப் புறக்கணிப்பு (பகிஷ் காரம்) பேரியக்கமாகப் பரவியது; சென்னை நகரத்தில் பூக்கடை கடைத்தெருவில் லங்காஷயர் மில்துணி விற்கப் பட்ட கடையில் நாள்தோறும் மறியல் செய்வார் பி.எஸ்.ஆர்.*

*ஒருநாள் கடுமையாகத் தாக்கப்பட்ட அவர் இறந்து விட்டாரென்று கால்வாயில் போட்டுவிட்டுச் சென்று விட்டனர்; இறந்துவிட்டதாக நாளேடுகளிலும் செய்தி வந்துவிட்டது; அவர் உயிர் பிழைத்து மீண்டும் களத்தில் இறங்கியதே உயிரோவியமான நிகழ்வாகும்.*

*ஓயாத சிறைவாசம்; சென்னை மத்திய சிறையி லிருந்த போது, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்; கம்யூனிஸ்ட் தலைவர் அமீர் ஹைதர்கான் ஆகியோரும் கைதிகளாக இருந்தார்கள். அமீர் ஹைதர்கான் கொடுத்த கம்யூனிஸ்ட் அறிக்கையைப் படித்து, விளக்கம் கேட்டுத் தெளிந்தார்; சென்னை*

சிறையிலிருந்து, ஏகாதிபத்திய எதிர்ப்பு- விடுதலைப் போராளியாக மட்டுமல்லாமல், புரட்சி யாளராகவும் வெளியே வந்தார். 1940இல் 2ஆவது உலகப் போர் நடந்தபோதும் யுத்த எதிர்ப்பில் பி.எஸ்.ஆர் கைது செய்யப்பட்டார். சுதந்திரப் போராட்டத்தின் இறுதிக்கட்டம்; 1946இல் பம்பாய் துறை முகத்தில் கடற்படையினர் நடத்திய போராட்டமும் அதை ஆதரித்து நடந்த நாடு தழுவிய எழுச்சியும் பிரிட்டிஷ் ஏகாதி பத்திய ஆட்சிக்கு சாவு மணியடித்தது; இந்தப் போரா ட்டத்திலும் பி.எஸ்.ஆர் மற்றும் கம்யூனிஸ்ட் தலைவர் களுக்குப் பிடிவாரண்ட் போடப்பட்டது. பி.எஸ்.ஆர். தலை மறைவானார்; தலைமறைவு அனுபவம் நூலாக வெளி வந்தது; இது கடித இலக்கியமாகக் கருதப்பட்டது.

சுதந்திர இந்தியாவிலும் பி.எஸ். ஆருக்கு 1961 வரை போராட்டமே வாழ்க்கையாக இருந்தது. 1943இல் தமிழ் நாடெங்கும் கிராமப்புற உழவர் பெரு மக்களை ஒன்று திரட்டும் பொறுப்பை ஏற்றார்.

## 121) ஸ்ரீநிவாசராவின் தொடர்பணிகள்

பரம்பரை ஆதிக்கத்தை எதிர்க்கமுடியாமல் சிதறிக் கிடந்த கிராமப்புற மக்களை ஒன்றுதிரட்டுவதற்கு ஸ்ரீநிவாஸ ராவ் பெரும்பாடுபட்டார். மக்களோடு இரண்டறக் கலந்து மக்களின் குறைகளைக் கேட்டுத் தெரிந்து, ஏழை விவசாய மக்களையும் விவசாயத் தொழிலாளர்களளையும் ஒன்று படுத்துவதில் முன்னணித் தலைவராக விளங்கினார்.

1947ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட த்தில் பண்ணையாட்களான விவசாயத் தொழிலாளர்களின் விடுதலைக்கான கிளர்ச்சியும் சாகுபடி விவசாயிகளின் உரிமைப் பாதுகாப்பைத் தேடித்தந்த இயக்கங்கள் பெரும்



புரட்சி இயக்கங்களாகச் சித்தரிக்கப்பட்டன; இதை மறுத்து ஸ்ரீநிவாசராவ் ‘தஞ்சையில் நடப்பதென்ன?’ என்ற நூலை எழுதினார். சாதியால் சிதறுண்டு கிடந்த ஏழை விவசாயிகளும் விவசாயத் தொழிலாளர்களும் செங்கொடி இயக்கத்தின்கீழ் அணிதிரண்டு உரிமைக்காகப் போராடினார்கள். சுதந்திரம் பெறுவதற்கு முன்பே, பாதுகாப்புக்கான சட்டங்கள் இல்லாத காலத்தில், உழைக்கும் மக்களின் ஒன்றுபட்ட சக்தியினால் தஞ்சை மாவட்ட மிராசுதாரர்களைப் பணிய வைக்கமுடிந்தது. சவுக்கடி-சாணிப்பால் ஊற்றி அடிக்க மாட்டோம் என்று 1944இல் மிராசுதாரர்களைக் கையெழுத்திடச் செய்ய முடிந்தது.

சாகுபடியாளர்கள் நில வெளியேற்றத்தடைச் சட்டம், 60:40 நியாயவாரச் சட்டம் **(விளைபொருள்களில் உழுபவனுக்கு 40 சதவிகிதமும், நில உரிமையாளருக்கு 60% பங்கீடு செய்வதற்கு வகை செய்யும் சட்டம்)** குடியிருப்பு மனைச்சட்டம் போன்ற சட்டங்களைக் கொண்டு வரச் செய்ததோடு, அமலாக்கு வதற்கும் தொடர்ந்து போராடினர் கம்யூனிஸ்டுகள்.

1961ஆம் ஆண்டு நில உச்சவரம்பு மசோதாவை அப்போது ஆட்சியிலிருந்த காங்கிரஸ் அரசு கொண்டு வந்தது. ஒருவரோ-குடும்பமோ-30 ஸ்டாண்டர்டு ஏக்கர் வைத்துக் கொள்ளும் உரிமையைக் கொடுத்தது. மிச்ச நிலமே கிடைக் காத அளவு மக்களை ஏமாற்றும் அந்தச் சட்டத்தை எதிர்த்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பேரியக்கத்தை நடத்தியது. பி.எஸ்.ஆர். தலைமையில் கோவையிலிருந்தும், மணலி கந்தசாமி தலைமையில் மதுரையிலிருந்தும் 30நாள் நடைப் பயணமாகச் சென்னை நகரை வந்தடைந்தனர். செப்டம்பர் மாதத்தில் எல்லா மாவட்டங்களிலும், மசோதாவைத் திருத்தக்கோரி அறப்போர் நடந்தது. 16,000 பேர் சிறையில் அடைக்கப்பட்டார்கள். சிறையிலேயே 4 தோழர்கள்

இறந்தார்கள். சட்டத்தில் சில திருத்தங்கள் கொண்டுவர மாநில அரசு இசைந்தது. முப்பது நாள் போராட்டம் முடிவுக்கு வருவதாக 1961 செப்டம்பர் 29ஆம் நாள் கையெழுத்திட்டு அறிக்கை வெளியிட்டார் பி.எஸ்.ஆர்.

ஏற்கெனவே ஊர் ஊராகச் சுற்றித் திரிந்த அலுப்பும், தொடர்ந்த சிறைவாசமும், அடக்குமுறையில் பெற்ற விழுப் புண்களும், ஆஸ்த்மா நோயும், 1961 செப்டம்பர் 30ஆம் நாள் அந்த மாவீரனின் உயிரைப் பறித்துவிட்டது.

***(பி.எஸ்.ஆர். பிறந்தது 1907, ஏப்ரல் மாதம் 10ஆம் நாள். கர்நாடக மாநிலம் படகாரா இவரது சொந்த ஊர்; தந்தை பெயர் இராமச்சந்திர ராவ். 54 ஆண்டுகளே வாழ்ந்த பி.எஸ்.ஆருக்கு கி.பி. 2007ஆம் ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது.)***

## 122) இதே காலகட்டத்தில்......

1947ஆம் ஆண்டு நாடு விடுதலையடைந்ததை முன்னிட்டு சிறையிலிருந்த கம்யூனிஸ்டுகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். அவர்கள் மீதிருந்த வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. மாநிலச் செயற்குழுவில் இருந்த எல்லாத் தலைவர்களும் சிறையிலிருந்து விடுவிக்கப் பட்டனர். இந்த நிலைமை வெகுநாள் நீடிக்கவில்லை. ஆறு மாதங்கள் கூட ஆகாத நிலையில் 1948ஆம் ஆண்டு தொடக்கத்தில் பல தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். பலர் தலைமறை வாயினர். நாடு முழுவதும் கம்யூனிஸ்டுகள் வேட்டையாடப் பட்டனர்.

## 123) மணலி கந்தசாமியின் தொண்டு

தமிழ்நாட்டு விவசாயிகளின் மாபெரும் தலைவராக விளங்கியவர் திரு. மணலி கந்தசாமி. கி.பி.1940இல் கம்யூனிஸ்டுக் கட்சியில் சேர்ந்தார் மணலி கந்தசாமி. அதற்கு முன்பு தஞ்சை மாவட்டத்தின் பெரும் காங்கிரஸ் தலைவராக இருந்தார். காங்கிரஸ் கட்சியின் மாவட்டச் செயலாளராகப் பணியாற்றி உள்ளார். பல ஆண்டுகள் தலைமறைவு வாழ்க்கை நடத்தியவர் மணலி கந்தசாமி.



1948ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியாளர்கள் கம்யூனி ஸ்டுகளின் மீது கடுமையான அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டனர். அக்காலத்தில் தலைமறைவாக இருந்து விவசாய இயக்கத்தையும் கம்யூனிஸ்டு இயக்கத்தையும் நடத்தி வந்தார் மணலி கந்தசாமி. அப்போது அவரைப் பிடித்துக் கொடுப்ப வருக்கு பல்லாயிரம் ரூபாய்கள் பரிசாக வழங்கப்படும் என்று போலீசார் அறிவித்திருந்தனர்.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயப் பெருமக்கள் அனை வராலும் நேசிக்கப்பட்டவர் மணலி கந்தசாமி. விவசாயப் பெருமக்களால் ஆதரிக்கப்பட்டு போலீசுக்குப் பிடிபடாமல் இருந்தார். மணலி கந்தசாமி திருத்துறைப்பூண்டி தாலுகாவில் உள்ள மணலி என்ற கிராமத்தில் ஒரு நடுத்தர விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்.

பெரும் நிலச்சுவான்தார்களாக விளங்கிய வடபாதி மங்கலம் தியாகராஜ முதலியார், குன்னியூர் சாம்பசிவ ஐயர், கபிஸ்தலம் மூப்பனார், உக்கடைத் தேவர், பூண்டி வாண்டை யார், வலிவலம் தேசிகர், பட்டுக்கோட்டை நாடிமுத்துப் பிள்ளை, திருவாவடுதுறை, தருமபுரம், திருப்பனந்தாள், ஆதீனங்கள் மற்றும் பல மிராசுதாரர்கள் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை தமது கைக்குள் வைத்திருந்தனர். இவர் களுக்கெல்லாம் சிம்ம சொப்பனமாகக் காட்சி தந்தார் மணலி கந்தசாமி.

மிராசுதாரர்களின் அடியாட்கள் செய்த கொடுமைகள் வருணிக்க இயலாதவை. சாணிப்பால் புகட்டுவது, சவுக்கடி அடிப்பது, ஈவு இரக்கமின்றி சுரண்டுவது, முத்திரை மரக் காலால் அளக்காமல் தமது சொந்த மரக்காலால் அளப்பது, விவசாயிகளிடமிருந்து கூடுதல் வாரம் (விளை பொருள்கள்) பிடுங்குவது, நிலத்திலிருந்து விவசாயிகளை வெளியேற்று வது போன்ற எண்ணற்ற கொடுமைகளுக்கு ஆளாகியிருந்தனர் சேரிமக்களான விவசாயிகள்.

1943இல் தென்பரையில் ராமச்சந்திர நெடுங்காடி ஒருங்கிணைப்பாளராக இருந்தபோது, மணலி கந்தசாமி, அமிர்தலிங்கம் போன்றோருடைய முயற்சியால் விவசாயச் சங்கம் அமைக்கப்பட்டு போராட்டம் நடந்தது. அதைத் தொடர்ந்து பி.சீனிவாசராவைச் செயலாளராகவும், மணலி கந்தசாமியை உறுப்பினராகவும் கொண்ட தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அமைக்கப்பட்டது. 1945இல் மணலி கந்த சாமி, அமிர்தலிங்கம் ஆகியோர்மீது வாய்ப்பூட்டு சட்டம் போடப்பட்டது. (இவர்கள் பத்திரிகையில் கட்டுரைகள் எழுதுவதோ, மேடைகளில் பேசுவதோ சட்டவிரோதமான செயலாக அறிவிக்கப்பட்டது.)

1943ஆம் ஆண்டிற்குப் பிறகு மணலி கந்தசாமி மாவட்ட அமைப்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1946ஆம் ஆண்டு மன்னை, திருத்துறைப்பூண்டி கூட்டுத் தொகுதியில் மணலி கந்தாசாமியும் களப்பாள் குப்புவும் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டனர். ஆனால் குறைந்த வாக்குகள் வித்தி யாசத்தில் அவர்கள் வெற்றிபெற முடியாது போயிற்று.

## 124) மாறுவேடத்தில் திரிந்த மணலிகந்தசாமி

1948முதல் 1951 வரை மணலிகந்தசாமி தலைமறை



வாகச் செயல்பட்டார். அவரைப் போலீசார் சல்லடை போட்டுத் தேடினர். இதற்காகக் கடுமையான அடக்கு முறையைக் கையாண்டனர். ஆனால் அவர் அகப்படவே யில்லை. 1952ஆம் ஆண்டு முதல் பொதுத் தேர்தல் அறிவிக்கப் பட்டது. தலைமறைவாக இருந்தபடியே தேர்தலில் போட்டி யிட்டு அமோக வெற்றி பெற்றார் மணலிகந்தசாமி. இவரைப் பாராட்டக் களப்பாளில் ஒரு கூட்டம் நடைபெற்றது. மணலி கந்தசாமியை நேரில் பார்க்க வேண்டும் என்ற அவாவில் அந்தக் கூட்டத்திற்கு நானும் சென்றேன்.

## 125) களப்பாள் குப்பு

தஞ்சைத் தரணியில் கம்யூனிஸ்டு இயக்கத்தைப் புரட்சிப் பாதையில் நடத்திச் சென்ற தொண்டர்களுள் களப்பாள் தியாகி அ.குப்புசாமியும் ஒருவராவார். இன்றும் அவர் களப்பாளிலும் சுற்றியுள்ள ஊர்களிலும் ‘தியாகி’ என்றும், சிலசமயம் ‘சின்னவர்’ என்றும் குறிப்பிடப்படுகிற பெருமைக் குரியவர். தியாகி குப்புசாமி இப்பூமியில் வாழ்ந்த காலம் 37 ஆண்டுகளே ஆகும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் முதன்முதலில் விவசாயச் சங்கம் அமைப்பதில் வேதபுரம் ரங்கசாமி, களப்பாள் குப்பு, சிங்காரம் போன்றவர்கள் ஈடுபட்டிருந்தனர். வேதபுரம் ரங்கசாமி, வெங்கடேச சோழகர் போன்றவர்களின் வழி காட்டுதலின்படி களப்பாளிலும் சங்கத்தை அமைத்தார்கள். களப்பாள் மாரியம்மன் தோப்பில் சங்கம் அமைப்ப தற்கான ஆலோசனைக் கூட்டம் குப்புசாமி தலைமையில் நடை பெற்றது. சங்கம், கொடி என்ற வார்த்தைகள் பண்ணை யார் செவியில் உருக்கிய ஈயக்குழம்பு போல் பாய்ந்தன.

களப்பாள் பவுண்டடியில் **(விளைபயிர்களை அத்து மீறி**

**மேயும் மாடுகளை அடைத்து வைக்குமிடம்)** கூட்டம் நடத்து வதற்கான ஏற்பாடுகள் தீவிரமாகச் செய்யப்பட்டன. கூட்டத்தை நடத்தவொட்டாது தடுக்கப் பண்ணையாரும் திட்டம் தீட்டினார். கூட்டத்திற்கு முன்பு களப்பாள் குப்புசாமி தலைமையில் எழுச்சிமிக்க ஊர்வலம் நடைபெற்றது. மாரியம்மன் கோயில் தோப்பிலிருந்து புறப்பட்டுத் தெருக் களைக் கடந்த அப்பேரணி சுற்று வட்டாரக் கிராமங்களி லிருந்து ஆயிரக்கணக்கில் மக்களை ஈர்த்திருந்தது. பேரணி அக்ர ஹாரத்திற்குள் நுழைந்தது. ஊர்வல முடிவில் பெருமாள் கோயிலடியில் கூட்டம் நடத்துவது என்று திட்டமிடப் பட்டிருந்தது. ***(இந்த நிகழ்ச்சியின்போது தான் எங்கள் வீட்டின் மேல் கூரை தாக்கப்பட்டது என்று முன்னரே குறிப்பிட்டுள்ளேன்.)***

அவர்கள் கத்தி, கடப்பாரை, ஈட்டி முதலான ஆயுதங் களால் பண்ணை ஊழியர்களைத் தாக்கினார்கள். ‘குத்து’ ‘வெட்டு’ என்ற கொலை வெறிதாக்குதலால் ஊர்வலம் குலைந்தது. எட்டு வயது மாணவன் கணேசன் முழங்கையில் வெட்டுப்பட்டு விழுந்தான். பன்னிரண்டு வயதான நடேசன் முதலான பதினைந்து மாணவர்கள் கொலை வெறித் தாக்குதலுக்கு உட்பட்டுக் கை, கால், தலை முதலான உடல் உறுப்புகளில் வெட்டுப்பட்டார்கள். ஊர்வலத்தின் முதல் வரிசையில் வந்த குப்புசாமி சிதறிய மக்களைத் திரட்டி அழைத்துச் சென்றார். திட்டமிட்டபடி பெருமாள் கோயி லடியில் கூட்டம் நடத்த முடியாத அளவு மோதல் போக்கு முற்றியிருந்த தனால், ஊர்வலம் புறப்பட்ட மாரியம்மன் கோயில் பக்கமே கூட்டம் நடத்த வேண்டியதாயிற்று.

## 126) குப்புவின் மறைவு

அதன்பிறகு, குன்னியூரில் நடந்த கொலைகளுக்கு களப்பாள் குப்புவே காரணம் என்று அவரைப் பிடிக்க காவல்



துறை முயன்றது. தலைஞாயிறு என்னும் ஊரில் அவர் கைது செய்யப்பட்டார். குப்புசாமிக்குத் தூக்குத்தண்டனை என தஞ்சை அமர்வுநீதிமன்றத்தில் தீர்ப்பு அளிக்கப்பட்டது. சிறையிலடைக்கப்பட்ட குப்புசாமி நோய்வாய்ப்பட்டதன் காரணமாக 18-04-1948ஆம் ஆண்டு இயற்கை எய்தினார்.

இவ்வாறாகக் களப்பாளில் நடந்த விவசாயிகள் போராட்டத்தின் பின்புலமாக ஸ்ரீநிவாஸராவ், மணலி கந்த சாமி, களப்பாள் குப்பு ஆகியோருடைய தியாகவாழ்க்கை அமைந்திருந்தது.

## 127) மாறுவேடத்தில் எங்கள் வீட்டிற்கு வருகை தந்த மணலி கந்தசாமி

எனக்கு 11 வயது நிரம்பியிருந்தபோது ஒருநாள் எங்கள் வீட்டுத் திண்ணையில் கதர் ஆடை உடுத்தி, தலையில் முண்டாசுடன் ஒருவர் உட்கார்ந்து கொண்டி ருந்தார். எனது தந்தையார் அவருக்கு முகமன் கூறி அருந்துவதற்கு மோர் கொடுத்தார். அவர் சென்றபிறகு வந்தது யார்? என்று நான் வினவினேன். அதற்கு என் தந்தையார் வந்தது மணலி கந்தசாமி, மாறு வேடத்தில் இவர் அலைந்து கொண்டிருப்பார். என்னை அவருக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் நான் அவரை வரவேற்று தாகத்திற்கு மோர் அளித்தேன் என்றார்.

## 128) ஏழை மக்களிடம் பரிவு கொண்ட என் தந்தையார்

அதேபோன்று களப்பாள் குப்புவிடம், தெரு முனையில் மனம்விட்டு பல மணி நேரங்கள் பேசிக் கொண்டி ருப்பார் என் தந்தையார். பொதுவாக உழைப்பாளிகளிடம் இரக்கம் கொண்டவர். அவர்கள் வேலைக்கு வராத சில நாட் களுக்குச் சம்பளமாகக் கொடுக்க வேண்டிய நெல்லைப்

*பிடித்தம் செய்ய வேண்டும் என்று முதலியார் பொதுவான ஆணையிட்டிருந்தாலும், அவர் களுடைய நலிந்த வாழ்க் கையை மனதில் கொண்டு சம்பள நெல் பிடித்தத்தைச் செய்ய மாட்டார். சில சமயம் அவர்களுக்காக பரிவுடன் முதலாளி யிடம் பேசுவார். அப்போதெல்லாம் ''கணக்கப்பிள்ளை ஐயா! இந்தப் பள்ளப் பசங்களுக்குப் பரிந்து பேசாதீங்க. அவங் களுக்கு எவ்வளவு கொடுத்தாலும் ஆசைவிடாது'' என்று கடிந்து கொள்வார் முதலாளியான குமரப்ப முதலியார்.*

## 129) சமூக மாற்றங்கள் ஏன் ஏற்படுகின்றன?

*உழைப்பாளிகளுடைய உழைப்பை உறிஞ்சி, அவர்கள் மீது ஏகபோக உரிமை கொண்டாடிய முதலாளித்து வத்தை நேரில் கண்டவன் நான்.*

*அடக்குமுறையும் ஆதிக்கமும் அதிக அளவில் இருக்கும்போது அதை எதிர்த்துப் போராடுவது என்பது மனித இயல்பு. இது ஒடுக்கப்பட்ட வர்க்கத்தினரின் உரிமை போரா ட்டமாக உருவெடுக்கும்போது அதன் விளைவுகள் சமுதாய த்தில் பல மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. பண்ணை யாருடைய கொடுமைகளுக்கு ஆளான நலிவடைந்த சமூகத்தைச் சார்ந்த பள்ளர்கள், பறையர்கள் ஆகியோருடைய உரிமைப் போராட்டம் கம்யூனிஸ்டு இயக்கமாக உரு வெடுத்தது.*

***(இதேபோன்று 1930ஆம் ஆண்டு தொடங்கிய ஜஸ்டிஸ் கட்சி, ப்ராஹ்மணர்களுடைய ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடியது. அந்த ஜஸ்டிஸ் கட்சியும் திராவிடக் கழகமாக உருமாறியது. திராவிடக் கழகமாகிய குட்டையில் ஊறிய இரு மட்டைகள் தி.மு.க., அ.தி.மு.க. ஆகிய கட்சிகள். 1952ஆம் ஆண்டு தொடங்கி தி.மு.க. வினர் திரைப்படத் துறையில் ஆதிக்கம் செலுத்தலாயினர். தம்முடைய அடுக்குமொழியால் மக்களைக் கவர்ந்தனர். பிராஹ்ம ணர்களுக்கு எதிரான முழக்கத்தை முன்வைத்து, மக்களைத் தங்கள் பக்கம் அழைத்துச் சென்றனர். அதன்பிறகு 1967ஆம் ஆண்டு நாட்டில் பலம் பொருந்திய கட்சியாய் விளங்கிய காங்கிரஸ் கட்சியைத் தோற்கடித்து ஆட்சியில் அமர்ந்தனர் தி.மு.க.வினர். அவர்களுடைய உட்கட்சி விவகாரத்தால் திரு. எம்.ஜி. ராமச் சந்திரன் அண்ணா தி.மு.க. என்ற ஒரு கட்சியைத் தொடங்கினார். 1967ஆம் ஆண்டு தொடங்கி இன்றுவரை தமிழ்நாட்டை இந்த இரு திராவிடக் கட்சியினரும் மாறிமாறி ஆண்டு வருகின்றனர்.)***



## 130) உலகப்போரும், பஞ்சமும்

1939ஆம் ஆண்டு தொடங்கிய உலகப்போர் 6 ஆண்டுகள் நீடித்தது. இதன் விளைவாக இந்தியாவில் உணவு உற்பத்தி குறையத் தொடங்கியது. அதே சமயம் மக்கள் தொகை பெருக்கடைந்தது. வளர்ந்து வந்த தேவைகளுக் கேற்ப உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டன. 1942ஆம் ஆண்டு ஜப்பானியர்கள் பர்மா நாட்டைக் கைப் பற்றிய பிறகு அங்கிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருள்கள்-முக்கியமாக அரிசியின் வரவு முழுமையாக நிறுத்தப்பட்டது. இதன் விளைவாக இந்தி யாவின் அனைத்துப் பகுதிகளிலும் பஞ்சம் தலைவிரித் தாடியது. மக்கள் தொகையில் 1/3 பகுதியினருக்கு சரியான உணவு கிடைக்கவில்லை. உலகப்போரின்போது இந்தி யாவில் 'Control' எனப்படும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் அனைத்து அத்யாவசியப் பொருள்களும் கொண்டு வரப் பட்டன. இதன் விளைவாகப் பதுக்கல் பேர்வழிகள் குறுக்கு வழியில் கொள்ளை லாபம் ஈட்டி வந்தனர்.

எஃகு, சிமெண்ட், துணிவகைகள், எண்ணெய் வித்துக்கள், தானியங்கள் போன்ற அத்யாவசியப் பொருள்

களின் தட்டுப்பாட்டை மக்கள் உணரலாயினர். போர் முனையிலிருக்கும் வீரர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் சேகரித்து அனுப்பப்பட்டதால் அவற்றின் தட்டுப்பாடு அதிகரித்தது. விவசாயிகளிடமிருந்தும், நிலச்சுவான்தார்களிடமிருந்தும் கட்டாயக் கொள்முதல் மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சொல்ல முடியாத அளவிற்கு உணவுப்பஞ்சம் ஏற்பட்டது. 1943ஆம் ஆண்டு மேற்கு வங்காளத்தில் மட்டும் 1.5 மில்லியன் மக்கள் மடிந்தனர்.

## 131) என் அன்னையின் இரக்க குணம்

எங்களுடைய தகப்பனார் சம்பளமாக நெல்லைப் பெற்று வந்ததால் உணவுப் பஞ்சத்தின் கொடுமையை நாங்கள் உணரவில்லை. ஆனால் ஏழை எளியவர்கள் ஒரு வேளை கஞ்சிக்குப் போராடியதை நான் அறிவேன். நெல்லை அரைத்து சுத்தம் செய்யும்போது கிடைக்கும் குறுநொய்யினை ***(குறுணை)*** வேளாளர் தெருவில் இருக்கும் ஏழை எளியவர்களுக்கு என்னுடைய தாயார் கொடுத்து உதவுவார். குறிப்பாக பிரசவித்தத் தாய்மார்களுக்கு உணவாக இதனைக் கொடுத்து உதவும் உதார உள்ளம் கொண்டவர் என் தாயார்.

## 132) ரேஷன் கார்டை காண்பித்தால்தான் திருமண விருந்து

அந்தக் காலத்தில் திருமணங்களில் ஆடம்பரமான விருந்துகள் படைக்க இயலாது. கல்யாண பத்திரிகைகளைக் காட்டி ரேஷன் அதிகாரிகளிடம் குறிப்பிட்ட அளவு அரிசியினையே பெற்றுக் கொள்ளமுடியும். ரேஷன் அதிகாரிகள் கல்யாண வீட்டிற்கு வந்து எத்தனை பேர்களுக்கு உணவு படைக்கப்படுகிறது என்பதையும் நேரில் பார்த்துச் செல்



வார்கள். அந்தக் காலத்திய திருமண அழைப்பிதழ்களில் ‘திருமணத்திற்கு வருகை தருவோர் மறக்காமல் தங்கள் ரேஷன் கார்டை எடுத்து வரவும்’ என்று அச்சிடுவார்கள். இன்றைய கால கட்டத்தில் இவையெல்லாம் கட்டுக்கதை போலத்தோன்றும்.

## 133) உணவுப் பஞ்சம் போதித்த போதனைகள்

விவசாயத்தில் பெருத்த முன்னேற்றம் ஏற்படாத கால கட்டத்தில் இயற்கை பொய்த்திடும்போதும், அதிக மழை பொழிவதால் விளைபயிர்கள் நாசம் அடையும்போதும், உலக அரங்கில் ஏற்படும் போர் அச்சங்களாலும் இத்தகைய பஞ்சம் ஏற்படுகிறது. உணவின் மதிப்பறிந்து அதை வீணாக்கி விடாமல் தனக்குத் தேவையான அளவு உணவு உட்கொள்பவனே நாட்டின் வளத்தில் நாட்டம் கொண்டவனாகக் கொள்ளப்படுவான். இன்றைய தலைமுறையினருக்கு உணவுப் பஞ்சம் என்றால் என்னவென்றே தெரியாது. ஆனால் என்னைப் போன்றவர்கள் வாழ்க்கையில் பல கட்டங்களில் இந்த உணவுப் பஞ்சத்தின் கொடுமையை அனுபவித்திருக்கிறோம்.

## 134) இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பின்னணி

இந்தியா 1947ஆம் ஆண்டு 14ஆம் நாள் இரவு 12 மணிக்கு அதாவது ஆகஸ்டு 15ஆம் நாள் சுதந்திரம் அடைந்தது. ‘இரவிலே வாங்கினோம், அதனால்தான் இன்னும் விடியவேயில்லை’ என்றதொரு புதுக்கவிதை என் நினைவிற்கு அடிக்கடி வரும். நாடு சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகள் ஆகிவிட்டன. பல துறைகளில் நாம் முன்னேற்றம் கண்டுள்ள போதிலும், ஜனநாயகம் என்ற அமைப்பின் கீழ் நாம் நன்மைகளைவிட தீமைகளையே அதிகம் பெற்று

உள்ளோம். ‘என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் அயல்நாட்டில்’ என்ற திரைப்படப் பாடல் நம் நாட்டின் அவல நிலையைச் சரியாக வெளிப் படுத்துகிறது.

இரண்டாம் உலகப்போரின் இறுதியில் இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டன. அதற்கு முன்பு நாம் ஏன் அடிமைப்பட்டோம் என்பதை அனைவரும் அறிந்து கொள்ளவேண்டும்.

கி.பி. 1751ஆம் ஆண்டு ப்ளாசியில் நடைபெற்ற போரில் வங்காளத்தை ஆண்டு வந்த நவாபுவை வெற்றிக் கொண்டதன் மூலம் இந்திய நாட்டில் வாணிபம் செய்ய வந்த கிழக்கிந்தியக் கம்பெனியார் இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு அடித்தளம் அமைத்தனர். அதன்பிறகு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட Regulating Act 1773, Pitt's India Act 1784 மற்றும் பல சட்டங்களின் மூலம் இந்தியா பிரிட்டிஷாருடைய நிர்வாக அமைப்பின்கீழ் கொண்டு வரப் பட்டது.

இந்நிலையில் கி.பி. 1857ஆம் ஆண்டு நடைபெற்ற சிப்பாய் கலகத்தின் விளைவாக 1858ஆம் ஆண்டு கிழக் கிந்தியக் கம்பெனியரின் ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு பிரிட்டிஷ் மன்னரின் ஆளுகைக்கு உட்பட்ட நாடாக இந்தியா அறிவிக்கப்பட்டது. இதன் விளைவாக இந்தியாவில் கவர்னர் ஜெனரல் என்ற பதவி உருவாக்கப் பட்டது. அவருக்கு உதவியாக நாட்டின் பல பகுதிகளில் கவர்னர்கள் நியமிக்கப்பட்டனர். அதிகாரிகளுடைய ஆட்சியே எங்கும் பரவியிருந்தது.

மாவட்ட ஆட்சியாளர் எனப்படும் கலெக்டர் பல



பொறுப்புகளைச் சுமந்து வந்தார். இந்தியர்களுடைய ஒத்துழை ப்புடன் இந்த நாட்டை ஆளவேண்டும் என்ற கட்டாயத்திற்குத் தள்ளப்பட்ட பிரிட்டிஷ் அரசு 1919ஆம் ஆண்டு புதியதொரு சட்டத்தை இயற்றியது. "Diarchy" ஆட்சிமுறை ***(இந்தியர் மற்றும் ஆங்கிலேயரைக் கொண்ட நிர்வாஹ அமைப்பு)*** அமுல்படுத்தப்பட்டது.

இதனால் நிர்வாஹத்தில் பெருத்த மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. அதன்விளைவாக 1927ஆம் ஆண்டு சைமன் கமிஷனை பிரிட்டிஷ் அரசாங்கம் அமைத்தது. நேரு தலைமை யிலான இந்திய தேசிய காங்கிரஸ் தொண்டர்கள் அந்தக் கமிஷனுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சைமன் கமிஷனே திரும்பிப் போ என்று ஆர்ப்பாட்டம் செய்தனர். இதன் விளைவாக பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் Governemnt of India Act 1935 கொண்டு வரப்பட்டது. இதன் அடிப்படையில் மாகாணங்களுக்கென ஆட்சி அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில் 1937ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் Provincial Councils எனப்படும் ஆட்சியமைப் பிற்குத் தேர்தல்கள் நடைபெற்றன.

7 மாகாணங்களில் காங்கிரஸ் கட்சி பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைத்தனர். இந்தத் தருணத்தில்தான் இரண்டாம் உலகப்போர் 1939ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தொடங்கியது.

இந்தியத் தலைவர்களுடைய ஆதரவைப் பெறுவதற் காக ஸர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ் என்பாரை பிரிட்டிஷ் அரசாங்கம் 1942ஆம் ஆண்டு இந்திய நாட்டிற்கு அனுப்பி வைத்தது. அவருடைய அறிவுரைகளை இந்தியத் தலைவர் கள் ஏற்றுக் கொள்ளவில்லை. 1942ஆம் ஆண்டு, ஆகஸ்டு

மாதம் பம்பாயில் கூடிய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியினர் 'வெள்ளையனே வெளியேறு' என்னும் இயக்கத்தை தொடங்குவதற்கான முடிவை எடுத்தனர்.

இதன் விளைவாகக் காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டனர். அந்தக் கட்சியும் தடை செய்யப்பட்டது. பெருப்பெருத்த தலைவர்களுடைய கைது நாட்டில் பெரும் குழப்பத்தை விளைவித்தது. **ஆகஸ்டுபுரட்சி** என்று இதை வரலாற்று ஆசிரியர்கள் விவரித்துள்ளனர். ஆயிரக்கணக்கான மக்களை பிரிட்டிஷ் அரசாங்கம் கொன்று குவித்தது. இரும்புக்கரம் கொண்டு இந்த ஆகஸ்டு புரட்சி ஒடுக்கப்பட்டது.

இரண்டாம் உலகப்போர் விளைவித்த கொடூரத்தையும் அதன்பிறகு மேற்கு வங்காளத்தில் முஸ்லீம்கள் மேற்கொண்ட வெறியாட்டத்தையும் கல்கி தம்முடைய அலையோசை என்னும் சமூக நாவலில் ஆங்காங்கே விவரித்துள்ளார். 1948ஆம் ஆண்டு கல்கி வார இதழில் 'அலையோசை' நாவல் தொடராக வெளிவந்தது. அந்த நாவலில் சில பகுதிகள் இரண்டாம் உலகப் போரின் போது ஆக்ரா ரயில் நிலையத்தில் காணப்பட்டதொரு நிகழ்ச்சியை கீழ்க்கண்டவாறு விவரித்து உள்ளார் கல்கி.

''ஆக்ரா ரயில்வே ஸ்டேஷன் அமளி துமளிபட்டுக் கொண்டிருந்தது. வருகிற ரயில்களும், போகிற ரயில்களும் ஏகச் சத்தமிட்டன. பிரயாணிகளின் கூட்டம் சொல்லி முடியாது. ரயில்களிலும் சரி, ரயில்வே பிளாட்பாரத்திலும் சரி, காலி இடம் என்பதே கிடையாது. பிரயாணிகளில் பாதிப்பேர் ஆங்கில சோல்ஜர்களும் இந்தியச் சிப்பாய்களுமாவர். அப்போது உலக மகாயுத்தம் மிக நெருக்கடியை அடைந்



திருந்த சமயம் அல்லவா? மாஜி சேனாதிபதி வேவல் இந்தியாவின் வைஸ்ராய் பதவியை வகித்து வந்தார். அதுவரையில் அவர் வென்றிருந்த போர்க்களங்களிலெல்லாம் பிரிட்டிஷ் படைகள் பின்வாங்க வேண்டி நேர்ந்தது. அந்த அபகீர்த்தியைப் போக்கிக் கொள்ள விரும்பிய வேவல் துரை என்ன வந்தாலும் இந்தியாவிலிருந்து பின்வாங்குவதில்லையென்று தீர்மானித்துப் பிரமாத ராணுவ முஸ்தீப்புகளைச் செய்து வந்தார். ஆகவே இந்தியாவில் ரயில்கள் எல்லாம் அந்த 1943ஆம் ஆண்டு சிப்பாய்கள் மயமாயிருந்தன. ஸ்டேஷன் பிளாட்பாரங்களில் பெரியபெரிய பீரங்கிக் குண்டுகளும் அவற்றின் கூடுகளும் கும்பலாக அடைப்பட்டுக் கிடந்தன!''

## 135) சுதந்திர சூரியனின் உதயம்

1945ஆம் ஆண்டு மே மாதம் உலகப் போர் முடிவிற்கு வந்தது. நேசப்படையினர் வெற்றி பெற்றனர். 1945ஆம் ஆண்டு ஜூன்மாதம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அனைத்துக் கட்சித் தலைவர்களும் விடுதலை செய்யப்பட்டனர். அந்த ஆண்டு பிரிட்டிஷ் பாராளுமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் Conservative Party தோற்கடிக்கப்பட்டு சர். க்ளமண்ட் அட்லி தலைமையிலான Labour Party வெற்றி பெற்றது.

1946ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சர். அட்லி இந்தியாவிற்கு சுயாட்சி வழங்கும் பொருட்டு House of Commonsஐ சார்ந்த உறுப்பினர்கள் இந்தியாவிற்குச் சென்று அந்த நாட்டு மக்கள் தலைவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவார்கள் என்று அறிவித்தார். Sir. Stafford Cripps, Lords Pethic Lawrence மற்றும் Mr. A.V. Alexander ஆகியோரைக் கொண்ட குழுவினர் இந்தியாவிற்கு

வருகை தந்தனர். சுமார் 3 மாத காலம் இந்தியாவில் அமைந்திருந்த அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் இவர்கள் கலந்துரையாடினார்கள். 1945ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் இந்தக்குழு இந்தியாவிற்கு சுயாட்சி வழங்கும் திட்டத்தை அறிவித்தது.

## 136) முரண்டுபிடித்த முகம்மதுஅலி ஜின்னா

முகம்மது அலி ஜின்னாவின் தலைமையிலான அகில இந்திய முஸ்லீம் லீக் முன்வைத்த பாகிஸ்தான் கோரிக்கையை இந்தக்குழு நிராகரித்தது. இந்தியாவைத் துண்டாடாமல் அதன் அரசியல் அமைப்புக்குள் பாகிஸ்தான் மாநிலத்தை உருவாக்கு வதற்கு இந்தக் குழு ஆதரவு தந்தது. நாட்டின் பாதுகாப்பு, வெளியுறவு, தொலைத்தொடர்பு ஆகிய மூன்று துறைகளை மத்திய அரசாங்கம் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்றும், மற்றைய பொறுப்புகளை மாநில அரசிற்குக் கொடுத் திடவும், இந்தக்குழு பரிந்துரை செய்தது.

நாட்டின் இருபெருங்கட்சிகளான இந்திய தேசிய காங்கிரசும், அகில இந்திய முஸ்லீம் லீக்கும் இந்தக் குழுவின் பரிந்துரைகளை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. இதன் விளைவாக 1946ஆம் ஆண்டு ஜூன் மாதம் உயர் அதிகாரிகளைக் கொண்ட Caretaker Government ஏற்படுத்தப்பட்டது. இரு தரப்பினரிடம் அப்போதைய கவர்னர் ஜெனரல் Lord Wavell பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருந்தார்.

## 137) இந்தியாவெங்கும் இனக்கலவரம்

1946ஆம் ஆண்டு ஜூலை முதல் நாள் பம்பாயில் இந்துக்கள் மற்றும் முஸ்லீம்களுக்கிடையே மதக்கலவரம் மூண்டது. இந்தக் கலவரம் நாடெங்கும் பரவியது. 1946ஆம் ஆண்டு ஆகஸ்டு 12ஆம் நாள் திரு.நேரு அவர்களைத் தற்காலிக அரசின் பொறுப்பை ஏற்றிடும்படி கவர்னர் ஜெனரல் திரு.வேவல் கேட்டுக் கொண்டார். 2.9.1946ஆம் நாள் திரு. நேரு தலைமையிலான மத்திய அரசு பதவி ஏற்றது. வரலாறு காணாத அளவிற்கு நாட்டில் வன்முறையும், மதக் கலவரமும் வெடித்தது.



## 138) இந்தியாவைத் துண்டுபோட ஒப்புதல் அளித்த காங்கிரஸ் தலைவர்கள்

உடனடியாக மாற்று நடவடிக்கை எடுக்கப்பட வில்லையானால் இந்தியாவுக்குப் பெருத்ததொரு அபாயம் நேரிடும் என்ற எண்ணங்கொண்ட பிரிட்டிஷ் அரசாங்கம் லூயிஸ் மவுண்ட்பேட்டன் என்பாரை கவர்னர் ஜெனரலாக நியமித்தது. 1948 ஜூன் மாதத்திற்குள் இந்தியாவிற்கு சுதந்திரம் வழங்குவதாக 20-02-1947ஆம் நாள் பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்தது. நாட்டில் நடைபெறும் மதக் கலவரங்களுக்கு முடிவு காண வேண்டுமானால் பாகிஸ்தான் என்ற ஒரு நாட்டை உருவாக்க வேண்டும் என்ற முடிவிற்கு வந்தார் அப்போதைய கவர்னர் ஜெனரல் திரு. மவுண்ட் பேட்டன். அதன் விளைவாக நாடு துண்டாடப்பட்டது.

மவுண்ட் பேட்டனுடைய திட்டத்தை இந்திய தேசிய காங்கிரசும் அகில இந்திய முஸ்லீம் லீக்கும் ஒப்புக் கொண்டன. இதன் விளைவாக Indian Independence Act என்றதொரு சட்டம் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. 1947ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாள் இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் சுதந்திரம் அடைந்தன.

## 139) மேற்கு வங்காளத்தில் இனக்கலவரமும் அது விளை வித்த கொடுமைகளும்

''இந்தியா சுதந்திரம் அடைந்ததும் மேற்கு வங்காளத்தில் பெரிய அளவில் மதக் கலவரம் மூண்டது. இந்தக் கலவரத்தை கல்கி தமக்கே உரிய பாணியில் 'அலைஓசை' நாவலில் குறிப்பிட்டுள்ளார்.

''அன்று 1947ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 16ஆம் தேதி நரகத்தில் வாழும் பேய்கள் அன்றைக்குக் கல்கத்தாவுக்கு விஜயம் செய்து தங்களுடைய நாச வேலைகளை நடத்திக் கொண்டிருந்தன. குழந்தைகள் என்றும், வயோதிகர்கள் என்றும், ஸ்த்ரீகள் என்றும் பாராமல் அந்தப் பேய்கள் அங்கு மிங்கும் அலைந்தன. அந்த ஊளைச் சத்தங்களுக்கிடையே 'பாகிஸ்தான் ஜிந்தாபாத்' என்னும் கோஷம் சில சமயம் கேட்டது. க்ருதயுகத்திலே வாழ்ந்த இரணியன், இரணியாட் சகன் ஆகிய அரக்கர்களும், திரேதாயுகத்தில் இருந்த இராவணன், கும்பகர்ணன், மகோதரன், விரூபாட்சன் முதலிய ராக்ஷஸர்களும், துவாபர யுகத்திலே பிறந்த கம்ஸன், சிசுபாலன், தந்தவக்கிரன், பகாசுரன், ஜராசந்தன் ஆகிய மனிதப் பேய்களும் ஒரே சமயத்தில் கல்கத்தாவில் வந்து பிறந்து ஆயிரம், பதினாயிரம், லட்சம் எனப் பெருகித் தங்களுடைய கோரச் செயல்களை நடத்தியதாகத் தோன்றியது.

ஸ்த்ரீகளின் வயிற்றில் கத்தியைச் செலுத்திக் குடலை வெளியில் எடுத்தல், குழந்தைகளைக் காலைப் பிடித்து வீசி எறிந்து கொல்லுதல், உயிரோடு மனிதர்களைப் பிடித்து எரியும் நெருப்பிலே போடுதல் முதலிய அசுரச் செயல்கள் அன்று கல்கத்தாவில் சர்வ சாதாரணமாயிருந்தன. கல்கத்தா நகரத்துள்ளேயிருந்து ஆயிரம் நரகங்களிலிருந்து வருவது போன்ற கோர சத்தம் கேட்டது. லட்சக்கணக்கான மனிதர்களும் ஸ்த்ரீகளும் குழந்தைகளும் ஓலமிடும் குரலும், ஆயிரக் கணக்கான பேய் பிசாசுகள் ஊளையிடும் குரலும், வீடுகள் தீயிட்டு எரியும் சத்தமும், எரிந்து விழும் போது எழும் சத்தமும், மக்கள் இங்குமங்கும் ஓடும் சத்தமும், துப்பாக்கி வேட்டுச் சத்தமும், துருப்புக்களின் ஆர்ப்பாட்டச் சத்தமும் சேர்ந்து வந்து ரயிலிலிருந்து இறங்கியவர்களின் உடம்பையும் உடம்புக்குள் எலும்பையும் நடு நடுங்கச் செய்தன.



முதல் இரண்டு நாளும் ஹிந்துக்களின் படுகொலையாகவே நடந்தது. மூன்றாம் நாள் பீஹாரிலிருந்து கல்கத்தா வந்து குடியேறியிருந்த பால்கார முண்டார்களும் சீக்கியர்களும் தங்கள் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தார்கள். பழிக்குப் பழி வாங்கும் கோஷம் எங்கெங்கும் கிளம்பியது.''

## 140) சுதந்திர தினக் கொண்டாட்டங்கள்

1947ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் இந்திய சரித்திரத்திலேயே இணையற்ற முக்கியத்துவம் வாய்ந்த மாதமாகும். பல ஆண்டுகள் அடிமையாக வாழ்ந்திருந்த பாரததேசம் அந்த வருஷம் ஆகஸ்டு மாதம் 15ஆம் தேதி சுதந்திர தேசம் ஆயிற்று. நாற்பது கோடி இந்திய மக்கள் விடுதலைப் பேறு அடைந்தார்கள். அதே சமயத்தில் அவர்களில் முப்பத்திநாலு கோடிப்பேர் இந்தியயூனியன் என்னும் தனிச் சுதந்திர நாட்டினராகவும், பாக்கி ஆறு கோடிப்பேர் சுதந்திர பாகிஸ்தான் பிரஜைகளாகவும் பிரிந்தார்கள். சுதந்திரத் திருநாளன்று மாலை டில்லி மாநகரம் அளித்த அலங்காரக் காட்சியைப் போல் அதற்கு முன்னால் அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான் காலத்திலேயே கூடப் பார்த்திருக்க முடியாது. அந்த நாளில் மின்சார விளக்கு ஏது? அல்லது இவ்வளவு பொதுஜன உற்சாகத்துக்குத்தான் இடம் ஏது?

முக்கியமாக சரித்திரப் பிரசித்தமான 'சாந்தினி சவுக்'

என்னும் வெளி வீதியும், அந்த வீதியுள்ள மணிக்கூண்டும், டவுன் ஹாலும், இன்னும் சுற்றுப் புறங்களும், அற்புதமான தீபாலங்காரங்களுடன் ஜகஜ்ஜோதியாகப் பிரகாசித்துக் கண் கொள்ளாக் காட்சியளித்தன.

இந்தியா சுதந்திரம் அடைந்த போதிலும், சமஸ்தானங் களாக விளங்கிய ஹைதராபாத், காஷ்மீர், மைசூர், திருவனந்த புரம், பரோடா போன்ற பகுதிகள் அவரவர் விருப்பப்படி இந்தியாவுடனோ அல்லது பாகிஸ்தானுடனோ இணைந்து கொள்ளலாம் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்தது. இதன்படி சில சமஸ்தானங்கள் பாகிஸ்தானுடனும், பெரும் பாலான சமஸ்தானங்கள் இந்தியாவுடனும் இணைந்தன.

## 141) களப்பாளில் சுதந்திர தினக் கொண் டாட்டங்கள்

என்னுடைய 8ஆவது வயதில் இந்தியா சுதந்திரம் அடைந்தது. அப்போது நான் மூன்றாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் எங்கள் பள்ளியில் வெகு சிறப்பாக நடந்தேறின. மூவண்ணக் கொடி ஏற்றுவிக்கப்பட்டு அனைவருக்கும் பிஸ்கட் மற்றும் மிட்டாய் வழங்கப்பட்டது. எங்கள் வீட்டின் மற்றொரு பகுதியில் குடியிருந்த இரண்டாம் வகுப்பு ஆசிரியரான திரு. கோபாலய் யங்கார் இந்தக் கொண்டாட்டங்களுக்குப் பொறுப்பாசிரியராக செயல்பட்டார். அவரது இல்லத்தில் 20 டின்களில் இந்த பிஸ்கட் பெட்டிகள் வந்திறங்கின. அவ்வாறு அனுப்பப்பட்ட பிஸ்கட்கள் முழுவதும் செலவழிக்கப்படவில்லை. அவரது இல்லத்தில் கொண்டாட்டங்கள் முடிந்தபிறகு 4 பிஸ்கட் டின்கள் மீதம் இருந்தன. அவ்வப் போது எங்களுக்கு சிறிய அளவில் பிஸ்கட்களை அவரது இல்லத்தரசியான புஷ்பா மாமி கொடுப்பார்.



## 142) மூவண்ணக்கொடியின் முக்கியத்துவம்

சுதந்திர தினத்தன்று நடைபெற்ற கொண்டாட்டங் களுக்குப் பெரும் பண்ணையாரான குமரப்ப முதலி யாருடைய மூத்த மகன் திரு. கோபால முதலியார் தலைமை வகித்துக் கொடியேற்றினார். நாங்கள் படித்த பள்ளிக்கூடம் அமைந்துள்ள கட்டிடத்தின் சொந்தக்காரர் குமரப்ப முதலியார். திரு. கோபால முதலியார் அன்றைய தினம் கொடியில் அமைந்து உள்ள வண்ணங்களுக்கு சொன்ன விளக்கம் என் மனதில் ஆழமாகப் பதித்துள்ளது. கொடியில் அமைந்துள்ள காவி வண்ணம் சுதந்திரப் போராட்டத்திற்காக உயிர்த் தியாகம் செய்தோரின் குருதியையும், வெண்மை நிறம் தூய்மை யையும், அதன் கீழே அமைந்துள்ள பச்சை நிறம் பசுமையையும் குறிப்பிடுகின்றன. கொடியின் நடுவில் அமைந்துள்ள அசோக சக்கரம் இந்தியாவினுடைய இறை யாண்மையை குறிப்பதாகவும் அன்று அவர் விளக்கம் அளித்தார்.

## 143) எங்கள் வீட்டில் கொடியேற்ற அனுமதி கிடைக்கவில்லை

இதன் விளைவாக எங்கள் வீட்டிலும் தேசியக் கொடியை ஏற்றிட வேண்டும் என்பதற்காக நானும் என்னுடைய தமையனாரான பார்த்தசாரதியும் சுமார் 3 ரூபாய் பணம் திரட்டி உள்ளூர் காங்கிரஸ் தியாகி திரு. இரத்தினம் அவர்களிடம் கொடியும், கயிறும் வாங்குவதற்காகக் கொடுத் தோம். வீட்டிலிருந்த நீண்ட மூங்கில் ஒன்றினை வாசலில் குழி பறித்துக் கொடியேற்றத்திற்கான முன்னேற்பாடுகளை செய்து கொண்டிருந்தோம். அதைக் கண்ட எனது தாயார் வீட்டு வாசலில் கொடியேற்றினால் அங்கேயேதான் இருக்க

வேண்டும். வீட்டிற்குள் வரக்கூடாது என்று அச்சுறுத்தினார். நான் உடனே சென்று கொடி வாங்குவதற்காகக் கொடுத்த பணத்தை திரு. இரத்தினத்திடமிருந்து திரும்பப் பெற்று வந்தேன். நான் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டுக் கொண்டும், எங்கள் வீட்டு வாசலில் கொடி மரம் வைப்பதற்கான அனுமதியை என் தாயார் அளித்திடவில்லை. ‘உனக்கு தேசப்பற்றே கிடையாது’ எனக் கோபமாகக் கூறி நட்டிருந்த கொடி மரத்தை நான் பிடுங்கி எறிந்தேன்.

**(முதல் பகுதி முற்றிற்று)**